அயோத்திதாசர் சிந்தனைகள்

III



தொகுப்பாசிரியர்

ஞான. அலாய்சியஸ்

நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்

அயோத்திதாசர் சிந்தனைகள்

மூன்றாம் தொகுப்பு

அயோத்திதாசர் சிந்தனைகள்

மூன்றாம் தொகுப்பு

III

தொகுப்பாசிரியர்

ஞான. அலாய்சியஸ்

நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்
தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி)
பாளையங்கோட்டை – 627 002

Publication No.	:	15
Title	:	Iyotheethasar Sinthanaigal - III (அயோத்திதாசர் சிந்தனைகள் – III)
Subject	:	Politics, Social Reform : Hermeneutics
Author	:	Iyotheethasar
Edited by	:	G. Aloysius
© Copyright	:	FRRC
Edition	:	First : December 2003
Size	:	1/8 Demi
No. of pages	:	xvi + 176
No. of copies printed	:	1200
Published by	:	Folklore Resources and Research Centre St. Xavier's College, Palayamkottai - 627 002 Tamilnadu, India.
Printed at	:	Hemamala Syndicate, Sivakasi
Cover portrait	:	Trotsky Marudu
Cover design	:	V.N. Barathan
Type set at	:	Simpson GESET's, SVA Computer Centre, Chennai - 600 012 & FRRC
Price	:	Rs.100/-

பொருளடக்கம்

மூன்றாம் தொகுப்பு

முன்னுரை x

1. கடவுள் வாழ்த்து 1
2. பத்திரிகா பாயிரம் 1
3. சண்டாளன் 2
4. ஆதிதமிழர் அபிவிருத்தி சங்கம் 2
5. ஸ்ரீ விபினசந்திரபாலர் விருதாப நிலைமை 3
6. அஞ்ஞானக் கிறிஸ்தவர்கள் 3
7. பிளேக் 4
8. பாபநாசத்தாரேய்ப்பும் பறையர்களேமாப்பும் 5
9. விழுப்புர மதப்போர் 6
10. கனந்தங்கிய சுதேசமித்திரன் பத்திராதிபருக்கு சுவர்ணபூஷணஞ் சூடல் 6
11. முஸ்லீம் நேசன் 7
12. அஞ்ஞானியா கிறிஸ்தவனா 7
13. இராஜாம்பாள் ஓர் இனிய தமிழ் நாவல் 8
14. சுபவிசேஷ பெருஞ்சங்கை 9
15. டாக்டர் ஜி.யூ. போப் 9
16. வேலைகளறியா வீணர்களிடம் கூலிக்குப்போவது குற்றமேயாம் 9
17. தூத்துக்குடி திருநல்வேலி துக்கம் 10
18. புத்தமதக் கண்டனமோ? 11
19. சுயராச்சியம் 12
20. நால்வர் சரித்திரம் 12
21. மாதவரம் போக வழியேதென்னும் வினாவிற்கு 13
22. மருள், மருளர் 14
23. கோலார் மாரிகுப்பம் சோதிரர்காள் 16
24. இரங்கூன் முநிசபில் சங்கமும் இராயபாதூர் மதுரைப்பிள்ளையவர்களும் 16
25. அரைக்கல்லி முழுமொட்டை 16
26. கிராமக் கரணங்களுக்கும் கஷ்டமாமோ 17
27. தற்காலம் மடாதிபர்களும், புரோகிதர்களுமுண்டோ? 17
28. பூர்வ பௌத்த பிக்ஷுக்களாம் சமண முநிவர்கள் வீற்றிருந்த குகைகள் 18
29. ஐரோப்பியர் அன்பு 19
30. தன்னிற்றானே கேட்டைத் தேடிக்கொள்பவன் 19
31. பகவனது அஸ்தியாலும் சாம்பலாலுங் கொண்ட மகத்துவம் 20
32. முயற்சி திருவினையாக்கும் 20
33. மனிதன் தனது செயலால் தன்னை உயர்த்திக்கொள்ளுவான் தனது செயலால் தன்னைத் தாழ்த்திக்கொள்ளுவான் 21
34. அஞ்ஞானக் கிறிஸ்தவர்களென்போர் யார்? 21
35. சுயநலங்கருதி பாடுபடுவோர் பிறர்நலங் கருதி பாடுபடுவரோ 22

36. பிரிட்டிஷ் ஆட்சியின் செங்கோலைப் பாருங்கள் 23
37. பிரேதமெடுத்துப் போகுங்கால் 24
38. ஜாதியின் கொடுமை 25
39. பிரேதம் எடுத்துச் செல்லுகையில் 26
40. அந்தணர் அன்னபுசிப்பு 27
41. ஓர் பறையன் குடைபிடித்துச் சென்றானென்று அவன் வியாஜியம் தள்ளப்பட்டதாமே 27
42. இந்துதேச விவசாய வாசிகளே கேண்மின் 28
43. இந்திரர், இந்திராணி 28
44. அன்னிய மதங்களை தூஷித்தல் 29
45. நைடதம் 30
46. வியாபார சங்கம் 31
47. நாமம் 32
48. பிள்ளைகளை பயத்தால் வளர்க்க வேண்டுமா நயத்தால் வளர்க்க வேண்டுமா 33
49. புகையிலை பிடித்தல் 33
50. ஏழைகளின் சுகத்தை நாடுதலே கனவான்களுக்கு சுகந்தரும் 34
51. இந்தியர்களுக்கு சமரச வாட்சியும் பெரும் உத்தியோகமும் வேண்டுமாம் 35
52. கடவுள் இல்லை 36
53. கசாய்க் கடைகள் 36
54. எல்லாமுடையான் குருவாதலும், ஏதுமில்லாதான் குருவாதலும் 37
55. கிறிஸ்தவர்களுக்கு ஜாதியுண்டா 38
56. பிணச் சடங்கு 40
57. கோலார் தன்மப் பிரியர்களே 41
58. மாமாத்திரரும் காமாத்திரரும் 42
59. காமத்துப்பால் 43
60. கற்பூரம் கொளுத்துதல் 44
61. மாவலி பரிநிருவாணம் 44
62. மதங்களின் காலவரை 45
63. ஜப்பானிலும் பறையர் 45
64. இராம அயனமே சாம அயனமாம் 47
65. குலத்தளவேயாகுங்குணம் 47
66. ஆதாம் ஏவாள் காலவரை 48
67. ஆகமம் 49
68. புத்தர் பிறப்பு 50
69. விஷ்ணு அவதாரம் 51
70. அன்னை சாதத்தை ஊட்டுவாள் விழுங்கவுஞ்செய்வளோ 52
71. உலகத்தில் தாழ்ந்த வகுப்பார்கள் யார், அறிவீனர்கள் யார், தீண்டாதவர்கள் யார்? 53
72. நிருவாணம் என்பதென்னை? 53
73. புத்ததன்ம முக்கியச்செயல் துக்கத்தைப் போக்கிக்கொள்ள வேண்டுமென்பதேயாம் 54
74. புத்ததன்மத்தின் ஆதி சுருக்கமும் அந்த சுருக்கமும் 55
75. சத்து நீங்கியபின் மனிதன் 56
76. கீழ்ச்சாதி மேற்சாதி என்போர் வியாஜியம் 58

77. தாழ்ந்தசாதியோரை வுயர்த்தப்போகின்றோமென்னும் பெரியசாதியோர் பவுஷைப் பாருங்கள். 59
78. மெய்ப் பொருள் 59
79. வைத்திய நூல் 60
80. பஞ்சபாதகங்களுக்கெதிரடை பஞ்சசீலங்களேயாம் 60
81. மானிடனென்பவன் யார் 61
82. மார்க்கண்டேயன் 62
83. இனிவரும் பிறப்பென்றாலென்னை 63
84. இந்தியதேச புத்ததன்மம் வேறு இதரதேச புத்ததன்மம் வேறோ 64
85. பேய நிலையும் தெய்வ நிலையும் 65
86. சாக்கைய பௌத்த சோதிரர்களே சற்று கவனியுங்கள் 66
87. மறுபிறப்பு 66
88. பௌத்த சிகாமணிகளே! 67
89. பௌத்த குருக்களின் வார்சா பௌர்ணமி 68
90. முனிசபில் ரோடுகளின் முறைப்பாடு 69
91. மாடதிபதிகளுக்கு குண்டுவேண்டுமாம் குண்டு 70
92. டிப்பிரஸ்கிளாசை டிப்பிரஸ் கிளாசார் சீர்திருத்தல்போமோ 71
93. மகா புராணம் 71
94. மொய் 71
95. பௌத்த பிரசங்கிகளுக்கோர் விண்ணப்பம் 72
96. மதாச்சாரங்கள் 73
97. விவாகக் கிரியை 74
98. சுடலைச் சடங்குகள் 74
99. கிறிஸ்துமத கடவுளுக்கும் வேதத்திற்கும் மதுபானம் உடன்பாடல்லவேயல்ல 75
100. தீபவதி நதி ஸ்னானம் 76
101. புருசீகரின் வேஷம் 76
102. பரிதாபக்கொலை! பரிதாபக்கொலை!! பரிதாபக் கொலை!!! 77
103. சாமி சங்கைத்தெளிவு 79
104. திருமணச் சடங்கு 79
105. ஆன்மாவிற்கு இறப்புமில்லை பிறப்புமில்லை 79
106. வேதநாயகம் சாஸ்திரியார் 80
107. வைணவர் சூடுபோட்டுக் கொள்ளும் சங்கைத் தெளிவு 81
108. நடராஜன் 81
109. மறையோர் 82
110. நிருவாணமும் பரிநிருவாணமும் 82
111. அஞ்ஞான வந்தகாரச் சுட்டுக்கடிதங்கள் 84
112. சித்திரைச் செல்வம் 86
113. ஒளிமயமான தேகம் 87
114. செயின்ட் ஜேவியர் சங்கைத் தெளிவு 88
115. அம்மையென்னும் வைசூரி 89
116. ஐந்து வினாக்கள் 90
117. சங்கைத் தெளிவோடு ஜைநரின் சித்தாந்தங்களிற் கண்டதை தமிழருக்கறைவாம். 91

118. ஓம் என்னும் மொழி 91
119. கிரகணங்கள் 92
120. மனிதனைக் கும்பிடுவோரும் சுவாமியைக் கும்பிடுவோரும் 93
121. கும்பகோணம் யதார்த்தவசனி பத்திராதிபரைக் கடாவல் 94
122. மோட்சமும் நரகமும் 94
123. மோட்சமென்னும் மொழிமுதற் பொருளும் மோட்சத்திற்குப் போகும் வழியும். 95
124. சர்வவியாபியில் தோன்றிய எம்.பி. மாஸ்கிரேனியஸ் 96
125. கடிதநேயர்களுக்கறிக்கை 97
126. சுகுணமும் அசுகுணமும் 97
127. இந்துக்களென்போர் சாதி மத சங்கை 98
128. விலாவெடித்துப் பிறத்தல் 98
129. அவதாரம் 100
130. பாஷாணங்களின் முறிவு 101
131. மனுதன்ம சாஸ்திரம் 103
132. இந்து என்னும் மொழி 103
133. காட்டுமிராண்டிகளுக்குக் கூட்டு மிராண்டியாகத் தோன்றிய வேதத்தையே வாசிக்க வுத்திரவில்லா சூத்திரமிராண்டியின் அறிவிப்புப் பத்திரங்கண்டோம். 106
134. கிறீஸ்துவின் சத்திய மொழி 106
135. பௌத்த சோதிரர்களுக்கு அறிவிப்பு 107

அகர வரிசை

I. பழமொழிகளும் சொற்றொடர்களும் 109
II. சிறப்பு பெயர் வரிசை (ஆங்கிலம்) 117
III. சிறப்பு பெயர் வரிசை (தமிழ்) 119
IV. சிறப்பு பொருள் வரிசை 152

புகைப்படங்கள் 170

பின்னிணைப்புகள் 172

முன்னுரை

அயோத்திதாசர் சிந்தனைகளின் இரண்டு தொகுப்புகளும் வெளிவந்து ஆண்டுகள் நான்கே ஆயின என்றாலும், அவை தமிழகத்தில் ஓர் சலசலப்பை ஏற்படுத்தி விட்டது உண்மையே. இந்த சல சலப்பு முழுமையும் கருத்துக்களின் புதுமையாலும், புரட்சித் தன்மையாலும் மட்டுமே ஏற்படவில்லை. கருத்துக்களின் வேறுபாட்டாலும், மொழியின் தொன்மையால் ஏற்படும் தெளிவின்மையாலும், ஆசிரியரின் தனிப்பட்ட எழுது முறையாலும் உண்டானது என்பதும் உண்மையே. இந்நிலையில் தொகுப்பாசிரியர் புரிந்து கொண்ட வரையில், அயோத்திதாசரின் சிந்தனைகளின் தனித்துவத்தை சுட்டிக் காட்ட வேண்டியது ஓர் சமூக பொறுப்பாக அமைகிறது.

அயோத்திதாசர் சிந்தனைகள் உருவாகிய ஆண்டுகள், குறிப்பாக பத்திரிக்கை மூலம் அவரது கருத்துக்கள் தமிழக முழுமையும், தமிழகத்திற்கு அப்பாற்பட்டும் பரவிய காலம், 1907 முதல் 1914 வரை, இந்திய நவீன வரலாற்றில் நெருக்கடியான காலம். ஏறக்குறைய ஒன்றரை நூற்றாண்டு காலமாக அரசு வீற்றிருந்த காலனியாதிக்கத்தின் தாக்கங்கள், சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் முழுமையாக வெளிப்படத் தொடங்கிய காலம். நேர்முகமற்ற காலனியாதிக்கம், மிகக் குறைவான சமூக மாறுதல்களையே ஏற்படுத்தியிருக்கக்கூடும் என்ற நிலை மாறி, மிக அடிப்படையான பண்பாட்டு நிலைப்பாடுகளிலும் ஆழமான மாறுதல்களை, எளிதில் கண்டு அறிந்து, புரிந்து கொள்ள முடியாத முறையில் ஏற்படுத்திவிட்டது என்பதை பெருவாரியான மக்களும், மிக அதிகமாகவே பேரிழப்பைச் சந்திக்க வேண்டியிருந்த தாழ்த்தப்பட்ட மக்களும் புரிந்து கொள்ள ஆரம்பித்த காலம். அத்தகைய தெளிவு, சமூகத்தில் மேல்மட்டத்திலிருந்தோரிடத்தும் கீழ் மட்டத்திற்குத் தள்ளப்பட்டோரிடத்தும் இரண்டு மாபெரும் வேறு வேறு விதமான எதிர்ச் செயல்பாடுகளாக விரிவடையத் தொடங்கியது. காலனியாதிக்கத்தின் செயல்பாடுகளால் பெரிதும் பயன்பெற்ற மேல்மட்டத்தார், அதன் பேரில் இதுகாறும் கொண்டிருந்த விருப்பை மாற்றி வெறுப்பாக (தேசீயம்) வெளிப்படுத்த முனைந்தார். அதற்கு மாறாக அதே ஆதிக்கத்தின் செயல்பாடுகளால் இழப்படைந்து கீழ்மட்டத்திற்குத் தள்ளப்பட்ட தாழ்ந்த சமூகத்தினர், நவீன முரண்பாடுகளின் உதவி கொண்டு எழுச்சி பெற முனைந்தனர். சிந்தனைகளிலும் செயல்பாடுகளிலும் ஏற்பட்ட இந்த இரு பெரும் விரிசல்கள், பழமைச் சமூகத்தின் மரபு வழிவந்த விரிசல்களின் தொடர்ச்சியாகவே பிரிந்தன என்பது குறிப்பிடத் தக்கது. அதாவது வழிவழி வந்த, சமூக விரிசலே, குறிப்பாக பிராமணியத்தால் பயன்பெற்று, அதனையே முதன்மையாக, முக்கியமாகக் கொண்டோர் ஒரு பகுதியாகவும் பிராமணியத்தால் தாழ்த்தப்பட்டு அதனோடு போராடி வந்தோர் மறு பகுதியாகவும் பிரிந்த சமூக விரிசலே காலனிய நவீனத்துள் நிலை பெறத் துவங்கியது. ஏற்கனவே மேலாண்மை பெற்றிருந்த சமுதாயங்களே இன்னமும் பலமுற்றன. ஏற்கனவே பிற்படுத்தப்பட்டிருந்தவையே இன்னமும்

பலமற்றவையாயின. பழமையில் தொடங்கிய இந்த விரிசல் நவீனத்துள் மேலோங்கி, புதிய அமைப்பு, பண்பாடு இவற்றுள் நிலைநிறுத்தப்பட்டது. இம்மாபெரும் சமூக விரிசல்களைச் சார்ந்தே நாடெங்கும் இரு பெரும் கோட்பாடுகளின் கோர்வைகளும் உருவாயின. இலை மறை காயாக முற்றிய பிராமணிய கொள்கை அடிப்படையிலான சாதீயம் ஒன்று: சிராமணிய கொள்கை அடிப்படையிலான சமத்துவம் மற்றொன்று. பிறப்பு அடிப்படையில் உயர்வு தாழ்வு கற்பிக்கும் கோட்பாடு ஒன்று. பிறப்பு அடிப்படையில் சமத்துவம் கற்பிக்கும் கோட்பாடு மற்றொன்று. இவையிரண்டுமே, இரண்டு வேறுபட்ட, மாறுபட்ட, முரண்பாட்டில் மோதிக் கொண்டிருக்கும் கருத்துக் குவியல்களாக, சமூக இலட்சியங்களாக மேலாண்மைக்காகப் போட்டியிடும் கோட்பாடுகளாக விரிந்தன. இவற்றில் முந்தியதான சாதீயக் கொள்கையே வெவ்வேறு சமூக திரைகளின் மறைவில், தோன்றி இன்றைய இந்திய நவீனமாக ஓங்கி, பண்பாட்டில் பெருங் கலக்கத்தையும், சமூகத்தில் பல சிக்கல்களையும் ஏற்படுத்தி வைத்துள்ளது. இந்தக் கோட்பாட்டின் திரிபு மிகுந்த நவீன வரலாற்றையே நாம், இந்திய பண்பாட்டு மறுமலர்ச்சியென்றும், இந்திய சுதந்திர வரலாறு என்றும் அறிவோம். இந்திய சாதீயத்தின் அரசியல் வெற்றியும் அதன் மேல் கட்டப் பெற்ற அரசியல் அமைப்பும், பிந்திய சமத்துவ கோட்பாட்டை நவீன நிர்பந்தத்தால் நிறுவனங்களின் அளவில் மட்டுமே ஏற்றுக் கொண்டு, அடிப்படையான சமூக அளவில் அழித்துவிடவும், இன்றேல், செயலிழக்கும் வகையில் சீரழிய செய்யவுமே முனைந்தும், முயற்சியில் வெற்றி பெற்றும் வருகின்றன. இந்த இயங்கலின் முதிர்ச்சியையே இன்று நாம் சமூகத்தில் காண்கிறோம். சாதீய பொருளாதாரத்தின் உருவாக்கம், சமய அரசியலின் ஆர்ப்பாட்டம் இவைகளின் தாக்குதல்களால், உலகமயத்தின் சவால்களைச் சந்திக்கும் திராணியின்மை, இத்யாதி.

தொன்மையில் பிராமணியத்திற்கு மாற்றாக, முரண்பாடாக வளர்ந்து போராடி வந்த சிராமணிய - சமண மரபுகள் வேரூன்றி, வரலாற்று மாற்றங்களாலும் மேற்கத்திய நவீன கோட்பாடுகளாலும் பாதிப்புகளாலும் நவீன - சமத்துவ கொள்கையுருக் கொண்டு காலனிய நூற்றாண்டுகளில் இந்தியத் துணைக் கண்டத்தில் பல்வேறு இடங்களில் ஒடுக்கப்பட்ட சாதிகளின் எதிர்க் கோட்பாடாக முளைத்தன. அயோத்திதாசருக்கு முன்னும், பின்னும், சாதியற்ற சமத்துவ சமுதாய தத்துவங்கள், மனிதாபிமான சமூக அமைப்புக்கான கோட்பாடுகள், சமூக நீதி, பரவலான சமூக அதிகாரம் இவற்றை உள்ளடக்கிய வரலாற்றுக் கட்டுமானங்கள், நாடெங்கும் புலையர், ஈழவர், பறையர், பள்ளர், சாணார், வன்னியர், மாலர், மாதிகர், மகார், மகாலி, சூஹ்ரா, சமார், நாமசூத்திரர் இன்னும் பல ஆதிவாசி சமூகங்களின் இயக்கங்கள் மூலம் மங்குராம், காசிராம், சாமி அச்சூதானந்தர், ஜோதிபாபூலே, சகோதரன் ஐயப்பன், ஐயங்காளி, நாராயண குரு, சாமி தர்மதீர்த்தன், பெரியார், ஷிண்டே இறுதியாக அம்பேத்கார் ஆகியோர் முன் வைத்தனர். இவர்களுடைய எழுத்துக்களும், பேச்சுக்களும் பெரும்பான்மை யானவை, பதிவாகாதவை பதிவானவையும் பல்வேறு மொழிகளில் அமைந்தவை. இன்று ஆய்வு மொழி என்று ஏற்றுக் கொள்ளப்படும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்படாதவை. மேலும் எதிர்க்கோட்பாடுகளை உள்ளடக்கியவை என்பதாலும், போராடும், தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக் குரல் என்பதாலும்,

மேலாண் குழுக்களால் மறுக்கப்பட்டும், மறைக்கப்பட்டும், அழிக்கப்பட்டும் வந்தன, வருகின்றன. ஆனால் எந்தவொரு சமூக மேலாண்மை குழுக்களின் அதிகாரமும் முழுமை பெறாதது என்பதாலும் எதிர்ப்பும் மறுப்பும் அதிகாரத்தின் மாற்றுருவமே என்பதாலும் இவைகள் பல்வேறு கால கட்டங்களிலும் எழுச்சி பெற்றே வந்திருக்கின்றன. இந்த பரவலான எதிர்க்கோட்பாடுகளின் கருத்துக் குவியல்களின் மத்தியிலிருந்து எழுந்த ஓர் சிந்தனைக் கோர்வையே அயோத்திதாசர் சிந்தனைகள். இதற்கென சில சிறப்பு அம்சங்கள் உள்ளன. அவையே அயோத்திதாசரின் சிந்தனைகளை ஒத்த வேறு பலரின் சிந்தனைக் கோர்வைகளிலிருந்து வேறுபடுத்தி, தனிப்படுத்தி நிலைக்கச் செய்கின்றன.

இந்தியாவில் நவீனத்திற்கான மாற்றம் வரலாற்று சந்தர்ப்பத்தால் காலனியாதிக்கத்திற்கு உட்பட்டதாகவே இருந்தது. இந்திய மரபுகளையெல்லாம் ஒரே கூடையில் போட்டு, தள்ளப்பட வேண்டியவை என்று கணித்தும், மேற்கத்தியரால் வரையறுக்கப்பட்ட நவீனமே சிறந்தது காலத்திற்கேற்றது என முன்வைத்தனர், காலனிய அரசும் அதனைச் சார்ந்தோரும். அதற்கெதிராக காலனியாதிக்கத்தால் வரையறுக்கப்பட்ட இந்தியப் பழமையை முழுமையாக ஏற்றுக் கொண்டு அதையே இந்திய வரலாற்றுப் பெருமை என்றும், நமது தனித்துவம் என்றும், மேற்கத்திய நவீனத்தைவிட மேலானது என்றும் எதிர்மறையாக வாதிட்டது தேசீய இயக்கம். முன்னவரால் ஒதுக்கப்பட வேண்டியது என்று கணிக்கப்பட்டதும், பின்னவரால் கண் போன்று காக்கப்பட வேண்டியதென்றும் கருதப்பட்ட 'இந்தியப் பழமை'யின் உட்கரு அடுக்கடுக்கான சமுதாய முறையும் அதனை நியாயப்படுத்தி நிலைப்படுத்தும் பண்பாட்டு சமயக் கோட்பாடுகளே என்பது குறிப்பிடத்தக்கது. இஃது நேரடியாகவோ, மறைமுகமாகவோ தேசியவாதிகள் அனைவராலும் குறிப்பாக காந்தியாலும் பேசப்பட்டது. இந்தப் பின்னணியிலேயே, அயோத்திதாசரின் நிலை மூன்றாம் மாற்றுக் கருத்து ஒன்றை முன் வைக்கிறது. இந்தியப் பழமையை ஒருமுகமாகப் பார்க்க மறுக்கிறார் அயோத்திதாசர். இந்தியப் பழமையில் கலப்பைக் காண்கிறார் அவர். இரு பெரும் மரபு வழிகளின் வெள்ளப் பெருக்காக பார்க்கிறார். பிராமணியம்-சிராமணியம் என்ற இரு பிரிவின் அடிப்படையில் சாதியற்ற சமுதாயத்தின் அடித்தளங்களாக பகுத்தறிவு, பொருளியல்வாதம், நீதி நெறி, சமத்துவம் போன்ற கோட்பாடுகள், மூடநம்பிக்கை, ஆன்மீகம், அராஜகம், பிறப்பில் உயர்வு தாழ்வு கற்பிக்கும் சாதீயம் என்றவற்றால் மறைக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் வருவதைக் காண்கிறார். இந்தக் கண்ணோட்டத்திலிருந்து சமூக சமத்துவத்தை முதன்மையாக உள்ளடக்கிய நவீனம் என்னும் கருத்தும், செயல்பாட்டு முறையும் ஏற்கனவே இந்தியப் பண்பாட்டுக்குள் சிறப்பாக தமிழ்ப்பண்பாட்டுக்குள் சிராமணியம் (சமணம்), பௌத்தம் என்ற குடையின் கீழ் பண்டையில் விரிந்தும் பரந்தும் மேலோங்கியும் இருந்த நிலையையும் இடைக்காலத்தில் பிராமணீய - சாதீய எதிர்மறைச் சக்திகளால் சீர்கெட்டும் அழிக்கப்பட்டும் வந்து கொண்டிருப்பதை வரலாற்றிலும், பண்பாட்டிலும், சமூகத்திலும் காணக்கூடும் என்று விளக்குகிறார். சாதியின்மையும் சமூக சமத்துவமுமே நவீனத்தின் உட் கரு என்று ஏற்றுக் கொண்டால் அதனைத் தேடி வேறெங்கும் அலைய வேண்டியதில்லை. இந்திய - தமிழ்த் தொன்மையிலேயே

பரந்து கிடக்கக் காணலாம். ஆகவே நவீனம் என்பது தொன்மையின் தொடர்ச்சியே என வாதிடும் ஆசிரியரின் நிலைப்பாடு அவரது சிறப்பு அம்சங்களில் தலையாய ஒன்று.

இரண்டாவது, இதிலிருந்து வெளிப்படும் அவரது ஆய்வுமுறை அல்லது விமரிசனக் கண்ணோட்டம். கண்ணால் காண்பதுவும் பொய், காதால் கேட்பதுவும் பொய், தீரவிசாரிப்பதே மெய் என்றனர் நமது முன்னோர். இக்கருத்தையே கார்ல் மார்க்ஸ், தோன்றுவனவற்றிற்கும் உண்மைக்கும் வேறுபாடு இல்லையெனில் அறிவியலுக்கு அவசியம் இல்லையென்று சுட்டினார். சமூக அறிவியியல் மரபுக்குள் இந்த நுண் உண்மை இருபெரும் ஆய்வு மரபுகளாக வடிவமைந்துள்ளன. ஒன்று, சமூக நிகழ்வுகளை அவற்றின் தோற்ற அடிப்படையில் தோன்றுவனவாறே ஏற்றுக் கொண்டு அவற்றின் கூறுபாடுகளின் தொடர்புகளில் காரண காரியங்களைக் காண முயல்வது. இரண்டு, நிகழ்வுகளின் முன்னணி, பின்னணிகளின் உதவி கொண்டும் முன் பின் விளைவுகளை, வரலாற்றியலின் தொடர்ச்சியின் மூலமாகவும் அவற்றின், சமூக வர்க்க முரண்பாடுகளையும் முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்த முயல்வது. உட்கருத்தையும், உள்ளுண்மைகளையும் உணர முயல்வது. இவ்விரண்டு மரபு வழிகளில் முதலாவது, அறிவியல் (புற ஆய்வு) மரபினின்று கொள்ளப்பட்ட மறுபதிப்பு. இரண்டாவதே, சமூக அறிவியலுக்கென்று உருவாக்கப்பட்டது என்ற போதிலும் முதலாவதே சமூக அறிவியலுக்குள்ளும் மேலோங்கி நிற்கிறது. பெரும்பாலும் சமூக இயங்கியலை இருக்கும் நிலையிலேயே ஏற்றுக் கொண்டு நியாயப்படுத்துவது இரண்டாவது சிறுபான்மை ஆய்வாளரால் கையாளப்படுவது. சமூக இயங்கியலை விமரிசனத்திற்குட்படுத்தி மாற்ற முயலும். அயோத்திதாசரின் ஆய்வு முறை இந்த இரண்டாம் வகையைச் சார்ந்தது.

இன்றைய சமூகம், பண்பாடு, கட்டுப்பாடுகள் இவற்றை அயோத்திதாசர் ஒரு திரிபாக காண்கிறார். இருக்க வேண்டிய நிலையிலிருந்து மாறுபட்டு, வேறுபட்டு, திரிபடைந்த நிலையில் இருப்பதைக் கணிக்கிறார். இவற்றின் உண்மையைக் கண்டுணர, 'கண்டுபிடிக்க' வரலாற்றின் உதவியினாலும் பண்பாட்டு முழுமையின் இயங்கியியலினாலும் இவற்றின் பின் சென்றே விளக்க முயல வேண்டும். மறுவிளக்கம் செய்ய வேண்டும் என்கிறார். எடுத்துக்காட்டாக, இன்றைய சமயங்கள், வழிபாடுகள், கடவுளர், சமூக மரபுகள் அவற்றுக்குள் புதைந்து கிடக்கும் உண்மையை வெளிப்படுத்துவதில்லை. இவற்றின் உட்கருத்து, உண்மெய்நிலை, உள்ளுண்மையை, ஆய்ந்தே, அதாவது தீரவிசாரித்தே உணர வேண்டும். ஏனெனில் அவற்றுள் முடங்கிக் கிடப்பது சமூக, வரலாற்று, பண்பாட்டு முரண்பாடுகளும், எதிர்மறையான சமூக் அதிகாரங்களின் போராட்ட நிலைகளுமே. இப்படிப்பட்ட விளக்க முறையைக் கைக் கொள்வதினாலேயே அயோத்திதாசரால் மூன்றாம் மாற்றுகளை முன் வைக்க முடிகிறது. சமூக உறவுகளையும் உடன்பாடுகளையும் விமரிசனத்திற்குட்படுத்தி தோற்றங்களைக் கட்டவிழ்க்க முடிகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, பெருவாரியான ஒடுக்கப்பட்ட சனங்களின் சமூக, பண்பாட்டு விடுதலைக்கான அறிவியல் அடித்தளம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்ட முடிகிறது. இதனைவிடுத்து மேற்கத்தியரால் வரையறுக்கப்பட்ட அறிவியல் - சமூகக் கோட்பாடுகளை புறஆய்வுக்

கண்ணோட்டத்தில் பண்பாட்டு வேறுபாடுகளுக்கும் தாக்கங்களுக்கும் அப்பாற்பட்டதென்றும், எல்லா பண்பாட்டினரும் வேறுபாடற்ற முறையில் ஏற்றுக் கொள்ள வேண்டியதென்றும் பழமை என்பது பொதுவாக, ஒருமுகமான மரபு என்றும் நவீனம் என்பது மறுபடியும் ஒருமுகமான மேற்கத்தியரால் வரையறுக்கப்பட்ட, நிர்ணயிக்கப்பட்ட 'புதினம்' என்ற நிலைப்பாட்டினின்று கணிப்போருக்கு அயோத்திதாசர் ஓர் பழமைவாதியாகவே தோன்றுவார்.

மூன்றாவதாக, இவ்வாறு பண்பாட்டு - விமரிசன சமூக அறிவியல் அணுகு முறையில் இந்திய வரலாறு, பண்பாடு, சமூகம் இவற்றை ஆய்வுக்கு உட்படுத்தும் அயோத்திதாசர் அசாதாரணமாக, ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்கு முன்னமே, மிக முக்கியமான சமூக அறிவியல் பிரச்சனைகளில் அறிவியலாளரின் இன்றைய ஆய்வு முடிவுகளை நமக்களித்தார். இது அயோத்திதாசரின் அம்சங்களில் சிறப்பானது.

எடுத்துக்காட்டாக, சாதி அடிப்படையிலான அடுக்குமுறைச் சமுதாயத்தையே முக்கிய உட்கருவாகக் கொண்ட சனாதன இந்து மதத்தையே இந்தியத் துணைக் கண்டத்தின் ஒருமுகத் தொன்மையாக நிலைநிறுத்தி அதன் மூலம் இன்றைய, எதிர்கால சமூக அரசியலில் தனது மேலாண்மையை நிலைநிறுத்த முனைந்த பிரமாணிய தேசீயவாதிகள். 'இந்து மதத்தின் தொன்மையை' ஓர் அடிப்படைக் கொள்கையாகக் கொண்டு அதனை பல்வேறு இடங்களில் வலியுறுத்தி வந்தனர். இந்த வாதத்திற்கு ஆதாரமாக ஓரியன்டலிஸ்டுகள் எனப்படும் ஆங்கிலேய ஆராய்ச்சியாளரும் பிராமணியத்தையே இந்து அல்லது இந்திய மதமெனத் தூக்கிப் பிடித்தனர். அடுக்கு சமூக முறையை எதிர்க்க முனைந்த பல்வேறு சமூக சக்திகளும் இவ்வாதத்தின் முன் செயலிழந்து நின்றன. இந்தியத் தொன்மை, 'இந்து' தொன்மையென்பதால் தொன்மை முழுமையையுமே கோட்பாட்டளவிலாவது மறுத்து, வெறுத்தொதுக்கி மேற்கத்தியரால் வரையறுக்கப்பட்ட நவீனத்தையும் நாத்தீகத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட்டனர். இதனால் அநீதியான சமூக முறையை எதிர்ப்போருக்கு சுய பண்பாட்டு அடித்தளம் இல்லாமல் போய்விட்டது. இந்த இக்கட்டான நிலையிலேயே அயோத்திதாசர் தனது மூன்றாம் மாற்றை முன் வைக்கிறார். காலனியாதிக்கத்தாலும் பிராமணிய தேசியவாதிகளாலும் தூக்கிப் பிடிக்கப்பட்ட இந்து மதத்தின் அடுக்கு சமூக முறையின் தொன்மையை கேள்விக்குட் படுத்துகிறார். இந்து மதம் தொன்மையானது அல்ல; ஓரிரு நூற்றாண்டுகளுக்கு உட்பட்டே உருவாக்கப்பட்டதொன்று, ஏன், இன்னும் சொல்லப் போனால் இந்து மதத்தின் உருவாக்கத்திற்கு ஆதாரம் ஆங்கிலேய துரைத்தனமே என்று ஐயமற, ஆணித்தரமாக எடுத்துரைக்கிறார். எனவே இந்து மதம் என்பது ஆதாரமும் அடித்தளமும் அற்றது; அதனை இந்தியத் தொன்மையாக ஏற்றுக் கொள்ள இயலாது. அதே காரணத்தைக் கொண்டு இந்துமதம் இன்றைய அல்லது எதிர்கால இந்திய சமூகத்தை இணைக்கவோ, இயக்கவோ தகுதியற்றது என்று வாதிட்டார் அயோத்திதாசர். வலதுசாரிகளின் குறிப்பாக 'இந்துத்துவ'வின் இன்றைய சமூக-அரசியல் எழுச்சியின் பின்னணியில், சமூக அறிவியலார், வெளிநாட்டவரும் முற்போக்கு உள்நாட்டவரும், இது பற்றிய ஆராய்ச்சியில் இறங்கி அதன் துணிவாக

‘இந்து மதம் ஆங்கிலேயரின் கண்டுபிடிப்பு’ பண்பாட்டு - அரசியலின் நிர்மானத்தை மூடிமறைக்க பிராமண சக்திகள் எடுத்துக் கொண்ட போர்வை; இது நிறைந்த பட்சம் அரசியலும் குறைந்த பட்சமே, ஏன் இல்லையென்று சொல்லக்கூடும் அளவுக்கே, சமயமும் ஆகும். இது ஒரு கற்பிதம். இதனை ஒரு சமயம் என்று கொள்வதே தவறு என்ற முடிவுக்கு வந்துள்ளார். குறிப்பாக ரோமிலா தாபர் என்ற வரலாற்றறிஞர் இது பற்றி தெள்ளத் தெளிவாகவே விளக்கியுள்ளார். இதுபோல மற்ற சமூகபிரச்சனைகளிலும் அயோத்திதாசரின் உள்உணர்வு, இன்றைய அறிவியலாரின் துணிபுகளுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது. இதற்குக் காரணம் அயோத்திதாசரின் அணுகுமுறை, ஆய்வு முறையேயாகும். கண்ணால் காண்பதையும், காதால் கேட்பதையும் மெய் என்று கொள்ளாமல் சமூக நிகழ்வுக்குப் பின் சென்று, அவற்றை விமரிசனத்திற்குட்படுத்தி அவற்றின் சமூக அர்த்தத்தையும், முக்கியத்துவத்தையும் வெளிக் கொணர முனையும் முயற்சியே பாசிட்டிவிச அணுகுமுறையால் சமூகப் பிரச்சனைகளைத் தீர்க்க முயன்று திண்டாடி நிற்கும் இன்றைய பெருவாரியான சமூக அறிவியலுக்கு அயோத்திதாசர் அளிக்கும் மாற்று அணுகுமுறை. இது ஆசிரியரின் மூன்றாவது சிறப்பு அம்சம்.

அயோத்திதாசர் சிந்தனைகளின் ஈர்ப்பிற்கு மற்றொரு அடிப்படைக் காரணம், அவரது எண்ணக் குவியல் நேர்மையானது. ஒருங்கிணைக்கப் பெற்றது. ‘நேர்மை’ என்பதன் பொருள் வேரடியிலிருந்து தானே தன்னாக எழும்பும் தன்னெழுச்சிநிலை. எண்ணக் குவியல்களின் எழுச்சிக்குப் பல்வேறு சக்திகள், துணை போகலாம், தூண்டிவிடலாம். ஆனால் எங்கே தன்னெழுச்சியின் அகக்கரு இல்லையோ அங்கே புறச் சக்திகள் ஓரளவுக்கே செயல்படும். ஆனால் எங்கே தன்னெழுச்சியின் அகக்கரு துடிதுடிப்புடன் உயிரோட்டமுள்ளதாக உள்ளதோ அங்கே புறச்சக்திகள் நிறையவே துணைபுரியும். அயோத்திதாசரின் சிந்தனை - உள் உணர்வுக் குவியல்களும் அவ்வாறே. தமிழ் மொழி, சித்த மருத்துவம் இவற்றில் வேரூன்றி நிற்பவர் அயோத்திதாசர். சுயமாக சிந்திக்கும் திறமையையும் தாழ்வு மனப்பான்மையின்றி தன்னம்பிக்கையுடன் வாழும், வாழ்ந்து வந்த, பெருமரபுகளைக் கொண்ட சமூகத்தினின்று எழுந்து நிற்பவர். காலனியாதிக்கத்தின் செயல்பாடுகளால் முரண்பாடான தாக்கத்திற்குள்ளானவர். நீண்ட வரலாற்றுக் கண்ணோட்டத்தில், சிறு கால அளவில் பெரும் மாறுதல்களை, பெருவாரியான சாதி சனங்கள் சமுதாயத்தின் விளிம்புக்குத் தள்ளப்படும் மாறுதல்கள் அவரைத் தட்டி எழுப்பிய அதேநேரத்தில் அதே காலனியாதிக்கத்தின் தவிர்க்க முடியாத விளைவான சமத்துவ அடிப்படையிலான நவீனத்தையும் கண்டுணர்ந்தவர். இத்தாக்குதல்கள் அவரை வரலாற்று பண்பாட்டு ஆராய்ச்சியில் இழுத்துச் சென்றன. இறந்த காலத்தின் இருட்டறையிலிருந்தே நிகழ்-எதிர்காலத்திற்கு வேண்டிய கருவிகளையும், சாதனங்களையும், நுண் உணர்வுகளையும் தேடி எடுத்து வந்து சமூகத்தின் முன் வைக்கிறார். வரலாற்றையும் பண்பாட்டையும் புறக்கணிக்கவோ, மறுக்கவோ கூடாதபட்சத்தில், அவற்றை கூர்ந்து நோக்கியே பிரச்சனைகளைத் தீர்க்க முயல்கிறர். இந்தப் பின்னணியில் எழுந்ததே அவர் அடிக்கடி கூறும் சமூக விடுதலைக்கான செயல்பாட்டு முறை: எந்த வழியில் நாம் தாழ்த்தப்பட்டோமோ அதே வழியில் சென்றே விடுதலை பெற முடியும். இந்த சமூக விடுதலைக்கான செயல்பாட்டு முறை நிகழ்வுகளுக்கு பின்

மறைந்திருக்கும் உண்மைகளை வெளிக் கொணர முயலும் பண்பாட்டு விமரிசன ஆய்வுக் கோட்பாட்டு முறைக்கும் பொருந்தும்.

மேலும் யாரும் யாரையும் மேலே எற்றவும், கீழே இறக்கவும் முடியாது. "தீதும் நன்றும் பிறர் தர வாரா". தீவிரத்தன்மை தன் எழுச்சி துணையுடன் வரலாம். ஆனால் அதற்கு முன் தன்னுணர்வு துளிர்த்திருக்க வேண்டும். இதுவே தன்மானம், தன் மரியாதை. இவற்றிற்கு அடிப்படை நவீனம் என்பதன் முறையான அடிக்கல். ஆசிரியரின் எண்ண உணர்வுக்குவியல் இந்த மாதிரியான தன்னுணர்வில் தோய்ந்தவை.

அயோத்திதாசரின் சிந்தனைகள் ஒருங்கிணைக்கப் பெற்ற கண்ணோட்டத்தில் அமைந்தவை. அதாவது சமூக உலகின் ஒரு பிரச்சனையை மட்டுமோ அல்லது சமூகத்தின் ஒரு பகுதியான ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சனையை மட்டுமோ மையமாகக் கொண்டதல்ல. ஒட்டு மொத்தமாக முழுச் சமூக உலகத்திற்கும் முரண்பாடற்ற, மாற்றுக் கருத்தை வைக்க முயல்பவை: அவரது சிந்தனையில் மொழியியல், சமூகவியல், மானிடவியல், பண்பாட்டியல், அறிவியல், ஆன்மீகம், ஒழுக்கம், அரசியல் என அனைத்திற்கும் இடமுண்டு. இவை எல்லாமே ஒருங்கிணைந்த நிலையில் 'புதுமை'க்கு வழிகாட்டுகின்றன. பெருவாரியான கொள்கைவாதிகள் சமூக உலகைக் கூறுபடுத்தி ஒவ்வொரு பகுதியையும் தனித்தனியாகக் கற்பனை செய்து ஆராய்ந்து வந்த கால கட்டத்தில், அயோத்திதாசர் போன்ற ஒருவர் சமூக உலகை ஒட்டு மொத்தமாகப் புரிந்துகொண்டு வரையறுக்க, நிர்ணயிக்க முயல்வது அதிசயமான ஒன்று. இந்த அவ்ரது முயற்சியே அவரது ஈர்ப்புக்குக் காரணமாயிருக்கிறதென்றால், இதே காரணம் அவரது சிந்தனைகளை எளிதில் புரிந்து கொள்வதற்கு முட்டுக்கட்டையாகவும் இருக்கிறது. ஒரு படி மேலாக அவரை 'குழப்பவாதி' என்று தள்ளிவிடவும் காரணமாய் அமையக்கூடும்.

அயோத்திதாசர் தன்னுடைய விளக்கமளிக்கும் முயற்சியில் முழுமையாக வெற்றி பெறுகிறார் என்பது இங்கு வாதமல்ல. ஆனால் அவரது முயற்சியே இங்கு அடிக்கோடிட்டு காட்டப்படுகிறது. வரலாறு, பண்பாடு சம்பந்தப்பட்ட பல பிரச்சனைகளை, பிரச்சனைகளாக ஏற்றுக்கொள்ள அவர் மறுக்கிறார். சில சொற்களுக்கு வலிந்து பொருள் காண முயல்கிறார். அவரது சில வரலாற்றுக் குறிப்புகள் தவறாக இன்று உணரப்படுகின்றன. விளக்கங்கள் சில வினோதமாகத் தோன்றுகின்றன. ஆனால் எந்த இலட்சியவாதியின் எண்ண உணர்வுக் குவியலில் இந்தக் குறைபாடுகள் இல்லை? ஆனால் உயர்த்திக் காட்டப்பட வேண்டியது அவரதுதனிப்பெரும் முயற்சி. சமூகத்திலும் சமூகச் சொல்லாடலிலும், முடிவடைந்தவை, தெளிவடைந்தவை, தீர்க்கப்பட்டவை என்று பெருவாரியான அறிவு ஜீவிகளால் மறக்கப்பட்ட, மறைக்கப்பட்ட அல்லது மறுக்கப்பட்ட உண்மைகளையும் கோட்பாடுகளையும், தத்துவங்களையும் மறு பரிசீலனைக் குட்படுத்தும் அரவது முயற்சியும் அணுகுமுறையுமே அயோத்திதாசரின் புதுமை. அவர் கூறும் இந்த மூன்றாம் மாற்று இன்று தாழ்த்தப்பட்டவர்களாக எண்ணப்படும் பெருவாரி சனங்களின் கண்ணோட்டமும், எதிர்பார்ப்புகளும், எழுச்சிகளுமாக வெளிப்பட்டு புதியதோர் சமூக விடுதலைக்கான வழியைத் திறந்துவிடக்கூடிய ஆற்றலைப் பெற்றது என்பது மட்டும் உண்மை.

இக்கட்டுரை ஒரு முன்னுரையேயன்றி ஆராய்ச்சியல்ல. இதன் நோக்கம், ஆசிரியரை அறிமுகப்படுத்தி, சிந்தனைத் தொகுப்புகளை வாசிக்கவும், கருத்துக்களை சர்ச்சைக்குட்படுத்துவதுமே. அயோத்திதாசர் ஏற்றுக் கொள்ளப்படலாம் அல்லது தள்ளப்படலாம். ஆனால் இரண்டிற்குமுன் வாசிக்கப்பட வேண்டும், விவாதிக்கப்பட வேண்டும் என்பதே நோக்கம்.

முதல் இரண்டு தொகுப்புகளுக்கும் போலவே இந்த மூன்றாம் தொகுதிக்கு திரு. அன்பு பொன்னோவியம் அவர்களின் ஒத்துழைப்பும், ஊக்கமும் இன்றியமையாததாக இருந்தது. அன்னார் மூன்றாம் தொகுப்பை புத்தக வடிவில் பார்க்கவியலாமற் போனது வருத்தத்திற்குரியது. இயற்கையெய்துமுன் மூன்று தொகுதிகளுக்குமான மறு அச்சு வந்துவிட வேண்டுமென்று பெரிதும் முயன்றார். அவரது அவா விரைவில் நிறைவேறுமென நம்புகிறேன். அடுத்தபடியாக எனது நன்றி நாட்டார் வழக்காற்றியல் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர்களுக்கும் துணை ஊழியர்களுக்கும் உரித்து. அவர்கள் அளித்துவரும் ஊக்கமும் ஆதரவுமின்றி இன்றைய சந்தர்ப்பத்தில் சமூகத்திற்குப் பயன்படக்கூடிய ஆராய்ச்சிகளை குறிப்பாக அயோத்திதாசர் பற்றிய விவாதங்களைத் தொடர்வது எளிதல்ல. இதில் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியவர் முனைவர் டி. தருமராஜன். அயோத்திதாசர் ஆராய்ச்சி தொடர்வதில் கருத்துக்கள் பரவுவதில் அவர் காட்டி வரும் ஊக்கமும் உழைப்பும் போற்றத்தக்கது. மையத்தின் புது இயக்குநர் அருட்தந்தை பிரிட்டோ வின்சென்ட் இக்கட்டான சூழ்நிலையிலும் மூன்றாம் தொகுப்பினை வெளிக் கொணர தயங்காமல் முன்வந்தார். அவருக்கும் நன்றி. அச்சு கோர்த்தவவர் திரு. ஹரிநாராயணன். அவரே, அகர வரிசைகளைத் தொகுக்கவும் துணைபுரிந்தார்.

ஞான. அலாய்சியஸ்

1. கடவுள் வாழ்த்து

நன்மெயாங் கடவுள் பூமியைத் திருத்தி நன்மெயாந்தண்மெய் நீருற்றி
நன்மெயாங்கடவுள் வித்தினையூன்றி நன்மெயா மறக்கதிரோங்க
நன்மெயாங்கடவுள் காவலதாக நன்மெயா முண்மெயினின்று
நன்மெயாங்கடவுள்கமலநற்பாதம் நாடுவாம் நற்றவமாதோ.

அரசர் வாழ்த்து

அன்பெனும்பிரிடீஷ திபர்களோடு அன்புருக்கொண்டவிக்டோரியாள்
அன்பெனுந்தலைமெய் மைந்தனாம்ஏழாமன்புரைஎட்வர்டெம்மரசர்
அன்புருங்கவர்னர்ஜெனரலுஞ்சென்னை அன்பராங்கவர்னருமவர்தன்
அன்பெருஞ் சங்கத்தவர்களுமோங்க அன்பினை யாதரித்தாள்வாம்.

தமிழ் வாழ்த்து

ஒருபைசாத்தமிழ் னிவனுதவானென்பார்
ஒருபைசாத் தமிழருமை யறியாமாந்தர்
ஒருபைசாத் தமிழிலுண்மை யறிவாராயின்
ஒருகோடிப் பொன்னிஃதென் றுரைப்பர்மாதோ

சுதேச வாழ்த்து

சீர்பெறவிரும்புந் திருவளர் சுதேச சித்தால் வித்தது மோங்க
மோவேறு சுதேசக்கைத் தொழில் கல்வி பேருரு கொண்டு நற்குடிகள்
ஓர்பெறுஞ் சுதேச வகமகிழுருவனைவர் மேற்கருணை கொண்டுடில்
நீர்வளமோடி நிலவள மோங்கி நித்திய சுதேசமாம் மாதோ.

பரதேச வாழ்த்து

பற்பல வித்தை பகர்பரதேசப் பருணிதர் பட்சமும் பதிவு
முற்பவத்தோடுவுணர்த்தியித்தேசவொற்றுமெய்முன்னெனவளர்த்து
கற்பனையாகுங்கசடுகள் போக்கிகருத்தில்கைத்தொழிலினைக் கருதும்
நற்பரதேசி நவில்பல வித்தை நானில மோங்குக மாதோ

ஆங்கில திராவிட வராந்திர பத்திரிகையின் வாழ்த்து

சீர்பெறுஞ் சென்னை மேப் ளொடு ஸ்டான்டர்ட்
சிறந்த டைம்ஸ் இண்டுவும் வாழ்க
பேர்பெறும் இண்டியன் பேட்ரியாட்டுடனே
பெருமையூர் லிப்ரலும் வாழி
நேர்பெறுஞ் சுதேசமித்திரன் விகடன்
னேய நல்லிந்தியாவென்போன்
ஆர்வ பூலோக வியாது சத்தூதன்
அரி தமிழ்மாது மென்வாழி
ஏந்திர குசிகன்பமதியும் ஆந்திரபிரகாசிகா என்பனும் வாழி

- 1:1; சூன் 19, 1907 -

2. பத்திரிகா பாயிரம்

உலகினிற் பலகலை வோதியுணர்ந்தும் உத்தம மத்திம அதம
மென்னும் ஊழுணராது நிலைகுலையு மக்கட்கு நீதியும் நெறியும்
வாய்மையும் புகட்டி வளமோங்கச் செய்வான் வேண்டி தத்துவ
சாஸ்திரிகளிற் சிலரும் இராசாயண சாஸ்திரிகளிற் சிலரும் கணித
சாஸ்திரிகளிற் சிலரும் வித்தியா சாஸ்திரிகளிற் பலரும் ஒன்றுகூடி
யிப்பத்திரிகையை ஒருபைசாத் தமிழனென வெளியிட்டிருக்கின்
றோம். இவ்வினிய தமிழ்மாதினை யீன்றவர் யாவரென்றும் ஈன்ற
மாதை யிருகரமேந்தி வளர்த்தவர்கள் யாவரென்றும் வளர்ந்தமா
துக்குப் பஞ்சலட்சணம் வகுத்தவர்கள் யாவரென்றும் விளக்குவ
துடன் தமிழென்னும் இனிய பாஷையில் நல்லப்பாம்புக்கு நஞ்சுண்டது
போல் தீராவிடமென்னும் நஞ்செழுத்துக்கள் தோன்றி
நஞ்செழுத்துக்கள் அமுத யெழுத்துக்களென்னு மிரண்டை
பொருத்தச்சீரில் நஞ்செழுத்துக்களை யகற்றி அமுத எழுத்துக்
களைபுகட்டி ஆசுகவி மதுரகவி, சித்திரகவி, விஸ்தாரகவி,

களையும் பாடவல்லோர் நாவலராவர். அவர்களையே உத்தம புலவ ரென்னப்படும். நஞ்செழுத்துக்கள் அமுத எழுத்துக்களை உணர்ந்தும் அமுதயெழுத்தைப் பொருத்தும் பொருத்தமரியாது பாடுவோரை மத்திம

புலவரென்னப்படும். நஞ்செழுத்துக்கள் அமுதயெழுத்துக்கள் யாதென்றுணராது பாடுவோர்களை அதம புலவர்களென்னப்படும். இத்தகைய வதமப் புலவர் களின் செய்யுட்களாலும்.... வித்தை, புத்தி, ஈகை சன்மார்க்கமென்.... (சில வரிகள் தெளிவில்லை)

- 1:1; ஜுன் 19, 1907 -

3. சண்டாளன்

ஐயா பொதுநலப்பிரியரே,

சண்டாளனென்னும் வார்த்தைக்குப் பொருள் சிலர் தாழ்த்தியும் சிலர் உயர்த்தியும் கூறுகின்றனர்.

ஆயினும் அம்மொழி வடமொழியேயன்றி தென்மொழியன்று. அதாவது சண்மதம், சண்முகம் என்னும் மொழிகளைத் தழுவி, சண் ஆளனென்னு மொழியும் வழங்குகின்றமையால், அறுவகைத் தொழிலின் செயலைக் குறிக்குமேயன்றி மற்றும் இழியச்செயலை குறிக்காவாம்.

அறுவகை யிழியச்செயல்க ளென்னூற்களிலு மில்லாமையால் அந்தணரறு தொழில், அரசரறு தொழில், வணிகரறு தொழில், வேளாளரறு தொழிலாகும் ஒருவர் தொழிலை வழுவாது செய்யுஞ் செயல்மொழியன்றே கூறத்தகும்.

இத்தகைய சிறப்புற்ற மொழியை யிழிவாக வழங்குங்காரணம் யாதென்பீரேல் பொறாமெயேயாம்.

விவரம்: தேவ அடியாளென்னும் சிறப்பு மொழியும் தட்டுவாணி எனும் சிறப்பு மொழியும் தற்காலம் பேரிழிவாக வழங்குவதுபோல் சண்டாளனென்னும் சிறப்புமொழியும் இழிவாக வழங்கி வருகின்றது.

ஒவ்வொருவரும் இம்மொழியை பகுத்தரியா காலங்களில் இழிவர்க ளெனவெண்ணினபோதிலும் பகுத்தரிந்தக்கால் அம்மொழியை சிறப்பிக்க வேண்டியதேயாம்.

தண்-ஆமரை தண்டாமரை, பண்-வோளம் பண்டோளமென்பது போல், சண்-ஆளனென்பது சண்டாளனென வழங்கி வருகின்றது.

- 1:8; ஆகஸ்ட் 7, 1907 -

4. ஆதிதமிழர் அபிவிருத்தி சங்கம்

இந்துதேசத்தில் பராயர்களால் நசுங்குண்டு தற்கால பிரிட்டிஷ் துரைத்தனத்தாரால் தலை நிமிர்ந்து நிற்கு மெழியக் குடிகளை சீர்படுத்தி சிறப்படையச் செய்வதற்கு ஓர் கூட்டத்தார் இருந்தே தீர வேண்டும்.

அக்கூட்டத்திற்குரிய பெயர் ஓர்பாஷையையேனும் ஓர் மதத்தை யேனும் ஓர் சாதியையேனுங் குறிக்காமல் பொதுவாக சரித்திரத்தை அனுசரிக்கும் சிறப்புப் பெயராயிருத்தல் வேண்டும்.

அப்பெயர் இன்ன வகுப்பாரைச்சார்ந்ததென்று இராஜாங்கத்தாரும் மற்றவர்களும் தெரிந்துக்கொள்ளுவதற்கு இருபத்தோர் ஜாதிகளிலு முள்ள பூர்வத்தமிழ்க் குடிகளின் பிரதிநிதிகளை வரவழைத்து பெருந்தொகையார் சம்மதப்படி அப்பெயரை ரிஜிஸ்டர் செய்து நிலைநிருத்தல் வேண்டும்.

இவ்வகை நோக்கமின்றி ஓர் பாஷையின் பெயரால் சங்கத்தை நிலை நிருத்துவோமானால் ஆதவரும் ஆதி தமிழரென்பர். வன்னியரும் ஆதி தமிழரென்பர். நாடாரும் ஆதி தமிழரென்பர். வேளாளரும் ஆதி தமிழரென்பர். இவ்வகை இடுக்கத்தில் இராஜாங்கத்துப் பதிவில் இப்பெயர் நிலைக்குமா நிலைக்காதாவென்றாராயல் வேண்டும்.

அஃதேனென்பீரேல் 1890 ஆம் வருடத்தில் பூர்வீக திராவிடர் களென்று கூறி வெளிவந்தபோது இராஜாங்கத்தார் அதை சற்று நிதானிக்குங்கால் பராயர்கள் தோன்றி தமிழ் பாஷைக்குடிகள் யாவருந் திராவிடர், கன்னடருந் திராவிடர், மராஷ்டியருந் திராவிடர், ஆந்திரருந் திராவிடரென்று கூறி கலைத்த தினால், இராஜாங்கத்தார் பறையர் களென்னும் பெயரை மாற்றிப் பஞ்சமர் களென்னும் ஓர் பெயரைக் கொடுத்து அதை அநுஷ்டானத்திற்குக் கொண்டு

வருகின்றார்கள்.

ஆதலின் இப்பெயரை இராஜாங்கத்தார் ஏற்றுக்கொள்ளுவாரோ பராயர் மறுப்பால் தூற்றிக்கொள்ளுவரோ அறியேம்.

- 1:12; செப்டம்பர் 4, 1907 -

5. ஸ்ரீ விபினசந்திரபாலர் விருதாப நிலைமை

நமது விபினசந்திரபாலர் அவர்களுக்கு இராஜாங்கத்தாரால் ஆறு மாதத்திய சாதாரண காவல் விதிக்கப்பெற்றதைக் கேட்ட சிலர்துக்கித்தும், சிலர் சந்தோஷித்துமிருக்கலாம். இவ்வகைத் துக்கமும் சந்தோஷமுமே பெரியோர் களை சிறைச்சாலைக்கேகச் செய்துவிடுகின்றது.

காரணம் சுதேசத்தை சீர்திருத்தி சுயராச்சியம் விரும்பும் சுதேசிகள் உள்சீர்திருத்தங்களாகும் மதக்கலகங்களை மண்ணாய் மறைத்தும் சாதிபேதங் களைச் சாம்பலாக்கியும் தங்களுக்குள்ள சுத்தவீரத்தை வியாபாரத்திலுங் கைத்தொழிலிலும் நிலைக்கச்செய்வார்களாயின் தேசஞ் சிறப்புற்று குடிகளும் சுகமடைவார்கள்.

அங்ஙனமின்றி ஐயா ஊராருக்கெல்லாம் ஓதுகிறார் போராருக் கெல்லாம் போதிக்கிறார் என்பதில் சுதேச அரசர்களையும் சுதேச ஜமீன் களையும் சுதேச மிராசுகளையும் ஒன்றுசேர்த்து வியாபாரத்தையுங் கைத் தொழிலையும் விருத்தி செய்ய முயன்றார்களா?

அவ்வகை முயன்றிருப்பார்களாயின் இத்தேசத்தின் 40,000 ரூபாய் சீர்மைக்குப் போய் அவ்விடமுள்ள இரத்தினக்கம்பளத்தை இவ்விடம் வருவிக்குமோ இல்லை.

இவர்கள் முயற்சி யாவும் ஆகாயத்திற் கோட்டைகட்டி அந்தரத்தில் உஞ்சலாடுவதற்கெண்ணி அவசர அரசாட்சிக் கோறி அறியாப் பிள்ளைகளை ஆபத்துக்குள்ளாக வைத்து அவர்களைப் பெற்றோர் களை அல்லோகல்லோ மென்றலையச்செய்துவிடுகின்றார்கள். இதுதானோ சீர்திருத்தக் காரர்களின் பெருமெய்.

அந்தோ ஓர் தேசத்தில் ஓர் பெரியமனிதன் எடுத்த விவேக முயற்சியால் அத்தேசக்குடிகள் யாவும் குதூகலமுற்று சந்தோஷத்திலிருக்கின்றார்களென்றால் அஃது சருவதேயத்தாரையுஞ் சந்தோஷிக்கச் செய்யும். அங்ஙன மின்றி ஒருவரடைந்த துக்கத்திற்கு ஊராரெல்லாங் கட்டியழுவதில் யாதுபயன். நம்முன்னோர்கள் கூறியபடி "ஆய்ந்தோய்ந்து பேசாவினையின் பயனே பயன்."

விரோதச்செயல்கள் வீணேகெடுமாம்
விரோத கூட்டம் வீணேயகலும்
விரோதபோதம் வீணாய்முடியும்
விரோத சிந்தை விழலாகும்மே.
அவிரோதத்தா லடுத்தது பளிங்காம்
அவிரோதத்தா லச்சமு மகலும்
அவிரோதத்தா லனைத்துங் கூடும்
அவிரோதந்தா னவசியமாமே.

- 1:14; செப்டம்பர் 13, 1907 -

6. அஞ்ஞானக் கிறிஸ்தவர்கள்

வினா : அஞ்ஞானக் கிறிஸ்தவர்களென்போர் யாரென்பதே. இதற்கு நமது பத்திரிகாபிமானிகள் உரையளிப்பார்களென்று எதிர்நோக்கும்.

- ஓர் சுதேசி

ஐயா, ஓர் சுதேசியெனு மன்பரே! கேண்மின், தாம் அஞ்ஞானக் கிறிஸ்தவர்கள் யாவரென்று வினாவியது வியக்கத்தக்கதே. காரணம், கிறிஸ்தவர்களாயினும், பௌத்தர்களாயினும், வைணவர் களாயினும், சைவர்களாயினும், வேதாந்தி களாயினும், ஞானோதயம் உண்டாம் வரையில் அஞ்ஞானிகளேயாவர்.

விசுவாசத்தினால் ஞானஸ்தானம் பெற்றக் கிறிஸ்தவன் ஒருவனும் இத்தேசத்திலில்லை. அவனை தான் மெஞ்ஞான கிறிஸ்தவனென்று கூறத்தகும். ஏனென்றால், பாசபந்தங்களற்ற ஞான நிலைபெற்று கிறிஸ்து அவனிலும்,

அவன் கிறிஸ்துவிலும் ஐக்கியமுற்றவன் எவனோ அவனே கிறிஸ்தவ னென்னும் பெயரைப்பெறுவான் அவ்வகை உள்ளன் பிலாதோர் அரைக்கிறீஸ்த்துவர் களேயாவர். இதிற் பெரும்பாலும் அஞ்ஞான கிறிஸ்தவர்கள் யாரென்பீரேல், பிராமணர் மதத்தை விட்டு கிறிஸ்துமதத்தில் பிரவேசித்தும் மீனுக்கு வாலையும், பாம்புக்குத் தலையையுங் காட்டும் விலாங்கைப்போல் துட்டு கையிலிருக்கும் வரையில் சார் நாங்கள் (காஸ்ட்) கிறிஸ்டியன்ஸ்கள், (காஸ்ட்) செர்வண்ட்ஸ் வேண்டுமென்று பதினோராவது கட்டளை ஏற்படுத் துவார்கள். "பதினோராவது கட்டளையாவது எப்போதும் பொய் சொல்லிக் கொண்டேயிருப்பீர் களாகவென்பதே." கைதுட்டு வரண்டு விட்டாலோ பிரதர் நாமெல்லோருங் கிறிஸ்தவர்கள் ஒரே தாய் தகப்பனிலிருந்து வந்தவர்கள் நமக்குள் சாதிபேதங்கிடையாதென்று கிட்ட நெருங்குவார்கள்.

"இவர்கள்தான் முதற்றர வஞ்ஞானக் கிறிஸ்தவர்களாவர்." இத்தியாதி காரணங்களுக்கும் மூலகாரணம் பாதரி யஞ்ஞானிகளே யாம். அதாவது கிறிஸ்துமதம் ஆதியில் இத்தேசத்திற்கு வந்தபோது யார திற் பிரவேசித்து கிறிஸ்து மதத்தைப் பரவச்செய்தவர்களென்று கண்டுத் தெளியாமல் பாதிரிகளுக்கும் சாதி டம்ப மேற்பட்டு பழையக் கிறிஸ்தவர் களைப் பாழாக்கி விட்டார்கள். இதற்கு சாட்சி பழய கிறிஸ்தவர்களில் நூதனப் பாதிரிகளும் நூதன உபதேசிகளும் தோன்றாமெயேயாம்.

- 1:22; நவம்பர் 13, 1907 -

7. பிளேக்

தற்கால மிவ்விந்துதேசத்தில் பிளேக் என்னும் ஓர் ரோகங்கண்டு ஜனங் களைப் பீடிக்கச்செய்வது சகலருக்குந் தெரிந்தவிஷயம். ஆயினும் இதைச் சிலர் நூதன வியாதியென்றும் சிலர் புராதன வியாதியென்றுங் கூறுவர்.

வைத்திய சாஸ்திரங்களின் பாகமாக ஆராய்ச்சிச் செய்யுங்கால் தொன்று தொட்டு கொடுமாறியென வழங்கும் வைசூரி ரோகங்களில் இதையும் ஒன்றாகவே பாவித்தல் வேண்டும். அதாவது மற்ற வைசூரி ரோகங்கள் சுரங்கண்டு தேகமெங்குங் கொப்பளித்துக் காய்ந்து விழுவது சுவாபம். இந்தப் பிளேக்கென்னும் வைசூரி சுரங்கண்டு மேகநீர்கள் யாவுஞ் சேர்ந்து அக்குளி லேனும் துடையின்முன் அரையிலேனும் கழுத்தின்புரப் பள்ளத்தேனுங் கட்டிகளெழுப்பி ஜன்னிகண்டு கொல்லுவது வழக்கமாயிருக் கின்றது. இவ் வகை ரோகங்கள் யாவும் ஓர்வகை சாமளையென்னுங் கிரிமியினால் உண்டாவதென்றே சொல்லல் வேண்டும். பூர்வத்தில் இம்மாறி காணுங்கால் சுரங்கண்டு கண்ட துண்டங்களில் வீக்கமுண்டாகி சிலகால் தேகமுழுமெயும் வீங்கி ஜன்னிகண்டு கொல்லும் பனைமுகிரி யம்மனென வழங்கிவந்தார்கள். தற்காலம் கண்டங்களில் கட்டிகள் எழும்பிக் கொல்லுகின்றது. பூர்வகாலத்திலும் பனைமுகிரியம்மன் கண்டவர்களில் நூற்றிற்கு ஐந்து பேர் தேறுவது கஷ்டம். அதுபோலவே இப்பிளேக் கென்னும் ரோகமுங் காணுகின்றது. காலத்திற்குக் காலம் மாறுதலன்றி ரோகம் பனை முகிரியென்றே கூறலாம்.

வைசூரிநூல்-80 பனைமுகிரி

பகருவோமிவற்றி னிடகுணத்தைக்கேளு பரிவாகபனைமுகிரி பரிட்சைதன்னை
நிகரான காய்ச்சலது மிதமாய் காணும் நேரானவுடலகடுக்குங் கண்சிவக்கும்
பகவடுவை கண்டதுண்டம் வீக்கங்காணும் பரிவான பெரும்பாடு காணுங்கண்டீர்
செகமீதி விதினாலே பித்தெடுக்குந் தேகத்தில் சன்னியது சேருந்தானே

இத்தகையக் கொடுமாறி தேசங்களிற் காணுங்கால் கண்ணுக்குத் தோன்றா ஓர்வகை விஷப்புழுக்களினால் உண்டாகும் ரோகமென்று கருதி ஜாக்கிரதை யிலிருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு குடிகளுங் கப்புமஞ்சளை தூள்செய்து வீடுகளின் வாயற் படிகளில் தூவி வைப்பதுடன் படுக்கும் பாயல்களினடியிலும் தூவல் வேண்டும். வாரத்திற்கு இரண்டு முறை தூவிக்கொண்டு வந்தால் போதும்.

எள்ளெய்யில் தலைமுழுகுவோர் தேகமுழுமெயுந் தேய்த்துக்கொண்டு முழுகுவதினால் விஷப்புழுக்கள் அணுகாது. கற்பூரப் புகையும் மட்டிப்பால்

புகையும் வீடுகளில் நிறப்பலாம். வேப்பமரத்துப் பட்டையைக்கொண்டு வீதிகளின் ஓரமாகக் குழிகள்வெட்டி பட்டைகளைக் கொட்டி கொளுத்தி யதின் புகையைப் பரவச்செய்யலாம். இவ்விரோக சுரங்கண்டவுடன் ஒருபலம் வால்மிளகை அரைபடி தண்ணீர்விட்டுக் காய்த்து உழக்களவு சுண்டவைத்து நாளொன்றுக்கு மூன்றுவேளை சாப்பிட்டால் புழுக்கள் மடிந்து சொற்ப சாந்தியுண்டாம்.

- 1:22; நவம்பர் 13, 1907 -

8. பாபநாசத்தாரேய்ப்பும் பறையர்களேமாப்பும்

இதுவுமோர் தந்திரஜீவனம் போலும்.

கனம் கேயர் ஆர்டிதுரை என்னும் பார்லிமெண்டு மெம்பரொருவர் சென்றவாரஞ் சென்னைக்கு வந்திருந்த சங்கதி சகலருக்கும் தெரிந்த விஷயம். அவர் சென்ற 7உ தஞ்சாவூருக்குப் போகும் வழியிலுள்ள ஓர் ரயில்வே ஸ்டேஷனண்டை பெருங்கூட்டமாக ஏழைப் பறையர்களையும் பள்ளர் களையும் நிறுத்தி அந்த ஸ்டேஷனண்டை கேயர் ஆர்டிதுரைவந்தவுடன் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு கவர்ன்மெண்டார் அதிக வரியைப் போட்டு வாதிக்கின்றார்களென்று சொல்லும்படிக் கற்பித்து கூச்சலிடச் செய்தார் களாம். சொன்னதைச்சொல்லுங் கிளிபோல் அந்தப் பேதை ஜனங்களுங் கூச்சலிட்டார்களாம். அதைக்கேட்டப் பார்லிமெண்ட்டு மெம்பர் உங்களுக்கு பூமிகள் உண்டாவென்றாராம். எங்களுக்கு பூமிகளில்லை எங்கள் எஜமான் மார்களுக்கு பூமிகளுண் டென்றார்களாம். அதைக்கேட்ட கேயர் ஆர்டி உங்களைப்பற்றி யோசிக்கின்றேனென்று சொல்லி விட்டுப் போய்விட்டாராம்.

அந்தோ! ஏழைப் பறையனென்றழைக்கும் ஓர் சாதியார் உழைப்பிற்குத் தான் ஆளாயிருக் கின்றார்களென் றாலோசித்தாலோ, இல்லை உழைப் பதுடன் அவர்களை முன்தள்ளி மற்றோர் பிழைப்பதற்கும் ஆளாயிருக் கின்றார்கள்.

அதாவது, மிஷநெரிகளென்போர் ஏழைப்பறையரென்போர்களைப் படங்கள் பிடித்து மேல் நாட்டிற்குக் கொண்டுபோய் அவ்விடமுள்ள பிரபுக்களுக்குக் காண்பித்து அவர்களை விருத்திசெய்கின்றோமென்று வேண்டிய திரவியங்களை சேகரித்து வந்து கல்விசாலைகளை ஏற்படுத்தி ஏழை பறையர்களிடம் சம்பளமும் பெற்றுக்கொண்டு சேகரித்துவந்த பணத்தால் பெரியசாதிக ளென்போர்களைக் கிறிஸ்தவர்களாக்கி அவர்களுக்கு உதவிசெய்துக்கொண்டு பறையரென் போர்களைக் க்வனிக் காமல் வண்டி குதிரை வைத்துக்கொண்டு தங்கள் சுகத்தை விருத்திசெய்துக் கொள்ளுகிறார்கள்.

பறையர்களென்போர் படங்களைக் காட்டிப் பணஞ்சம்பாதித்து வந்து பள்ளிக்கூடம் வைத்து சொற்ப கல்வி உதவிச்செய்து மற்ற சுகத்தை அவர்கள் அனுபவித்துக்கொண்டபோதிலும் மிஷநெரிகளால் பறையர்களுக்கு சொற்பக் கல்வியின் பலனாயினும் விளங்குகின்றது.

தஞ்சாவூர் மற்றுந் தேசங்களிலுள்ள எஜமான்களோ இந்த பேதைக் குடிகளுக்கு பறையர்களென்னும் பட்டப் பெயரையும் அளித்து அவர்களுக் குள்ள பூர்வ சுகங்களையுங் கெடுத்து கோலுங் குடுவையுங் கொடுத்து "மானங்காய்ந்தால் போடி, மழைப்பேய்ந்தால் வாடி" என்னும் நன்றிகெட்ட எஜமான்கள் ஏழைப்பறையர்களை முன்தள்ளி கவர்ன்மெண்டார் வரிகளை அதிகப்படுத்திவிட்டார்களென்றுக் கூச்சலிடச் செய்து தங்கள் பெயரையுந் தங்களையுங்கவர்ன் மெண்டாருக்குக் காட்டிக் கொள்ளாமல் ஏழைப் பறையர் களை இழுத்துவிட்டு சுகங்கண்டால், தாங்கள் அனுபவித்துக் கொள்ளலாம், துக்கங்கண்டால் பழிக்குப் பறையர்களை இழுத்துவிடலா மென்று சமையயுக்த்தஞ் செய்திருக்கின்றார்கள்.

இதுவும் ஓர் யுக்த்தியாகுமா? கனவான்கள் முன் முயன்று ஏழைகளைக் காப்பாற்றவேண்டியது இயல்பு. அங்ஙனமின்றி எழைகளை முன்தள்ளி கனவான்கள் பிழைப்பதை கனமென்று கூறலாமோ ஒருக்காலு மாகா.

ஏழைக்குடிகளை இன்னு மேது தீங்கு செய்தாலும் அவர்கள் மறுதீங்கு மனந்துணிந்துஞ் செய்யமாட்டார்கள். ஏழைகளுக்குத் தீங்கு செய்துவருந்

தீயர்களுக்கு தீங்கின் பிற்பலனுதிக்குங்கால், ஏழை குடிகளுக்கு நற்பலன் தோற்று மென்பது கன்மச் சக்கர வியல்பாம்.

- 1:23; நவம்பர் 20, 1907 -

9. விழுப்புர மதப்போர்

விழுப்புரத்தில் சென்றவாரம் நடந்த கலகத்தில் இறந்தவர்களுக்குப் பரிதவிக்குங் குடும்பத்தாரும், காயமடைந்தவர்களுக்காகக் கவலையுருங் காருண்ணியருங் கலங்கி நிற்க மற்றத் தமிழ்ப்பத்திரிகைகள் யாவும் பதரி சுதேசவொற்றுமெய்க் கெட்டுப்போகுதெனக் கதரிநிற்க சுதேச மித்திர னென்னும் ஓர் பத்திரிகையில் மட்டும் (அறிவீனர்களாகுங் கீழ்சாதியாரைக் கிறீஸ்தவர்களாக்குவதற்கு முயலுகிறார் களென்றும்) கிறிஸ்தவப் பறையர்கள் குடிசைகளை என்றுங் குறிப்பிட்டு கூறியிருக்கும் வாக்கியங்களைக் காணுங்கால் பறையரென்போர் மீதுள்ளப் பொறாமெயே இத்தகைய வார்த்தையை வரைய நேரிட்ட தன்றி வேறில்லையாம்.

காரணம் பறையர்களும் நம்மைப்போல் இரத உற்சவமும் ஊர்வலமும் செய்யலாமோ என்பது போலும். அந்தோ இனியேனும் நமதன்பார்ந்த பத்திராதிபர் தன்னவ ரன்னியரென்னும் பேதமிராமலும், தன்சாதி புறசாதி யென்னும் பொறாமெய் இல்லாமலும், தன் சமயம் புறச்சமயமென்னும் பற்றில்லாமலும், தான் விவேகி மற்றவர்கள் அவிவேகியென்னுஞ் செருக்கில்லாமலும் பலர்ப் பிரயோசனங் கருதி பத்திரிகை வரைவாரேல் பாக்கிய மவருடைத்ததேயாம். அன்றேல் சிலாக்கிய மெம்முடையதே.

- 1:27; டிசம்பர் 18, 1907 -

10. கனந்தங்கிய சுதேசமித்திரன் பத்திராதிபருக்கு சுவர்ணபூஷணஞ் சூடல்

ஜூபிலி என்னும் வார்த்தை ஜூயு-ஜூயிஸ் என்னும் வார்த்தையினின்று தோன்றியது. இவ்வி ஜூபிலி எனும் வார்த்தையின் பொருள் ஜூதர் அல்லது யூதர் ஐன்பதாவது வருடக் குதூகலமென்று கூறப்படும்.

ஜூயிஸ்களுக்குள்ள இவ்வகைக் கொண்டாட்டத்தை நமது கருணை தங்கிய ஆங்கிலேயர்களில் சிலர் தாங்கள் வதுவைமுடித்து சதியும் பதியும் இருபத்தைந்தாண்டு சுகவாழ்க்கை பெரின் வெள்ளி ஜூபிலி என்றும், ஐன்பது வருடம் சுகவாழ்க்கை பெரின் தங்க ஜூபிலி என்றும், எழுபத்தைந்து வருடஞ் சுகவாழ்க்கை பெரின் வைர ஜூபிலி என்றுங் கொண்டாடி வருகின்றனர்.

இவற்றுள் வெள்ளி ஜூபிலியின் கொண்டாட்டம் யாதெனில், ஒவ்வோர் பந்துக்களும் இனியர்களும் வெள்ளியினாற் செய்த கரண்டிகளும், வெள்ளியினால் செய்த பாத்திரங்களும், வெள்ளியினால் செய்த விசிரிகளும், வெள்ளியினால் செய்த உருவங்களும், வெள்ளியினால் செய்த விருட்சங்களும், வெள்ளியினாற்செய்த கழுத்தணிகளும், சங்கிலி காப்பு முதலியவைகளுங் கொண்டுவந்து சதிபதிக் களித்து சந்தோஷங்கொண்டாடுவர்.

பொன் ஜூபிலியென்பதியாதெனில், பொன்னினாற் செய்த மோதிரம், காதணி, காப்பு, சங்கிலி, பாத்திரம் முதலியவைகளில் ஒவ்வொன்றைக் கொண்டுவந்து சதிபதிக்களித்து சந்தோஷங் கொண்டாடுவர்.

வைரஜூபிலி என்பது யாதெனில், வைரத்தினாற்செய்த மோதிரங்களும், வைரத்தினாற்செய்த பதக்கங்களும், வைரத்தினாற்செய்த காதணி, கழுத்தணி களுங் கொண்டுவந்து சதிபதிகளுக்கீய்ந்து சந்தோஷங்கொண்டாடுவர்.

இத்தகைய ஜூபிலியென்னும் பரதேசிகட்செயல்களை சுதேசிகள் பற்றுக்கொண்டு சுதேசமித்திரன் பத்திராதிபர் அவர்களுக்கு ஜூபிலி கொண்டாட்டமென்று கூறிய யூதவார்த்தையை நீக்கி சுவர்ண பூஷணானந்த மெனக் கொண்டாடி இருப்பாராயின் மங்கா மகிழ்ச்சியை தந்திருக்கும். அங்ஙனமின்றி சுதேசிகளென்றும் மிதவாதிகளென்றும் அமிதவாதி களென்றும் ஏற்பட்ட அன்பர்கள் இரசவாதிகளுக்கொப்பாய் ஜூபிலி என்னும் பெயரை ஏற்றுக் கொண்டபோதிலும் அதனை வெள்ளி ஜூபிலி என்று கூறி பொன்னினாற்செய்த பதக்கங்களையும் பொன்னினாற்செய்த மோதிரங்களையும்,

பொன்னினாற்செய்த சங்கிலிகளையும் அளித்துப் பூரிக்கச்செய்த ஜூபிலியை நோக்குங்கால், யூதர்கள் ஜூபிலி-ஆங்கிலேயர் ஜூபிலி நீங்கலாக ஈதோர் புதின ஜூபிலியாக விளங்குகின்றது.

இத்தகையக் குதூகலக் கொண்டாட்டத்திற்கு நந்தேய பாடைகளாகுந் திராவிடத்தேனுங் கன்னடத்தேனும் மராஷ்டகத்தேனும் ஆந்திரத்தேனும் ஓர் சிறப்புமொழியில்லாமல் அகன்றது போலும்.

அந்தோ! அங்ஙன மகலாது சுதேசமொழிகள் சுகமுற்றிருக்குமாயின் யூதர்கள் மொழி சாதனமுராவாம். சிலவாண்டுகளுக்குமுன் விகடதூதன் பத்திராதிபர் கனம் இராஜேந்திரமவர்கள் 25 வருட காலம் நடத்திய பத்திரிகையின் கஷ்டத்தையுணர்ந்த அன்பர்களொவ்வொருவரும் அவர் கரத்திற்குக் கங்கணமளித்தோமென்று குதூகலித்தாரன்றி வெள்ளி ஜூபிலி யென்று தங்கத்தையும், தங்க ஜூபிலியென்று வெள்ளியையும் அளித் தாரில்லை. ஆதலின் நமது சுதேசமித்திரன் பத்திராதிபர் பட்ட கஷ்டங்கள் யாவையும் சுதேசபாஷையில் தெள்ளறளிக்கி அஃதைக் கொண்டாடுங் கோஷத்திற்கு சுதேச மொழியிலோர் சிறப்புப்பெயரளிக்காது பொருளற்ற பரதேசிப்பெயரை அளித்ததே போதுங் கவலையாம்.

- 1:32; சனவரி 18, 1908 -

11. முஸ்லீம் நேசன்

இந்துதேசத்துள் தமிழ்ப் பத்திரிகைகள் எத்தனையோ தோன்றி ம றைந்திருப்பது சகலருக்குந் தெரிந்த விஷயம். அவ்வகை மறைவுக்குக் காரணம் யாதென்றால் தமிழ் வாசிக்கும் அன்பர்கள் சுயபாஷா பத்திரிகையை வாங்கி வாசிக்கவும் சுதேச வர்த்தமானங்களை அறியவும் சுதேச விருதிசெய்யவும் விருப்ப மில்லாதவர்களாதலின் பத்திரிகைகளின் விருத்தி குறைந்து மறைந்துவிடுகின்றது.

சீனதேசத்தில் ஆயிரம் வருஷம் ஆயிரத்தி ஐந்நூறு வருஷம் ஒவ்வோர் பத்திரிகைகள் நிலைத்திருப்பதற்குக் காரணம் யாதென்றால், அவர்கள் தங்கள் சுயதேச ஒற்றுமெயையும், சுயதேச கல்வியையும், சுயதேசகைத்தொழிலையும், சுயதேச விருத்தியையும் நாடியவர்களாதலின் ஒவ்வோர் குடியானவனும் பத்திரிகைகளை வாங்கி வாசித்து செய்தொழிலையுஞ் சீர்திருத்தத்தையுஞ் செவ்வனே நடாத்தி வருகின்றார்கள்.

இத்தமிழ் வழங்குந் தென்னிந்தியாவிலோ சாதிநாற்றமென்னுங் கசிமலத்தால் தாங்கள் சாதியோர்மட்டிலும் வாசிக்கலாம், ஏனைய சாதியோர் வாசிக்கப்படாதென்னும் பொறாமெயும் பொச்செறிப்பும் வாய்த்தவர் களாதலால் பொதுநலங்கருதி பத்திரிகைகளை வாசிக்க பிரியமில்லாமல் விட்டு விடுகின்றார்கள்.

இத்தகைய விடுக்கணிலும் நமது முசிலீம் நேசனவர்களிடைவிடா ஊக்கத்தாலெடுத்த முயற்சியை சாதிப்பா.ன் வேண்டி பத்திரிகையின் ஆதரணைக்கர்த்தராலும் கையொப்பக்காரராலும் உதவிகொண்டு எழுதுகை சோர்வுறாது இரவுபகல் நித்திரையற்று எண்ணம் யாவும் பத்திரிகையிலுற்று இருபத்தைந்துவருடம் நடாத்திவந்திருக்கின்றபடியால் இம் முசிலீம் நேசனின் ஆதரணைக்கர்த்தர்களுங் கையொப்ப நேயர்களும் மற்ற முசிலீம் கனவான்களும் ஒன்றுகூடி முசிலீம் நேசன் இருபத்தைந்தாவது வருடக் கொண்டாட்டமும் பத்திராதிபருக்கு வந்தன வாழ்த்தலும் பத்திரிகை விருத்தியுஞ் செய்து பாலிக்கும்படிக் கோருகிறோம்.

- 1:32; சனவரி 18, 1908 -

12. அஞ்ஞானியா கிறிஸ்தவனா

உ.கோ.தி.சி.நா., தங்களுடையக் கடிதத்தை வெளியிடாமல் நிறுத்தியிருக் கின்றோம். காரணம்-ஞானமென்பது இன்னதென்றும் அஞ்ஞானமென்பது இன்ன தென்றும் அறியாத அவிவேகிகள்தானத்தகைய வார்த்தையை வெறுமனே கூறித் திரிவரன்றி விவேகிகள் ஒருக்காலுங் கூறமாட்டார்கள்.

விவேகமுள்ளக் கிறிஸ்தவர்கள் தங்களை அஞ்ஞானிகளா ஞானிகளா என்றுணர்ந்து அடங்கிக் கொள்ளுவார்கள். விவேகமற்றக் குடி, விபச்சாரம், பொய், களவு முதலிய துற்கிருத்தியம் நிறைந்த கிறிஸ்தவர்கள் மற்றவர்களை அஞ்ஞானிகளென்று கூறி அவமதிப்பது அவர்கள் அவிவேக சுவாபம்.

அதாவது, தென்தேசத்திலுள்ள சில கல்வியற்றோர் தங்கள் பொறாமெ குணத்தால் பறையனா தமிழனா என்று உசாவுகின்றார்கள். அவ்வகை அறிவிலி வினாக்களை உணரா அவரினுமறிவிலி மூகைகள் தாங்கள் தமிழனா யிருந்தும் பறையனென்று பதில் கூறுவதுபோல் கிறிஸ்தவனா அஞ்ஞானியா வென்றுசாவும் அறிவிலிகடாக்களுக்கு அஞ்ஞானியென்று விடை பகரும் அறிவிலிகளா லஃது நிலைத்திருக்கின்றது. பறையனா தமிழனா என்று கேட்போனைத் தடுத்து ஏதையா நீர் வாசித்தவரா, வாசிக்காதவரா, பறையனென்றால் பராயர்கூறுஞ் சாதிப்பெயர், தமிழனென்றால் பாஷைப்பெயர் இவ்விரண்டுங் கெட்டக் கேழ்வியைக் கேழ்க்காதீர். தாங்கள் வாசித்த அளவினிலையிற் கேழ்க்கவேண்டு மாயின் பறையனா-பார்ப்பானா, தமிழனா-தெலுங்கனாவென் றுசாவுவீரேல் அஃதுமது விவேகத்தை விளக்குமென்று மறுத்துக் கூறுவானாயின் அன்றே அவ்வறிவிலி வினாக்களடிப்பட்டுப்போம்.

அதுபோல் கிறிஸ்தவனா அஞ்ஞானியாவென்றுசாவுவோனை தடுத்து கிறிஸ்தவனென்பது மதப்பெயர், அஞ்ஞானியென்பது செயற் பெயர் இவ் விரண்டு வார்த்தையின் பொருளறியா பஞ்சகாலத்து அஞ்ஞானியாயிருந்துகொண்டு எம்மைஅஞ்ஞானியாவென்றுசாவுவது அறிவின்மையே என்று கூறு வார்களாயின் அன்றே கிறிஸ்து அஞ்ஞானிகளின் கேழ்விக ளடங்கிப்போம்.

கிறிஸ்தவனா மகமதியனா என்பது மத வினாக்கள். அஞ்ஞானியா மெஞ்ஞானியா என்பது செயல் வினாக்கள். இவ்விரு வினாக்களின் பேதமறியா பேதைகளிடத்து வாது புரிவது பிழை யாதலின் தாங்களவர்கள் வார்த்தையை மதியாதிருப்பதே மகிழ்வாம்.

- 1:33; சனவரி 29, 1908 -

13. இராஜாம்பாள் ஓர் இனிய தமிழ் நாவல்

மேற்கூறிய பெயர்வாய்ந்த ஓர் புத்தகத்தைக் கண்ணுற்றோம். அதன் 34வது பக்கம் 21வது வரியில் ஓர் பண்ணைக்கார பறையன் முனிசாமி என்போன் சாஸ்திரியார் வீட்டில் வந்துள்ள பாம்பை அடிக்க உட்செல்லுங் கால் நடுங்கிக்கொண்டே சென்றானாம். அவன் நடுங்கிக்கொண்டே சென்ற காரணம் யாதென்றாலோ அவன் பாம்புக்கு பயப்படவில்லை, சாஸ்திரியார் வீட்டிலுள்ள இலட்சுமி நீங்கிவிடுவாளென்று நடுங்கி உள்ளுக்குச் சென்றானாம். அந்தோ! பறையரென்றழைக்கப்படுவோர் பொய்மூட்டை களைக் கட்டவாயினும் பொய் மூட்டைகளை அவிழ்க்கவாயினு மறியார்கள்.

அடா யாருமற்ற வீட்டில் இலட்சுமி இருக்கின்றாளென்றால் அவளுக்குக் கண்ணும் மூக்கும் இருக்கின்றதாவென்பான். அக்கால் சாஸ்திரியாரும் சாஸ்திரியார் சரிதத்தை எழுதியவரும் தங்கள் பொய் மூட்டைகளைப் புரட்டி புரட்டிப் பார்க்க நேரிடும். அத்தகையப் பொய் மூட்டைகளைப் புரட்டுவதினும் பண்ணைப்பறையன் காலினால் மிதித்துத் துவைத்த அரிசிமூட்டை லட்சுமி சாஸ்திரியார் வீட்டிலிருக்கின்றாளா இல்லையா என்றும் பண்ணைப் பறையன் காலினால் மிதித்துத் துவைத்தப் புளிமூட்டை லட்சுமி சாஸ்திரியார் வீட்டி லிருக்கின்றாளா யில்லையா வென்றும், பண்ணைப் பறையன் காலினால் மிதித்துத் துவைத்த வெல்ல மூட்டை லட்சுமி சாஸ்திரியார் வீட்டிலிருக் கின்றாளாயில்லையாவென் றாராய்வரேல் இலட்சுமி சம்பத்து விளங்கும்.

சில விளங்காமெய்க்குக் காரணம் சாதிபோர்வைகொண்ட மூதேவி களாகுஞ் சோம்பேரிகளைக் கண்டவுடன் விலகினும் விலகுவள். பண்ணைப் பறையனென்போனை அவ்விலட்சுமி கண்டாலோ அப்பா மகனே என்ற ணைத்து உன் முயற்சியாம் உதையினாலும் மிதியினாலும் அரிசி உருக்கொண்டு

எல்லோருக்கும் ஆகாரமாயினோம். உன் முயற்சியாம் உதையினாலும் மிதியினாலும் புளிவுருதிறண்டு அறுசுவையிலொன் றாயினோம். உன் முயற்சியாம் உதையினாலும் மிதியினாலும் வெல்ல வுருதி றண்டு இன்னமுதாகி தேவர்களுக்கும் மக்களுக்கு மினிய பாகாயினோ மென் றகங்குளிர்ந்து முகமலர்ந்திருப்பள்.

இவ்வகை யிந்துதேச முதுவெலும்பாக விளங்கும் பறையனென் போனைப் பழிகூறிய பாவ லரையொத்த நாவலர்கள் இன்னும் பத்து பனிரண்டு பெயர் தோன்றுவார்களாயின் சுதேசியமும் சீர்கெட்டு சுயராட்சியமும் பேர் கெட்டு அழியவேண்டியதேயாம்.

- 1:33; சனவரி 29, 1908 -

14. சுபவிசேஷ பெருஞ்சங்கை

சுதேச சீர்திருத்தங் கருதி வெளிவந்துள்ள பத்திரிகாபிமானிகள் யாவருக்கும் பட்சமான வந்தனம். ஐயன்மின்! நமதுதேச சீர்கேட்டிற்கும் ஒற்றுமெய்க் கேட்டிற்கும் மூலம், சாதி பிரிவுகளும் சமய பிரிவுகளுமே எனத் தென்னிந்திய தமிழன் பத்திராதிபன் கூறுகின்றோம்.

இதனை ஏற்றுக்கொள்ளுமன்பர் சாதிகளையுஞ் சமயங்களையும் போக்கத்தக்க உபாயங்களையும் உட் சீர்திருத்தங்களையுந் தங்கடங்கள் பத்திரிகைகளின் வாயிலாய் வெளியிடும்படி கோருகிறோம். எமதபிப் பிராயத்தை ஏற்காது தூற்றுமன்பர்கள் நமதுதேச சீர்கேட்டிற்கும் ஒற்றுமெய்க் கேட்டிற்கும் மூலம் எஃதென் றுணர்த்தி அவற்றை சீர்திருத்துமுறைகளை யேனும் செவ்வனே விளக்கி வருவார்களென்று நம்புகிறோம்.

- 1:36; பிப்ரவரி 19, 1908 -

15. டாக்டர் ஜி.யூ. போப்

சென்னை ராஜதானியில் டாக்டர் போப்துரையென வழங்கிய இம் மகான் நெடுங்கால மிவ்விடமிருந்து தமிழ்பாஷையைக் கற்று சமண முனிவர்களா லியற்றி வைத்திருந்த பஞ்சலட்சணமாகும் இலக்கண நூற்களை எளிய வாசக நடையில் வினாவிடையாக வரைந்து சிறுவர்கள் முதல் பெரியோர்க ளிருதியாகக் கற்றுணரச் செய்தவர் இவரொருவரேயாம்.

இவரெழுதியுள்ள இலக்கண ஆதாரங்களைக் கொண்டே பலரும் இலக்கணமெழுத ஆரம்பித்தபோதிலும் அவரது வாசக நடைக் கப்புரமிப்புர மாகவே விளங்கும்.

இவருக்கு முன்பே சில வைரோப்பியரும் பிரான்ஸியருந் தமிழ் கற்று இலக்கண விலக்கியங்களை வரைந்துள்ளாரென்று கூறினுங் கூறுவர். அக் கூற்றுகள் யாவும் நூலாசிரியர்கள் பெயர்களே மாறுபாடன்றி அதனதன் ஆக்கியோன்கள் ஆங்கிலேயர்களன்று.

ஆதலின் போப்பையர் காலத்தில் அவரது இலக்கணங் கற்றுத் தேர்ந்த அன்பர்கள் யாரும் ஒன்றுகூடி அவர் மரணத்திற்கிரங்கி அவர் நமக்களித் துள்ள அழியாபொருளுக் கனந்தானந்த வந்தனங் கூறி அவரது மறபினருக் கோர் ஆறுதற் பத்திரம் அனுப்புவது நன்று நன்றேயாம்.

- 1:36; பிப்ரவரி 19, 1908 -

16. வேலைகளறியா வீணர்களிடம் கூலிக்குப்போவது குற்றமேயாம்

அதாவது அச்சியந்திரசாலைகளிலேனும் பஞ்சியந்திரசாலைகளி லேனும் மின்சார இயந்திர சாலை இருப்புப்பாதை இயந்திரசாலைகளி லேனும் மாதக் கூலியோ வாரக்கூலியோ நித்திய நாட்கூலியோ நியமித்துள்ள இடங்களில் அந்தந்த வித்தைகளைக் கற்றிருக்கும் கூலியாட்கள் சென்று வேலை செய்வதியல்பாம்.

அவ்வேலைசாலையின் பிரதம உத்தியோகஸ்தன் அவ்வேலைகளின் நுட்பாநுட்பங்களும் அதன் கஷ்டங்களும் அதனருமெயும் அறிகுவானாயின்

அந்தந்த காலங்களுக்குத் தக்கவாறும் கூலிகளைக் கொடுத்து அன்புபாராட்டி ஆதரித்துவருவான்.

வேலைகளறியா வீணர்கள் பெரிய உத்தியோகஸ்தர்களாகத் தோன்றுவதினால் இன்னின்ன வேலைகளை இன்னினிய வேலைக்காரர்கள் செய்துவருகின்றார்கள் அவரவர்களுக்குத் தக்கக் கூலிகளை உயர்த்தவேண்டு மென் றுணராமல் அவர்களுக்கு மேற்பட்ட அதிகாரிகளுக்கு இவர் மெத்த லாபங் காட்டுவதுபோல் அபிநயித்து கூலிகளைக் குறைத்துக் கொண்டாட்டம் போடுகின்றார்கள். இப்பஞ்சகாலக் கொடுமையால் அதிகக் கூலிக்கேட்டு அல்லல்படும் வேலையாட்கள் சொல்லாமலே நின்றுவிடுங்கால் திண்டாட்டப் படுகின்றார்கள்.

இவ்வோர் பெருத்தசாலைகளைநிருமித்து வேலைநடத்தும் முதலாளிகள் வித்தை, புத்தி, ஈகை, சன்மார்க்கம் இன்னான்கும் நிறைந்திருப் பார்களாயின் அவர்களை அண்டி சீவிக்கும் வேலையாட்கள் ஒவ்வொருவரும் அவர்கள் சீவிய காலமட்டிலும் அவர்களை விட்டு நீங்கார்கள். அதினா லச்சாலையின் தொழிலும் நீடித்த தலைமுறை ஓங்கும்.

அங்ஙனமின்றி பொருளாசை, பொறாமெய், பொய்ச்சாப்பு, பற்கடிப்பு இன்னான்கும் நிறைந்த முதலாளிகள் அச்சாலைக்கு அதிகாரிகளாக வந்து சேர்வார்களாயின் கூடிய சீக்கிரத்தில் ஆட்களுங் கலைந்து சாலையு மெலிந்துபோமென்பது திண்ணம்.

- 1:40; மார்ச் 18, 1908 -

17. தூத்துக்குடி திருநல்வேலி துக்கம்

தற்காலந் தூத்துக்குடியிலுந் திருநெல்வேலியிலும் நிறைவேறிவருந் துக்கச் செய்கைகளையுங் குடிகளுக்குள்ள மனோபீதியையும் ஆராயுங்கால் மிக்க வியசனமே.

அமிதவாதிகளென்னும் ஓர் கட்சியும், மிதவாதிகளென்னும் ஓர் கட்சியும் இத்தேசத்திற்றோன்றி ரூபாயிற்கு நாலுபடி அரிசியிலும் குண்டுபட்டு சாவுங் குடும்பத்தோர் குடிக்கக் கூழுக்குங் குண்டியிற்கட்டத் துணிக்கு மலைவதிலும் ஓர் பெரும்பலனைத் தேடிவிட்டார்கள். அந்தோ! இவ்வகை வீண்வீராப்பில் மடிந்தவர்கள் ஓர் அரசாங்க யுத்தத்திற் சென்று மடிந்திருப்பார்களாயின் தனது பெண்சாதி பிள்ளைகளுக்கு உபகார சம்பளமேனுங் கிடைக்கும்.

இன்னாருடன் சென்றார்கள் இதுவிஷயத்திற்கு மடிந்தார்களென்னுங் காரணமில்லா நெல்லிக்காய் மூட்டைகளை என்னென்று கூறலாம். நெல்லிக்காயேனும் உப்பிட்டால் ஊறுகாயிக் குதவும். அதுவும் பயனில்லாமற் பாழடைவது யாதுபயன்.

ஐந்துபெயர் உயிர் அநியாயத்தில் மாண்டதே. அன்னோர் குடும்பத் தோர் என்ன துக்கத்தில் ஆழ்ந்தி யிருக்கின்றனரோ அறியேம். அவர்களுக்கு ஆறுதற் கூறலாயினும் போயிருப்பரோ, அவர்க ளப்பாகைப் போயிருக்க மாட்டார்கள். காரணம் அவர்கள் கையை கடிக்குமென்பதேயாம்.

கற்றவர்கள் மிக்க வாசஞ்செய்யு மிடங்களில் காவலாளராம் போலீஸ் உத்தியோகஸ்தர் வேண்டியதில்லையென்பது துணிபு. ஆனால் தூத்துக் குடியிலும், திருநெல்வேலியிலும் இருக்கும் போலீசாருடன் தண்டபோலீசு மேற்பட்டுவிட்டது இழுக்கேயாம்.

பிராண்டதுரை யென்பவர் திருச்சினாப்பள்ளிக் கலெக்ட்டராயிருந்த காலத்தில் மோஹரம் பண்டிகைதோரும் பெருங்கலக முண்டாகிக் கொண்டேயிருந்தது. அதன்காரணம் அந்த ஜில்லாவில் (தாலீம்கானாக்க)ளும் வஸ்தாதுகளும் அதிகமாயிருந்ததினாலேயாம். அதினந்தரங்கம் அறிந்த கலெக்ட்டர் ஒவ்வொரு வஸ்தாதையும் அவர்கள் சிஷியர்களையும் அழைத்து ஒவ்வொருவருக்கும் (திமிறு வரி) போட்டுவிட்டார். அன்றுமுதல் ஒவ்வொரு வஸ்தாதும் ஊரைவிட்டே ஓடிப்போய்விட்டார்கள்.

ஆனால் தூத்துக்குடியிலுந் திருநெல்வேலியிலும் ஏற்படுத்தியுள்ள தண்ட போலீசின் சிலவோ அக்குடிகளே கொடுத்துத்தீர வேண்டும். பஞ்சகாலக் கஷ்டத்துடன் பணக்கஷ்டமும் சுதேசிகளேற் படுத்திவிட்டது பரிதாபம் பரிதாபமேயாம்.

- 1:41; மார்ச் 25, 1908 -

18. புத்தமதக் கண்டனமோ?

புத்தம்-பாலி-மகடபாஷா; சத்தியம்-சமஸ்கிருதம்-சகடபாஷா; மெய்-தமிழ்-திராவிடபாஷா.

பாலியில் புத்தமென்றும், சமஸ்கிருதத்தில் சத்தியமென்றும், தமிழில் மெய்யென்றும் வழங்கு மொழி பேதங்களையும் அம்மொழியின் அந்தரார்த்தங்களையு மறியா அன்பர்கள் மெய்யென்னு மொழியுடன் மதமென்னுந் தொடர்மொழிக் கூட்டி மெய்மத கண்டனங் கூறியுள்ளாரென்னுங் குழர்மொழிகண்டு குந்நகைக்கொண்டோம். அஃதேனென்பீரல்.

விவேக சிந்தாமணி

பொல்லார்க்குக் கல்விவரில் கர்வமுண்டா மதனோடு பொருளுஞ் சேர்ந்தால்
சொல்லாதுஞ்சொல்லவைக்கும் சொற்சென்றால் குடிகெடுக்கத் துணிவர்கண்டாய்
நல்லோர்க்கிம் மூன்றுகுண முண்டாகி லருளதிக ஞனமுண்டாய்
எல்லோர்க்கு முபகார ராயிருந்து பரகதியை யெய்துவாரே

என்னும் மேன்மக்கண் முதுமொழிக்கிணங்க நூதனச் செல்வம்பெற்ற நுக்கர்களைப்போல் புதினக் கல்விகற்ற பொய்மொழிப்புலவர்கள் கற்றக் கல்வியளவு நில்லாது மெய்மதக்கண்டனங் கூறியதும் மெய்ஞ்ஞானிகளைத் தூறியதுமாகிய துற்செயற்கீடாய் திக்கற்ற தீட்டுபிணமாய் மக்களற்று மயானங்கொண்டுசென்ற புண்ணியபலன் கண்ட போதகர்கள் தங்களாசிரியரடைந்த பலனிலு மதிகபல னடைவான் வேண்டி, அஞ்ஞானிகளை ஏற்று மெய்ஞ்ஞானிகளைத் தூற்று மவாக்கொண்டலை கின்றனர்.

குறுந்திரட்டு

மெய்யைமெய்யென்றறியாத மூகைகள் பொய்யைமெய்யென்றுபோற்றித்திரிவர்காண்
மெய்யைமெய்யென்றறிந்த மெய்ஞ்ஞானிகள்
துய்யஞானத் துணைவர்களாவரே.

இத்தகையத் தூற்றுந் தீவினைக்கீடாய் ஏற்றத் தீவினைச் சுடும். அன்பர்காள், புத்தமதத்தோர் ஒழுக்கம் யாதென்றும் புத்த மதத்தைக் கண்டிப்பவர் யாவரென்றும் அக்கண்டனத்தைக்கண்டு களிப்பவ ரின்னாரென்றும் அடியிற் குறித்துள்ள அநுபவத்தாற் கண்டுக்கொள்வீர்களாக.

க-வது, புத்தமதத்தோர் ஒழுக்கம் பொய்யை
யகற்றி வாழவேண்டுமென்பதேயாம்
பொய்யை மெய்யாகப் புலம்பித்திரிவோர்
அதனைக் கண்டிக்க யேற்படுவர்.

உ-வது, புத்தமதத்தோர் ஒழுக்கம் களவைய
கற்றி வாழவேண்டுமென்பதேயாம்
களவால் பொருள் சேகரித்து ஊராரை
வஞ்சித்து சீவிப்போர் அதனைக் கண்டிக்க யேற்படுவர்

ங-வது, புத்தமதத்தோர் ஒழுக்கம் சீவர்களின்மீது அன்பு பாராட்டி
ஆதரிக்கவேண்டுமென்பதேயாம்.
சருவசீவர்களையுங் கொன்றுதின்று சீவிப்
போர் அதனைக் கண்டிக்க யேற்படுவர்.

ச-வது, புத்தமதத்தோர் ஒழுக்கம் அன்னியர்
தாரத்தை தாய்போல் கருதவேண்டுமென்பதேயாம்.
அன்னியர் தாரத்தைத் தன் தாரம்போற்
கருதி அவன் குடும்பத்தை யழிப்போர்
அதனைக் கண்டிக்க யேற்படுவர்.

ரு-வது, புத்தமதத்தோர் ஒழுக்கம் மக்கள்
மதியை மய்க்கும் லாகிரிவஸ்துவை யகற்றவேண்டுமென்பதேயாம்.
சதா லாகிரி யருந்தித் திரிவோர் அதனைக்கண்டிக்க முயலுவர்.

இத்தகைய பஞ்சபாதகங்களையகற்றி வாழவேண்டுமென்பது புத்த சங்கத்தோர் முதற்றியான மாகும். இவ்வகை தியானத்தையும் ஒழுக்கத்தையுங் கண்டிப்போர் பஞ்சபாதகர்களேயாவர்.

அப்பஞ்சபாதகர்களுக்குப் பக்கத்துணையும் பாதுகாவலும் பெரும்புகழ் கூறுவோருமாவோர் தசபாவ சம்பிரதிகளேயாவர். ஆதலின் நமதன்பர்கள் முன்பின் ஆராய்ச்சியின்றி பெரியோர்களையும் மகா ஞானிகளையுந் தூஷித்து வீண்டம்பமுட்டிப் படாடம்பங்காட்டுதற் றங்களைப் பாழாக்கி விடுமென் றறிவார்களாக.

சொரூபசாரம்

பெற்றபேரின்பப் பெரியோர் சரித்திரத்தை / குற்றமெனநாடுங் கொடியோர்கள்-பற்றாக்
கோசாகரப்புழுபோல்கோடானகோடிசென்ம / மாசாவரென்றே மதி.

நீதிவெண்பா

தீயவர்பாற்கல்வி சிறந்தாலுமற்றவரைத் / தூயவரெண்ணியே துன்னற்க-
சேயிழையே
தண்ணொளியாமாணிக்கஞ் சர்ப்பந்தரித்தாலு / நண்ணுவரோ மற்றதனை நாடி.

- 1:45; ஏப்ரல் 22, 1908 -

19. சுயராச்சியம்

சென்ற மே மாதம் 31ம் தேதி வெளிவந்த சுதேசபானுவென்னும் பத்திரிகையில் ஓர் சுதேசாபிமானி எனக் கையொப்பமிட்டு வரைந்துள்ளக் கடிதத்தைக் கண்டு மிக்க வியப்புற்றோம். காரணம்-கடவுளை நம்பி சுதேசியத்தை எதிர்நோக்குவோருக்கு முயற்சி வேண்டுவதில்லை முயற்சியே முழுநம்பிக்கை யுள்ளோர்க்கு கடவுள் வேண்டியதில்லை. கடவுளும் வேண்டும் முயற்சியும் வேண்டுமென்போர்கள் நிலையற்ற நெஞ்சர்களேயாவர். நிலையற்ற நெஞ்சுடையவர்களாயின் பலகற்றும் பாழென்பதேயாம். இச்சுதேசாபிமானி யார் கோறுங் கடவுள் வேறு பரதேசியர் கோறுங் கடவுள் வேறாமோ.

இருவருக்கும் ஒரே கடவுளாயின் சுயராட்சியம் . இருவருக்கும் பொதுவேயாம். இருவருக்கும் வேறுவேறு கடவுளாயின் இருகடவுளர்க்கும் போருண்டாகி (டக் ஆப் வார்) ஒருவருக்கொருவர் இழுத்து யார் வல்லாரோ அவரே ஜெயம் பெறுவர். ஆதலின் நமது சுதேசாபிமானியார் சுயமுயற்சியற்று கடவுளைநோக்கி கையேந்துவரேல் பரதேசிகள் யாவரும் பலமுயற்சியால் பாதாளலோகத்தையும் பிடித்துக் கொள்ளுவார்களென்பது திண்ணம். நமதன்பர் சுதேசவிருப்பமட்டுங் கொண்டு சுதேசிகளின் ஒற்றுமெய்க் கருதாதிருப்பதே தமிழன் பத்திரிகையின் திகைப்பாம்.

- 1:51; சூன் 3, 1908 -

20. நால்வர் சரித்திரம்

ம-அ-அ-ஸ்ரீ தமிழன் பத்திராதிபருக்கு வந்தனம். ஐயா இதனடியில் யான் வரையும் வினாவைத் தங்கள் பத்திரிகையில் விடுத்து உண்டாய சங்கையைத் தெளிவிக்க கோருகின்றேன்.

அதாவது இவ்வாரம் சிந்தாதிரிப்பேட்டையில் நடந்த ஓர் பிரசங்கத் திற்குப் போயிருந்தபோது இலாயவாசி பரிவேலையாளர் பழைமொழிபோல் புத்தபிரானை வைதசங்கதிகளைக்கேட்டு வருந்தி வெளிவருங்கால் அவ்விட முள்ள அன்பர்களிற் சிலர் அப்போலிப் பிரசங்கியாரை நோக்கி அதிகமுங் கொஞ்சமுமில்லா அற்பப் பிரசங்கியாரே, நீவிர் பெரியோனெனும் வேஷம் போட்டு பெரியோரை தூஷிப்பது பெருமெயாமோ என்றார்கள்.

அவ்வாக்கின் மணமறியா போலிப் பிரசங்கியார் நால்வர்களின் வாக்கை நீங்கள் நம்புவதாயிருந்தால் நாம் அவ்வகையே தூஷிப்போம். நீங்கள் நம்பாவிடில் தூஷிக்கமாட்டோமென்று உறுதி கூறினர். ஆதலின் பத்திராதி பரவர்கள் அன்புகூர்ந்து அப்பர், சுந்திரர், சம்மந்தர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வர்கள் சரித்திரம் பொய்யா அன்றேல் மெய்யா என்பதை விவரித்துக் கூறும்படிக் கோருகின்றேன்.

சி.வீ. சதாசிவன், சென்னை.

அன்பரே: விதிமுறைத் தொகைகளை விளங்கக்கேட்பதில் வினாவும் விடையும் நான்குவகைத்தாம். அதாவது-துணிந்துகூறலுங், கூறிட்டு மொழிதலும், வினாவில் விடுதலும், வாய்வாளாமெயுமாகும். இவற்றுள், 1-வது, தோற்றும் பொருட்கள் யாவுங் கெடுமோ கெடாதோ வென்னில் யாவுங் கெடுமென்று துணிந்துகூறல். 2-வது, செத்தான் பிறப்பானோ பிறவானோவென்னில், பற்றற்றவனோ பற்றறாதவனோவெனக் கேட்டு மொழிதல். 3-வது, கொட்டை முந்திற்றோ பனை முந்திற்றோ வென்னுங் கேள்விக்கு எக்கொட்டைக்கெப்பனையென்று அவன் கேள்வி யால் அவனைத் தெளிந்துக்கொள்ளச் செய்தல். 4-வது, ஆகாயப்பூ பழைதோ புதிதோவென்னுங் கேள்விக்கு வாய்வாளாமெயால்மாற்ற முறைக்காதிருத்தல்.

எனும் நான்கு வினாவிடைகளுள் தாம் கடாவிய கடாவல், "பொய்யை மெய்யென்ற மூடரை புண்ணியரென்று புராணங்கூப்பிடுமானால்" கைவல்ய வாதரவால், பொய்யென்றே துணிந்து கூறுவோமாயினும் அதனை விளங்கக்கூறுவான் வேண்டி விடுத்திருக்கின்றோம். புராணங்களின் விவரம் வருங்கால் பெரியபுராண விவரம் பரக்க விளங்கும். அவசரமாகத் தெரிந்துக்கொள்ளவேண்டின் 05-06-ம் வருஷங்களில் இந்துநேசன் பத்திரிகையில் சில வாதங்கள் நடந்து ஞானசம்பந்தர் சரிதை உண்மெயிற் பொய்யே என்று எழுதியிருக்கின்றார்கள். பார்த்துக் கொள்ளலாம்.

பெரியபுராணத்தை ஏற்று பரிந்து பாடுபடும் பாவலர் இக்கருணை தங்கிய ஆங்கிலேயர் துரைத்தனமில்லாமல் மகமதியர் துரைத்தனமிருக்கு மாயின் வேஷபிராமணர்கள் போதனையால் கோடாவாலா சாமியாராகவும், இந்துக்களென்போர் துரைத்தனமே யிருக்குமாயின் சுடுகாட்டுவாலா சாமியாராகவும் இருக்கவேண்டி வருமே என்பதை சற்றுஞ் சிந்தியாது சடகுடுப்பானடிக்கின்றார்போலும்.

தற்காலந் தோன்றியுள்ள இந்துக்களென்போர் துரைத்தனத்தில் சற்சங்கத்தோரை வசியிலுங் கழிவிலு மறைந்து வதைத்துள்ளப் படங்களை மதுரை சிலாலயச் சுவர்களில் வரைந்து வைத்திருக்கின்றார்கள். அவ்வசியில் வாதைப்படுவோர் முகசாடையும், தாம் கூறியுள்ள பிரசங்கியார் முக சாடையையும் உத்துப்பார்ப்பாரானால் அவர்கள் குடும்பந்தானா யிவரென்பதும் இவர் குடும்பத்தார்கள் அவர்களென்பதும் எளிதில் விளங்கும்.

- 1:51; சூன் 3, 1908 -

21. மாதவரம் போக வழியேதென்னும் வினாவிற்கு

மாடு எத்தனை முட்டையிட்டது கோழி எத்தனை குழந்தைபெற்றது என்னும் வினாவிடுப்பது போன்ற ஓர் கடிதத்தைக்கண்டு மிக்க வியப்புற்றோம். காரணம் யாதென்பீரேல்-இத்தேசத் தமிழ்ப் பத்திரிகை ஒன்றில் இராமலிங்கம் என்பவர் ஓர் கடிதம் எழுதி பிராணாயாமமென்னும் மொழியின் சந்தேகத்தை விளக்கவேண்டுமென வினாவியிருக்கிறார்.

அதற்கு சத்தியவிரதமென்னும் மற்றொருவர் உமது ஊரெது, சாதியெது, மதமெதுவென வினாவில் விடுத்திருக்கின்றார். இத்தகையப் பிராணாயாமத் திலும் சாதிவூழல் மதவூழல் இருக்குமாயின் பிரத்தியாகாரத்திலெவ்வூழ லெழுமோ விளங்கவில்லை. அங்ஙனம் சத்தியவிரதன் கூறியவாறு சாதிவூழலும் மத வூழலு மிருக்குமாயின்.

தாயுமானவர்

சாதிகுலம்பிறப்பிறப்பு பந்தமுத்தி யருவுருவத் தனமெய் நாமம்
ஏதுமின்றி யெப்பொருட்கு மெவ்விடத்தும் பிரிவறநின் றியக்கஞ்செய்யும்
என்றும்
எடுத்த தேகம் விழுமுன் புசிப்பதற்கு சேரவாருஞ் செகத்தீரே
என்றும்

விவேக மிகுத்த மகாஞானியார் ஜெகத்துள்ள சருவ மக்களும் ஞானா முதைப் புசிக்க வாருங்கோளென்று கூறியிருக்க சத்தியவிரதனென வெளிவந்த

நமதன்பர் அசத்தியவிரதசாதியையும் மதத்தையும் வினாவியதென்னோ விளங்கவில்லை.

நமது சத்தியவிரதர் ஏதுக்குத் தக்க நிகழ்ச்சியின்றி சாதிக்கத்தக்க சன்மார்க்கமுண்டென்று பிராணாயாம நிலையை விளக்குவாராயின் அதற்கு சாதியும் வேண்டும் மதமும் வேண்டுவதே. காரணத்திற்குத் தக்கக் காரியங்கள் தோன்றுவதாயின் இவரது பூரணத்திற் றோன்றும் பொய் மதமும், பொய்ச்சாதியும்போன்ற வழுக்கேயாம். ஆதலின் நமதன்பர் பிராணாயாம ரகஸியங் கூறுவதற்கு முன் பிராணாயாமத்தினின்று சாதியு மதமுந் தோன்றிற்றா அன்றேல் சாதிமதங்களினின்று பிராணாயாமந் தோன்றிற்றா வென்பதைத் தீட்டிக்காட்டுவரேல் இவர் கூறப்போகும் பிராணாயாம பலன் பலருக்கும் பயன் தரும். ஆக்கிது கூறாது கூறுவராயின்,

ஓர் வஸ்து உண்டடி பாட்டி யென்னும் பேரனை எங்கடப்பாபேரா எங்கடப்பாபேரா வென்றிரு வருமோடி யொன்றுங்காணாது ஒருவர் முகத்தை யொருவர் பார்த்து பேரனும் பொய்யைச்சொன்னான் பாட்டியும் பேதையானாளென்பதுபோல் முடியும்.

- 2:2; சூன் 24, 1908 -

22. மருள், மருளர்

மருள் என்பதென்ன? மருளர் என்பவர் யாவர்? இம்மருளர் என்பவர்கள் தலையை விரித்தாடுங்கால் எனக்கு கோழி வேண்டும், குரும்பாடு வேண்டும், இரண்டுஜாடி சாராயம் வேண்டுமென்று சொல்வதென்ன? இவர்கள் திரிகாலமும் சொல்லுகிறார்களென்பது எப்படி?

இவர்களை அநேகர் விழுந்து கும்பிடுகிறதும் இவர்களுடைய வார்த்தையை மிகவும் மேன்மெயாய் நம்புகிறது என்ன காரணம். சிற்சிலர் வேதாந்திகளென்றும், ஞானநூல்களெல்லாம் வாசித்தவர்களென்று அநேக சீஷர்களையும் சேர்த்துக்கொண்டு குருசாமியென்ற பேருடன் இருப்பவர்களுமாகிய மீசை நரைத்த கிழவர்களும் இம்மருளர் வார்த்தைகளுக்கு கீழ்படிவதும் ஆடுகளையும், கோழிகளையும் அருப்பதுமாகிய செயல்களை செய்கிறார்களே? இச்செய்கை எக்காலத்திலிருந்து உண்டானது. பூர்வத்திலிருந்ததா? இவர்கள் ஆடுங்கால் நான் "மதுரைவீரன்" நான் "மாரியாத்தா" நான் "பூசைமுனி" என்னும் நாமதேயங்களென்ன?

எம்.வி.கே., சக்கன்றாபாத்.

அம்மே, நீவிர் விடுத்த வினாக்கள் விபரீதமாயினும் அதன் விருத்தாந்தத்தைச் சிலது விளக்குவாம். அதாவது, புத்ததன்மம் இந்துதேச முழுவதும் பரவியிருந்தகாலத்தில் சுவாசசாதன ரென்றும், சர-அப்பியாசிகளென்றும், பஞ்சபட்சி போதனரென்றும் வழங்கப்பெற்ற சில விவேகிகளிருந்தார்கள்.

அவர்களால் குடிகளுக்குள்ள நற்குறி, துற்குறி இவ்விரண்டையு மறிந்து செல்காலம், நிகழ்காலங்களை மட்டிலும் சொல்லிக்கொண்டுவந்தார்கள். அவற்றால் ஐந்தெழுத்தின் குறிப்பறிந்துசொல்லுவோரை பஞ்சபட்சி சாஸ்திரிகளென்றும், சுவாசமாகிய சரநிலையின் குறிப்பறிந்து சொல்லு வோரை சரசாஸ்திரிகளென்றும், குடிகள் கேட்கும் சங்கதிகளைத் தங்கள் யூகையாலும், விவேகப்பெருக்கினாலும் குறிப்பறிந்து சொல்லுவோர்களை குறிச்சொல்லுவோ ரென்றும் வழங்கிவந்தார்கள்.

அக்காலத்திலிருந்த சில பெரியோர்கள் பொய்க்கபடு, வஞ்சினம், சூதுமுதலிய துற்குணங் களில்லாமல் இல்லறவாழ்க்கையிலிருந்தார்கள். அவர்களுக்குள்ள அருள்நிலையே ஜாக்கிரமாகவும், மருள்நிலையே சொர்ப்பனமாகவும், இருள்நிலையே சுழுத்தியாகவும் கொண்டிருந்தார்கள்.

இவைகள் மூன்றும் மக்கள் விழிப்பில் நிகழும் நிகழ்ச்சிகளேயாகும். விழிப்பிலிருந்தும் தன்னை மரந்த மயக்கத்தால் மருளடைந்து மக்கள் வினாக்களுக்கு விடை பகர்வார்கள். அவற்றுள் செல்கால நிகழ்கால சங்கதிகள் மட்டிலுஞ் சிலது சரிவர நிகழும் வருங்கால வாய்ப்பொய்யேயாகும்.

மக்கள் மற்றுமோர்க் குறியறிதல் யாதெனில், அம்மன் பரிநிருவாண மடைந்த காலத்தில் உச்சியின் வழியாய் வளர்ந்து மறைந்த சோதியின் ஆதரவைக்கொண்டு பச்சோலை பந்தலிட்டு ஓர் கரகத்தைப் புட்பத்தால் அலங்கரித்து அதன்மீது தீபத்தை ஏற்றிவைத்து அம்மன் சிறப்பை வர்ணிப்போராகிய வன்னிப்போர், வன்னியரென்பவர் உடுக்கையென்னும் கருவியைக் கையிலேந்தி மாறியை அகற்றிய மகமாயி யாங்கள் கோறிய கோரிக்கை ஈடேறுமாயின் . சிந்தாதீபம், சிந்தாவிளக்கு அலையாமல் நின்று ஓங்கி வளரவேண்டுமென்று உடுக்கையைத் தட்டி வன்னிப்பார்கள். அவ்வன்னிப்பின் கோறிக்கை நிறைவேறுமாயின் தீபம் ஓங்கி வளருவதுண்டு. அவர்கள் கோறிக்கை நிறைவேறாமற் போவதாயின் தீபம் வளராது நிலையில் நிற்பதியல்பாம்.

இஃது அம்மனை உடுக்கைகொண்டு வர்ணிக்கும் வன்னியர்களால் அளிக்கும் குறியென்னப்படும். இத்தகைய குறிகளையே பூர்வகாலத்தில் கேட்கும் குறிப்பைச் சொல்லலென்றும், குறி சொல்ல லென்றும், குறியென்றும், மருளென்றும் வழங்கி வந்தார்கள்.

இதன் நடைவரிசைகளைக்கொண்டே, "பூர்வ யதார்த்த பிராமண ஆதாரங்கொண்டு தற்கால வேஷப் பிராமணர்கள் விருத்தி யடைவது போல்"

பூர்வம் மருளென்றும் குறியென்றும் வழங்கிவந்த வார்த்தை ஆதாரங்கொண்டு பொய்க்கபடு, வஞ்சினம், சூது இவைகள் நிறைந்தோர்சிலர் தங்களாலாகாது தங்கள் மீது ஓர் தேவதை வந்ததென்றும், மருள் என்பது ஒன்று வந்ததென்றும் வாய்ப்பொய்க்கூறி வயிறு வளர்க்கின்றார்கள்.

அஃதெவ்வகையதென்னில், மதுரைவீரன் குறிமேடை என்றும், மகமாயியின் குறிமேடை என்றும், கருப்பண்ணன் குறிமேடை என்றும் அலங்கரித்து பூசை நெய்வேத்தியமென்னும் ஜாலங்களைச் செய்து பேதைமக்களுக்குக் குறிச்சொல்லுமிடமென்று வகுத்துவிட்டுப் பாலியப்பெண்களில் நாலைந்து பெயரையும் புருஷர்களில் நாலைந்து பெயரையும் துணையாக சேர்த்துக் கொண்டு குறிக்கேழ்க்கவரும் மக்களிடம் ஒவ்வொருவர் கலந்துகொண்டு தாங்களும் குறிகேழ்ப்பதற்கு வருவது போல் தங்களுக்குள்ள குறைகள் ஈதென்று பொய்மொழிகட்கூறி யதார்த்தத்தில் குறிகேழ்க்கவருவோர் எண்ணங்களைக் கவர்ந்து வந்து மேடையின் பின்புறஞ்சென்று குறிச்சொல்லு வோனிடம் சொல்லிவிடுவார்கள். உடனே குறிச் சொல்லுவோன் மேடைகுலுங்க ஓர் ஆட்டமிட்டு மைந்தனே, மகளே இன்னகிராமத்தினின்று இன்ன செய்தி கேழ்க்க வந்திருப்பவன் யார் வரலாமென்று கூச்சலிடுவான். திடீலென்று தான் எண்ணிவந்த சங்கதியை சுவாமி சொல்லி அழைத்து விட்டபடியால் இனி சுவாமி சொல்லுவது யாவும் மெய்யென்று நம்பி விழுந்து விழுந்து கும்பிடும் பேதைமக்கள் சுவாமி கேட்கும்படியான சாராயம், கள்ளு, ஆடு, கோழி முதலியவைகளைக்கொடுத்து அல்லலடைகின்றார்கள்.

இத்தியாதிக் குறைகள் யாவும் பேதைமக்களுக்குள்ள விசாரணைக் குறைவேயாகும். வேதாந்தி களிற் சிலரும் அவர்களை நம்பித் தொழுது வருகின்றார்களென்னில் அவர்கள் வேதம் இன்னதென்றும் வேதாந்தம் இன்னதென்றும் அறியா வேஷவேதாந்திகளே யாவர். பொய்யை மெய்யென்று கூறி வேதாந்திகளென நடிப்பவர்களாதலின் பொய்யை மெய்யாகக் குறிச்சொல்லுவோர்களைக் கொண்டாடி வருகின்றார்கள். ஆதலின் நமது புத்ததன்மப்பிரியர்கள் ஒவ்வொருவரும் யாதுசெயலைக் காணினும் அவற்றை தேறவிசாரித்து காரியாதிகளை நடத்தும்படிக் கோருகிறோம்.

மருள் என்பது மயக்கம், குறிஞ்சி நாட்டின் வீணையோசையால் மயங்கும் ஓர் நிலைக்கும் பேராம். மருளர் என்பது ஓராட்சரிய சப்தத்தைக் கேட்ட விடத்தும் ஓர் நூதன வஸ்துவைக் கண்டவிடத்துந் திடுக்கிட்டு நிலைபிறழ்வோர் களை மருளரென்று கூறப்படும்.

- 2:18; அக்டோபர் 14, 1908 -

23. கோலார் மாரிகுப்பம் சோதிரர்காள்

சற்று கவனியுங்கள். கஸ்தூரி பாண்டத்தைத் திறந்தால் நல்மணம் வீசும், மலபாண்டத்தைத் திறந்தால் துன்நாற்றம் வீசும். அதுபோல் மேன்மக்களாகிய விவேகிகள் தங்கள் நாவைத்திறப்பார் களானால் சகலர் செவிக்கும் இன்பத்தை ஊட்டிக் களிக்கச்செய்வார்கள். விவேகிகளும் மெச்சுவார்கள்.

கீழ்மக்களாகிய அவிவேகிகள் தங்கள் நாவைத் திறப்பார்களானால் நீச்சவார்த்தைகளைப்பேசி நீச்சச்செய்கைகளால் நடித்து விவேகிகளை தூஷிப்பதே தங்கட் செய்கையாகக்காட்டி அவிவேகிகளை ஆனந்திக்கச் செய்வார்கள்.

ஆதலின் நமது சத்தியதன்மப் பிரியர்கள் அசத்தியர்களாகும் அவிவேகி களின் கூட்டத்திற் கேகாமலும், அவர்கள் நீச்சவார்த்தைகளை செவிகளிற் கேளாமலிருப்பதே உத்தமமாகும். அவர்களின் நீச்சக்குடும்பச் செயலைத் தெரிந்துக்கொள்ளவேண்டுமாயின் நூதனப்பணம் படைத்துள்ள கர்வத்தினாலும், நூதனக் கல்விக் கற்றுக்கொண்ட செருக்கினாலு மறிந்து கொள்ளலாம்.

விவேகசிந்தாமணி

பொல்லார்க்குக் கல்விவரில் கர்வமுண்டாம் / அதனோடு பொருளுஞ் சேர்ந்தால்
சொல்லாதுஞ் சொல்லவைக்குஞ் / சொற்சென்றால்குடிகெடுக்கத் துணிவர் கண்டாய்
நல்லோர்க்கிம் மூன்றுகுண முண்டாயின் / அருளதிக ஞானமுண்டாய்
எல்லோர்க்கும் உபகாரராயிருந்து / பரகதிவை யெய்துவாரே.

நாலடி நானூறு

கூர்த்து நாய் கௌவிக் கொளக்கண்டுந் தம்வாயாற்
பேர்த்துநாய் கௌவினா நீங்கில்லை-நீர்த்தன்றி
கீழ்மக்கட் கீழாய் சொல்லியக்காற் சொல்பவோ
மேன்மக்க டம்வாயான் மீண்டு.

- 2:24; நவம்பர்25, 1908 -

24. இரங்கூன் முநிசபில் சங்கமும் இராயபாதூர் மதுரைப்பிள்ளையவர்களும்

பிரமதேசமென்று வழங்கும் இரங்கூன் பதியில் சென்ற பதினாறு வருடகாலமாக முநிசபில் கமிஷனர் அலுவலை நடத்திவந்த ஆனரெரி மாஜிஸ்டிரெட்டும், இராயபாதூரவர்களுமாகிய ஸ்ரீமான் பெ.மா. மதுரைப் பிள்ளையவர்களை இவ்வருஷத்திய முநிசபில் நியமனத்திலுங், கமிஷனராக வேற்றுக்கொண்ட சங்கதியைக் கேழ்வியுற்று மிக்க ஆன ந்தம் கொண்டோம். அந்த ரங்கோன்பதியில் எத்தனையோ வித்தியாபுருஷர்களும், தனவந்தர்களு மிருந்தும் இக்கனவானையே கமிஷனராக ஏற்றுக்கொள்ளுங் காரணம் யாதென்பீரேல், அவருக்குள்ள வித்தையும், புத்தியும், ஈகையும், அன்பும், பரோபகார சிந்தையுமேயாகும்.

- 2:25; டிசம்பர் 2, 1908 -

25. அரைக்கல்லி முழுமொட்டை

அதாவது புறாக்களுக்குள்ள விசையிறகுகளுக்குக் கல்லியென்று பெயர். அஃது அரபி மொழி. அக்கல்லி அரைபாகம் வளர்ந்துவருங்கால் முழு இறகுகளையும் மொட்டையடித்திருக்குமாயின் அக்கல்லியின் விசையும், அம்மொழியும் ஏதேனும் பலனைத் தருமோ ஓர்பலனு மில்லையென்பதேயாம்.

அதுபோல் நமது தேசத்தோர் பெரியசாதி பெரியசாதியென்று கூறிவருபவற்றுள் மனிதருக்குள்ள பெரியசாதியென்னும் மணமும், அதன்செயலும் ஈதென்று விளங்கவில்லை. புனுகுபூனை சிறந்ததென்னு மொழிக்கு அதன் புட்டத்திலேனும் ஓர் மணமுண்டு. அதன் அவுடதப் போக்கால் சில ரோகிகளுக்குக் குணமுண்டு.

கஸ்தூரி மான்வயிற்றி லோர்கட்டியின் மணமுண்டு. அதன் அவுடதப் போக்கால் மக்களுக்கனந்த சுகமுண்டு.

அதுபோல் இப்பெரியசாதியென வழங்கி வரும் மநுமக்களுக்கோர் மணமுண்டா அல்லது பெரியசாதி என்போர்களால் குடிகளுக்கு ஏதேனும் சுகமுண்டா, இவ்விரண்டுங் கிடையாது. இவ்விரண்டுமற்ற மக்களை பெரியசாதிகளெனப் பின்பற்றுவதினும் புனுகுபூனையையும், கஸ்தூரி மானையும் பின்பற்றுவோமாயின் சுகமுண்டு.

சாதியென்னு மொழி சாதித்தோர் சாதிப்போர் என்னுஞ் செயலைப்பற்றிய மொழியாதலின் அச்சாதனைச்செயல் தன்னுயிரைப்போல் மன்னுயிரைப் பாதுகாப்பதாயின் அதுவே பெரிய சாதனமாகும். அச்சாதனமுடையவர்களே பெரியசாதிகளென் றழைக்கப்படுவார்கள். அவர்களையே மேன்மக்கள் என்றும் வணங்கலாகும்.

- 2:36; பிப்ரவரி 17, 1909 -

26. கிராமக் கரணங்களுக்கும் கஷ்டமாமோ

1908ம் வருடம் பெப்ரவரி மாதம் 6ம் நாள் சனிவாரம் வெளிவந்த "சுதேசமித்திரன்" பத்திரிகையில் (பாஸ்கரன்) எனக் கையொப்பமிட்டு கர்ணங்களுக்கு அதிக வேலை இருக்கின்றதென்றும், அவர்களுக்குக் கொடுக்கும் சம்பளம் 8-ரூபாய், 10-ரூபாய் போதாதென்றும் மிக்க வருத்தத்துடன் வரைந்திருக்கின்றார்.

இவ்வகை வரைந்தவர் கிராமங்களுக்கு வரும் மேலதிகாரிகளுக்கு கர்ணங்களே தங்கள் சொந்த செலவில் சப்ளை செய்யவேண்டியதாய் இருக்கின்றதென்றுங் குறிப்பிட்டிருக்கின்றார்.

8-ரூபாய், 10-ரூபாய் சம்பளம் வாங்கும்படியானக் கர்ணம் மேலதி காரிகள் சப்ளைகளுக்காக சிலவுசெய்யக்கூடுமோ அல்லது குடிகள் தலையில் கல்லைப்போடுவதோ விளங்கவில்லை. கல்லைப்போடா கர்ணமாயிருப் பாராயின் இவரது குறைந்த சம்பளம் அறிந்த மேலதிகாரிகள் இவரது சப்ளையை வீணே விரும்பமாட்டார்.

குடிகள் தலையில் கல்லைப்போட்டு பொன்தாலி கட்டியுள்ளவர்களுக் கெல்லாம் மரத்தாலிக் கட்டடச்செய்து பொருளை சேகரிக்கும் கர்ணங்களின் காட்சியைக் கண்ணாறக்கண்ட மேலதிகாரிகள் விண்ணாணமிட்டு வீண் சப்ளை கேழ்க்கின்றார்கள்.

அவ்வகை வீண்சப்ளை கேழ்க்கும் மேலதிகாரிகளுக்கு நமது பாஸ்கரன் விண்ணப்பஞ்செய்துக் கொள்ளுவாராயின் கர்ணங்களுக்குள்ள மேல்சம் பாதனை மேலதிகாரிகளால் வேணமட்டும் விளங்கிப்போம். சுதேசிகள் செய்யும் அக்கிரமங்கள் சுதேசிகளாலேயே வெளிவருமாயின் பரதேசிகளும் பட்சமின்றி விசாரித்து கர்ணங்களைக் குட்டிக்கர்ணங்களாக்கிவிடுவதுமன்றி குடிகளுக்குள்ள கஷ்ட நஷ்டங்களையும் நீக்கி ஆதரிப்பார்கள்.

- 2:36; பிப்ரவரி 17, 1909 -

27. தற்காலம் மடாதிபர்களும், புரோகிதர்களுமுண்டோ?

மடாதிபதிகளென்னும் மொழியின் இலக்கணமானது பாலி பாஷையில் மஹாயிட அதிபதிகளென்னப்படும். அந்த மகாயிடமாம் தெய்வசபையோர் செயல்களோ நல்லூக்கம், நல்லமைதி, நல்வாய்மெய், நற்கடைபிடி முதலிய சுத்தவிதய முடையவர்களாயிருந்து மக்களிடத்தில் யாதொரு பேதாபேதமு மின்றி இலக்கணசாஸ்திரங்களையும், இலக்கிய சாஸ்திரங்களையும், கணித சாஸ்திரங்களையும் கற்பித்து தன்ம அவுடதப் பிரயோகங்களும் செய்து வந்தார்கள்.

இத்தகைய சபைக்குத் தலைவர்களே மாயிடவதிபதிகளென்று அழைக்கப்பெற்றார்கள். அவர்களின் ஞானக் கருணாகரச் செயலால் மாத மும்மாறி பெய்யவும், தானியாதிகள் பெருகவும், குடிகள் சீர்பெறவும், கோன்கள் ஆறுதலினின்று நீதி செலுத்தியும் வந்தார்கள். தற்காலம் அத்தகைய மடாதிபதிகள் யாரேனுமுண்டோ! இத்தேச வெத்திக்கினுங் கிடையாவாம்.

புரோகிதர்களென்னும் வார்த்தையின் இலக்கணம் பாலிபாஷையில் பிரயோயிதர்களென்னப்படும். யாது பிரயோயிதமென்னில் வருங்காலம் போங்

காலங்களை கணித ஆராய்ச்சியைக்கொண்டு கூறவும் தன்ம கன்மாதி களை சீர்பெறச்செய்யவுமுள்ளவர்களாவர்.

அத்தகையச் செயலால் குடிகளுக்கு சத்தியதன்மங்களையூட்டி நீதிவழுவா ஒழுக்கத்தில் நடக்கச்செய்வதுமன்றி வேள்வி கிருத்தியங்களில் ஒஷதி யென்னும் வேர்வகைகளாலும், விரகுவகை களாலும், தைலவகை களாலும் வேள்விசெய்து வியாதிகளை நீக்குதலுமாகிய தன்மகன்மங்களை நடாத்தி வந்தார்கள்.

அத்தகையப் பிரயோயிதர்களும் தன்ம கன்மங்களுந் தற்கால முண்டோ, இத்தேசவெத்திக்கிலுங் கிடையாவாம். தற்காலமுள்ள டம்ப மடாதிபதிகளின் செயல்களையும் வேஷ புரோகிதர்களின் விருத்தாந்தங்களையும் வேளை வருகையில் வெளியிடுவாம்.

- 2:46; ஏப்ரல் 17, 1909 -

28. பூர்வ பௌத்த பிக்ஷுக்களாம் சமண முனிவர்கள் வீற்றிருந்த குகைகள்

திருநெல்வேலி ஜில்லா மருகல் தலையிலுள்ள புவிலுடையார் மலையில் கற்றரை அமைந்துள்ள ஒரு குகையும், பிராஹமி சாசனம் ஒன்றும் கண்டுபிடித்தார்கள். இதன்றி மதுரை ஜில்லாவிலுள்ள ஆனைமலை அரித்தட்டிலும் குகைகள் கண்டுபிடிக்கப் பட்டது, திருநெல்வேலி ஜில்லா வீரசிகாமணிக்குன்றிலும் ஓர் குகை காணப்பட்டது. கடந்த வருடம் மதுரை ஜில்லா வரிச்சியூர் மலையில் ஓர் குகையும், மெட்டுப்பட்டியில் ஒரு குகையும் அகப்பட்டது. அதேவருடம் திருபுறங்குன்றத்திலும், அழகர் மலையிலும் மூன்று குகைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இப்பழையக் குகைகளைக் கண்டு இவைகள் யாவும் பௌத்தர்களால் ஏற்பட்டதா அன்றேல் ஜைனர்களால் ஏற்பட்டதாவென யூகிக்க வேண்டிய தாயிருக்கின்றது. ஏனெனில் பௌத்தர்கள் தங்கள் கொள்கைகளை எப்பாஷையில் எழுதினரோ அப்பாஷையில் ஜைனரும் எழுதியிருக்கின்றனர். ஆயினும் பராஹமி சாசனமானது தெற்கிலிருந்த ஜைனர்களால் ஏற்பட்ட தங்கள் பழைய சாசனங்களிலுள்ளதாகக் காணவில்லை. ஆதலின் இக்குகைகள் யாவும் பௌத்தர்களுடையதென்றே தீர்மானிக்கப்பட்டது. அதற்குப் பகரமாய் ஜைனர்களால் எற்படுத்தியுள்ள தமிழ் நூற்கள் யாவிலும் புத்தரையே குறிப்பிட்டிருக்கின்றது. (மெட்ராஸ் ஸ்டாண்டர்ட் பத்திரிகை)

ஜகதீசனாகும் புத்தபிரான் நிட்டைசாதன உருவம்போலும், சின்முத்திரை யை விளக்கிய உருவம்போலும், பரிநிருவாணமுற்ற உருவம் போலும் பூர்வம் பூமியிற் புதைப்பட்டிருந்த சிலாருபங்கள் உலகெங்குங் காணப்படுகின்றன.

அதற்காதரவாய் அவரது அஸ்தியும் சாம்பலும் தோன்றப்படுகின்றன. அவரது அடியார்களாகும் சமணமுனிவர்கள் வசித்திருந்த குகைகளும் காணப் பட்டு வருகின்றன.

இத்தகைய சத்தியசாட்சியாம் சரித்திராதாரங்கண்ட மேன்மக்களாகும் ஐரோப்பியர்களும், அமெரிக்கர்களும், இஃது மெய் சரித்திரமென விசேஷித்துக் கொண்டாடுவதுடன் சிலர் தங்கள் சுகபோகங்கள் யாவையும் விட்டு பௌத்தகுருவாம் பட்டமும் பெற்று வருகின்றார்கள்.

நமது தேயத்தோர் விவேகிகளால் சிந்திக்கவும், விவேகிகளால் ஏற்கவும், விவேகிகளால் அநுசரிக்கவும், விவேகிகளால் கொண்டாடவும் பெற்ற ஜகத்குருவின் சரிதையை விசாரியாமலும், அதன் பலனை உணராமலும், அதன் சுகம் பெறாமலும் பொய்ச்சரிதை, பொய்ம்மதம், பொய்ச்சாதி முதலியதைப் பின்பற்றி நிற்பது பரிதாபம், பரிதாபமேயாம்.

வீரசோழியம்

தோடா ரிலங்கு மலர்கோதி வண்டு / வரிபாடு நீடுதுணர் சேர்
வாடாத போதி நெறிநிழன் மேய / வரதன் பயந்த வறநூல்
கோடாத சீல விதமோவி வாய்மெய் / குணனாக நாளு முயல்வார்
வீடாத வின்ப நெறிசேர்வர் துன்ப / வினைசேர்த நாளு மிலரே.

- 3:15; செப்டம்பர் 22, 1909 -

29. ஐரோப்பியர் அன்பு

ஐரோப்பியர் அன்பு என்பதில் சிலர் பொறாமெயும், சிலர் மறுட்சியும், சிலர் வெறுப்புங் கொள்ளுவார்கள், காரணம் யதார்த்த குணம் விளங்காக் குறையேயாம். சுதேசிகள் சுதேசிகளென சொல்லிக்கொண்டு எதிர்வீட்டுக் காரனுக்குப் பக்கத்து வீட்டுக்காரன் சாதிவித்தியாசமும், பக்கத்து வீட்டுக் காரனுக்கு மூன்றாம் வீட்டுக்காரன் சாதிவித்தியாசமும், மூன்றாவது வீட்டுக் காரனுக்கு நான்காம் வீட்டுக்காரன் சாதிவித்தியாசமும் உண்டு.

இத்தகைய வித்தியாசங்களினால் பக்கத்துவீட்டுக்காரன் இறந்து விட்டானே நீரேன் போகவில்லை என்பாராயின் நாங்கள் வேறு சாதி அவர்கள் வேறுசாதி என்பார்கள்.

அல்லது நான்காம் வீட்டுக்காரன் தவறியேதோ ஓர் ஊக்கத்தினாலோ இளப்பினாலோ கீழேவிழுந்துவிடுவானாயின் அவனருகிற் செல்லாமலும், அவனை எடுக்காமலும், அவனது ஆயாசத்தைத் தெளிவிக்காமலும் தூரவே நின்றுக்கொண்டு அவனென்னசாதி, எவ்வூரானென்றுக் கேட்டுக் கொண்டே இருப்பார்களன்றி அவன் நம்மெய்ப்போன்ற மனிதவடிவினனாச்சுதே அவனுக்குள்ள ஆபத்தைத் தீர்த்து ரட்சிக்கவேண்டுமென்னும் அன்பே இவர் களுக்குக் கிடையாது. மனிதர்களுக்குள் மனிதர்களை ஆதரிக்க அன்பில்லாதவர் கள் மற்ற ஜெந்துக்களின் மீது ஜீவகாருண்யம் வைப்பார்களோ.

இத்தகைய காருண்யமற்றவர்கள் வசம் சுதேச ராட்சிய பாரத்தை ஒப்படைத்தால் யாரையார் காப்பாற்றுவார்களென்பதைக் கல்வி மிகுந்தக் கனவான்களே கண்டுக்கொள்ளவேண்டியது. ஐரோப்பியருக்குள்ளக்அன்பின் மிகுதியை அநுபவத்தினாலும், காட்சியாலும் அறிந்துக்கொள்ள வேண்டிய தேயாம்.

அதாவது, மைசூரிலிருந்த ஓர் ஐரோப்பிய உத்தியோகஸ்தர் ஓடத்திற் செல்லுங்கால் ஓடங்கவிழ்ந்து அதிலுள்ள சகலருந் தப்பித்துக்கொள்ள ஒரு சுதேசி நீரில் தவிப்பதைக் கண்ட ஐரோப்பியர் அவனை நீரினின்று எடுத்துக் கரைக்குக் கொண்டுவரும்போது பெருவெள்ளத்தால் பாறையில் மோதப்பட்டு மாண்டுபோய்விட்டார். தான் அந்தஸ்துள்ள உத்தியோக துரை மகனென்று மேன்மெயாகத் தன்னைக் தப்ப வைத்துக்கொள்ளாமல் ஏழைக் கூலியாளனைத் தன்மெயொத்த மனிதனென்னுங் கருணைவைத்து காப்பாற்றுவதற்குத் தன்பிராணனைக் கொடுத்துவிட்டார். தேசாபிமானிகளே, அன்பின் நிலையும், அதன் காட்சியும் யாவரிடத்து விளங்குகிறதென்று கண்டறியுங்கள்.

இத்தகைய அன்புமிகுத்தோர்வசம் இராட்சியபாரமிருக்குமாயின் சகல குடிகளும் சீர்பெறுவார்களா, அன்பென்பதற்று பொறாமெயும், வஞ்சினமும், பொருளாசையும் உள்ளவர்பால் இராட்சியபாரத்தை அளிப்பதினால் சகல குடிகளும் சீர்பெறுவார்களா என்பதை சுதேசிகளுக்குள் சுதேசிகள் உணரவேண்டியதேயாம்.

- 3:16; செப்டம்பர் 29, 1909 -

30. தன்னிற்றானே கேட்டைத் தேடிக்கொள்பவன்

ஒவ்வொரு மனிதனுந் தனக்குண்டாகுங் கேடுகளையும், துன்பங் களையும் சிந்திப்பானாயின் அவனுக்கு நேரிட்டுள்ள கேட்டின் பலன் தானே விளங்கும். அதாவது, ஒருவன் தனது விவேகக் குறைவினால் மற்றொருவனைக் கெடுக்கவும், துன்பப்படுத்தவும், அவதூறுசெய்யவும் எண்ணங்கொண்டு தனதுள்ளத்தில் இராகத் துவேஷத்தைப் பெருக்கிக்கொள்ளுவானாயின் அக்கெடு எண்ணம் அவனையே கேட்டிற்குக் கொண்டுபோம்.

அதற்குப் பகரமாய் "கெடுவான் கேடுநினைப்பானென்னும் பழமொழி யுமுண்டு." மனமே புருடனென்று உணர்ந்தோர்க்கு மனத்தினால் உண்டாகுங் கேடுகளும், மனத்தினால் உண்டாகுஞ் சுகங்களும் எளிதில் விளங்கும்.

மனத்தினது செயலையும், அதன் பலனையும் உணராதவர்களுக்கு விளங்காது. ஆதலின் மகாஞானிகளில் ஒருவர் ஒருவனுக்குண்டாயுள்ள

வெண்மயிரைக் கறுப்புநிறமாக்க முடியாதென்று கூறியுள்ளார். அங்ஙனம் ஓர் மயிரின் நிறத்தை மாறுபடுத்தக்கூடாத மனிதன் மற்றோர் மனிதனைக் கெடுக்கவேண்டுமென்றும், அவனது கீர்த்தியை அழிக்கவேண்டுமென்றா யினும் முயலில் அவ்வெண்ணம் முடிவுபெறுமோ ஒருக்காலு முடியாவாம்.

எங்ஙனமென்பீரேல், அவனுக்குள்ள நற்கிரித்தியச்செயலால் சுகமும், கீர்த்தியும் பெருகிநிற்க துற்செயலுந் துன்மனமுங் கொண்டோன் அவனைக் கெடுக்க முயல்வானாயின் அக்கேடுகெடுக்க எண்ணுவோனையே சூழ்ந்து கெடுக்குமென்பது சத்தியம் சத்தியமேயாம்.

- 3:16; செப்டம்பர் 29, 1909 -

31. பகவனது அஸ்தியாலும் சாம்பலாலுங் கொண்ட மகத்துவம்

தென்னிந்தியாவில் சரித்திர ஆதாரவின்றி நூதனமாகத் தோன்றி யுள்ள பராய மதஸ்தர்களும், அப்பராயமதஸ்தர்களை தம்மதஸ்தர்களெனப் பின்பற்றித் திரியும் போலிமதஸ்தர்களும் புத்தரது சரித்திரங்களை சீரே உணராமலும், அவரது தன்மங்களைக் கண்டுதேராமலும் தங்களது அசத்திய மொழிகளால் பௌத்தர்களை ஜெயித்துவிட்டோமென்றும், தங்களது அசப்பியமொழிகளால் பௌத்தர்களை தூஷித்துக்கொண்டும், தங்களது துன்மார்க்க மொழிகளால் பௌத்தர்களது தலையைத் தத்திவிட்டோ மென்றுங் குறைக்கூறி திரிவோர் தற்காலம் (பேகார் மாகாணத்தில்) கூடியுள்ள மகமதியகனவான்களுடையவும், இந்து கனவான்களடையவுமாகிய அன்பின் பெருக்கத்தையேனும் உணர்ந்து புத்தரையும், புத்தரது தன்மத்தையும் பொய் யென தூஷித்துப்பாழைடையாது புகழ்பெறுவார்களென்று நம்புகிறோம்.

அதாவது, பெஷாவாரென்னுந் தேசத்தில் பிரிட்டிஷ் ஆர்ச்சலாஜிக்கல் சர்வேயர்களால் கண்டெடுக்கப்பெற்ற பகவனது அஸ்தியையும் சாம்பலையும் அநுசரித்து,

பேகாரென்னும் மாகாணத்திலுள்ள மகமதிய கனவான்களும், இந்து கனவான்களும் சென்றவாரம் பெருங்கூட்டமிட்டு அக்கூட்டத்திற்கு ஓர் மகமதிய கனவான் சையத் அசேன் இமாம் அவர்களை சபாநாயகராக வீற்றிருக்கச்செய்து புத்தரது அஸ்தியை கண்டெடுத்த இடத்திலேனும், புத்த கயாவிலேனும் வைக்கவேண்டுமேயன்றி மற்றயிடங்களுக்குக் கொடுக்கலாகா தென்று தீர்மானித்தார்கள்.

இக்கூட்டத்திற்கு மகமதிய கனவான்கள் விசேஷமாக வந்திருந்ததுமன்றி புத்தருடைய தன்மங்களைப்பற்றியும் சிலாகித்தது மிக்க மகத்துவமேயாம். மௌலி பக்கிருடீனென்பவர் இஸ்லாம் நீதி மார்க்கங்களைப் பற்றியும், பௌத்த தர்மத்தையொட்டியும் சிலாகித்துப் பேசினார்.

பௌத்த தன்மத்திற்கும், இஸ்லாம் போதனைக்கும் பொதுவான விஷயம் அநேகமிருக்கின்ற தென்று எடுத்துக் காட்டினார். சபாநாயகராகிய சையத் அசேன் இமாம் எழுந்து புத்தரது மகத்துவத்தை மிக்க உற்சாகத்துடன் பேசி தங்கள் தீர்க்கத்தெரிசிகளில் ஒருவராக எண்ணுவதாகவுங்கூறி தான் ஓர்பௌத்த மதஸ்தன் அல்லவென்று அவரால் உண்மெயாக சொல்ல முடியாதென்றுங் கூறி முடித்தார். (செப்டம்பர் மாதம் 25ம் நாள் இஸ்டாண்டார்ட் பத்திரிகையைக் காண்க).

- 3:17; அக்டோபர் 6, 1909 -

32. முயற்சி திருவினையாக்கும்

எனும் முதுமொழிக்கிணங்க நாம் சீர்பெற வேண்டுமென்னு முயற்சியிலும், நாம் எடுத்த காரியம் செவ்வனே முடியவேண்டுமென்னு முயற்சியிலும் நோக்கமுள்ளவர்கள் விரோத கட்சியோரையும், வீண் வார்த்தைப் பேசுவோரையும் மதியாது தங்கள் கஷ்டநஷ்டங்களையுங் கருதாது அவமானம் வெகுமானமென்னும் பேற்றையும் விரும்பாது கீர்த்தி அபகீர்த்தி என்னுஞ் சிறப்பையும் நோக்காது எடுத்த சுபகாரியங்கள் மீது கண்ணோக் கமும் கருத்துமாயிருந்து முற்றும் சீர்பெற முடிப்பதே அழகாகும்.

அங்ஙனமின்றி எடுத்தகாரியச் செயலை விடுத்து விரோதிகட் செயலையும், வீணர்செயலையும் நோக்கி அவர்களிடம் வாதுபுரிவதாயின் விரோதகட்சி வலு பெறுவதுடன் முயற்சிகெட்டு எடுத்தகாரியமுமிழி வடைந்துபோம்.

ஆதலின் நமதன்பார்ந்த பௌத்த சோதிரர்களும், சாதிபேதமற்ற திராவிடர்களும், நமது விரோதிகளின் செயலை விரும்பாமலும், வீணர்கள் மொழிக்கு செவிகொடாமலுமிருந்து காரியாதிகளை நடத்திவரும்படிக் கோறுகிறோம்.

எடுத்தநற்காரியம் பெரிதேயன்றி கெடுக்கும் வீரியம் பெரிதன்று. நற்காரியத்தால் சீர்பெற்றுள்ளாரையுங் காணலாம். துற்காரிய வீரியத்தால் சீர்கெட்டுள்ளாரையுங் காணலாம்.

மெய்வருத்தம்பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார் / எவ்வவர்தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி அருமையும்பாரார் அவமதிப்புங்கொள்ளார் / கருமமே கண்ணாயினார்.

- 3:17; அக்டோபர் 6, 1909 -

33. மனிதன் தனது செயலால் தன்னை உயர்த்திக்கொள்ளுவான் தனது செயலால் தன்னைத் தாழ்த்திக்கொள்ளுவான்

மக்களுக்குள் கற்றோனாயினும், கல்லானாயினும், விண்டிதனாயினும், பண்டிதனாயினும், மெல்லியனாயினும், வல்லியனாயினும், தங்கடங்கள் வார்த்தைகளினாலும், செயல்களினாலும் தாங்களே தங்களை உயர்த்திக் கொள்ளவும், தாங்களே தங்களைத் தாழ்த்திக் கொள்ளவுமாகின்றோம்.

இவ்விருவகைச் செயலுள் ஓர் மனிதன் தன்னை உயர்த்திக்கொள்ள வேண்டுமாயின் சகலருக்குந் தன்னைத் தாழ்ந்தவனாக ஒடுக்கி டம்ப வார்த்தை களை அடக்கி நாவிற் பொய்யெழவிடாமலும், சுயப்பிரயோசனத்திற்காய் எதிரியை கெடாமலும், தனக்கு அவமானம் வரினும் எதிரிக்கு அவமானம் வராது காத்தலும், தங்களை ஒருவர் வைது சீரழிக்கினும் அவர்களை சீர்கெடுக்காமலும், தங்களை ஒருவர் மனநோக பேசினாலும் அவர்களை மனநோகச் செய்யாமலும், தங்களை ஒருவரடிக்கினும் அவர்களைத் துன்புற வடிக்காமலும், ஒடுக்கி களங்கமற்ற நெஞ்சினனாய் வாழ்வானாயின் உயர்ந்தோர்மாட்டேயுலகமென்பது திரிந்து உலகத்தி லிவனே உயர்ந்தோ னென்று அழைக்கப்படுவான்.

ஆதலின் நமது தீயச்செயல்களே நம்மெய்த் தாழ்ந்தவனாகக் காட்டுவதும், நமது நற்செயல்களே நம்மெ உயர்ந்தவனாகக் காட்டுவதும் இயல்பாம். நமது நற்செயலைக்கொண்டு நம்மெய் நல்லோரென்று கூறுவதற்கு அதிகநாட் செல்லும் நமது துற்செயலைக்கொண்டு நம்மெய் பொல்லாரென்று கூறுவதை எளிதிலும், சொற்ப நாளிலும் பெறலாம். பௌத்த சோதிரர்கள் யாவருந் தங்களது செய்கைகளே தங்களை உயர்த்துவதென்றும், தங்கள் செய்கைகளே தங்களை தாழ்த்துவதென்றும், கன்மத்தை நோக்கி நிற்க வேண்டியதாதலின் என்றும் நற்கருமத்தை நாடவேண்டுகிறோம்.

மூவர் தமிழ் - நாலடி நானூறு

நன்னிலைக்கட்டன்னை நிறுப்பானுந்தன்னை / நிலைகலைக்கிக் கீழிடுவானு - நிலையினு மேன் மேலுயர்த்து நிறுப்பானுந் தன்னை / தலையாகச் செய்வானுந்தான்.

அறநெறிச்சாரம்

தானே தனக்குப் பகைவனு நட்டானும் / தானே தனக்கு மறுமெயு மிம்மெயும் தானே தான் ,செய்தவினைப் பயன் றுய்த்தலால் / தானே தனக்குக் கரி.

- 3:20; அக்டோபர் 27, 1909 -

34. அஞ்ஞானக் கிறிஸ்தவர்களென்போர் யார்?

நண்பரே, தாம் வினாவியுள்ள அஞ்ஞானக் கிறிஸ்தவர்கள் மெய்ஞ் ஞானக் கிறிஸ்தவர்களென்பவற்றுள், அஞ்ஞானச்செயலை அதிகரித்திருப் பவர்கள் யார், மெய்ஞ்ஞானச் செயலை அதிகரித்திருப்பவர்கள் யாரென்று உசாவியவிடத்துத் தானே விளங்கும். ஈதன்றி கிறிஸ்தவனென்னும் இலக் கணம் யாதென்பீரேல், கிறிஸ்து அவன், அவன் கிறிஸ்து என்பதாம்.

அதாவது கிறீஸ்துவின் போதகத்தையும் அவரைப் பின்பற்றியும், கற்பனைகளைக் கைக்கொண்டு நடந்தும், இரண்டெஜமானனாகும் உலக இச்சையும், மோட்ச இச்சையுங் கொள்ளாது ஒரு எஜமானனாகும் மோட்ச இச்சையில் நின்றும், ஆவியிலும், உண்மெயிலும் அன்பை வளர்த்தும், அறை வீட்டை சாற்றி தியாணிப்பதாகும் ஐம்பொறி ஒடுக்கியும், சாந்தகுணத்தைப் பெருக்கியும், நீதியின்பேரில் பசிதாகமுற்றும், வேஷ பிராமண மத சாதிபேத மற்றும் அன்பே ஒருருவாக நின்று கிறீஸ்து தனக் குள்ளும், கிறீஸ்துவுக்குள் தானும் அமர்வானாயின் அவனே கிறீஸ்தவனென்று அழைக்கப்படுவான். அவனே மெய்ஞ்ஞானக் கிறீஸ்தவனுமாவான். கற்பனைகளுக்கு மாறாக விபச்சாரம், பொய், களவு, குடி, கொலை முதலிய துற்கிருத்தி யங்களே ஒருருவாகக்கொண்டு கேட்டிற்குக் கொண்டுபோகும் வாசல்வழிச் சென்று மதுவையும், மாமிஷத்தையும் புசித்து மதோன்மத்தனாகத்திரிந்து தன்கண்ணிலிருக்குந் துரும்பை எடாது அன்னியன் கண்ணிலுள்ள சிறாவை நோக்குவது போல் தனக்குள்ள அஞ்ஞானச் செயல்களை உணராது ஏனைய விவேகிகளை அஞ்ஞானிகளென்று புறங்கூறியும், ஆண்டவனெங்குமிருக் கின்றாரென்று வாய்ப்பறையடித்து அன்னியன் தாரத்தை இச்சிக்குங்கால் அவரிருக்கின்றாரென்றுணராமலும், ஆண்டவன் சகலமு மறிவாரென்னும் வாய்ப்பறை அடித்து அன்னியன் பொருளைக் களவாடுங்கால் அவரறிவா ரென்றுணராமலும், கிறீஸ்து கிறீஸ்துவென்று சொல்லிக்கொண்டு அவரது போதனையை உணராமலும், போதனையின்படி நடவாமலும், அவரது அன்பினுள் ஒடுங்காமலும், வேஷ பிராமணமத சாதிக்கட்டுக்குள் இருந்து கொண்டே கிறீஸ்து அவன், கிறீஸ்து அவன் என்னும் படாடம்பப் பொய்யைச் சொல்லி கேட்டின் வாசலில் விசாலமாகச் செல்பவன் எவனோ அவன் கிறீஸ்துவுக்குள் அடங்காதவனாதலின் அவனைக்கிறிஸ்தவனென்று அழைக்க ஏதுவற்றிருப்பதுடன் அஞ்ஞானக் கிறீஸ்தவனும் அவனேயாவன்.

- 3:26; டிசம்பர் 8, 1909 -

35. சுயநலங்கருதி பாடுபடுவோர் பிறர்நலங் கருதி பாடுபடுவரோ

ஒருக்காலும் படார் காரணம், தருமமென்பது சகலருக்கும் பொது வென்பது அநுபவக் காட்சியாகும். அத்தகையப் பொதுவாயச் செயலை தங்கள் சுயசாதியோர்களுக்கு மட்டிலுஞ் செய்துக் கொண்டு ஏனையோர்களை விரட்டித் துரத்துங் கூட்டத்தோர்வசம் இராஜகீயப் பொதுக்காரியங்களைக் கொடுப்பதானால் சகலருக்கும் சுகமுண்டாகவேண்டுமென்று கருதி இரா ஜகாரியாதிகளை நடத்துவார்களா, தங்கள் கூட்டத்தோருக்குமட்டிலுந் தருமஞ் செய்துக்கொள்ளுவதுபோல் செய்துக்கொள்ளுவார்களா என்பதை நந்தேயத்தோர் சீர்தூக்கி ஆலோசிக்கவேண்டியதாகும்.

நமது கருணைதங்கிய ராஜாங்கத்தோர் தற்காலம் ஏற்படுத்தியிருக்கும் இராஜாங்க ஆலோசனை சங்கத்தில் சகலவகுப்போரும் வீற்றிருந்து அந்தந்த வகுப்பாருக்குள்ளக் குறைகளை விளக்கி தங்களை சுகப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதேயாகும். இத்தகைய கருணைமிகுத்த கருத்தை நமது தேயத்தோர் கவனியாது மவுனஞ்சாதிக்கின்றார்கள்.

அதாவ்து, முதலிகள் என்பவர்களுக்குள்ளும், நாயுடு என்பவர் களுக்குள்ளும், செட்டி என்பவர்களுக்குள்ளும், ரெட்டி என்பவர்களுக் குள்ளும், யாதவ குலத்தார் என்பவர்களுக்குள்ளும், வன்னிய குலத்தார் என்பவர் களுக்குள்ளும் உள்ள பெரியோர்களைத் தெரிந்தெடுத்து லெஜிஸ் லேட்டிவ் கவுன்சலுக்கு அநுப்புவதைக் காணோம். அவ்வகை அநுப்புவ தனால் சகல வகுப்போரும் சுகமடைவோமா, யாரெப்படி போனாலும் நமக்கென்ன என்றிருந்தால் சுகமடைவோமா.

கருணைதங்கிய ராஜாங்கத்தோர் சகல சாதியோரும் முன்னேறி சுகம் பெறும்படியான வழிகளை எவ்வெவ்வளவோ செய்துவருகின்றார்கள். அவைகளை நாம் கருதாது நமது மதச்சிந்தையையும், சாதிச்சிந்தையையும் பெருக்கிக்கொண்டு நாளுக்குநாள் க்ஷீணமடைந்து வருகின்றோம்.

இதற்குப் பகரமாய் அன்னிய தேசத்தோராகிய ஐரோப்பியர், அமெரிக்கர், ஜப்பானியர், சீனர் முதலிய தேசத்தார் தங்களுக்குத் தாங்களே முயற்சித்து கைத்தொழில் விருத்தியையும், விவசாய விருத்தியையும் முன்னுக்குக் கொண்டுவந்து தேசத்தை சுகம்பெறச் செய்திருக்கின்றார்கள்.

நம்முடைய தேசத்தோரோ மதவிருத்தியிலும், சாதிவிருத்தியிலும் நிலைத்து கைத்தொழில் விருத்தியையும், விவசாய விருத்தியையும் மறந்திருக்கின்றதை உணர்ந்த கருணைதங்கிய ராஜாங்கத்தோரே முயன்று கைத்தொழிற்சாலைகளையும், விவசாய சாலைகளையும் வகுத்து கற்பிப்பதற்காரம்பித்தும் நமது தேசத்தோர் அவைகளை நோக்கினாரில்லை.

இத்தகைய வித்தையிலும் புத்தியிலும் மிகுத்த பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்தும் அவர்களது வித்தை புத்தியிலும், ஒற்றுமெய் நயத்திலும் பழகாமல் நமது பொய்யாகிய சாதிபேதத்திலும் புரட்டாகிய சமயத்து வேஷத்திலும் பழகிவருவோமானால் மற்ற தேசங்களைப்போலும், தேசத் தோரைப்போலும் விருத்திபெறுவது எக்காலமோ விளங்கவில்லை.

பிரிட்டிஷ் ராஜாங்கத்தோரே கருணைகொண்டு கைத்தொழிற் சாலை களையும், விவசாய சாலைகளையும் வகுத்து வைத்திருக்க அவைகளிற் சென்று விருத்திபெற விரும்பாதவர்கள் இராஜாங்க ஆலோசனை சங்கத்தை நோக்கி அதில் முன்னேற முயல்வார்களோ, முயன்றும் அதிற்சேர்ந்து தன்னவரன்னிய ரென்னும் பட்சபாதமின்றி நீதிவாதஞ் செய்வார்களோ அதுவும் விளங்கவில்லை.

ஆதலின் நமது கருணைதங்கிய ராஜாங்கத்தோர் இவ்விந்து தேசத்தில் சாதிபேத வித்தைகளும், சமயபேத வித்தைகளும் மிக்க மலிந்து ஒற்றுமைக்கே டதிகரித்திருக்கிறபடியால் தற்கால நியமனமாகும் கவுன்சல் மெம்பர்களில் ஒருவகுப்பாரே மிக்க நிறம்பாது சகலவகுப்பாரும் நிறம்பி நிற்கத்தக்க ஏதுவில் நிலைக்கச்செய்து சகலவகுப்பாரையும் சீர்படுத்தி வைக்கக் கோறுகின்றோம்.

- 3:26; டிசம்பர் 8, 1909 -

36. பிரிட்டிஷ் ஆட்சியின் செங்கோலைப் பாருங்கள்

பிரிட்டிஷ் அரசர்கள் செய்துவரும் இராஜரீகத்தில் தன்னவரைப்போல் அன்னியர்களையும் பாதுகாக்குங் குணமிகுதியால் அவர்களது சட்டங்க ளையும் நீதியின் கோலால் அளந்து நடாத்தி வருகின்றார்கள்.

அத்தகைய நீதியிலும் நெறியிலும் நடாத்திவரும் செயலானது வஞ்சகர் களுக்குந் துஷ்டர்களுக்குந் தீயச்செயலே குடிகொண்டுள்ளவர்களுக்கும் ஐரோப்பியர்களது செங்கோலா லுண்டாகும் தெண்டனைகளை அலட்சிய மாகக் கருதி வெடிகுண்டுகளினாலும், கைத் துப்பாக்கிகளாலும் சுட்டுக் கொலைச்செய்து வருகின்றார்கள். முன்பு செய்துவந்தக் கொலைகளை அன்பர்கள் கேழ்வியுற்றிருக்கலாம்.

தற்காலம் நடந்திருக்குங் கொலையோ மிக்க விபரீத வஞ்சத்தைக் காட்டுகின்றது. பம்பாய் இராஜதானியில் வாசஞ்செய்யும் பிராமணரென்று சொல்லிக்கொள்ளும் வகுப்பைச்சேர்ந்த 18 வயதுடைய ஓர் பையன் நாசிக் கலைக்ட்டராயிருந்த மிஸ்டர் ஜாக்சன் என்பவரை சுட்டுக்கொலைச் செய்துவிட்டானாம்.

இத்தகையக் கொடும்பாவியின் செயலுக்குக் காரணம் யாதெனில், இந்த பிராமணப் பையனுடைய சினேகிதனொருவன் தனது துஷ்டத்தனத்தால் மேற்சொன்னபடி கலைக்கட்டரால் தீபாந்திரசிட்சை விதிக்கப்பட்டு விட்டானாம். சிட்சைபெற்ற துஷ்டனுக்கு மிக்க இஷ்டனாகிய இந்த துஷ்டன் தனது வஞ்சினத்தை நெஞ்சிற் பதியவைத்திருந்து சமயம்நேர்ந்த போது கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டான்.

இத்தியாதி வஞ்சின மிகுத்தோர்களும், கொலைப்பாதகர்களு மானவர்கள் தங்களுடைய அரசாட்சியும், செல்வாக்கும் உண்டாயிருந்த காலத்தில் தங்களுக்கு எதிரிகளாயிருந்த பௌத்தர்களை சகல மக்களும் பார்த்து திகிலடையும்படி வசியிற் குத்தியும், கழுவி லரைந்தும், கற்காணங்களிற் வைத்தரைத்துங் கொலை தண்டனை விதித்திருப்பதாக விளங்குகின்றது.

அதன் அநுபவத்தைத் தெரிந்துக்கொள்ள வேண்டுமானால் மதுரையிலுள்ள ஆலயங்களின் கற்சுவர்களில் வரைந்துள்ள படங்களால் விவரமாகத் தெரிந்துக்கொள்ளலாம். ஈதன்றி முள்ளு பீப்பாக்களிலடைத்து சகலருங் கண்டு நடுங்கும்படி உருட்டிக் கொலைபுரிந்து வந்ததாகவுந் தெரிய வருகின்றது.

இவ்வகையாய்க் கொடுங்கோலால் ஆண்டு வந்தவர்களை கருணை தங்கிய ஆங்கிலேய அரசாட்சியார் செங்கோலால் தங்கள் தெண்டனை கொடுத்துவருவதினால் மேலு மேலும் சத்துருக்கள் தோன்றுகின்றார்கள். அவர்கள் செய்துவருங் கொடுங்கொலைகளுக்குத் தக்கவாறு சகலருங் கண்ணினாற்கண்டு நடுங்கும்படியானக் கொடுங்கொலைப்புரிவது நியாய மாகும். மற்றப்படி செங்கோல் தண்டனையாம் தூக்கிலிட்டுக் கொலைச் செய்வதினால் அதை ஓர் அலட்சியஞ் செய்யாது தங்கள் வஞ்சத்தைக் காட்டுகின்றார்கள்.

அத்தகைய வஞ்சகர்களை அடக்குவதற்கு சகலருங் கண்டு பயங்கொள்ளும்படியான கொடுங்கோல் கொலை தண்டனையே புரிதல் வேண்டும் இவ்வகையானக் கொடுந்தண்டனையை நமது தேசத்தோரே முன்னின்று செய்விக்கும்படி ராஜாங்கத்தோருக்குத் தெரிவித்தல்வேண்டும். நமது தேசத்தோர் இவற்றிற்கு முன்னின்று தக்க தண்டனையைக் கோறாமல் மௌனத்திலிருப்பார்களாயின் ஒருவன் செய்த குற்றத்தால் ஊரா ரனைவர் மீதும் சந்தேகத்திற்கிடமுண்டாக்கிவிடும். கெடுங்கோலை நடாத்தும்படிச் செய்யுங்கள், செய்யுங்கள்.

- 3:29; டிசம்பர் 29, 1909 -

37. பிரேதமெடுத்துப் போகுங்கால்

வினா : ஐயா, எச்சாதிகளிலுமில்லாத ஓர் வழக்கம் சாதிபேதமில்லாக் கூட்டத்தோரிடங் காண்கின்றேன். அவை யாதெனில், இக்கூட்டத்தோர் பிரேதமெடுத்துப் போகுங்கால் கூத்தாடிக்கொண்டும், பாட்டுப்பாடிக் கொண்டும், வீண்கலகத்தைப் பெருக்கிக்கொள்ளுகின்றார்களே இதன் சார்பென்னை. எம்மதசார்பை அநுசரித்து இக்கூத்தாட்டமாடுகின்றார்கள். இவற்றை அடியேனுக்கு விளக்கும்படிக் கோறுகிறேன்.

பி.எம். தருமலிங்கம், பெங்களூர்.

விடை : அன்பரே, பலப்பிணி அவத்தையால் பிரேதமானாரென்பதில் துக்கமும், பலப் பற்றற்று பிணியற்று பரிநிருவாணமடைந்தாரென்பதில் ஆனந்தமுங் கொண்டாடுவ தியல்பாம்.

இவற்றுள் நமது ஜகத்தீசனாகவும், ஜகத்குருவாகவும் விளங்கிய புத்தபிரான் காமனையுங் காலனையும் வென்று நிருவாணம் பெற்றபோது சகலமுந் தனக்குளறிந்து பிறப்பிறப்பற்று சுகநிலையும் நித்தியமுமடைந்த வற்றை உலகெங்கும் சுற்றி சீவர்களுக்கும் விளக்கி அவர்களையும் அப்பிறப்பறுத்து சுகநிலை பெறும் மார்க்கத்தில் விட்டு புளியம் பழம்போலும், அதன் ஓடுபோலும் புழுக்களே கூடாய்திரண்டு பட்சியாய் வெளிவருவதுபோலுந் ததாகதர் தேகத்தினின்று சோதிமயமாய் வெளி தோன்றி பரிநிருவாணமுற்றபடியால் மரணத்தை ஜெயித்து நித்தியமுற்றப் பெருஞ்செயலை அறிந்த விவேகமிகுத்தசங்கத்தோரும், இந்திய சாக்கையவரசர் களும் அவரது தேகத்தை தகனஞ்செய்ய எடுத்துப்போம்போது ஆனந்தக் கூத்தாடிக்கொண்டும், அவர் மரணத்தை ஜெயித்து பிறவியற்ற நிலையைப் பாடிக்கொண்டுஞ்சென்றதாக சங்கறர் அந்தியகால சரித்திரங் கூறுகின்றது.

அச்செயலை அநுசரித்துவந்த புத்தசங்கத்தோரும், பௌத்தக் குடிகளும், சமணமுநிவர் களுக்குள் மரணத்தை ஜெயித்து பிறப்பிறப்பற்ற பரிநிருவாணம் பெற்றவர்களாயிருப்பினும் மரணத்திற்குள்ளாகி பிறப்பிறப்பிற் சுழல்வோரா யிருப்பினும் அவர்களது தேகத்தைத் தகனஞ்செய்ய எடுத்துப் போகுங்கால் தோரணக் கொடிகள் முதலானதைப் பிடித்துக்கொண்டு ஆனந்த வாத்திய கோஷத்துடன் பஜித்துங் கூத்தாடிக் கொண்டுபோவது வழக்கமாயிருந்தது.

பௌத்தகுருக்களின் தேகத்தை தகனஞ்செய்ய எடுத்துக்கொண்டு போகுங்கால் சத்விஷய பாடல்களும், ஆனந்தக்கூத்துகளும், தன்மோப தேசங்களும், தன்மதானங்களுஞ் செய்துக்கொண்டே செல்லுவதை பர்மாதேசத்தில் நாளதுவரையிற் காணலாம்.

அத்தகைய சத்விஷயானந்தக் கூத்தாடி ஞானானந்தம் பெற்றிருந்த வித்தேசத்துக் குடிகள் அபுத்தர்களின் பொய்மதங்களுக்குட்பட்டு தங்கள் சுத்தசீலங்கள் யாவுங்கெட்டு பிணியாலும், மூப்பாலும் வாதைப்பட்டு மரணமடைந்ததேகத்தை எடுத்து செல்லுங்கால் கட், சாராயக் குடியாலும், அதன் வெரியாலும் தங்கள் கேட்டினிலையை உணராது விவேகிகள் அருவெறுக்கத்தக்க கூத்தாடுவதும், கலகத்தைப் பெருக்கிக் கொள்ளுவதும், அடிப்படுவதும், சிறைச்சாலையிலடைப்படுவதுமாகிய துக்கத்தை அநுபவித்து வருகின்றார்கள்.

சமணமுநிவர்களின் பிரேதத்தின்முன் கூத்தாடிச்செல்லுவது பூர்வ புத்தமார்க்கச் செயலாயிருப்பினும், புத்ததன்மம் மறைந்து அபுத்த தன்மஞ் சிறந்து பொய்யுங் களவுங் கொலையுங் குடியும் நிறைந்து விட்டபடியால் ஆனந்தக்கூத்து சதா துக்கக்கூத்தாக மாறிவிட்டது. இவற்றை நடவாது தடைசெய்வதே சுகமாம்.

- 3:30; சனவரி 5, 1910 -

38. ஜாதியின் கொடுமை

சமீபத்தில் காக்கினாடாவில் ஒரு எந்தரா ஸ்திரீ தன் குழவியுடன் ஜலங் கொண்டுவர ஒரு குழாய்க்குச் சென்றனள். அக்கால் ஒரு பொந்திலிய ஸ்திரீ அருகிலுள்ள வேறொரு குழாயில் ஜலம்பிடித்துக்கொண்டிருந்தாள். இருவரும் ஜலம்பிடித்துக் கொண்டு திரும்பும்போது எந்தரா ஸ்திரீயின் குழவி பொந்திலிய ஸ்திரீயினருகில் உராய்ந்து சென்றதாம். அக்குழவி பொந்திலிய ஸ்திரீயைத் தீண்டிவிட்டபடியால் ஜலத்தை ஊற்றிவிடவேண்டிய தாயிருக்க அவள் கோபா வேஷங்கொண்டு அக்குழவியின்மேல் குடத்திலிருந்த ஜலத்தை ஊற்றிவிட்டாள். குழந்தை நனைந்துவிட தாயானவள் குழவியை வீட்டுக்கு எடுத்துச்சென்று கோரோசன மாத்திரையை உள்ளுக்குக் கொடுத்தனள். குழவியோ ஒருநாளிருந்து உயிர் துறந்தது. பிரேதத்தை கோஷா ஆஸ்பத்திரியில் சோதிக்க மாத்திரையால் மரணம் நேர்ந்தது என்றனர். பிறகு முனிஸிபாலிட்டி ஆஸ்பத்திரியில் சோதிக்க அது திக்குமுக்கடைப்பால் மரணம் நேர்ந்ததென்று தீர்மானித்தார்களென ஒரு ஆங்கிலப் பத்திரிகையின் நிருபர் எழுதுகிறார்.

குழவிமுகம்பாராது தீண்டாத தீட்டு மொருகேடோ

ஓர் குழந்தையானது பெரிய பெண்பிள்ளையைத் தீண்டிவிட அத்தீட்டை சகியாதவள் அக்குழந்தையின்பேரில் ஜலத்தைக்கொட்டி திக்கு முக்கிடச்செய்து மறுநாள் குழந்தை இறந்துவிட்டதாம்.

அந்தோ! உலகத்தில் இத்தகையத் தீண்டாத ஓர்சாதியும் இருக்குமா தீண்டிவிட்டதினால் குழந்தையைக் கொல்லத்தக்க ஜலத்தைக் கொட்டி கொல்லுங் கொடும்பாவியுமிருப்பாளா! இந்தியர் கண்டுபிடித்துவரும் ஆட்சரிய வித்தைகள் இதுதான்போலும். இவ்விடத்தில்தான் தீண்டுகிறவர்கள் யார் தீண்டாதவர்கள் யாரென்பதை ஆலோசிக்கவேண்டும்.

அதாவது தனது சிறு குழவியின்மீது ஒரு பெண்ணானவள் சலத்தைக் கொட்ட அதற்குக் கோபியாது வீட்டிற்கு எடுத்துக்கொண்டுபோய்க் குழந்தையைப் பரிகொடுத்தவளைத் தீண்டலாகாதா. அன்றேல் குழந்தையின் கை தன்மீது பட்டவுடன் ஜீவகாருண்யமின்றி அதன் சிரசில் நீரைக்கொட்டி திக்குமுக்கிடக் கொன்ற பாவியைத் தீண்டலாகாதா. இவற்றைக்கண்டறிந்து கூறக்கோறுகிறோம்.

- 3:30; சனவரி 5, 1910 -

39. பிரேதம் எடுத்துச் செல்லுகையில்

வினா : அதாவது, ஓர் பிரேதம் எடுத்து செல்லுகையில் பாடையின் கீழ் சிறு மூட்டை எள்ளை கட்டிக்கொண்டும், ஓர் கோழிக்குஞ்சும் கட்டியிருப் பதை பார்த்து அக்கூட்டத்தாரை விசாரிக்கையில் இப்பிரேதம் இரவில் ரூபமாய் வரும். அதை தடுப்பதற்கிவ்விதம் செய்வது வழக்கமென்றார்கள். உயிற்றுறந்த பிரேதமும் இரவில் பேயாய் வரும் என்றது சந்தேகமாயிருப்பதால் தாங்கள் தயையுடனிதின் விஷயத்தை தெரிவிக்கும்படி வெகுவாய் கேட்டுக் கொள்ளுகின்றனன்.

பி.டி. முநிசாமி,. பெங்களூர்.

விடை : அன்பரே, தாம் வினாவிய எள்ளுமூட்டை வினா தள்ளு மூட்டைகளிலொன்றேயாகும். அதாவது நமது தேசத்தோர் இல்லாதப் பொய்க்கட்டுக்கதைகளும் இணையாத ஆசாரங்களும் ஒவ்வொன்றை ஏற்படுத்திக்கொண்டு அதனதற்கென்று ஒவ்வோர் சாந்திவகுத்து விருதா செயலை வீணே வளர்த்து மனோ சங்கற்பத்தால் மடிவதியல்பாம்.

அதே பார்ப்பான் கிறீஸ்துமதத்திற் சேர்ந்து குடிமியைத் தரித்து பூனூலையுமெரிந்து குல்லாவும் பூட்சு மணைந்து எதிரில் வருவானாயின் யாதொரு சாஸ்திரமும் பார்க்காமல் குட் மார்னிங் சார் போட்டுக்கொண்டே யாதொரு சங்கையுமின்றி போய்விடுவார்கள்.

மற்றொரு பார்ப்பான் மகமது மார்க்கஞ்சேர்ந்து குடிமியையும், பூனூலையும் எடுத்துவிட்டு தாடி வளர்த்துக்கொள்ளுவானாயின் அவனை எதிரிற் காண்போர் ஒத்தை பார்ப்பான் சாஸ்திரம், இரட்டை பார்ப்பான் சாஸ்திரங்களை வொதிக்கிவிட்டு சந்தோஷமாக எதிரிற் சென்று சாப் சலாம் சாயப் போட்டுக்கொண்டே போய்விடுவார்கள்.

இதனது விகற்பத்தால் பார்ப்பானென்னும் வேஷத்தை ஏற்றுக்கொள்ளு வோரும் நமது தேசத்தார். அதிலொருவனை எதிரிற் காண்பாராயின் தூற்றிக் கொள்ளுவோரும் நமது தேசத்தோரேயாவர். ஈதன்றி ஓர் பெண்ணை விவாகஞ்செய்தவுடன் அவள் கழுத்தில் மஞ்சள் சரடிட்டு முகத்தில் மஞ்சள் பூசி, குங்குமப் பொட்டிட்டு அவளை விவாக இஸ்திரீ மங்கல்ய ஸ்திரீயென்று வழங்குவது வழக்கம். அவள் புருஷன் இறந்தவுடன் கழுத்திலுள்ள மஞ்சள் சரடை எடுத்துவிட்டு மஞ்சள் பூசக்கூடாதென்றும், பொட்டிடக்கூடாதென் றும், நல்ல வஸ்திரம் கட்டக்கூடாதென்றும் விகாரரூபப்படுத்திவிட்டு அவளைக் கைம்பெண், அறுத்துவிட்டவளென்னும் அடையாளஞ்சுட்டி அவள் எதிரில் வந்துவிடுவாளாயின் கைம்மனாட்டி எதிரில் வந்துவிட்டாள் கட்டுங் காரியமெல் லாங் கெட்டுப்போச்சுதென்று மனோசங்கற்பத்தை வளர்த்துக் கொள்ளுவார்கள்.

அதே பெண்ணானவள் ஓர் மகமதியனையேனும், ஓர் கிறிஸ்தவனை யேனும் விவாகஞ்செய்து புருஷன் இறந்துவிடுவானாயின் அவள் கைம்பெண் வேஷமின்றி எதிரில் வரக்காணுவோர் சலாம் அம்மா, பூவியம்மா சலாம் அம்மா வாத்தியாரம்மா என்று சொல்லிக்கொண்டே சகுனம்பாராது சுபகாரியத்திற்குப் போய்விடுவார்கள்.

இவற்றுள் மங்கல்ய ஸ்திரீயென்று அடையாளம் உண்டுசெய்துக் கொள்ளுவோரும் நமது தேசத்தோரே. அமங்கிலி என்னும் அடையாளம் உண்டுசெய்துக்கொள்ளுவோரும் நமது தேசத்தோரேயாவர். இவர்களுள் சுமங்கிலியை காணில் சித்தியென்றும், அமங்கிலியை காணில் அசித்தி யென்றும் சாஸ்திரம் வகுத்துக்கொள்ளுவோரும் நமது தேசத்தோர் களேயாகும். மதக்கடை பரப்பி சீவிக்கும் பொய்க்குருக்கள் ஒவ்வோர் தந்திரங்களை செய்து சீவிப்பது போல் தொட்டில் பழக்கம், சுடுகாட்டுமட்டு மென்னும் பழமொழிக்கிணங்க பொய்க்குருக்களின் போதனை வெட்டியார் களுக்கும் வழிகாட்டி (சிக்கின்பிராத்திற்கு) வழிதேடிவிடுகின்றது.

அவனவன் செய்யுந் தீவினைகளை அனந்த பிரவியால் அவனவனனு பவிக்கவேண்டியதிருக்க எள்ளுமூட்டையாலும், கோழிக்குஞ்சியினாலும் தீவினைத் தொலையுமென்பது பிசகு.

செத்தவன் பேயாய் வருவானென்னும் பொய்ப்பிராந்தி யகல பாடையில் எள்ளுமூட்டையும் கோழிக்குஞ்சும் கட்டி விடவேண்டுமென்னும் பொய் மூட்டையைச் சேர்த்திருக்கிறார்கள். கிறிஸ்தவர்களின் பாடையையும், மகமதியர்களின் பாடையையுந் தொடராதப் பேய் இவர்களைமட்டும் எங்கிருந்து தொடருகிறதென்று கண்டறிந்துக்கொள்ளுவீராக.

- 3:35; பிப்ரவரி 9, 1910 -

40. அந்தணர் அன்னபுசிப்பு

வினா : ஐயா, தாம் சென்றவாரம் வெளியிட்ட அரிய தமிழன் பத்திரிகையில் வரைந்துள்ளப் பூர்வத்தமிழொளியில் மிகாரா தனபதி என்னுமோர் வியாபாரி அந்தணர்களை அறஹத்தோவென்று கூவியழைத்து அன்னமளித்து வந்ததாகத் தெரியவருகின்றது. அவ்வகையாக வைசியனாகிய மிகாராவின் வீட்டில் அந்தணர்கள் புசிப்பதுண்டோ. அவ்வகை புசித்தாக சரித்திர ஆதாரமுண்டோ. அவ்வகையுண்டாயின் எமக்கு விளக்கி ஆட்கொள்ளும்படி வேண்டுகிறேன்.

காரணமோவெனில் தற்காலம் அந்தணர் பிராமணரென்று வழங்கும் படியானவர்கள் யாவர் வீடுகளிலும் சாப்பிடாமல் தங்கள் வீடுகளில் சகலரும் பணங்கொடுத்து சாப்பிடும்படி செய்துவருகின்றபடியால் மிகாரா தனபதி அந்தணர்களுக்குப் புசிப்பளித்த விவரம் விளங்காமலிருக்கின்றது.

வி. குமாரசாமி, வேலூர்.

விடை : அன்பரே, தாம் வினாவியுள்ள அந்தணர் புசிப்பின் வினா தற்காலம் நூதனமாகவே விளங்கும். பூர்வ பௌத்ததரும காலத்திலோ அரசர், வணிகர், வேளாளரென்ற முத்தொழிலாளர் களிடத்தும் அந்தணர் சென்று அன்னம் புசித்துவந்த தனுபவக்காட்சியாகும்.

அவற்றை அநுசரித்தே வேளாளராம் பயிரிடுந் தொழிலாளர் வீட்டில் அந்தணர் புசித்துள்ளா ரென்பதைக் கண்டறிந்துக்கொள்ளலாம்.

நைடதம்-நாட்டுப்படலம்

மாதர்மென் முல்லையீன்ற / வான்முகை யனையமூரல்
கோதறு கருணை தீம்பால் / கொழுங்களி யிவற்றினோடு
மாதுலர் யாவரென்ன / வதிர் குரன் முரசிற் சாற்றி
வேதியர்க் கருத்தி பின்னர் / விருந்தொடு நுகர்வர்மாதோ

பூர்வகால பௌத்தர்கள் அந்தணர்களென்றும், வேதியர்களென்றும், பிராமணர்களென்றும், அறஹத்துக்களென்றும் யாரை அழைத்துவந்தார் களென்னில், மநுமக்களில் எத்தேச எப்பாஷைக்காரனாயிருப்பினும் புத்தசங்கஞ் சேர்ந்து சமணநிலைபெற்று சகல பற்றுக்களுமற்று சருவ உயிர்களையும் தன்னுயிர்போல் பாதுகாக்குந் தண்மெயமைந்த சாந்தரூபிகளையேயாம். அவர்களையே நாயனாருந் தனது திரிக்குறளில் "அந்தணரென்போற் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மெய்ப் பூண்டொழுகலால்". என்றும் அவர்களது செயல்களையுங் கண்டெழுதியிருக்கின்றார். அவ்வெதார்த்த அந்தணர்களோ சகலர் வீடுகளிலுங் களங்கமின்றி புசிப்பார்கள். ஆனால் ஆடுகளையும், மாடுகளையும் உயிருடன் நெருப்பிலிட்டு வதைத்து சுட்டுத்தின்னும் படுபாவிகள் வீட்டில் மட்டும் புசிக்கமாட்டார்கள்.

- 3:35; பிப்ரவரி 9, 1910 -

41. ஓர் பறையன் குடைபிடித்துச் சென்றானென்று அவன் வியாஜியம் தள்ளப்பட்டதாமே

அந்தோ பொய்யாகிய துற்கந்த நாற்றமாம் சாதிபேதச் செயலை அகற்றி நற்கந்தம் வீசச்செய்யும் பிரிட்டிஷ் ஆட்சியில் பறையன் குடை பிடித்துச்சென்றது தப்பென அபிப்பிராயங்கொண்டு அவன் கொண்டுபோன வியாஜியத்தைத் தள்ளிவிட்டதாக யாழ்ப்பாணத்திலிருந்து 1910 மார்ச்சு மாதம் 7ம் நாள் வெளிவந்த சுதேச நாட்டியமென்னும் பத்திரிகை 46-பக்கம் 3வது கலம் 48-ம் வரியில் குறிப்பிட்டிருக்கின்றது.

பிரையாதின் சுருக்கமோவெனில், கொளம்பு அநுராஜபுரத்தில் ஓர் பறையனை சில வேளாளர்கள்கூடி அடித்து அவன் வஸ்திரங்களை எடுத் தெரிந்துவிட்டதாகப் பிரயாது கொடுத்ததின் பேரில் அவனை அடித்ததையும், அவன் வஸ்திரங்களை எடுத்தெரிந்துவிட்டதையும் அதிகாரி விசாரியாது நீ வழக்கத்திற்கு விரோதமாகக் குடைபிடித்துச்சென்றது தப்பிதமென்று கேசை தள்ளிவிட்டாராம். இதன் காரண காரியம் யாதும் விளங்கவில்லை. தற்காலம் பராயசாதியோர்களால் பறையர்களென்று அழைக்கப்பெற்ற பூர்வ திராவிடர் களுக்கு குடை, செடி முதலிய 18-விருதுகளும்; யானை குதிரைமீது ஊர்வலம் வரும் சுவாதீனமுமிருக்க அவனை குடைபிடிக்கக்கூடாதென்றும், அவனுக்கு வழக்கமில்லாச் செயலென்று கூறியவர்கள் எந்த சாஸ்திர ஆதாரத்தைக் கொண்டும் அநுபவத்தைக் கொண்டும் கூறினரோ விளங்கவில்லை.

அவரவர்கள் சாதி உயர்வையும் தாழ்வையும் அவரவர்கள் வீடுகளிலும் வாசல்களிலும் வழங்க வேண்டுமேயன்றி பிரிட்டிஷ் ஆட்சியின் பயிரங்க வீதிகளிலும், இராஜாங்க சாலைகளிலும் வழங்குதற் செல்லாது. ஆதலின் அநுராஜபுர ஏழைக்குடிகள் இப்பிரையாதை மேலதிகாரிகளாம் ஆங்கில துரை மக்களிடம் கொண்டுபோவதே அழகாகும்.

- 3:41; மார்ச் 23, 1910 -

42. இந்துதேச விவசாய வாசிகளே கேண்மின்

திரிகடுகென்று வழக்கும் சுக்கு, மிளகு, திப்பிலியில் மிளகென்னும் வஸ்துவை நமது தேசத்துப் பயிரிடுங்குடிகளாம் வேளாளர்கள் மிகு உன்னத பயிரிட்டு விருத்திசெய்து அதன் பலனை அனுபவித்து வந்தார்கள்.

மிளகென்னும் வஸ்துவின் குணா குணமும் அதன் பலனும் அசீரணம், அகாலமலம், கள்ள நோய், செவியில் இரத்தம் வடிதல், சோணிதவாதம், குய்யரோகம், பக்கசூலை, இருமல், குளிர் சுரம், பாண்டு, கபம், கிராணி, குன்மம், வாயு, அரோசகம், பயித்தியம், மூலம், சன்னிபாதம், மயக்கம், பிரமேகம் முதலிய கஷ்டரோகங்களை நீக்கி மனுக்களுக்கு மிக்க சுகத்தை அளிக்கக்கூடிய வஸ்துவாயிருந்தபடியால் சகல தேசத்தோரும் நமது தேசத்திற்கு வந்து மிளகை ஏற்றுமதிசெய்து வந்ததுமன்றி நாளது வரையிலேற்றிச் செல்லுகின்றபடியால் பூமியை உழுது பயிரிடும் வேளாளர் ஒவ்வொருவரும் மிளகு பயிரை விருத்திச் செய்ய வேண்டுகிறோம்.

பதார்த்தகுணசிந்தாமணி - மிளகின் குணாகுணம்

சீதசுரம் பாண்டு சிலேத்மங் கிராணி குன்மம் / வாதருசி பித்தமா மூல - மோதுசந்தி
ஆசன வுள்மூல மடமேகங் காசமிவை / நாசங் கறிமிளகினால்.
கோணுகின்ற பக்கவலி குய்யரோகம்வாத
கோணிதன் கழுத்திற்குட் டோன்றுநோய் - காணரிய
காதுநோய் மாதர் குன்மங் காமாலை மந்தமென்றீ
ரேது நோய்காயிருக்கிலீங்கு காய்

பதார்த்தகுண விளக்கம் - மிளகு

குளிர்ந்திடும் சத்திகுன்மம் குலைவலி குருதி மேகம்
அழிந்திடு மிருமவீளை யிளப்புடன் தாகம் நீங்கும்
சுழிந்திடு பீநசங்கள் சொக்கிடு மந்த மேகம்
சொழிந்திடுந்தீபனங்கள் கூறியமிளகினாலே.

- 3:41; மார்ச் 23, 1910 -

43. இந்திரர், இந்திராணி

வினா : ஐயா, தமதரியப் பத்திரிகையில் இந்திரரென்றும், இந்தி ராணியென்றும் அரம்பையென்றும், ஊர்வசியென்றும் வகுத்துள்ளப் பெயர்களைக்கண்டு மிக்க வியப்படைகின்றேன். அதாவது பராயமதஸ்தர்கள் தேவயிந்திரனென்னும் ஓர் வானவர்க்கரசனிருந்தானென்றும், அவன் மனைவி இந்திராணி என்றும், தெய்வலோகத்தில் நாட்டியஞ் செய்வோர் அரம்பை ஊர்வசி என்றுங் கூறுகின்றபடியால் பௌத்த தன்மத்திலும் அப்பெயர் களுண்டோ என்னும் சந்தேகம் தோன்றி அதினந்தரார்த்தத்தை விளக்கி யாட்கொள்ளும்படி வேண்டுகிறேன்.

வீ. இராஜகோபால், வேலூர்.

விடை : அன்பரே, தாம் வினவியுள்ள சங்கை விசேஷித்ததேயாம். அதன் விவரந் தற்கால கற்பனா கதைகளுக்குப் பொருந்தியும், முற்கால சத்திய தன்மத்திற்கு மாறு கொண்டேனிற்கும். ஏனென்பீரேல், தற்காலம் தோன்றியுள்ள கற்பனா கதைகளோ விசாரிணையின்றி விரிந்தும் ஆராய்ச்சியின்றி அழிந்தும் வருகின்றது.

முற்கால சத்தியதன்மம் யாதெனில், சாக்கைய சக்கிரவர்த்தித் திருமகனாகும் சித்தார்த்தியவர்கள் பிறந்து வளர்ந்து வாலவயதிலேயே அதி தீவிர விசாரிணையிலும், ஜீவகாருண்ய போதனையிலும், உலக பாசபற்றற்றலு மாகிய செயலின் ஒழுக்கங்களையும் நாளுக்கு நாள் உணர்ந்த தந்தை மைந்தன் மீது சந்தேகமுற்று வாலவயதிலேயே மலையரசன் புத்திரியை மணம்புரிந்து தன் தேசத்திற்கருகிலுள்ளக் குன்றின்மீது இராஜகிரகமென்னும் சித்திர மாளிகை அமைத்து அதன் உள்ளுக்கு ஒருவரும் பிரவேசிக்கக்கூடாத பொன்மதில், வெள்ளி மதில், இரும்பு மதிலென்னு மும்மதில்களிட்டு அதனுள் தனது மைந்தனையும் மலையரசன் மகளையும் விடுத்து அவர்களை எக்காலும் ஆனந்த சுகனிலையில் வைக்கும்படியானத் தோழிப்பெண்கள் நால்வராம் அரம்பை, ஊர்வசி, மேனகை, திலோர்தமை என்பவர்களை நியமித்து வெளியில் நேரிடும் துக்க சங்கதிகள் உள்ளுக்குப் பிரவேசியாமலும், உள்சங்கதி வெளிக்கேகாமலுஞ் செய்து சுகபோகத்தில் வைத்திருந்தார்.

அவ்வகை ஆனந்தத்திலும், சுக போகத்திலும் வைத்திருந்தவர் தன்மெய் போல தன் தேசவாசிகளும் சுகத்திலிருக்கின்றார்களாவென்று அறிவதற் கெண்ணி ஊர்வலம் வருங்கால் மூப்பு, பிணி, சாக்காடென்னும் முத்தேகங் களைக் கண்டு இத்தகைய துக்கத்திற்காய எதிரடை சுகமிருத்தல் வேண்டும் அதைக்கண்டு உலக மக்களை ஈடேற்றவேண்டுமென்னுங் கருணையால் தனது குமரபருவத்தில் சக்கிரவர்த்திப் பீடத்தையும், மனைவி மைந்தனையு மறந்து துறவுபூண்டு கல்லால விருட்சமாம் அரசமரத்தடியில் உட்கார்ந்து ஐயிந்திரியங்களை வென்று காமனையும் காலனையும் செயித்து பற்றற்ற நிருவாணமுற்றதினால் சித்தார்த்தி திருமகனை ஐயிந்திரியங்களை வென்ற இந்திரரென்றும், அவரது மனைவியும் சங்கத்தைச்சார்ந்து ஐயிந்திரியங்களை வென்றபடியால் இந்திராணி என்றும், உலகிலுள்ள சருவ சீவர்களுக்கும் சத்குருவாகத் தோன்றி சங்கங்களை வகுத்து துக்க நிவர்த்தி உண்டாய் நட்சேத்திரமடையும் வானுலகிற்கு வழிகாட்டியாகவும், தலைவராகவும் விளங்கியதுகொண்டு வானவர்க்கரசனென்றும், தேவேந்திரனென்றும், இராஜேந்திரனென்றும், அவர் மனைவியை இந்திராணி என்றும், அவர் களுக்குத் தோழிப் பெண்களாயிருந்த அரம்பை, ஊர்வசி, மேனகை, திலோர்த் தமை இவர்களையும் அவர்கட் சரிதையுட் கண்டு கொண்டாடிவந்த தேசத்தின் தன்ம சரித்திரங்களாகும் இவைகளே பூர்வத்தி லளித்தப்பெயர்களும், யதார்த்தத்தில் நடடந்தேறிய நடவடிக்கைகளும் எனப்படும்.

- 3:42; மார்ச் 30, 1910 -

44. அன்னிய மதங்களை தூஷித்தல்

வினா : ஐயா, நமது பௌத்த தன்மத்தைச் சார்ந்தோர் அன்னிய மதங்களை தூஷிக்கின்றார்களென்றும், பத்திரிகையிலும் அன்னியர் மதங்களை தூஷிக்கிறார் களென்றும் கூறக் கேழ்விப்பட்டு அவர்கள்பாற் சென்று பௌத்தர்கள் எந்த பத்திரிகையில் எம்மதத்தை எவ்வகையாக தூஷித்திருக்கின்றார்களென்று கேட்டால் நீங்களே பார்த்துக்கொள்ளுங் கோளென்றுபதிற் சொல்லுகிறார் களன்றி இதோ தூஷணமொழியைப் பாருங்கோளென்று காண்பித்தாரில்லை. இவ்வகையாக மொழிந்தார் களென்று கூறினாருமில்லை.

ஆதலின் யாதுவாக்கியங்களைக்கொண்டு இவ்வகை மொழிந்து வருகின்றார்களென்பது அடியேனுக்கு விளங்காததினால் அவற்றை நமதரிய பத்திரிகையில் விளங்கியருளும்படி வேண்டுகிறேன்.

ஓர் தன்மப்பிரியன், சென்னை.

விடை : ஓர் தன்மப்பிரியரென்னும் அன்பரே, தாம் வினவிய சங்கை வீணர்கள் வங்கையேயாம். அதாவது உலகெங்குமுள்ள விவேகிகளாற்

கொண்டாடப்பெற்ற புத்ததன்மமானது அபுத்தர்களின் கூட்டமிகுதியால் சிலகால் மறைந்து மறுபடியும் சத்தியவாசிகளால் வெளிதோன்றி அசத்தியங் களைக் கண்டித்து வருகின்றபடியால் அசத்தியர்களும் அசப்பியர்களும் அவற்றை தூஷணை மொழியென்று தூற்றித் திரிவதுமன்றி சில வீணர்களும் தங்கள் மனம்போனபோக்கில் வரைந்து வருகின்றார்கள்.

பொய்யாகிய மதக்கடை பரப்பி சீவிப்போர் புத்தரையும், புத்த தன்மத்தையும் வீண்மொழி கொண்டு கண்டித்தும், தூஷித்தும் புத்த கங்களெழுதியும் இருப்பது பிரத்தியட்ச காட்சியாயிருக்க பௌத்தர்கள் புறமதத்தை தூஷிக்கின்றார்களென்று கூறுவது அவர்கள் பொய்யாகிய மதக்கட்டில் ஈதோர் கட்டென்றறிந்துக்கொள்ளவும். நீதியும் நெறியும் அமைந்த பிரிட்டிஷ் ஆட்சி எங்கும் நிறைந்துள்ளபடியால் சத்திய நிலையாம் புத்ததன்மம் பரவுவதற்கும், மெய்யொளி வீசுவதற்கும் ஆதாரமாயிருக்கின்றது.

அம்மெய்யொளியால் மதக்கடை பரப்பி சீவிப்போர் பொய்ப்போர்வை யாவும் பெரிதெனவிளங்கி தங்கள் மதத்தோரே தங்கள் பொய்களை கண்டிக்க வெளி தோன்றிவிட்டபடியால் இவைகள் யாவும் பௌத்தர்கள் செயலெனப் புறங்கூறித் திரிகின்றனர்.

பௌத்தர்கள் முன்னிலையில் தோன்றும் அந்நியங்களை நியாய வாயலாகக் கண்டித்து நீதி பகராதிருப்பார்களாயின் பூர்வ பௌத்தர்களை கழுவிலும் கற்காணங்களிலும் ஏற்றி வதைத்ததைப் போல் வதைத்தே யிருப்பார்கள். ஆயினும் அத்தகைய பொய்ப்புராணக் கட்டுக்கதைகளுக் கெல்லாம் பிரிட்டிஷ் நீதியின் செங்கோல் இடங்கொடுக்காதென்றுணர்ந்து மற்ற மதத்தோருக்கு புத்ததன்மத்தின்மீது ஐயீஷ்டமுண்டாமாறு பௌத்தர்கள் மற்ற மதத்தை தூஷிக்கின்றார்களென்று பொய்மொழி கூறி புலம்பு கின்றார்கள். சதாகாலம் பொய்யைச்சொல்லி சீவிப்போர்க்கு ஈதோர் பொய்யாகாவென்று அறிந்துக்கொள்ளுவீராக.

- 3:43; ஏப்ரல் 6, 1910 -

45. நைடதம்

வினா : ஐயா, 9-பிப்ரவரி 1910 புதவாரம் வெளியான தமிழன் பத்திரிகையில் அந்தணர் புசிப்பின் வினாவிற்கு நைடதம் நாட்டுப்படலம்.

மாதர்மென் முல்லையீன்ற / வான்முக யனையமூரல்
கோதறு கருணை தீம்பால் / கொழுங்களி யிவற்றினோடும்
ஆதுலர் யாவரென்ன / வதிர்குரன் முரசிற் சாற்றி
வேதியர்க் கருத்திப்பின்னர் / விருந்தொடு நுகர்வர்மாதோ

என்னும் பாடலால் விடையளித்திருக்கிறீர். நைடதமாகிய நளசக்கர வர்த்தியின் சரித்திரம் உண்மையில் நடந்தக் கதையா? உண்மெ யென்றாலோ, இந்திரனென்னும் தேவனும் இமயனென்னும் தேவனும் அக்கினி என்னும் தேவனும் இருந்தார்களென்றும் இருக்கிறார்களென்றும் சொல்லாமலே விளங்குகிறது. அத்துடன் அவர்களெல்லாம் மனிதரைவிட பொல்லாத துற்குணமுடையவர்கள் என்பதற்கு நைடதமே சாட்சியாக நிற்கிறது.

நைடதம் நளன் தூதுப்படலம் 15-ம் பாடல்

ஐந்தரு நீழல் வேந்தனார் கலிக்கிறைவன் வெய்ய
செந்தழற் கடவுடென்னிற் றிசையுறை தருமனன்னோர்
பைந்தொடி நின்னைவெட்டுப் படைமதன் மகழியியச்
சிந்தனை பிறிதாய் மாழ்கித் தெருமா லெய்துகின்றார்

இப்பாடலால் தேவர்களென்னும் இன்னால்வரையும் விபச்சாரர் களாகக் காட்டுகிறது. ஆனால் காம மோக லோபமென்னும் தீவினைகளை அகற்றி தன்னையரிந்து உண்மெயுற்று திரிகாலங்களையும் உணர்ந்து பிராமணமாம் நற்செயல்வீசி சருவசீவர்களுக்கும் உபகாரியாய் விளங்கி அந்தணரென்றும், பிராமணரென்றும் விவேகிகளால் அழைக்கப்பட்டு சருவசீவர்களும் தேவரென்று வணங்கும் ஏழாவது தோற்றத்தோரே தேவர்களென்றும் அவர்கள் நிறைந்த வியாரங்களே தேவசபையென்றும் இந்திரசபை என்றும் நமது "தமிழனில்" பலமுறையும் வெளியாகி வருகிறது. பல ஞானநூற்களும்

அவ்வாறே புகல்கின்றது. நைடதமோ தேவர்களென் பவர்களை எல்லாம் காமமனோயினால் தகிக்கப்பட்டு கலங்குபவர்களென்று வகைவகையாய்க் கூறுகிறது. அத்தகைய நூலிலிருந்து தாங்கள் உதாரணங் கொடுத்திருப்பதால் இந்நைடத சரித்திரத்தைப்பற்றியும், புத்தருடைய தருமத்தைப்பற்றியும் எமது மனம் பெருத்த சங்கையினால் போராடுகிறது. ஆதலால் மகா கனம்பொருந்திய பத்திராதிபரே, எமது கடிதத்தை தாங்கள் குற்றமாகக் கொள்ளாமல் மன்னித்து தெளிவுபடுத்தி அருளுவீரென்றுந் தங்களுடைய மேலான கனத்தை வேண்டிக்கொள்ளுகிறேன்.

மிஸ்.எம்.வி.கே., செகன்ராபாத்.

விடை : அம்மே தாம் வினவியுள்ள வினா மிக்க விசேஷித்ததேயாம். ஒருவனது குற்றத்தை அன்னியன் சாட்சியைக்கொண்டு ரூபிப்பதிலும் அவன் குடும்பத்தான் சாட்சியைக்கொண்டே ரூபிப்பது மிக்க மேலதாகும். இரும்பின் வளவை நீட்டவேண்டுமாயின் இரும்பை கொண்டே நீட்டுவது சுலபமாகும் அதுபோல், புத்ததன்மமாம் மெய்யறத்தை விளக்குங்கால் சத்திய தன்மங்களையே சாட்சியங் கூறுவதாயின் அசத்தியர்களுக்கு அவைகள் நிலைபெறாவாம். ஆதலின் அவர்களது கற்பனா கதைகளைக்கொண்டே சத்தியதன்மத்தை ரூபித்துள்ளோம்.

அவர்களது கற்பனா கதைகளில் தங்களது அசத்தியங்களை மெய்ப்பிப்பதற்கு சத்தியங்களைக் கொண்டு சிலதை சேர்த்துள்ளார்கள். அதாவது இந்திரனென்னும் பெயரோ புத்ததன்மத்தில் ஐம்புலனை வென்றக் காரணப்பெயர்.

அதன் காரணார்த்த மறியா கபோதிகள் சில கற்பனா கதைகளை வகுத்து குப்பைகாரிக்கு இலட்சுமியென்னும் பெயர் கொடுப்பதுபோல் அசத்தியவாக்கு, அசப்பிய நிலை, துன்மார்க்க குணமமைந்தோனுக்கு இந்திரனெனப் பெயரைக்கொடுத்து புத்ததன்மத்தில் ஒற்றுமெய்க் கேடாம் சாதிபேத மென்பதில்லாத வாழ்க்கை சரிதையைத் தங்கட் கட்டுக்களிற் சேர்த்து பௌத்தர்கள் நம்பத்தக்க ஏதுக்களில் எழுதி வைத்திருக்கின்றார்கள். அவ்வகை எழுதியுள்ள பொய் மெய் வாக்கியங்களில் மெய்யைக் கொண்டே பொய்யை அகற்றுமாறு நைடதத்தை ரூபித்து அந்தணன் புசிப்பை விளக்கியுள்ளோம்.

- 3:44; மார்ச் 30, 1910 -

46. வியாபார சங்கம்

வினா : ஐயா, நமது பத்திரிகையில் மஅ-அ-ஸ்ரீ கி.தே. இந்திரவேல் பிள்ளை, ம-அ-அ-ஸ்ரீ த. தாழமலைப்பிள்ளை, ம-அ-அ-ஸ்ரீ தி.சி. நாராயண சுவாமிப் பிள்ளை அவர்களால் வெளியிட்டுள்ள வியாபார சங்க விஷயமாகத் தங்களுடைய ஆலோசினையும் சம்மந்தித்திருக்குமென்றே நம்பி இதனை எழுத ஆரம்பித்தேன். அதாவது நமது குலமரபினோரின் பூர்வ சரித்திரங்களையும், பேரானந்த ஞானத்தையும் விளக்க அனந்த சோதிரர்களின் அறிவு தெளிந்து ஆனந்தநிலையில் இருக்கின்றார்கள்.

இன்னும் அதற்காதரவாய் வியாபார சங்கமொன்றை நியமித்து மதபேதமின்றி குலமரபினோரை ஒற்றுமெய்க்கும் சீருக்குங் கொண்டு வருவதுடன் சிறுவர்களுக்குக் கல்வியும் கைத்தொழிலும் விருத்திசெய்வதாய்க் கண்டுள்ளபடியால் அதன் ஆரம்பத்தை எவ்விதமாக முடிக்க ஆரம்பித்திருக்கின்றீரோ அதன் சுருக்கத்தை அடியேனுக்கு விளக்குவீரேல் அனந்தங் கையொப்பக்காரர் சேரக்கார்த்திருக்கின்றோம்.

வி. பாலசுந்தரம், வேலூர்.

விடை : அன்பரே, தறகால மெடுத்துள்ள வியாபாரசங்கத்தின் விருத்தி நடை எவ்வாறென்னில், குறித்துள்ள (ஷேர்) ஆயிரம் பெயர் சம்மதமும் கையெழுத்தும் வந்தவுடன் தகுந்த நம்பிக்கையும் நற்குணமுமமைந்த டைரெக்ட்டர்களை நியமித்து இண்டியன் கம்பனீஸ் ஆகட்டின்படி சங்கத்தை ரிஜிஸ்டர் செய்து தக்க பாங்கரை ஏற்படுத்தி ஒவ்வொரு ஷேர்ஹோல்டர்களிடத்தும் அரை ஷேர் வசூல் செய்து 5,000 ரூபாயையும் பாங்கியில் வைத்து

ஐன்பது அறுபது ரூபாயிற்குள் சென்னையின் மத்தியில் ஓர் வாடகை வீடெடுத்து அன்னிய தேசச் சரக்குகளிற் சிலதை தருவிப்பதுடன் (இந்தியன் காண்டிமென்ஸ்) என்னும் மளிகை சரக்குகளையும் தருவித்து வைத்துக் கொண்டு அதே கட்டிடத்தில் தையல் வேலை, தச்சு வேலை, தகர வேலை, பிரம்புவேலை முதலியக் கைத்தொழில் சாமானங்களையும், அத்தொழில் உபாத்திமார்களையும் ஷேர்ஹோல்டர்களின் சிறுவர்தளையும் அதனுள் சேர்த்து வைத்து கருணை தங்கிய நமது கவர்னரவர்களுக்கும் மற்றுமுள்ள துரைமக்களுக்கும் விண்ணப்பமனுப்பி, வியாபார சங்கத்திற்கு வரவழைத்து ஏழைகளுக்குத் தக்க சிறு விருந்தளித்து இவ்வியாபார சங்கத்துக்கும், சிறுவர்களின் கைத்தொழில் விருத்திக்கும் நமது கவர்னரவர்களையே (பேட்ரனாகக்) கேட்டுச் கொள்ளுவதுடன் மற்றுமுள்ள துரைமக்களையும் இச்சங்கத்தின் மீது நோக்கம் வைத்து, ஆதரிக்கும்படியாகக் கேட்டு வணங்கிக் கொண்டு வியாபாரத்தை நடாத்தும்படியான ஆலோசினையிலிருக்கின்றோம்.

இன்னும் இச்சங்கம் நிலைநிற்கத்தக்க ஆலோசினையையும் உப கருத்துகளையும் அளிப்பரேல் அனந்தானந்த வந்தனத்துட னேற்று வியாபார சங்கத்தை விருத்தி செய்யக் கார்த்திருக்கின்றோம். இச்சங்கத்திற்கு ஆயிரம் ஷேர்ஹோல்டர்கள் பெயர்கள் கிடைத்தவுடன் சட்டபுத்தகத்தில் அவர்கள் பெயர்களையுங்கண்டு ரிஜிஸ்டர் செய்து ஷேர்ஹோல்டர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் சட்டபுத்தகம் அநுப்பப்படும்.

- 3:45; ஏப்ரல் 20, 1910 -

47. நாமம்

வினா : ஐயா! இந்துக்களில் சிலர் நெற்றியில் மூன்று நாமமும், சிலர் இரண்டு நாமமும், சிலர் ஒரு நாமமும், சிலர் திருநீறும் வைக்கிறார்களே அதேனென்று அனேகரை கேட்டும் தக்க பதில் கிடைக்கவில்லையாதலால் பிரிய பத்திராதிபர் அவர்கள் இதன் தாற்பரியத்தை அடியேனுக்கு விளக்கி யருளுவதோடு தமது புத்த மதத்திலும் அவ்வித நாமங்களாவது திருநீறாவது நெற்றியில் வைக்கலாமா என்பதையும் தெரிவிக்கக் கோறுகிறேன்.

எல்.பி.சி.ஆரோக்கியசாமி, உமணமாநகர், கோயமுத்தூர்.

விடை : அன்பரே, தாம் வினாவியுள்ள சங்கைகளில் விபூதியின் விவரங்களையும், ஸ்ரீ பாதமாம் நாமத்தின் விவரங்களையும் நமது பத்திரிகையில் முன்பே விளக்கியிருக்கின்றோம். கண்டுகொள்க. சைவம், வைணவம், வேதாந்தம் என்னும் சகலப்பிரிவுகளும் புத்த தன்மத்தினின்றே தோன்றியவை களாகும். சரித்திராதாரங்களின்படி சித்தார்த்தர் தேகதகன சாம்பலே மாபூதியென வழங்கி தற்காலம் விபூதியென்றும் அதனை அணைவோர் சைவரென்றும் வழங்கி வருகின்றார்கள்.

தாமரை ரேகையுள்ள ஸ்ரீபாதமாம் சித்தார்த்தரது பாதத்தையே இராமானுஜர் காலத்தில் விஷ்ணுபாதமென்று கூறி அதனை தாமரை கமலத்தின் மீது நிறுத்தி தங்கள் கூட்டத்தோர் நெற்றியிலும் அணையச்செய்து சத்தியமாம் தன்ம சங்கத்தோரை சங்காக்கி அதனிடபுரத்தில் வைத்து அறவாழியாம் தன்மசக்கரத்தை சக்கரமென அதன் வலபுரத்தில் வைத்து பூசிக்கும் நூதன வழி செய்துவிட்டார்.

வேதாந்திகளோ, புத்ததன்ம திரிபீடமாம் திரிபேதத்தினின்று விளங்கும் உபநிட்சயார்த்தமாகும் வேத அந்தத்தின் ஆதாரங்களையே மாறுபடுத்திக் கொண்டு வேதாந்திகளென வெளிதோன்றி விட்டார்கள்.

புத்ததன்மத்தினின்றே பகவத்கீதை தோன்றியுள்ளதும் சங்கறாச்சாரியின் வேதாந்தந் தோன்றியுள்ளதுமாகியச் செயல்களை அதனதன் உற்பவ காலவரை களைக்கொண்டும் அந்நோர் நூற்களிலுள்ள நீதிபோதங்களைக் கொண்டுமே எளிதில் அறிந்துக்கொள்ளலாம்.

- 4:1; சூன் 15, 1910 -

48. பிள்ளைகளை பயத்தால் வளர்க்க வேண்டுமா நயத்தால் வளர்க்க வேண்டுமா

பிள்ளைகளை வளர்ப்பதற்கு பயமும் நயமும் இரண்டும் வேண்டும். அதாவது, "குரங்கை சீர்திருத்தக் கோலும் பிள்ளைகளை சீர்திருத்தப் பிரம்பும்" வேண்டுமென்னும் பழமொழிக்கிணங்க பூர்வகாலத்தில் பிள்ளைகளை விடியர்காலத்திலெழுப்பி கால் கரஞ் சுத்திசெய்து பௌத்தர்களால் பள்ளிக்கூடங் களென வழங்கிவந்த கலாசாலைகளுக்கு அனுப்புவதியல்பாம்.

அப்பள்ளிக்கூடங்களிலும் முதல்வந்தவனுக்கு ஸ்ரீ என்று அடியில்லா மலும், இரண்டாவது வந்தவனுக்கு ஒரு அடி, மூன்றாவது வந்தவனுக்கு இரண்டடியென்று ஒவ்வொருவரை அடிப்பது வழக்கமாகும் அவ்வடிகளுக்கு பயந்துகொண்டே சிறுவர்கள் அதிகாலையில் எழுந்து பள்ளிக்கூடமேகுவது வழக்கமாகும். அவற்றுள் பிள்ளைகளை பத்துமணிக்கு புசிப்புக்கனுப்பி அரைமணி நேரத்தில் வரச்செய்வதும் மறுபடியும் இரண்டு மணிக்குப் புசிப்புக்கனுப்பி வரச் செய்வதும் மாலை ஆறுமணிக்குப் பள்ளிக்கூடம் விடுவது வழக்கமாகும். இத்தகைய விடுக்கப்போதனைகளினால் பிள்ளை களுக்குக் கெட்ட சாவகாச சேர்க்கைகளில்லாமலும், பெரியோர்களின் விவகாரங்கள் ஒன்றுந் தெரியாமலும் இலக்கண விலக்கிய நூற்களில் சிந்தை யுடையவர்களாகியும் நீதிநூற் பழக்கமுடையவர்களாகியும் ஓலைச்சுவடியைக் கையிலேந்தி வாசிக்க முயலுமென்று துணிந்து கூறலாம்.

வித்தையிலும் புத்தியிலும் பொருள் சம்பாதிக்கும் அறிவு விருத்தியிற் செல்லாது பொய்யாலும், வஞ்சினத்தாலும், குடிகெடுப்பாலும் பொருளை சம்பாதிக்கும் பேரவா மிகுத்தப் பெரியோர்கள்பால் பழகும் சிறியோர்களும் அச்செயலைப் பின்பற்றி உலக சீவர்களுக்கு ஒருபகாரமுமின்றி உங்கள் வீட்டிற்கு வந்தால் என்னகொடுக்கின்றீர்கள், எங்கள் வீட்டிற்கு வந்தால் என்னக் கொண்டுவருவீர்களென்னும் சுயப்பிரயோசன சோம்பேரிகளாகி சுகசீர் கெட்டுப்போகின்றார்கள்.

இத்தியாதி கேடுகளையும் உணர்ந்துவரும் பெரியோர்கள் தாங்களே நீதிநெறியில் நிலைத்து சகல சீவர்களுக்கும் உபகாரிகளாக விளங்குவார் களாயின் தங்கள் சிறுவர்களும் அவ்வழி நிலைத்து சுகவாழ்க்கைப் பெறுவார்கள். அங்ஙனமின்றி பெரியோர்கள் வாழ்க்கையினிடத்தே துற்செயலைப் பெருக்கி வருகின்றவர்கள் தங்கள் சிறியோர்கள் வெளிசேர்க்கையால் கெட்டுப் போகின்றார்களென்பது வீண் வழக்கேயாகும்.

வெளி மக்களுக்கெல்லாம் சுயப்பிரயோசனச் சோம்பேரித் தொழிலைக் கற்பித்து வைத்தவர்கள் தாங்களா அன்னியர்களாவென்று ஆராய்வார் களாயின் தங்கள் சிறுவர்கள் தங்கட் செயலைக் கொண்டே கெட்டழிகின்றார் களென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும்.

பெரியோர்கள் வித்தையிலும், புத்தியிலும், ஈகையிலும், சன்மார்க் கத்திலும் நிலைத்து சிறியோர்களை நயத்திலும் பயத்திலும் வளர்க்க வேண்டியதே வளர்ப்பாகும். சிறுவயதில் வளைக்கப்படா மூங்கில் பருத்து வளர்ந்தபின் வளையாதென்பது துணிபாம்.

- 4:5; சூலை 13, 1910 -

49. புகையிலை பிடித்தல்

வினா : ஐயா, நமது சாதிபேதமில்லா திராவிடர்களுக்குள்ளும், சாதி பேதம் உள்ள திராவிடர்களுக்குள்ளும் சிலர் பிரேதமெடுத்து சுடலைக்குச் சென்று பிரேதக் கிரியை முடிவுபெற்றவுடன் புகையிலையேனும் அல்லது சுருட்டேனுங் கொடுக்கின்றார்களே அவை யாதுக்கு. இத்தகைய வழக்கம் பூர்வமுதல் நடைபெற்றதா அன்றேல் நூதன வழக்கமா அவற்றை அடியேனுக்கு விளக்கித் தெளிவிக்க வேண்டுகிறேன்.

வீ. மாசிலாமணி சென்னை.

விடை : அன்பரே, தாம் வினவியுள்ள புகையிலையின் பழக்கம் நூதன மேயாம். பூர்வகாலத்தில் சிலர் புகைபிடித்தாரென்னும் இலை கஜாயிலை

யேயன்றி இப் புகையிலையன்று. தற்கால வழங்கும் புகையிலையோவென்னில் அக்பர் என்னும் ஓர் மகமதிய பெரியோன் காலத்தில் கண்டுபிடித்து நாளது வரையில் வழங்கி வருகிறார்கள்.

அதாவது அக்பர் காலத்தில் அவரது நாட்டில் உவாந்தி பேதிகண்டு குடிகள் அல்லலடைந்த போது தற்காலம் வழங்கும் புகையிலையின் செடியைக் கொளித்தி புகையவிட்டதாகவும் அப்புகைப் பரவி நாடெங்கும் கண்டுள்ள உவாந்திபேதி தணிந்துவிட்டதாகவும் அதையே அநுபவத்திற்குக் கொண்டு வந்தவர்கள் விஷபேதிகண்ட பிரேதங்கள் சுடலைக்குக் கொண்டுபோம்போது கூடவருகிறவர்களுக்கு அவ்வியாதி தொடராவண்ணம் புகையிலை கொடுத்து சுருட்டி புகைபிடிக்கும்படி செய்வதும் சிலர் சுருட்டே கொடுத்து பிடிக்கச் செய்ததும் வழக்கமாயிருந்ததாம். அதை அநுசரித்த வழக்கத்தை தற்காலம் எந்த நோய் கண்டிருந்த காலத்திலும் அநுசரித்து வருகின்றார்கள்.

- 4:5; சூலை 13, 1910 -

50. ஏழைகளின் சுகத்தை நாடுதலே கனவான்களுக்கு சுகந்தரும்

ஓர் தேசத்தில் ஏழைக்குடிகள் வாசஞ்செய்யும் இடங்களில் நிலசுத்த மின்றி நீர்வசதி குன்றியிருக்குமாயின் குடிகளுக்கு எவ்விதத்தேனும் விஷரோ கங்கட் பரவி வாதைப்படுத்துமென்பது திண்ணம்.

அத்தகைய ரோகபீடித விஷக்காற்றானது சகல சுகமும் பெற்றுள்ளக் கனவான்களையும் விடப்போகிறதில்லை. ஆதலின் கனவான்கள் தங்களது சுத்திகரிப்பை முந்தி தேடுவதுடன் ஏழைகளின் சுத்தத்தை முந்தி நோக்குவதே இதமாகும்.

ஈதன்றி கனவான்கள் சகலசுகமும் அநுபவிப்பதற்கு ஏழைகள் ஏவலே மிக்க ஆதாரமாகும். அத்தகைய ஏழைகளை அரைவயிற்றுக்கஞ்சேனும் சரி வரக்கொடாது துன்பப்படுத்தி ஏவல் வாங்குவதாயின் ஏவலும் வலுபெருமோ, தாங்களும் சுகமடைவர்களோ, ஒருக்காலுமில்லை. ஆதலின் ஏழைகளுக்குப் பசிதீர வன்னமளித்து ஏவல்கொள்ளுவதே செய்தொழில் விருத்தியும் கனவான்களுக்கு சுகத்தையுந் தரும்.

கனவான்களெனத் தோன்றியும் கருணையும் பட்சமுமற்றவர்களாய் தங்கள் சுகத்தையும் தங்கள் அந்தஸ்தையும் பார்த்துக்கொண்டிருப்பவர்களுக்கு நீடித்த வாழ்க்கையும் நீடித்த சுகமும் நிலையாவென்பது அனுபவமாகும்.

உலகத்திற் கனவான்களெனத் தோன்றுவது ஓர் புண்ணிய பலனாகும். அத்தகையப் புண்ணியத்தைக் கனவான்களாகத் தோன்றியப்பின்னரும் பெருக்கிக்கொண்டே வருவார்களாயின் மேலுமேலும் சுக வாழ்க்கைப் பெறுவார்கள்.

அங்ஙனமின்றி சொற்பப் புண்ணிய வசத்தால் பொருள் கிடைத்தும் அப்பொருளைப் புண்ணிய வசத்திற் செலவிடாது ஏழைகளை வஞ்சி ப்பதாயின் உள்ளப்பொருளும் அழிந்து கனவான்கள் என்னும் பெயரு மொழிந்து சுகக்குறைவுண்டாம். சுகக்குறைவு நேராது என்றென்றும் சுகத்தை விரும்புவோர் தங்கள் கண்கள் முன்னிலையிற் காணும் ஏழைகளின் சீரையும் சுகத்தையும் கருதல் வேண்டும்.

ஏழைகளை இன்னும் ஏழைகளாகக் கெடுத்து, சீரழிக்க முயல்கின்ற வர்கள் பின் பலனை அவரவர்கள் சந்ததிகளைக்கொண்டே தெரிந்துக் கொள்ளலாம். அவரவர்கள் செய்துவரும் நற்கருமத்தால் நல்லசுகம் பெறுவர். துற்கருமத்தால் கெட்ட பலன் பெறுவர்.

தாங்களே கனவான்களாக வாழ்கவேண்டும் ஏனையோர் சுகயீன மடையவேண்டுமென்று எண்ணுவோரும், தாங்களே உயர்ந்த சாதியென்று சொல்லிக்கொண்டு வாழ்தல் வேண்டும். ஏனையோரெல்லாம் தாழ்ந்த சாதியாகத் தாழவேண்டுமென்று எண்ணுவோரும் கூடிய சீக்கிரம் தாங் களெண்ணும் தாழ்ந்த நிலைக்கே வந்து சேருவார்கள் ஆதலின் "எண்ண மெல்லாம் பழகாமெயாலே" எனும் பழமொழிக்கிணங்க எண்ணியெண்ணி ஏழைகளைக் கெடுத்தும், லஞ்சப் பரிமுதல்வாங்க அடுத்தும் கனவான்களென வெளி தோன்றுவோர் ஒருக்காலும் சுகச்சீர் பெறார்களென்பது சத்தியமாகவும்,

தங்களைப்போல் ஏழைகளை நேசித்தும் தங்களைப்போல் ஏழைகளும் சுகம்பெறக் கருதுவோர் என்றும் சுகம்பெறுவார்களென்பது நித்தியமாகவும் விளங்கும். அதன் அநுபவக்காட்சியோவென்னில் நமது தேசத்தையும் நம்மெயும் ஆண்டுவரும் ஆங்கிலேயர்கள் தங்களை அடுத்த ஏழைகள் யாவரும் சுகச்சீர் பெற்று தங்களைப்போல் வித்தையிலும் புத்தியிலும் கனமடையச் செய்து வருவதினால் தாங்கள் வித்தையிலும் புத்தியிலும் செல்வத்திலும் விருத்திபெற்று பத்து ஏவலாளர் பதினைந்து ஏவலாளர் வைத்துக்கொண்டு சுகானந்தத் திலிருப்பதுடன் தங்கடங்கள் சந்ததியோரும் மேலுமேலும் பெருகி சுகச்சீர் பெற்று சென்ற இடமெங்கும் சிறப்புடைந்து வருகின்றார்கள். அவர்களது செயலையும் அநுபவத்தையும் கண்டேனும் நம்தேயத்தோர்கள் கனமடைவார்களென்று நம்புகிறோம்.

- 4:5; சூலை 13, 1910 -

51. இந்தியர்களுக்கு சமரச வாட்சியும் பெரும் உத்தியோகமும் வேண்டுமாம்

அவ்வகை வேண்டுவது நியாயமா அந்நியாயமா என்பதை அவரவர் களே ஆலோசிக்க வேண்டுவது அழகாகும். அவ்வகை ஆலோசியாது வேண்டுவது சுயநலமென்றே கூறவேண்டிவரும்.

அதாவது ஐரோப்பியர்களைப்போல் தங்களுக்கும் சமரசவாட்சியும் பெருத்த உத்தியோகங்களும் வேண்டுமென்போர் தங்களுடன் வாசஞ்செய்யும் இந்தியர்களுக்கு இந்தியர்கள் சமரசவாட்சியும் பெரும் உத்தியோகமும் பெறவாயினும் கொடுக்கவாயினும் மனம் சம்மதிக்கின்றார்களா, இல்லையே.

அவர்கள் சிறியசாதியார், 'எங்களுடன் உட்காரப்படாது, எங்களைப் போல் அவர்கள் மேல்பதவிக்கும் வரப்படாது நாங்கள் பெரியசாதியார், சகல ஆட்சியும் நாங்களே பெறல் வேண்டும், சகல சுகமும் நாங்களே அநுபவித்தல் வேண்டும் எனச் சொல்லி ஆறுகோடி மக்களை அலக்கழித்து வரும்படியான வர்கள் ஐரோப்பியர்களைப்போல் தங்களுக்கும் ஆட்சி வேண்டும் தங்களுக்கும் பெரும் உத்தியோகங்கள் வேண்டுமென்றால் நியாயமாமோ அந்நியாயமேயாம்.

காரணம் இந்திரதேச பௌத்தர்கள் தொழிலுக்கென்று வகுத்திருந்த பெயர்களை சாதிகளெனப் பொய்யாக ஏற்படுத்திக்கொண்டு தங்கள் பொய்யானக் கட்டுக் கதைகளுக்கு எதிரடையாயிருந்த பௌத்தர்கள் யாவரையுந் தாழ்ந்தசாதிகளென வகுத்து தங்களைப் பெரிய சாதிகளென உயர்த்திக் கொண்டு ஆயிர வருடங்களுக்கு முன்பு இந்திரதேசத்திற் குடிவந்தபோது பிச்சையிரந் துண்டு தற்காலமும் பிச்சையிரந்துண்பவர்களிற் சிலர்களும் மற்றுஞ் சொற்ப விவேகிகளும் ஐரோப்பியர்களைப்போல் சம ஆட்சியும் பெரும் உத்தியோகமும் பெற விரும்புவார்களாயின் இத்தேசத்துப் பூர்வக் குடிகளும் சகல சுகானுபவங்களை அநுபவித்தவர்களும் வித்தை, புத்தி, ஈகை, சன்மார்க்கத்தில் நிறைந்தவர்களுமான சாதிபேதமற்ற திராவிடர் களுக்கு அச்சுதந்திர மில்லாமற்போமோ, ஒருக்காலும் போகாது. பிரிட்டிஷ் ராஜநீதியும் தன்னவரன்னியரென்றும், அன்னியருக் கன்னியரென்றும் ஆமோ, ஒருக்காலும் ஆகாது. பொய்யாகியத் தந்திரங்களால் தங்களைப்பெரிய சாதிகளென ஏற்படுத்திக்கொண்டு தங்களுக்கு எதிரிகளாம் பௌத்தர்களைத் தாழ்ந்த சாதிகளென வகுத்துக்கொண்டுள்ளவர்கள் தங்கள் மனசாட்சிக்கு விரோதமில்லாமல் நமது சுயப்பிரயோசனத்திற்காக மேன்மக்களாம் பௌத்தர்களைத் தாழ்ந்த சாதிகளென வகுத்துத் தலையெடுக்காமல் நசித்துவந்தோம், இன்னமும் இந்த பிரிட்டிஷ் ஆட்சியில் நசித்துக்கொண்டு வருவோமாயின் நமது பொய்யாகிய சாதிக்கட்டுப்பாடுகளும் சமயக் கட்டுப்பாடுகளும் "உப்பிருந்த பாண்டம் தன்னிற்றானே உடைவதுபோல்" உடைந்து போகுமென்றுணர்ந்து தங்கள் பொய்க் கட்டுப்பாடுகளால் தாழ்த்தி நாசமடையச்செய்துள்ள ஆறுகோடி மக்களையும் பழய நிலைக்குக் கொண்டு வந்து சகல சுகமும் அநுபவிக்கச் செய்வார்களாயின் இவர்கள் கோறும் ஆட்சியையும் பெரும் உத்தியோகங்களையும் பிரிட்டிஷ் ஆட்சியாரளித்து

சுகம் பெறச்செய்வார்கள். அங்ஙனமின்றி தங்கள் சுயப்பிரயோசனங்களுக்காகப் பொய்யாகிய சாதிக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி தாழ்ந்தசாதி யென வகுத்துள்ளவர்களை இன்னுந் தாழ்ந்த சாதிகளாக்க எண்ணங் கொள்ளுவார்களாயின் இவர்கள் எடுக்கும் விஷயங்கள் யாவும் முடிவு பெறாது தங்கள் பூர்வநிலைக்கே வருவார்களென்பது சத்தியம் சத்தியமேயாம்.

- 4:6; சூலை 20, 1910 -

52. கடவுள் இல்லை

வினா : பகவன் கௌதம புத்தர் பரிநிப்பாணம் அடையுமுன்னர் தன்னிடமிருந்த மக்களை அழைத்து என்னைக் கும்பிடாதீர்கள் நான் கடவுளல்ல. கடவுள் ஒருவரிருக்கிறார். அவரில்லாது உலகம் நடவாதெனத் திருவுளம்பற்றிய தாகவும், உலகத்தின் நன்மையை நாடி பாடுபட்ட பகவன் மொழிந்த தொருவரிருக்கத் தற்காலந் தோன்றியுள்ள பௌத்தர்கள் கடவுளில்லை என்று சொல்வதோடு நோட்டீஸ்கள் போட்டுப் பிரசங்கஞ் செய்துவருகிறார்களென்றும் ஒரு பிரசங்கியாரால் புகலக் கேட்டு மெத்த சந்தேகத்தை உடையவனானேன். ஆகையால் எனதன்புள்ள ஆசிரியரே எம்மீதுச் சினங்கொள்ளாமல் பகவன் திருவாய்மொழியின் அந்தரார்த்தத்தையும் பௌத்தர்கள் கடவுளில்லை எனுஞ் சூன்யர்களா என்பதின் உட்பொருளையும் இப்பத்திரிகை வாயிலால் நுலாதார நுட்பா யெடுத்தோதத் தம் திரு வடிகளைப் பணிகின்றனம்.

பி.எஸ். அச்சுதானந்தம், திருப்பத்தூர்.

விடை : அன்பரே, தாம் வினாவியுள்ள சங்கை ஆதாரமற்றச் சங்கையேயாம். அதாவது "புத்தபிரான் பரிநிருவாணமடையுங்கால் நான் கடவுளல்ல என்னைக் கடவுளென்று கூப்பிடாதீர்கள், கடவுள் ஒருவரிருக்கின்றார்" எனக் கூறியதுமில்லை, அத்தகைய மொழிகளை வரைந்துள்ள நூலுங் கிடையாது. கடவுள், ஈசன், திருமால், சிவன், பிரமன் என்னும் மொழிகள் யாவும் புத்தபிரான் பரிநிருவாணமுற்ற நெடுங்காலங்களுக்குப் பின்னர் புத்தசங்கத்தோர்களால் வரைந்துள்ளவைகளாதலின் புத்த பிரான் காலத்தில் கடவுளென்னும் மொழி தோன்றியதுங் கிடையாது, எந்த சாஸ்திரிகளும் அவற்றை வற்புறுத்திக் கூறியதுங்கிடையாது. ஆதலின் தற்போதவற்றைக் கூறிய பெரியோர் அவர் கண்ட நூலையும் அதன் பெயரையும் அத்தியாயத் தையும் வரைவரேல் அதன் காரணகருத்தைக் கூறுவாம்.

- 4:10; ஆகஸ்ட் 17, 1910 -

53. கசாய்க் கடைகள்

வினா : திருக்குறள்

தினற்பொருட்டாற் கொள்ளாதுலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில்

இருபத்தாறாம் அதிகாரம் புலான் மறுத்தல் ஐந்தாம் குறளுரை ஊனை (மாமிஷத்தை) வாங்குவாரில்லாவிடில் விற்பாரில்லை என்று காணப்படுகிறது. இதினால் தெய்வப்புலவர் திருவள்ளுவநாயனார் குறளியற்றுவதற்கு முந்தியே கசாய் கடைக ளிருந்திருக்குமதினால் தான் வற்புறுத்தியிருக்கிறார்ரென்றும், கசாய் கடைகள் இல்லாமலிருந்தால் அக்குறள் செப்புதற்கிடமில்லை என்றுஞ் சிலர் புகல்வதோடு பௌத்தர்கள் காலத்திலும் கசாய் கடைகள் இருந்ததென ஸ்தாபிக்கின்றனர். வேறு சிலர் அஞ்ஞானிகள் தோன்றிக் கசாய்கடைகள் ஏற்படுத்தியபின் குறளியற்றியிருக்கிற தென்கின்றனர். மற்றுஞ் சிலர் பொய் புராண மூட்டை வியாபாரிகள் குறளின் மகத்துவத்தைக் கெடுக்க வேண்டுமெனும் எண்ணத்தால் நூதனமாய்ச் சேர்த்தச்சிட்டிருப்பார்களெனப் புகல்கின்றனர். ஆகையால் எம்மீதுப் பெரிதுவந்து குறளின் உரை பிசகா? நூதனப் பாட்டா? என்பதையும், நாயனார் மூலக்கருத்தையும் விவரிக்க வேண்டுகிறேன்.

ஆர். துரைசாமி உபாஸகன், மாரிகுப்பம்.

விடை : அன்பரே, தாம் வினவியுள்ள சங்கை மிக்க விசேஷித்ததேயாம். அதாவது, நாயனாரியற்றியுள்ளத் திரிக்குறள் மக்கள் சீர்திருத்த வழி நூலாகும்.

அத்தகைய சீர்திருத்தச் செயல்களானது செல்லல், நிகழல், வருங்கால மென்னும் முக்காலங்களையும் பொருந்தியதேயன்றி செல்காலத்தைமட்டிலுங் குறித்ததன்று.

புத்தபிரான் தனது வாலவயதிலேயே மாமிஷம் புசிப்பது கொடிதென்று தன் தந்தையிடம் வாதிட்டிருக்கின்றார். ஆதலின் மாமிஷம் புசிப்போர்கள் செல்காலத்திலும் நிகழ்காலத்திலுமிருந்தே யிருப்பார்கள். அதுகண்டே மீன் வாணிபரென்றும், புலைவாணிபரென்றும் சரித்திரங்களில் வரைந்திருக் கின்றார்கள். அவர்களைக் கண்டித்து சீவகாருண்யத்தைப் பெருக்குவதற்காக பௌத்த சாஸ்திரிகள் பௌத்த அரசர்களை அடுத்து கொலையையும் புலையையும் மறுக்கத்தக்க மார்க்கங்களை நிலைக்கச்செய்தார்கள். அம் முயற்சியால் கொலையும் புலையுந் தவிர்த்து சீவகாருண்யம் பரவியிருந்தது.

அவற்றிற்குப் பகரமாய் ஆரியரென்றும், மிலேச்சரென்றும் அழைக்கப் பெற்ற ஓர் கூட்டத்தார் இத்தேசத்திற் குடியேறி தாங்கள் தங்கள் தேசத்தில் புசித்திருந்த மாமிஷ பட்சணங்களைப் புசிப்பதற்கு ஏதுவில்லாமல் பௌத்தர் களுக்குத் தெரியாது மறைவில் அக்கினியை வளர்த்தி ஆடுகளையும், மாடுக ளையும், குதிரைகளையும் சுட்டுத் தின்றிருக்கின்றார்கள். அவைகளையும் அறிந்த பௌத்தர்கள் மிலேச்சர்களை அடித்துத் துறத்தி சீவகாருண்யத்தைப் போதித்ததின்பேரில் உயிருடன் நெருப்பிலிட்டுக் கொன்று தின்னும் மாமிஷ இச்சையை ஒழித்து சீர்பெற்றார்கள். ஆதலின் பௌத்ததன்மம் பரவியிருந்த இடமெங்கும் கொலை புலை அகன்றும் பௌத்ததன்மம் இல்லா இடங்களில் கொலையும் புலையுமிருந்தே இருக்கலாம். அதுகொண்டே வழி நூலாசிரியர் மாமிஷம் புசிப்போ ரிராவிடில் அதனை விற்போ னிரானெனத் துணிந்து கூறியுள்ளார்.

- 4:10; ஆகஸ்ட் 17, 1910 -

54. எல்லாமுடையான் குருவாதலும், ஏதுமில்லாதான் குருவாதலும்

எல்லாம் உடையானென்னும் சக்கிரவர்த்தி பீடமும் இரதகஜதுரக பதாதிகள் நிறைவும் தனசம்பத்து தானிய சம்பத்தின் பெருக்கும் மனைவி மைந்தன் சுகமும் அரசாங்கத்தோ ரன்புமளாவிய பெரியோன் சகலவற்றையும் வெறுத்து வெளியேறி மண்ணாசையற்று பெண்ணாசையற்று பொன்னாசை யற்று பற்றுக்களை அறுத்துபிறவி துக்கம் பிணி துக்கம் மூப்பு துக்கம் மரண துக்கம் நான்கையும் போக்கித் தன்னிற்றானே கண்டடைந்த சுகவாரி நிலையாம் பரிபூரண சுகத்தை உலகிற்றோன்றியுள்ள சகல மனுக்களுக்கும் போதிக்குமாறு சக்கரவாளமெங்கணும் சங்கங்களை நாட்டி அறத்தை ஊட்டிய ஆச்சாரியனாம் ஜகத்குருவாக விளங்கிய புத்தபிரான் தனது கருணா பற்றினால் உலகெங்குஞ் சுற்றி சங்கங்களுக்கு அறத்தைப் போதித்த ஆச்சாரியாகிய சங்கராச்சாரி என்னும் பெயரும் பெற்று ஆயிரநாமங்களால் உலகிலுள்ள சகல மனுக்களுங் கொண்டாடி வந்ததுமன்றி தற்காலம் உலகிலுள்ள மனுமக்களில் அரையே அரிக்கால்பாகம் சங்க அறர் போதனைக் குட்பட்ட பௌத்தர்களே விளங்குகின்றார்கள்.

சங்க அற ஆச்சாரியாம் புத்தபிரான் ஒருவரே எல்லாமுடைய தலைத் தார்வேந்தராயிருந்தும் அவற்றைத் துறந்து மநுமக்களை ஈடேற்ற வேண்டு மென்னுங் கருணையின் மிகுதியால் கரத்தில் ஓடேந்தி கிடைத்த வன்னத்தைப் புசித்து ஆடை சுகம், ஆபரண சுகம், சயன சுகம் அறு சுவை சுகம் யாவையும் வெறுத்து சகல மனுக்களுக்கும் மெய்ப்பொருளுரைத்து தன்சுகங் கருதாது பிறர் சுகங் கருதி ஜகத்குரு சங்க அற ஆச்சாரியராக விளங்கினார்.

தற்காலம் அத்தகைய சங்கங்களும் இத்தேசத்திலில்லை. அச்சங்கங் களுக்கு அறத்தைப் போதிக்கும் ஆச்சாரியர்களுமில்லை. ஆதலின் ஜகத்குரு சங்கராச்சாரியின் வரிசையோர்களுமில்லை. சங்கங்களுக்கு ஊட்டிய அறமாம் சத்தியதருமமு மாறியுள்ளதென்பது துணிபு.

சங்க மித்தர் சங்க தருமர் சங்க அறர், என்னுங் காரணப்பெயரை உடைத்தானவரும் அதன் போதனாசிரியருமானவரே சங்கராச்சாரியாவர். அவரது மெய்யறத்தைப் பின்பற்றி மற்றப் பற்றுக்களையற்று கரத்திலோடேந்தி பிச்சையிறந் துண்டு இவன் பெரிய சாதியோன், அவன் சிறிய சாதியோன்,

அவன் தனவான், இவன் ஏழை, அவன் பிணியாளன், இவன் சுகதேகியென்னும் பேதாபேதம் பாராது மனுக்களின் ஒழுக்கப்பலனைக் கருதி சத்திய தன்மத்தைப் போதிப்பவர்களே சங்க அற ஆச்சாரியாரவர்களின் வரிசையோராவர்.

அங்ஙனமின்றி ஏது சம்பத்துமில்லா யாசகர்களும், யாதொரு தொழிலுமில்லா சோம்பேரிகளும் மக்களைப் போஷிக்கப் போதிக்கும் யாதொரு வித்தையு மில்லா விவேக சூன்யர்களும், தன்கிராமந் தவிர பக்கத்து கிராமத்திற்குத் தெரியா பாமரர்களும், தன்பாஷையன்றி ஏனைய பாஷையறியா ஏமாளிகளும் யானை ஏறல் வேண்டும் பல்லக்கேறல் வேண்டு மென்னுந் தன்சுகங் கருதும் டம்பாச்சாரிகளும் போகுமிடமெல்லாம் பணம் சேகரிக்க வேண்டுமென்னும் பொருளாசைக்காரர்களுமாகிய ஏதுமில்லா தோர் உலக குருவென்றும் மெய்யறம் நிறைந்த சத்திய சங்கங்களே இத் தேசத்திலில்லாதிருக்க சங்க அற ஆச்சாரிகளென்று வெளிதோன்றுவது கிளாக்கனியை திராட்சக் கனியென்றும் நரிக்குட்டியை மான்குட்டியென்றுங் கூறுவதற் கொக்கும். இதனால் எல்லா முடையான் குருவாகத்தோன்றிய சிறப்பை எல்லாமில்லான் குருவென்று தோன்றி பொருள் சம்பாதிப்பது தங்கள் சுயசீவனத்திற்காக மெய்க்குருவின் பெயரையும் மெய்யறத்தையுங் கெடுப்பதேயாம்.

- 4:10; ஆகஸ்ட் 17, 1910 -

55. கிறிஸ்தவர்களுக்கு ஜாதியுண்டா

வினா : ஐயா, செப்டம்பர் மாதம் வெளியான "நல்லாயன்" பத்திரிகையில் ஜனத்தொகைக் கணக்கெடுக்கவரும் சென்ஸஸ் உத்தியோ கஸ்தர்கள் உங்கள் மதத்தைக் கேட்கையில் "கத்தோலிக்கு மதம்" என்றும், ஜாதியைக் கேட்பார்களானால் உங்கள் உங்களுடைய ஜாதியையும் சொல்லுங்கள் என்று வரைந்திருக்கிறது.

ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் வெளியான "திரு இருதயத் தூதன்" பத்திரிகையில், "பலஸ்தீனுக்கும் ஐரோப்பாவுக்கும் திருயாத்திரையாய்ச் சென்ற இரண்டு இந்தியர்கள்" என்ற தலைப்பின் கீழ் "உரோமை நகர் வத்திக்கான் அரண்மனையில் துரைசாமி ஐயர் கிறிஸ்துவ பிராமணர்களின் தொகை அதிகரிக்கும் படியாகவும், அவர்களின் குடும்பங்கள் செழித்திருக்கும் படியாகவும் அர்ச். பாப்பானவர் ஆசீர்வதிக்கும்படி மன்றாடினார்" எனக் கண்டிருக்கிறது. இதனால் எனக்குத் தோன்றிய சந்தேகங்களாவன: முதலாவது கிறிஸ்தவர்களுக்கு ஜாதியுண்டா? இந்து மதத்திற்கே சொந்த பொருளாயுள்ள ஜாதியைக் கிறிஸ்தவர்கள் அநுசரிக்கலாமா? அப்படி அநுசரிப்பவர்கள் கிறிஸ்தவர்களாவார்களா? இரண்டாவது, பிராமணனா இருந்தவன் கிறிஸ்த வனானபோது அவனைப் பிராமணனென்று அழைக்கலாமா, அப்படிப் பட்டவன் பூணூல் தரித்துக்கொள்ளலாமா? தன் குடும்பங்கள் செழித்திருக்க பாப்பாண்டவரின் ஆசீர்வாதத்தைக் கேட்டவர்கள் மற்ற குடும்பங்களை நினையாமற் போனதென்னை? ஜாதி கிறிஸ்தவர்களாகிய இந்த இரண்டு யாத்திரைக்காரரும் பலஸ்தீனாவிலும் ஐரோப்பாவிலும் யாரிடத்தில் போஜனஞ் செய்திருப்பார்கள்? அப்போது ஜாதி கெடவில்லையா?

பி.கே., சென்னை.

விடை : அதாவது ஓர் இந்து மதத்தைச்சார்ந்தவன் கிறிஸ்தவனாகி விடுவானாயின் அவன் முன்பு அநுசரித்துவந்த சாதியாசாரமும், சமயவாசார மும் அன்றே ஒழிந்துவிட்டதென்பது திண்ணம். அங்ஙனமின்றி சாதியா சாரமும், சமயவாசாரமும் விடுவதில்லையென்றால் அவனுக்குக் கிறிஸ்தவ னென்னும் பெயர் பொருந்தவே பொருந்தாது. அல்லது சாதியாசாரத்தை மட்டிலும் ஒழிக்காது சமயாசாரத்தை ஒழித்த கிறிஸ்தவனென்பாராயின் சமயத்திற்குக் கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டும், சாதிக்கு மநுதன்மசாஸ்திரத் தையும் பிராமணனையும் பற்றிக்கொண்டுள்ளவராதலின், அவன் முழுக் கிறிஸ்தவராகமாட்டார். அரைக் கிறிஸ்துவரே யாவர். அதாவது, மநுதன்ம சாஸ்திரக்கட்டுப்பாடும் வேண்டும் சாதியாசாரமும் வேண்டுமென்பதில் அரை இந்துவாகவும், கிறிஸ்துவமத ஆசாரமும் வேண்டுமென்பதில் அரைக் கிறிஸ்தவனாகவும் விளங்குகின்றார்.

"கீற்றில் வேண்டாம் சாற்றில் வாருங்கோ" ளென்னும் பழமொழிக் கிணங்க நான் கிறிஸ்தவனாகிவிட்டேன் இந்துக்களது மதாசாரம் வேண்டாம் சாதியாசாரமட்டும் வேண்டுமென்பதினால் அவர் சாதியில் இந்துவும், மதத்தில் கிறிஸ்தவனுமாயிருக்கின்றார். ஆதலின் அவரை அரைக்கிறிஸ்தவ னென்பதே துணிபாம்.

ஓர் சாதியாசாரமுள்ள இந்து மகம்மதுமதத்தைச் சார்வாராயின் அன்றே அவர் முழு மகமதியனாகிவிடுகின்றார். காரணம், அவர் தன்னைப் பிராமண மகமதியனென்றாயினும், செட்டி மகமதியனென்றாயினும் கூற மாட்டார். தன்னை மகமதியனென்றே கூறுவார். அதாவது, அவர் இந்து வாயிருக்குங்கால் அநுசரித்துவந்த சாதியாசாரம், சமயாசாரம் இரண்டையும் ஒழித்து மகமதியனானபடியால் யதார்த்தத்தில் அவர் தன்னை முழு மகமதியனென்றே கூறுவதுடன் அம்மத வைராக்கியத்திலும் குரு விசுவாசத்திலும் கூட்ட ஒற்றுமெயிலும் நிலைத்து அவர்களுடன் பொருந்தி வாழ்கின்றார். இது ஓர் மத சார்பின் பெருக்கத்திற்கும், விருத்திக்கும், ஒற்றுமெய்க்கும் அழகாகும்.

அங்ஙனமின்றி சகல மநுக்களையும் ரட்சிக்கக் கிறிஸ்து பிறந்தாரென்று சொல்லும்படியானவர்கள் அக்கிறிஸ்துவின் பெயரை வைத்துக் கொண்டே நான் சாதிக்கிறிஸ்தவன், அவன் சாதியில்லாக் கிறிஸ்தவன் என்பார்களாயின் இவர்களுள் யாரை ரட்சிக்கக் கிறிஸ்து பிறந்தார், சாதிக் கிறிஸ்தவர்களை என்பாராயின் சாதியுள்ளோரை ரட்சிக்க மநுதன்ம சாஸ்திரமும் பிராமணருமிருக்கின்றார்கள். சாதியில்லாக் கிறிஸ்தவர்களை என்பாராயின் அம்மொழி சமேரியா இஸ்திரியை சாதிகேளாது நீரை வினவியவரின் ஆசாரம் பொருந்தும். ஆதலின் சாதிபேதமில்லாக் கிறிஸ்தவர்கள் முழு கிறிஸ்தவர் களும், சாதிபேதமுள்ளக் கிறிஸ்தவர்கள் அரைக் கிறிஸ்தவர்களேயாவர்.

அத்தகைய அரைக் கிறிஸ்தவர் சாதிபேதமில்லா முழுக் கிறிஸ்தவர் களை நோக்கி உங்கள் சாதியை ஒளியாது கூறுங்கோளென்பார்களாயின் சாதியில்லாக் கிறிஸ்தவர்கள் எங்களுக்கு எக்காலும் சாதியில்லையென்று துணிந்து கூறுவதே சிறப்பாகும். அங்ஙனமின்றி அரைக்கிறிஸ்தவர்கள் வார்த்தை களை நம்பி முழுக் கிறிஸ்தவர்கள் மோசம்போவது முற்றுமிழி வைத்தரும்.

பாப்பானவரிடஞ் சென்றுள்ள இரு பிராமணர்கள் குடி, விபச்சாரம், திருட்டு, கொலை முதலியக் கிரியைகளில் பிரவேசிப்பார்களாயின் பாப்பா னவர் பிராமணரை உயர்குலத்தோர் உயர்குலத்தோரென சிறப்பிப்பரோ, ஒருக்காலும் சிறப்பிக்கமாட்டார். காரணம், அவனவன் நற்செய்கைகளால் உயர்ந்தவனென்றும் தீச்செயல்களால் தாழ்ந்தவனென்றும் அழைக்கப் படுவான். இத்தகையத் தீயோரையும் நல்லோரையுங் கண்டு திருத்த வேண்டியதே கற்றவர்ச் செயலாகும். அங்ஙனமின்றித் தன்னை உயர்ந்தவ னென்று ஒருவன் கூறுவதும், மற்றொருவன் அவன் கூறுதலை மெய்யென்று நம்பி அவனை உயர்த்திவிடுதலும் கல்லார் செயலாகும்.

பிரம்மா முகத்திற் பிறந்த பிராமணனுக்கு மண்ணிற்பிறந்த பாப்பானவர் ஆசீர் கனந் தருமோ. கல்லார் செயலாகும் ஆசீரும், உயர்வில்லார் மொழி யாகும் பொய்ம்மொழியும் ஒருக்காலும் சிறப்படையாதென்பது துணிபு. சாதிபேதமில்லா முழுக்கிறிஸ்தவர்களே, சற்று கவனியுங்கள். நமது கருணைதங்கிய பிரிட்டிஷ் துரைத்தனத்தார் ஜனத்தொகை எடுக்கத் தோன்றியுள்ளாரன்றி அவர்களுக்கு சாதித் தொகை அவசியமன்று.

இதையடுத்தே முன்பெடுத்துள்ள சென்சஸ் ரிப்போர்ட்டர்கள் யாவரும் இந்துதேசத்திலுள்ளக் கிறிஸ்தவர்கள் யாவரையும் பொதுப்பட (நேட்டீவ் கிறிஸ்டியன்ஸ்) என வரைந்திருக்கின்றார்கள். கிறிஸ்தவப் பிரிவினைக் காரர்களுக்குக் கணக்கு வேண்டுமாயின் கத்தோலிக்குக் கிறிஸ்தவர்களென்றும், புரோடெஸ்டான்ட்கிறிஸ்தவர்களென்றும் கூறலாமேயன்றி இன்னசாதிக் கிறிஸ்தவன் இனியசாதிக் கிறிஸ்தவனென வரைவதாயின், கிறிஸ்துவினது போதனைக்கும், செயலுக்கும் வழுவாகும். கிறிஸ்துவைக் கனஞ்செய்ய

வேண்டியவர்கள் இந்தியர்களின் சாதியாசாரத்தையும், மதாசாரத்தையும் ஒழித்து கத்தோலிக்குக் கிறிஸ்தவன் அல்லது புரோடெஸ்டான்ட் கிறிஸ்தவ னெனக் கூறுவதே கனமாகும்.

அங்ஙனமின்றி மநுதன்ம சாஸ்திரத்தையும், பிராமணரையும் கனஞ் செய்வதற்காய் செட்டிக் கிறிஸ்தவன், நாயுடு கிறிஸ்தவனெனச் சொல்லு வதாயின் கிறிஸ்துவை அவமதிப்பதாகும். இந்துக்களின் சாதியும் வேண்டும், கிறிஸ்துவின் மதமும் வேண்டுமென்னும் இரண்டாட்டிற்கு ஒரு குட்டி போலும். இ ரண்டெஜமானனுக்கு ஒரு ஊழியன்போலும் திகைத்து கெடாது ஒரே எஜமானனை நாடி உறுதியும் சுகமும்பெற வேண்டுகிறோம்.

"கிறிஸ்தவன்" என்பதினிலக்கணம், அவன் கிறிஸ்து வெனலாகும். அதாவது, கிறிஸ்துவினது கிரீத்தியத்திற் பொருந்தியவன் என்பதாம். அத்தகைய சிறந்த பெயருடன் பொய்யாகிய சாதியாசார பெயரைச் சேர்ப்பது மாணிக்கத்துடன் மண்ணாங்கட்டியைப் பொருந்தலொக்கும்.

- 4:16; செப்டம்பர் 28, 1910 -

56. பிணச் சடங்கு

வினா : நமது தேசத்தில் ஒருவர் இறந்தவுடன் கால் விரலையுங் கைவிரலையுங் கட்டிவிட்டு தலைப்பக்கம் விளக்கு கொளுத்தி வைக்கிறார்களே அவை என்ன காரணம்? அதுவுமின்றி பிணத்தை தூக்கிக்கொண்டு போகும் போது கொஞ்சதூரம் சாணத்தைக் கறைத்துத் தெளித்துக் கொண்டு போகிறார்களே அவை என்ன காரணம்? இவையோடு பாடையில் ஒரு கோழிக்குஞ்சை கட்டி தொங்கவிட்டு போய் சுடலையிலுள்ள வெட்டி யானிடத்தில் கொடுக்கிறார்கள். அல்லது பிணத்துடன் புதைத்து விடுகிறார்களே அவை என்ன காரணம்.

பி.எஸ். அச்சுதானந்தம், திருப்பத்தூர்.

விடை : அன்பரே, தாம் விடுத்த சங்கை மிக்க விசேஷித்ததேயாம். அதாவது, இந்தியதேசமெங்கும் புத்ததன்மம் பரவியிருந்த காலத்தில் பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடென்னும் நான்கினாலுந் துக்க விருத்தியுண்டு. அத் தகைய நான்கையுஞ் செயித்துக்கொள்ளுவதே மாநுஷீக தருமமென வகுத்து சாதுசங்கங்களை போஷித்துவந்ததுடன் தாங்கள் நடாத்திவரும் இல்லற தன்மத்தில் ஒருவன் துக்கத்திற் கேதுவாம் மரணமடைவது இகழ்ச்சி என்றும், மரணத்தை ஜெயித்து பிறவி அறுப்பதே புகழ்ச்சியென்றும் தங்கடங்கட் செயல்களில் மரண விழிவைக்காட்டிவந்தார்கள்.

எவ்வகையிலென்பீரேல் ஒருவன் பிறவியறுக்கும் வழி தேடாது மரண மடைந்தானென்றால் அவன் பாசபந்தக் கட்டறுக்கும் வழி தேடாது மாண்டவனானபடியால் அக்கட்டு மாறாது அவன் பெருவிரல்கள் இரண் டையுஞ் சேர்த்துக் கட்டிவிடுவது வழக்கமாகும். இதை அனுசரித்தே தாயுமானவரும் "நிகளபந்தக் கட்டவிழ்ப்பாரே" என்றும் பாடியிருக்கின்றார்.

மற்றோர் வகையில் தகப்பன் பாசபந்தக் கட்டினை அறுத்து மரணத்தை ஜெயிக்காது மரணமடைந்துவிடுவானாயின் மைந்தன் தனது பிறை முடியை இரக்கிவிட்டு மீசையை சிறைத்துக் கொள்ளுவான். அதாவது, தனது தந்தை மரணத்தை ஜெயித்த ஆண் பிள்ளை ஆகாமல் மரணத்திற்குள்ளாம் வீண்பிள்ளை யானாரே என்பதாம். அதை அநுசரித்தே குணங்குடி மஸ்தான் "மீசையுள்ள ஆண்பிள்ளை சிங்கங்களாயின் என்கூட வெளியினில் வாருங்காணும்" என்றும் பாடியிருக்கின்றார்.

அவன் மரணமடைந்தபோதே சிரவுச்சியிலிருந்த சோதி அவிந்து விடுகிறபடியால், மரணமடைந்தோன் சிரசினருகே தீபமேற்றி வைப்பது வழக்கமாகும்.

ஞானக்கும்மி

உச்சிக்கு நேரே உண்ணாவிற்கு மேல் நிதம் / வைத்த விளக்கு யெரியுதடி
அச்சுள்ளவிளக் கேவாலையடி / அவியாம லெரியுது ஞானப்பெண்ணே

அவன் மரணத்தை ஜெயித்து பிறவி துக்கத்தை ஒழிக்காமல் மரணத்திற்காளாகி இழிவடைந்தபடியால் அப்பிரேதத்தை வீட்டைவிட் டெடுத்துப் போம்போது சாணத்தைக் கரைத்துத் துளிர்த்துக்கொண்டே போய் அச்சட்டியை உடைப்பது வழக்கமாகும். இதை அநுசரித்தே

இடைகாடர் - "ஆணவகாமிய போக்கின் அல்லறுத்து, சாணத்துளிர்காணாவழி, சாருங்கோனே"

என்றுங் கூறியிருக்கின்றார். அவன் மரணத்தை ஜெயிக்காது பிறவிக்குள்ளாகி அவன் புசிப்புக்காம் அரிசியும் நீரும் விடாது கண்டு வாய்க்கரிசியிடுவதும், அப்பிரேதத்தின் கூடச்சென்றவர்கள் சமாதியடைந் தானென்னும் புகழுக்குப்போகாமல் இறந்தானென்னும் இகழ்வுக்குப் போனபடியால் வீடுசென்றவுடன் சிரசிற்கு நீர்விட்டுக்கொள்ளுவது வழக்க மாகும். இகழ்வுக்கென்னு மொழியே இழிவென மறுவி இழிவுக்குப்போ னோமென வழங்கி வருகின்றார்கள்.

பிரேதத்துடன் கோழிக்குஞ்சைக் கட்டுவது புத்ததன்மத்தைச் சாராவாம். காரணம், ஏதோ ஒன்றைக் கண்டு பயந்தவனுக்கு வேப்பிலையடித்து ஒன்றை சுற்றிப்போட்டால் பயந்தவன் மனோபிராந்தி நீக்கி சுகமடைவதுபோல் சனிவாரம் மரணமடைந்தால் சனிப்பிணங் கூடவே தொடருமென்னும் மொழியிலுண்டாய பயத்தை நீக்கிக்கொள்ளுவதற்கு உயிருக்குயிராகக் கோழிக்குஞ்சைக் கட்டிவிட்டால் தோஷம் நீங்குமென்னும் கட்டுக்கதையை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

- 4:17; அக்டோபர் 5, 1910 -

57. கோலார் தன்மப் பிரியர்களே

அறிவிலிகட் செயலை நோக்காதீர்கள் அறிவிலிகள் வாக்கைக் கேளாதீர்கள் காரணம், "கட்டுப்பட்டாலும் கவரிமான் மயிரால் கட்டுப்படல் வேண்டும், குட்டுப்பட்டாலும் மோதிரக்கையால் குட்டுப்பட வேண்டு மென்றும்" "வெகுமானமாகிலும் அவமானமாகிலும் மேன்மெயோர் செய்யி லழகாம்" என்னும் முதுமொழிகளைக் கேட்டும் வாசித்துமிருப்பீர்கள். ஆதலின் அறிவிலிகட் செயலையும் அறிவிலிகள் வாக்கையும் ஒருபொருளாகக் கருதவேண்டாமென்று வரைந்திருக்கின்றோம். மாணிக்கத்தின் ஒளி குருடனுக்கும், ஞானபோதத்தின் மொழி செவிடனுக்கும் விளங்குமோ ஒருக்காலும் விளங்காது. இரண்டுவாரத்திற்கு முன் கனந்தங்கிய பம்பாய்தேச கவர்னரவர்கள் அவ்விடத்துக் குடிகளை நோக்கி புத்தபிரான் போதித்துள்ள நீதிகளைப்புகட்டி சீர்பெற வேண்டிய விதிகளை அருளியிருக்கின்றார்.

அத்தகைய விவேக மிகுத்தோரும், மேதாவியோருமானவரின் வாக்கினால் புத்தரது சிறப்பும், அவரது தன்மபோத மகத்துவமும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்குகிறதன்றோ. அத்தகைய மேலான, மகத்துவமும், உலக சீர்திருத்த குருவும், உலகிலுள்ள விவேகமிகுத்தோர் கொண்டாடும் மகா ஞானியுமாகிய சற்குருவை விவேகமில்லா முழு மோழைகள் தூஷிப்பார்களாயின் அவர்களது துன்மொழியை தன்மப் பிரியர்களும், சத்தியதன்மத்தை சிரமேற்கொண்டுலவும் மெய்ப்புலவர்களும் மதிக்கப் போமோ, மதிக்கலாகாது.

காரணம், புத்தபிரானையும், அவரது தன்மத்தையும் தூஷிப்பவர்கள் யாரோ அவர்களே பஞ்சபாதகர்கள், அத்தகைய பஞ்சபாதகர்களின் மொழிகளை செவிகளிலேற்கவும் போகாது. பஞ்சபாதகர் தரிசனமு முதவாது, அவர்கள் பரிசமும் படலாகாது. ஏனென்பீரேல், புத்தபிரான் மநுக்களை நோக்கி அன்பர்களே, உங்கள் மதியை கெடுக்கும் மதுவைக் குடிக்காதீர்கள் குடித்தால் குடிகெடுவீர்களென்று போதித்திருக்கின்றார். அம்மொழியைக் கேட்கும் சதா குடியன் புத்தரையும் அவரது தன்மத்தையும் தூஷிப்பானா பூஷிப்பானா தூஷித்தே திரிவான். அவரது தன்மத்தை சிரமேற்கொண்டு நடப்பவர்களையும்

வைவான், பஞ்சபாதகர்களுக்கு பஞ்சசீலமுடையோர் விரோதிகளாகவே காணப்படுவார்கள்.

அதன் காரணம் அறிவுள்ளோர் நற்போதனை அறிவிலிகளுக்கு விரோதமாகவே தோன்றும். அறிவுள்ளோர்க்கு அவிரோதமாகவும், ஆனந்த மாகவுந்தோன்றும். அதற்குப்பகரமாய் அமெரிக்காவிலுள்ள வாஷிங்டன் எனும் தேசத்தில் தத்துவசாஸ்திரிகளும், சத்துவ சாஸ்திரிகளுமே விசேஷமா யிருக்கின்றார்கள். அத்தேசத்துள்ளோர் வீடுகளில் புத்தபிரானது சிலை யேனும், படமேனுமில்லாத வீடு கிடையாதாம். பகவன் மீது அவ்விவேக மிகுத்தோருக்குள்ள அன்பையும் மதிப்பையும் பாருங்கள் கற்றோரைக் கற்றோரே காமுறுவரென்னும் முதுமொழியை இதனாலுணரலாம்.

புத்தபிரானைப் பூஷிப்பவர்கள் பஞ்சசீல மிகுத்தோரும், அவரை தூஷிப்பவர்கள் பஞ்சபாதகர்களுமாக விளங்குகிறபடியால் அவர்கள் பாதகத் திற்குத்தக்க பவோ துன்பத்தைக் கூடியசீக்கிறம் அனுபவிப்பார்கள். ஓட்டின் வினை வீட்டைச்சுடுவதுபோல் மகாஞானிகளையும், அவர்களடியார்களையும் பஞ்சபாதக மிகுத்த வஞ்ஞானிகள் தூஷிப்பது தீவினைக்கடிப்படையாகும். அதின் பயனை கூடியசீக்கிரத்துள் அவர்களே அநுபவிப்பார்கள். தன்மப் பிரியர்களும், சத்தியதன்மப் போதகர்களும், மெய்ப்புலவர்களும் அசத்தியர் களாகும் அஞ்ஞானப் பத்திரிகைகளையும், அஞ்ஞானிகளையும் பாராதிருக்க வேண்டுகிறோம்.

- 4:17; அக்டோபர் 5, 1910 -

58. மாமாத்திரரும் காமாத்திரரும்

கோலார் அச்சுதானந்தமென்னும் அன்பரே, தாம் வினாவிய சங்கை வீணேயாம். விசேஷமாயின் பலருக்கும் பயன் தரும். இஃது பயனற்றதாதலின் சுருங்கச்சொல்லி விளங்க வைப்போமாக.

ஆதியில் புத்தபிரான் ஓதியுள்ள தன்மங்களிலேனும், ஓடதிகளிலேனும், மாமிஷங்களைப்பற்றிய மொழியைப் பகர்ந்துளராவென விசாரித்து விச்சங் கையை வினவவேண்டியதாகும். அவர் காலத்திய தன்மபோதத்தில் உயிர் வதையையும், மாமிஷத்தையும் அகற்றியிருக்க தற்காலத்தோர் கூற்றை அவரது தன்மத்தின் மீதேற்றி வினாவுதல் வீணதாகும்.

தற்காலந் தோன்றியுள்ள மாமாத்திரர்கள் கொண்ட மாமிஷ இச் சையின் தந்திரவுபாயங்களாகும், அதாவது மாமிஷம் புசிப்போர் மூப்படைந்து தந்தங்கள் உதிர்ந்தபோது மெதுவாயமாமிஷங்களை விரும்புவது அவர்கள் சுபாவமாகும் அத்தகையோர் விருப்பத்தை தங்கள் விருப்பமெனக் காணாது தங்கள் தேவனுக்கு தலையீற்றுக் கன்றுகுட்டியும், தலையீற்று ஆட்டுக் குட்டியும், தலையீற்றுப் புறாக்குஞ்சியும் கொண்டுவந்து செலுத்துங் கோளெனக் கூறுவர். குருக்களாயுள்ளவர்கள் மற்றவர்களை நோக்கி எனக்குப் பல்லில்லை இளந் தையானக் குட்டிமாமிஷங்களைக் கொண்டுவாருங்கோ ளென்றால் கொண்டு வருவார்களோ. ஒருக்காலும் வரமாட்டார். அவ்வகைக் கூறாது தங்கள் தேவனுக்கு கொண்டுவாருங்கோளென்றால் கூறியவுடன் கொண்டுவரத் தடையிராது. அதுகொண்டு பல்லில்லாதவர்கள் புசித்துப் பசிதீரும் ஈதோர் தந்திரமாகும். அதுபோல் நோயுள்ளவர்களை மிரட்டி ஆடு சுத்திவிடவேண்டும் கோழி சுத்தி விடவேண்டும் என்று கூறுவது மதுமாமிஷப் பிரியர்கள் தந்திரமாகும்.

மற்றும் வைத்திய நூற்களில் சோற்றுக் கத்தாழைக்கு வெண் சேவலென்றும், கிலுகிலுப்பைச் செடிக்குக் கோழிப் பூண்டென்றும், நீலோற்பவத்திற்குப் பூனைக் கண்ணென்றும், கொசுக்கூட்டிற்கு யானைக் கண்ணென்றும் பரிபாஷையால் வரைந்திருக்கின்றார்கள்.

அதனதன் பொருள் பேதங்களையும் குணபேதங்களையும் கண்டு செய்வோரே மாமாத்திரராவர். மற்றுமுள்ள சீவகாருண்யமற்றோர் மாமிஷ இச்சா காமாத்திரரேயாவர். ஆதலின் சங்கை வினவுவோர் செல்காலம்,

நிகழ்காலம், வருங்காலம் மூன்றின் சரித்திர பேதங்களை ஆராய்ந்து சங்கிக்க வேண்டுகிறோம்.

- 4:18; அக்டோபர் 12, 1910 -

59. காமத்துப்பால்

மயிலை எஸ்ப்.எம். என்னும் அன்பரே, தாம் வினாவிய சங்கை விசேஷித்ததேயாம். ஆயினும் தாம் வினவியுள்ள நாயனார் திரிக்குறளிலுள்ளக் காமத்துப்பாற் செயல் மெய்யா பொய்யாவென்பதை உணராது வினவியது வீணேயாம். அதாவது, சிற்றின்பமென்னும் காமிய நிலை சகல மக்களுக்கும் இயல்பில் தோன்றும் இன்பமென்னப்படும். அத்தகைய இன்ப நுகர்ச்சி சருவ மக்களுக்கிருந்தும் அதன் புலநிலையறியார்கள். புலன் தென்படலாம், பேரின்பம் பெற்ற தென்புலத்தோரே அவற்றை அறிவர்.

ஆதலின் தென்புலத்தோராம் நாயனார் காமத்துப்பாலாம் சிற்றின்ப நுகர்ச்சியைத் தெள்ளற விளக்கிப் பேரின்பத்தைத் துலக்குவதற்காய் கண்ணும், மூக்கும், செவியும், நாவும் உடலும், ஓர் பெண்ணுருவை நாடி வெளிதோன்றி நுகர்வது சிற்றின்ப நுகர்ச்சியாதலின்,

'கண்டுகேட்டுண்டுயிர்த் துற்றறியுமைம்புலனு / மொண்டோடி கண்ணேயுள'.

வென்றும் யேக சிற்றின்பத்தில் யேகபாவனையாய் வெளிதோன்றியது போல் ஐம்புலனும் யேக பேரின்பத்தில் யேக பாவனையாய் உள்ளடங்கு மாயின் தாமரைக்கண்ணனுலகாகும் புத்தேளுலகில் சிற்றின்பத்திற்கு மேலாய பேரின்பத்திற் சதா சுகிப்பனென்று கூறுவதற்காய்

"தாம்வீழ்வார்மென்றோட் டுயிலினினிதுகொ / றாமரைக்கண்ணா னுலகு"

காமமீறி ஐம்புலனா லோடிய கண் அவ்வைம்புலனு மொடுங்கிய பேரின்ப சுகத்தையும் ஆற்றலையும் விளக்கியிருக்கின்றார்.

பொறிவாயிலைந்தவித்தான் பொய் தீரொழுக்கம்,
நெறிநின்றார் நீடுவாழ்வார்.

காமத்தால் சிற்றின்பம் நுகர்ந்து சீர்கெடுவதினும் என்றுமழியா பேரின்பம் நுகர்ந்து நித்தியவாழ்வடைவதே அழகாதலின் சிற்றின்பத்தை செவ்விதில் விளக்கி பேரின்பம் அளாவும் போக்கில் விடுத்திருக்கின்றார். உள்ளதை உண்மெய்க்குத்தாரமாய் விளக்குவதே புத்ததன்மமாகும். உள்ளது வொன்றிருக்க இல்லாததைக் கூட்டிப் பொய்யை மெய்போல் பேசுவது அபுத்த தன்மமாகும். கொக்கோகரும் மதனனூலாரும் உலக மக்கள் நோயின்றி வாழ்க நூலெழுதினார்கள். அவர்கள் கருத்தை உணராது காமிய விருப்ப மிகுத்து கெட்டு நூலாசிரியரை நிந்திப்பதழகாமோ. உள்ளதை வொளியாது விளக்கி மக்களைச் சீர்பெறச்செய்வது மதியூகிகளின்கடனாதலின், நாயனார் தானியற்றியுள்ள காமத்துப்பாலில் புருஷருக்குள்ள செயலையும், இஸ்திரீ களுக்குள்ள செயலையும் தெள்ளற விளக்கியிருக்கின்றார்.

அவர் விளக்கியச் செயலுக்கும், அநுபவத்திற்கும் ஏதோ மாறுதலுண்டோ, இல்லையே. இத்தகைய மாறுதலற்ற மதியூகிகட் போதத்தைக் கண்டு அகமகிழாது திகைப்பது வீணேயாகும். உலகத்தின் மனுகுலத் தோற்ற சருவ ஆடம்பரங்களும் காமியத்தையே பீடமாக வகுத்து ள்ளதை அறியாது அதை சிறப்பித்தது தவரென்று கூறுதல் உள்ளுக்குக் காமியசிறப்பை ஒளித்து வெளிக்குத் தூற்றுவதொக்கும். நாயனார் அங்ஙன மொளியாது மக்களின் சருவசெயல் களையும் அளந்து கூறியவிடத்து காமத் துப்பாலையும் தெள்ளற விளக்கி விட்டார். காரணம் இன்பத்தையும் துன்பத் தையும் விளக்கும் ஓர் போதனா நிலையாகும்.

அதற்குப் பகரமாய் கிறிஸ்துவானவர் தனது மாணாக்கரையும் மற்ற மக்களையும் நோக்கி மனிதன் ஓர் இஸ்திரீயைநோக்கிப் பார்த்த போதே அவளையவன் சேர்ந்ததொக்குமென போதித்திருக்கின்றார். காமிய நிலை யைக் கருத்தறிந்து கூறியுள்ளபடியால் அவரங்ஙனங் கூறலாகாதென்னலாமோ போதனைப் புதைப்பொருள் பலவாறு நிற்கும். அவைகளை உணர்ந்தே சங்கித்தல் வேண்டும். உணராச் சங்கிப்புலன்தராவாம்.

- 4:18; அக்டோபர் 12, 1910 -

60. கற்பூரம் கொளுத்துதல்

வினா : நம் தேசத்தில் இறந்தவுடன் கற்பூரம் கொளுத்தி தேங்காய் உடைக்கின்றார்களே அது என்ன காரணத்தினால் அம்மாதிரி செய்கிறார் களென்று அடியேனுக்கு விளங்காதபடியால் அடியேனுடைய சங்கையை நிவர்த்தி செய்வீரென்று நம்புகிறேன்.

தன்மப்பிரியன், பம்பாய்.

விடை : அன்பரே, தாம் வினாவிய தேங்காய் கற்பூர சங்கை விசேஷித் ததேயாம். அதாவது சிலகாலங்களுக்கு முன்பு தோன்றிய காளிகாதேவி கன்னகாபரமேஸ்வரி இவர்களுக்கு, ஆடுமாடுகளை கொலைசெய்து பூசிப்பது போல் சாந்ததேவதையை பூசிப்போர் தேங்காயுடைக்கும் ஓர் வழக்கத்தை அநுசரித்து வந்தார்கள். பூர்வப் பலகாரம் அவுல் கடலை வாழைப்பழம் தேங்காய் இவைகளேயாதலின் தேவதைப் பெயர்சொல்லி தேங்காயுடைத்து அவுல் கடலையுடன் சேர்த்துப் புசிப்பதற்கேயாம். கருப்பூரத்தைக் கொளுத்துங் குணம் அவ்விடமுள்ளக் கெட்ட நாற்றங்களைப் போக்கி சுத்தஞ் செய்வதற்கேயாம். அதை ஓர் மக்கள் சுகாதார ஔடதமென்றே கூறல்வேண்டும்.

- 4:18; அக்டோபர் 12, 1910 -

61. மாவலி பரிநிருவாணம்

கார்த்திகை மாதம் பிறந்தவுடன் புளியம்பட்டை, வேப்பம்பட்டை ஆண்பனை காய் (பனம்புழுக்கு) இவைகளைச் சுட்டுக் கரியாக்கி அஃதுடன் உப்பு அல்லது பொட்டிலுப்பு சேர்த்தறைத்து துணியில் கட்டி மாளிய என்று சுற்றிவருவதோடு தீபத்தன்று கம்புதட்டுகளில் மனிதனைப்போல் சுளுந்து கட்டி மேளமடித்துக்கொண்டு குறித்த எல்லையில் போய் அடுத்த ஊராரை உதாசினமொழிகளால் திட்டுவதும், கொக்கரிப்பதும், கூச்சலிடுவது மாகிய செயலிலிருக்கிறார்கள். அடுத்தவூராரும் குறித்த எல்லையில். நின்று மேற்கூறியபடி கண்டவாறு செய்கிறார்கள். இதினால் சண்டையும் நேர்ந்து வருகிறது. இவை என்ன காரணம்? எக்காலத்திலிருந்து நடைபெற்றுவருகிற தென்பதை விளக்கி யாட்கொள்ள வேணுமாய் வேண்டுகின்றனன்.

பி.எஸ். அச்சுதானந்தன், திருப்பத்தூர்.

விடை : அதாவது மாவலிச் சக்கரவர்த்தியாரவர்கள் பரிநிருவாண மடையப்போகுங்கால் பௌத்தசங்கத்தோர்களையும், கிராமவாசிகளையும் அருகிலழைத்து தனது பரிநிருவாணத்திற்குப்பின் தேகத்தை சக்கரவர்த்தி தேகமென்று யாதொரு சிறப்பையுஞ் செய்யாமல் வைக்கோலால் சுற்றிப் பிரிக்கட்டி இழுத்துக்கொண்டுபோய் தகனஞ்செய்துவிடும்படி ஆக்கியாபித்து பரிநிருவாண மடையுங்கால் உச்சியிற் சோதி கழண்டுப் பிரகாசித்து தேகமுழுவதும் சோதி பொரிகளெழும்பி பரந்து மறைந்ததாக சுருதி கூறுவதன்றி அந்நிருவாண நாளைக் கொண்டாடுவதற்கு வருடந்தோறும் சுளகுபிரி கட்டி இழுப்பதுடன் சோதிபொரி எழும்ப சுற்றும் குழல்கட்டி சுற்றுகின்றார்கள். அதை சுற்றுங்கால் "மாவலியோ மாவலி மாவலிமன்ன பேரொளி" எனச் சுற்றுவது பூர்வ வழக்கமாகும். அவ்வழக்கத்தை வருடந்தோறும் செய்துவந்தபோதிலும் புரட்டாசி மாதம் செய்யவேண்டி யதை கார்த்திகை மாதத்தில் மாற்றிவிட்டார்கள். "மாவலியோ மாவலி மாவலி மன்னன் பேரொளி" என்பதை மாவலியோ மாவலி மாவலிவண்ணன் பெண்சாதி இடுப்புடைந்து செத்தாளாமென்று மாற்றி சோதியின் பரிநிருவாண மகத்துவத்தைக் கெடுத்துவிட்டார்கள். சக்கிரவர்த்தியார் வாக்கு தவிராமல் பிரிகட்டி இழுத்தவர் களுக்கும், அவர்மீது அன்புமிகுத்தக் குடிகளுக்கும் நேர்ந்த கலகத்தை ஓர் ஐதீகமாகக் காட்டிவருகின்றார்கள்.

அகஸ்தியர் ஞானம்

விழித்துமிகப்பார்த்திடவே பொரிதான்வீசும் / முச்சந்தி வீதியிலே தீபந்தோன்றும்
சுழித்தியிலேபோகாமல் ஒருமனதாய் நின்றால் / சுத்தமென்ற நாதவொலிக் காதிற்கேழ்க்கும்

இழுத்ததென்று நீகூடத் தொடர்ந்தாயானால் / எண்ணெண்ணா பிறப்பிறப்பு யெய்தும்பாரு
அழுத்திமனக் கேசரத்தில் நின்றுமைந்தா / அப்பனே லலாடத்தில் தூங்குவாயே

- 4:19; அக்டோபர் 19, 1910 -

62. மதங்களின் காலவரை

வினா : ஸ்ரீ கௌதம புத்தர் பிறந்து ஞானத்தைக் கண்டுணர்ந்து உலகத்தாருக் கூட்டியபின் புத்தமதமென்று பெயராயிற்றென்று தெற்றென விளங்கியதுமன்றி மற்ற மதங்களெல்லாம் புத்ததர்மத்தை பீடமாகக் கொண்டுளதென்று மதித்துக்கொண்டேன். அரசமரக்கடவுள் பிறவா முன்னிருந்த பிரஜைகளும், அரசர்களும் எம்மதத்தைச் சார்ந்திருந்தார்கள்? அவர்கள் எவ்விதக் கொள்கையி லிருந்தார்கள்? தற்காலமுள்ள மதங்களாகிய சைவ, வைணவம் கிரேதாயுக முதற்கொண்டு அநாதியாயிருக்கிறதென் கிறார்களே அம்மதத்தைத் தான் சார்ந்திருப்பார்களென்று எண்ணுகிறேன். ஆதலால் இவ்வடியான்மீதுக் கருணைப் பாவித்து விளக்கிக் காட்டவேணுமாய் தங்களிரு திருவடிகளை சிரம்பூண்டு நிற்கின்றனம்.

பி.எஸ். அச்சுதானந்தம், திருப்பத்தூர்.

விடை : அன்பரே, தாம் வினவிய சங்கை விசேஷித்ததன்று. காரணமோ வென்னில் புத்தபிரானுக்கு முன்பு வரிவடிவமின்றி ஒலிவடிவில் ஆறு சங்கங்கள் நடந்துவந்ததை நமது பூர்வத்தமிழொளியில் தெள்ளற விளக்கியிருக் கின்றோம் தெரிந்துகொள்ளுவீராக.

கிரேதாயுகமென்னும் ஓர் காலத்தைக் குறித்தப்பின்னர் அதனின்றோர் அநாதி மதந்தோன்றுமோ, அநாதியினின்றோர் ஆதிகாலந் தோன்றிற் றென்னில் பொருந்தும். ஆதிகாலத்தினின்றோர் அநாதிமதந் தோன்றிற் றென்பது பொருந்துமோ. பத்து மக்கள் சம்மதமே மதமென்னப்படும். அத்தகையமதம் அநாதிகாலத்துள்ளதெனில் அங்கு மதங்களில்லையென்பதே துணிபு. மக்களில்லாது மதங்கள் தோன்றுதற் கேதுவில்லையாதலின் அநாதியாகவுள்ள மதமென்பது அபுத்தமதமேயாகும்.

தாம்வினவியுள்ள 2-மதங்கள் தோற்றிய காலவரைகளை இனி வரைந்துவரும் இந்திரர்தேச சரிதத்தாலறிந்துக் கொள்ளலாம்.

- 4:21; நவம்பர் 2, 1910 -

63. ஜப்பானிலும் பறையர்

வினா : ஐயா, ஜப்பானிலும் பறையர்களுண்டென்பதாக சில பத்திரிகைகளில் பார்த்தேன். அவ்வகை சரித்திரங்களேதேனுமுண்டா.

பா. இராஜலிங்கம், குண்டூர்.

விடை : அன்பரே, தாம் வினாவிய சங்கை தட்டிக்கேட்க ஆளில்லாவிடின் தம்பி சண்டப்பிரசண்ட னென்பதுபோல அஃதோர் தமிழ் லட்சணமறியா பராயர்கள் கதையாகும். அதாவது பறையனென்னும் பெயர் வாய்பபறை, தோற்பறை யடிக்கும் சகல மநுக்களுக்கும் பொருந்திய தாயிருக்க ஜப்பான் தேசத்திலும் பறையர்களிருந்தாரென்று கூறுமொழி தமிழ்வாசகமும் தமிழனது லட்சணமுமறியார்களின் கூற்றென்றே கூறல் வேண்டும்.

காரணம், ஜப்பானியர்களுக்கும், ருஷியர்களுக்கும் யுத்தம் நேரிட்ட போது ஜப்பானியர்களைக் குரங்குகளென்றும், ருஷியர்களைக் கரடி களென்றும் யிழிவுகூறி யெழுதிவந்த பத்திரிகைகள் ஜப்பானியர்களின் அதியூக வல்லபத்தையும் அவர்களின் அன்பின் மிகுதியையும் கேட்ட பின்னர் ஜப்பானியர் தங்களைச் சார்ந்தவர்களென்றும், தங்களுக்குள் பறையர் களிருப்பதுபோல் ஜப்பானிலும் பறையர்களிருக்கின்றார்களென்றுங்கூற நேர்ந்தது, யெக்குரங்கின் மதியோ அவற்றையவர்களே உணர்ந்துக் கொள்ளவேண்டியதேயாகும்.

"எட்டினாற் குடிமி எட்டாவிட்டால் பாதம்" எனும் பழமொழிக் கிணங்க சமயோசித்தமாகக் கட்டுக்கதைகளைக் கட்டிவிடுவது இத்தேசத் தோருட் சிலரின் சதாதொழிலாகும். அத்தகையப் பொய்யர்களின் மொழியை

மெய்யென நம்பி மோசம் போகலாகாது. ஜப்பானியரை குரங்கென்று இழிவு கூறியவர்கள் சிலதினங்களுக்குள் அவற்றை மறந்து அவர்களைப் புகழ்வதே போதுஞ் சான்றாகும்.

சிலகால் குரங்கினின்றே மனிதன் தோன்றியுள்ளபடியால் ஜப்பானி யரைக் குரங்கென்று கூறினோமென்பாராயின் அன்னோர் தோன்றிய பிரம்மா வையும் பெருங் குரங்கென்றே சொல்லவேண்டி வரும் அல்லது இந்தி யாவிலுள்ளவர்கள் யாவரும் குரங்கினின்று வந்தவர்களன்று. பரிசுத்த பிரம்மாவிடத்தினின்று தோன்றினவர்களென்பாராயின், பறையனும் அவரிடத்தி னின்று தோன்றியிருத்தல் வேண்டும். அங்ஙனமிருக்குமாயின் பறையனைத் தோன்றுவித்த பிரம்மாவையும் பெரும் பறையனென்றே கூறல்வேண்டும்.

பறையன் பிரம்மாவிடம் தோன்றினவனல்லவென்பாராயின் அவன் சுயம்பாய மனுகுலத்தில் தோன்றினவனென்றே கூறல் வேண்டும். அத்தகைய வெதார்த்த மநுகுலத் தோன்றலை இழிந்தோ னென்று கூறுவபனிழிந் தோனன்றி மநுகுலத்தோன்ற விழிந்தவனாக மாட்டான். அவனது செயல்கள் யாவும் சிறப்பைத் தருமேயன்றி நாணமற்ற யிழிவைத் தரமாட்டாதென்பது திண்ணம்.

சோம்பேறிகளும், நாணமற்றவர்களும், வஞ்சகர்களும், பொய்யர்களும் ஒன்று கூடிக்கொண்டு தேகவுழைப்பும், சுருசுருப்பும், நாணமும் மெய் மொழியும் நிறைந்த வாறு கோடி மேன்மக்களை பறையரென்றும், தீயரென்றும், சண்டாளரென்றும் இழிவு கூறிவருவதை யானைகள் உறங்குவது போலும், புலிகள் பதுங்குவதுபோலும், வில்லுகள் வளைவதுபோலும், ஆட்டுக்கடாக்கள் பிந்துவதுபோலும் கேட்டுக்கொண்டு அடங்கி நிற்பது அவ்வளவும் பாச்சலுக்கென்றே தெரிந்து நிதானித்து வார்த்தையாடாது வீணே தூற்றித் திரிகின்றார்கள்.

அங்ஙனம் நிதானியாது மேலுமேலும் தூஷித்தும், இழிவுபடுத்தியும், பலவகை யிடுக்கங்களைச் செய்தும் பாழ்படுத்தியும் வருவார்களாயின் யானை உறங்குவது போலிருத்தல் அதன் வேகத்தைக் காட்டுதற்கென்றும், ஆட்டுக் கடா பின்னிடுதல் அதன் மோதுதலுக்கென்றும், வில் வளைதல் அதன் வேகத்துக்கென்றும் அறிகுறியாயது போல் பூர்வ பௌத்தர்களாகும் மேன்மக்கள் சகலரது இழிச்சொல்லுகளுக்கு மடங்கி நிற்பது அவர்களது மேன்மெய் தங்கிய வொடுக்கமென்றேயுணர்ந்து தங்களைக் கார்த்துக் கொள்ளாது வீணே இழிவு கூறிவருகின்றார்கள்.

இம்மட்டிலுந் தங்களைக் கார்த்துக் கொள்ளாது ஜப்பானிலும் பறையனிருக்கின்றான் ஜாவாவிலும் பறையனிருக்கின்றானென யிழிவுபடக் கூறியின்னும் பலவகை யிடுக்கங்களைச் செய்யவாரம்பிப்பார்களாயின் உறங்கிய வேழம் விழிப்பதுபோலும், பதுங்கிய புலி பாய்வது போலும், வளைந்தவில் தைப்பது போலும், பிந்திய கடா மோதுவதுபோலும், அடங்கியுள்ள மேன்மக்கள் அவர்களது அடக்கத்தை விட்டு வெளியேற நேரிடும், அக்கால் அவர்களை அடக்க முயல்வது சமுத்திர வெழிற்சிக்கு வைக்கோல் அணைகட்டுவது போலாகும்.

ஆதலின் தங்கள் வல்லபங்களையும் எதிரிகளின் வில்லபங்களையும் உணராது பொய்மொழிகளைப் புகட்டி வீணே பிதற்றித் திரிகின்றார்கள். இனியேனு மித்தகைய விழி மொழிகளைக் கூறாது தங்கள் மட்டில் தங்களது விழிச்செயல்களை வெளிவராது அடக்கிக் கார்த்துக் கொள்ளுவார்களாயின் அதுவே அவர்களுக்கு சிறப்பைத் தரும்.

திரிக்குறள்

அடக்கம் மமரருளுய்க்கு மடங்காமெய் / யாரிரு ளுய்த்து விடும்

விவேக சிந்தாமணி

வில்லது வளைந்திற்றென்றும் வேழமதுறங்கிற்றென்றும்
வல்லியம் பதுங்கிற்றென்றும் வளர்கடா பிந்திற்றென்றும்
புல்லர் தன் சொல்லுக்கஞ்சி பொருத்தனர் பெரியோரென்றும்,
நல்லதென் றெண்ணவேண்டாம் நஞ்செனக் கருதுவீரே.

எனக் கூறியுள்ள நீதிநூற்களையும், அதன் செயலையுமறியா அற்பர்கள் தங்களது செயலை உணராது வீணேயிழிவு கூறி அறுபது லட்சமக்களுக்கும் அனந்த மனத்தாங்கலை உண்டு செய்து வருகின்றார்கள் அத்தகையோரிழிச் சொற்களுக்கும், வஞ்சகச் செயலுக்கும் அஞ்சாமலும், அயாசங் கொள் ளாமலும் இருப்பீராயின் அவர்களடையும் பயனைக் கூடியசீக்கிரம் கண்டுகளிப்பீராயினுந் தற்காலந் தங்களையுந் தங்கள் சந்ததியோர்களையுங் கார்த்துரட்சித்துவரும் ஆங்கிலேய துரைமக்களின் நன்றியை மட்டிலும் மறவாதிருக்க வேண்டுகிறோம்.

- 4:22; நவம்பர் 9, 1910 -

64. இராம அயனமே சாம அயனமாம்

அன்பரே இராமரென்னும் அரசருடைய சரித்திரம் புத்தபிரான் காலத்திற்குப் பின்பே தோன்றியுள்ளதென்பதை வால்மீகர் கூறியுள்ள இராமாயணம் ஆரண்யபருவம் பதினைந்தாவது அத்தியாயத்தில் அநுமார் பௌத்த வியார சிறப்பைக் கூறியுள்ள சுலோகத்தினாலும், வசிஷ்டர் இராமருக்குப் போதித்த வாசிஷ்ட உத்தாலகன் கதையில் புத்தர் தாமரை புட்பத்தில் உழ்க்கார்ந்ததுபோல் உத்தாலகன் உழ்க்கார்ந்தானென்னும் உறுதி மொழியாலும் உணர்ந்துக் கொள்ளலாம்.

இராமாயணம் கிரேதாயுகத்தில் நடந்தது திரேதாயுகத்தில் நடந்த தென்பதற்கு தக்க சரித்திர ஆதாரங்களேனும், செய்யுள் ஆதாரங்களேனுங் கிடையாது. ஆனால் இராமனென்னும் அரசனிருந்ததும் மெய், அவருக்கு சீதையென்னுந் தங்கையும், இலட்சுமணரென்னும் தம்பியும் இருந்ததும்மெய் அவருக்கு வசிஷ்டரென்னும் புத்தகுருவிருந்து ஞானோபதேசஞ் செய்ததும் மெய். அம்மூவரும் அவரது சத்தியோபதேசத்தில் நிலைத்து பன்னக வியாரத்தில் தங்கி பனிரண்டு வருடங் கடந்து தந்தையின் சொற்படி தேசஞ்சென்று அதை ஏற்று சிலகாற் சென்று மடிந்ததும் மெய்யே.

மற்றப்படி சீதையை ராமருக்குப் பெண்சாதியென்று ஏற்பட்ட சரித்திரம் விஷ்ணுவே இராம ரென்னும் அவதாரங் கொண்டுள்ளாரென்று கூறுகிறபடியால் விஷ்ணுவின் மதமும் அக்கதைகளும் இராமாநுஜர் காலமாகும். இருநூறு வருடங்களுக்குட்படத் தோன்றிய கதையேயாதலின் அக்கால் இலங்கையில் பத்துத்தலை ராவணனிருந்ததுங் கிடையாது. அதனால் சீதையை பத்துத்தலை ராவணன் பூமியுடன் தூக்கிக்கொண்டுபோனானென்று வால்மீகர் கூறியுள்ளதும் பொய், சீதையை ராவணன் கையைப்பிடித்துத் தூக்கிக்கொண்டு போனானென்று கம்பர் கூறியுள்ளதும் பொய்.

இவ்விருவரையும் பொய்யரென்று கூறிய காரணம் யாதென்பீரேல் அவர்களது புராண சரித்திரங்களைக்கொண்டே கூறியுள்ளோம்.

அப்புராணமோ யாதெனில், அரிச்சந்திர புராணமேயாம். அதிற் கூறியுள்ளவை ஏதெனில், பூலோகத்தில் பொய்ப்பேசாது மெய்ப் பேசுகிறவர்கள் யாரென தேவர்கள் உசாவிய போது அரிச்சந்திரன் ஒருவனே மெய்யன் மற்றய யாவரும் பொய்யரென்று தீர்த்துள்ளபடியால் வால்மீகரும், கம்பரும், பொய்யருள் சேர்ந்துவிட்டதுகண்டு சீதையை பூமியூடு தூக்கிச் சென்றதும் பொய், கையைப்பிடித்துத் தூக்கிச்சென்றதும் பொய்யெனத் துணிந்துக் கூறியுள்ளோம். பத்துத்தலையையுடைய ஓர் மனிதனும் இருந் திருப்பானா மற்றய மனிதர்களைப் போல் அவனது செயல்களும் நிகழ்ந் திருக்குமா என்பதைக்கூர்ந்து உசாவுவீராயின் மெய்சரித்திரங்களையும், பொய் சரித்திரங்களையும் எளிதில் அறிந்துக்கொள்ளலாம்.

- 4:23; நவம்பர் 16, 1910 -

65. குலத்தளவேயாகுங்குணம்

என்னும் பூர்வ மிலேச்ச புத்தி போகின்றதா பாருங்கள்

சென்னை ஜார்ஜ் டவுனிலுள்ள ஒரு தமிழர் வீட்டில் பர்ம்மா பிரீஸ் டொருவர் வந்து தங்கி சமஸ்கிருதங் கற்றுக்கொள்ளுவதற்கு (இவர் ஓர் அண்டர் கிராடியுயேட்) ஓர் வைணவ பார்ப்பாரைத் தருவித்து வாசித்து வருங்கால்

உபாத்தியாயர் தான் படிப்புக் கற்றுக்கொடுக்கும் விஷயத்தைமறந்து பிரீஸ்டை நோக்கி ஐயா நீங்களிந்த தாழ்ந்தசாதியாரிடஞ் சாப்பிடப்படாது இந்துக்கள் ஒட்டலிலேனும், பிராமணர்கள் ஓட்டலிலேனும் சாப்பிடுவது நல்லது; இவர்கள் மெத்தக் கேவல சாதியார் இவர்கள் எங்களைக் கண்டவுடன் தூரவோடிப் போகின்றவர்கள் இந்த தேசத்தோர் யாவரும் இவர்களைக் கிட்டே சேர்க்கின்றது கிடையாது. நீங்களும் அப்படியே செய்யுங் கோளென்று சொல்லிக்கொண்டு வருங்கால் அவ்விடங் கேட்டுக் கொண்டிருந்த இன்னொரு தமிழர் உபாத்தியாயரை நோக்கி ஐயா, உங்களுடைய மிலேச்சசாதி புத்தியின்னும் உங்களைவிட்டு நீங்கவில்லையல்லவா, பிரிட்டிஷ் ஆட்சியால் எவ்வளவோ சீர்திருத்தங்களும், விவேக விருத்திகளும் உண்டாயிருந்தும் இத்தேசத்து பௌத்தர்கள் மீது வைத்திருந்த பொறாமெய் உங்களைவிட்டு நீங்கவில்லையல்லவா, உங்கள் செய்கைகளைவிட அவர்கள் செய்கை என்னக்கெட்டுப்போயிருக்கின்றது. உங்களைப் படிப்புக் கற்பிக்கும்படி அழைத்தார்களா, இவன் சின்னசாதி அவன் பெரியசாதி என்று சொல்லுவதற்கு அழைத்தார்களா, இது விவேகிகளுக்கழகல்ல. மேன்மக்கள் செயலல்லவென்றுத் தடுத்துப் பேசியப் பின்னர் இனியவ்வகைப் பேசமாட்டோமென்று சொல்லிப் போய்விட்டாராம். பூர்வ சாதிபேதமற்ற திராவிட பௌத்தர்களே, சற்று கவனியுங்கள். சத்துருக்களுடைய செயல்களுங் குணங்களும் தேளுக்கு விஷம் நீங்காதென்னும் விதிபோல் அவர்களைவிட்டு நீங்காமலிருக்கின்றது. நீங்களோ ஆடு கசாயிக்காரனைப் பின்தொடருவது போல் அவர்கள் செயல்களையும் அவர்கள் மதங்களையும் பின்பற்றி நாளுக்குநாள் சீரழியும் ஏதுக்களிலிருக்கின்றீர்கள். ஏழைக்குடிகள் மீது அவர்கள் வைத்திருக்கும் பொறாமெய் குணத்தைக் கண்டறிந்தேனும் அவர்கள் சார்பினை விட்டகன்று சீர்பெறும்படி வேண்டுகிறோம்.

- 4:24; நவம்பர் 23, 1910 -

66. ஆதாம் ஏவாள் காலவரை

வினா : ஆதாம் ஏவாள் காலவரைகளையும், ஆதாம் ஏவாள் ஆதி மனுஷரென்பதி னுண்மையையும் விளக்கியருளவேணுமாய் எமது குல ஜகத்குருவென்று இருகரங்கூப்பிப் பணிகின்றனன்.

வி. டாம். பட்லர், கே.ஜி.எஃப். ஆஸ்பிட்டல்

விடை : அன்பரே, தாம் வினாவியுள்ள சங்கை மிக்க விசேஷித்ததேயாம். இத்தகைய விசாரிணையில் நுழைந்து உசாவித் தெளிந்துக்கொள்ளுவதே விவேக விருத்திக்கழகாம். அங்ஙனமின்றி சொன்னதைச் சொல்லுங் கிளிபோல் ஒருவரெழுதி வைத்திருப்பதையும் மற்றொருவர் அதனந்தரார்த்தம் அறியாது உரைப்பதையும் மெய்யென்று நம்பி நடப்பது விவேக விருத்தியற்ற வீணர்களின் செயலாகும். தாங்கள் அன்பு கூர்ந்து வினாவுவதுபோல் ஒவ்வொருவரும் விசாரிணையினுழைந்து தெளிவடைவரேல் சகலரும் சுகமுற்று வாழ்வார்கள்.

உலகதோற்றக் காலவரைகளை வான சாஸ்திரிகளும், பூமி சாஸ்திரிகளும், சோதியின் இடங்களைக்கண்டும் காலத்திற்குக்காலம் அவைகள் மாறுபடும் குறிகளைக் கண்டும், அவைகளின் கணித மேறையாலும், ரசாயன சாஸ்திரிகள் பொருட்களின் குண மாறுதலாலும் உலக தோற்றமுண்டாகி இருபது வருடத்திற்கு மேற்பட்டிருக்குமென்றும், முப்பது வருடங்களுக்கு மேற்பட்டிருக்கின்றதென்றும் அநுபவக் காட்சிகளைக்கொண்டு ரூபித்து வருகின்றார்கள். பௌத்த சாஸ்திரிகளோ பூமியானது தோற்றியக்காலவரையுமில்லை அவை முற்றிலுங் கெடும் இடமுமில்லை. எக்காலமுள்ளது பூமியென்று வகுத்திருக்கின்றார்கள். இவற்றுள் அப்பூமியினின்று மட்டும் தோற்றும் பொருட்கள் யாவுங் கெடுமென்பது பௌத்தர்களின் அநுபவசம்மதமாதலின் திரிகால மறிந்தோதும் வல்லப மிருந்தும் நரர்களின் தோற்றமானது வானரரினின்று காலத்திற்குக் காலந் தேசத்திற்கு தேசப்பலபகுதிகளிலும் வாலற்றுத்தோன்றி மானமுண்டாகி மானிடரெனத் தோன்றியுள்ள தோற்றங்களுள் இன்னான் ஆதி மனிதன், இன்னான் ஆதி

மநுஷி என்று ரூபிப்பதற்கு ஏதுவின்றி உபமானமாகவும், உபமேயமாகவும் முறைத்துள்ளக் கதைகளைக்கொண்டு மக்களுக்கு ஞானமுணர்த்துவான் வேண்டி ஆதிமனிதன் ஆதி மநுஷியென வரைந்திருக்கின்றார்கள்.

அவற்றுள் லாமா என்னு மோசே என்பவர் தான் கண்டடைந்த உண்மெய்ப்பொருளை உலகோருங் கண்டு நித்தியமடைவதற்காக சகல மநுமக்களுக்குள்ளும் மெய்ப்பொருள் உண்டென்பதை விளக்குமாறு களிமண்ணினால் மனிதனை உருபிடித்து தன் சீவசுவாசத்தை யூதி ஓர் சிரேஷ்ட பெரியோன் உயிர்ப்பித்தாரென்றும் ஸ்திரீயும் புருடனும் அன்பிலி சைந்து வாழ்க்கைப் பெறுதற்கு அவன் விலாவெலும்பினால் துணைவியை உண்டுசெய்தாரென்றும், ஆதி மனிதன் ஆதாம், ஆதிமநுஷி ஏவாளென்னும் இரு உருவங்களை வகுத்து அவ்வுருவங்களில் புருஷ உருவம், இஸ்திரீயினது இன்பத்தில் ஆழ்ந்து மாளாது நித்தியசீவனை அடைவதற்காக இஸ்திரீயின் மத்தியபாகத்தில் நன்மெயாம் புத்திர விருத்தியும், தின்மெயாம் மரணமு முண்டாதலின் நன்மெயுந் தின்மெயுமுண்டாங் கனியாகும் இன்பத்தை சதா இச்சித்து மாளாதிருப்பதற்காய கனிபோன்ற சிலேடை மொழிகளை வரைந்தும் அவற்றை சதா இன்பமுறச் செய்தது சர்ப்பத்திற்கு நிகராய வல்குலாதலின் அவ்வல்குலையே சர்ப்பம் வஞ்சித்ததென்றுக் கூறி மக்களை சீர்திருத்தி யிருக்கின்றார். லாமாவாகிய மோசேயின் பேரானந்த ஞானக் கருத்தை உணர்ந்தோரிவற்றை அங்கீகரிப்பர். அவரது சிலேடை மொழிகளையும் அதனந்தரார்த்தங்களையும் உணராதோர்க்கிவை விளங்கவே விளங்காவாம். வி. டாம் என்னும் அன்பர் மற்று மவற்றைத் தெளிவுற தெளிந்துக்கொள்ள விரும்புவீராயின் நேரிற் கண்டு உசாவுவதே நிலையாகும்.

- 4:25; நவம்பர் 30, 1910 -

67. ஆகமம்

வினா : ஐயா, இவ்விடமெமதன்பரொரு செட்டியாருக்கும் எமக்கும் ஆகமத்தைப்பற்றி ஓர் வாதுண்டாயது. அஃதுயாதெனில், யாங்க ளிருவரும் வேதத்தைப்பற்றி பேசிவருங்கால் சிவாகமமே சிறந்ததென்று கூறினார். அந்நூல் தங்களிடம் உண்டா என்றேன் அவர் சற்று நிதானித்து சிவ புராணங்களே ஆகமமென்று கூறினார். என்ன கருத்தைக்கொண்ட நூலுக்கு ஆகமமென்று கூறலாமென்றேன். அக்கருத்து அவருக்கு விளங்காமலே நின்றுவிட்டார், எமக்கும் அவை விளங்கவில்லை, தாமோதமதரிய தமிழனில் புத்தாகமமென வோரிடத்தில் வரைந்துள்ளதைக் கண்டிருக்கின்றேன். ஆதலின் தாங்கள் கிருபை பாலித்து எமக்கும் எமது நேயருக்குமுற்ற சங்கையை நூலாதாரத்துடன் விளக்கி தெளிவிக்கும்படி வேண்டுகிறேன்.

பி. சந்திரசேகரன், மதுரை.

விடை : அன்பரே, தாம் வினாவியுள்ள சங்கையைத் தாங்கள் வாசித்துள்ள நூற்களிலேயே கண்டிருக்கலாம். அவற்றைத் தாம் கண்டு பிடிக்காது தெண்டபடிப்பில் விட்டது கொண்டு விசாரிணைக் கேதுவாகி விட்டது. ஓர் நூலினை கரங்களிலேந்தப்படாது. கரத்தேந்தியப்பின் அதனை ஆழ்ந்தறிய வேண்டியதே அவசியம். தாம் வாசித்துள்ள "பின்கலை நிகண்டும்" தண்டியலங்காரமு" மே மக்களுக்கறநெறியை விளக்கும் நூலை ஆகமமெனக் கூறும். அவ்வகை அறநெறியை புத்தபிரானால் போதித்ததுக்கொண்டு புத்தாகமமென வழங்கி வருகின்றார்கள்.

புத்தபிரானாலோதிய முதனூலுக்கே ஆகமமென்றும், ஆரிடமென்றும், பிடகமென்றும், தந்திரமென்றும், சமயமென்றும், பனுவலென்றும், சூத்திரமென்றுங் கூறப்படும்.

பின்கலை நிகண்டு

தந்துரைபுனைந் துரைத்தல் சார்ந்தபாயிரத்தினோடு / முந்தியபதிகமேநூன்முகமுகவுரையுமப்பே
ரந்தமா மாகமத் தோடாரிடம் பிடக மற்றுந் / தந்திரம்பனுவலோடு சமயஞ்சூத்திரமுநூற்பேர்.

தண்டியலங்காரம்

ஆகம மென்பன மநுமுதலாகிய / வறனொடு புணர்ந்த திறனறிநூலே

- 4:30; சனவரி 4, 1911 -

68. புத்தர் பிறப்பு

வினா : பௌத்த நூலாகிய நீலகேசித் திரட்டுரையிலே காட்டப்பட்ட உலோகவசனம் என்னும் நூலில்

புத்தன்றாய் நண்டிப்பி வாழை புனமூங்கில் / கத்தும் விரியன் கடுஞ்சிலந்தி-யித்தனையும்
வேலாலும் வாளாலும் மனறியே தாங்கொண்ட / சூலாலே தம்முயிர்க்குச் சோர்வு

என புத்தர் தாய்மாரையுஞ் சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கின்றது . ஆனதால் சந்தேகந்தோன்றி இதினந்தரார்த்தத்தை விளக்கி யாட்கொள்ளும் படி வேண்டுகிறேன்.

எஸ்.சி. அதிரூபநாதன், சர்க்குலர் ஷாப்ட்.

விடை : அன்பரே தாம் வினவியுள்ள சங்கை வீணதேயாம். அதாவது "உலகவசன" மென்னும் பெயரினாலையே அஃது சரித்திரமன்று. உலக வதந்தியென்றே கூறல் வேண்டும். உலகத்திற் பொய்யைச்சொல்லிப் புலம்பித் திரியுங் கட்டுக்கதைகளில் இதுவுமோர் கற்பனா கதையேயாகும்.

கலிவாகு, குலவாகு, வீரவாகு, இட்சுவாகு என்னும் சக்கிரவர்த்திகள் வம்மிஷவரிசையில் சித்தார்த்தி என்னும் ஏகபுத்திரன் பிறந்து வளர்ந்து அசோதரை என்னும் மலையரசன் புத்திரியை மணந்து இராகுலனென்னும் ஓர் புத்திரனையும் பெற்று பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடென்னும் நான்குவகை துக்கத்தை ஜெயிப்பான் வேண்டி துறவுபூண்டு தன்னை ஆயும் சதாவிசாரிணையினாலும், அன்பின் மிகுதியினாலும், மெய்ப்பொருள் அறிந்து திராவிட பாஷையில் மெய்யர் மெய்கண்ட தேவரென்றும், சகட பாஷையில் புத்தரென்றும், வழங்கியப் பெயர் சகல சரித்திரங்களிலுந் தெள்ளற வரைந்திருக்கப் புத்தர்கள் யாவரும் தாயின் விலாவழியிற் பிறந்து தாய்மார்கள் நண்டைபோலும், தேளை போலும் உடனே மரிப்பரென்னும் பெரும் பொய்யை விவேகிகள் நம்புவரோ ஒருக்காலும் நம்பமாட்டார்கள்.

இவ்வுலக வசனமென்னுங் கட்டுக்கதை தோன்றிய காரணம் யாதெனில், விஷ்ணுவென்னும் ஓர் தேவனுண்டென்றும், அத்தேவனே புத்தராக அவதரித்தாரென்றுங் கூறிவருங் கட்டுக்கதை நழுவாவகைக் கீதோர் முட்டுக்கதையென்றே கூறல்வேண்டும்.

தற்காலமுள்ள விவேகமிகுத்த மேன்மக்கள் யாவரும் புத்தரைப்பற்றி ஆனந்திக்குங் காரணம் யாதெனில், அவர் நம்மெய்ப்போன்ற மனிதனாகப் பிறந்தும் தனது சக்கிரவர்த்திப் பீடத்தையும், அரிய மனைவியையும், மகவையுந் துறந்து மனமாசற்று கண்டடைந்த ஞானத்திற்கும், அளவுபடா அன்பின் மிகுதிக்கும், மலைவுபடா திருவாக்குக்குமேயாம். மற்று மாறாக அவர் விலாவழியாய் பிறந்தார் விஷ்ணுவே அவதரித்தாரென்பாராயின் அச்சரித்திரத் தைக்காணும் எவரும் ஆனந்திக்கமாட்டார்கள்.

மனுமகனாகவே பிறந்து மனுமகனாகவே வளர்ந்து மனமாசகன்று அறிவு முதிர்ந்து அவரது நற்செயலால் தேவனென்னும் பெயரும், புத்தரென்னும் பெயரும், திருமாலென்னும் பெயரும், பரமென்னும் பெயரும், ஈசனென்னும் பெயரும், பெற்றாரன்றி அவர் பிறந்தபோதே புத்தரென்றும், தேவரென்றும் கொண்டாடியப் பெயர்கள் கிடையாது.

ஆதலின் அவர் நம்மெய் போன்ற மனிதனாகப்பிறந்து நமக்கே மெய்க் குருவாகத் தோன்றியபடியால் குருவையே தெய்வமாக சிந்தித்து அவரது சொற்படி நடந்து வருகின்றோம். மனுமக்களில் தற்காலமெவராயினும் நான்கு வகை துக்கங்களை செயித்து மெய்ப்பொருளைக் கண்டடை வார்களாயின் அவர்களையும் புத்தரென்றே கூறலாகும்.

நிகழ்காலத்திரங்கல்

தேனடரு மானந்த செங்கமலத் தாளருள / மானிடர்போல் மண்மிசையில் வந்த ததிசயமே.

- 4:31; சனவரி 11, 1911 -

69. விஷ்ணு அவதாரம்

வினா : ஐயா, தமதரியப் பத்திரிகையிலும், புத்ததன்ம நூற்களிலும் புத்தரென்னும் பெயர் பெற்றவர் மகதநாட்டு சக்கிரவர்த்தித் திருமகனென்றும், நம்மெய்ப்போன்ற மனிதனென்றும், வரைந்திருப்பதைக் காண்கின்றேன் அங்ஙனமிருக்க சில பத்திரிகைகளிலும் புராணங்களிலும் புத்தர் விஷ்ணுவின் அவதாரமென்றும் அவர் அவதரித்து சில வேதாந்த ரகசியங்களை மாற்றிவிட்டாரென்றும் வரைந்திருப்பதைக் காண்கின்றேன். இவ்விரு வரைதலுள் எவை மெய்யென்றும், எவை பொய்யென்றும் விளங்கவில்லை. ஆதலின் பத்திராதிபர் அநுபவக் காட்சியுடன் திட்டமாக விளக்கி தெளிவுறுத்த வேண்டும்.

வே. நடராஜர், இராயபுரம்.

விடை : அன்பரே தாம் விடுத்த சங்கை மிக்க விசேஷ சங்கையேயாம். இத்தகைய சங்கைகளே மக்களது மனமாசு கழுஉம். அதாவது, ஒருருவமே மறு உருவமாக மாறுதலை அவதாரிகை என்றம், அவதாரமென்றும் கூறப்படும். தாம் வினவிய அவதாரம் காணாவுருவினின்று காணு முரு வொன்று தோற்றியதென வரைந்துள்ள மொழி அவதாரத்திற்கே அவதானம் நழுவிய நிலையாகும்.

இவற்றுள் விவேகமிகுத்த மகா ஞானிகளால் வரைந்துள்ள எழுவகைத் தோற்றங்களுள் மக்களினின்று தேவர்கள் தோற்றுவதாகவும் நாளதுவரையில் தோற்றிவருவதாகவும் அநுபவகாட்சியாக வகுத்துள்ளபடியால் தேவர்னின்று மக்கள் தோன்றினாரென்பது முழுப் பொய்யும் விவேகமிகுத்தோர் வாக்குக்கு முற்றும் பிசகேயாம்.

மனிதன் தனது நல்லொழுக்கத்தாலும், நன் முயற்சியாலும், நற்கடை பிடியாலும், நல்லூக்கத்தாலும், நல்ல மதியாலும், நற்காட்சியாலும் தேவனானானென்பது அநுபவத்திற்கும், காட்சிக்கும் பொருந்தியதாகும். அங்ஙனமின்றி தேவன் மனிதனாகத் தோன்றினான் மனித அவதாரமெடுத்தா னென்னில் தேவனென்னும் சிறந்த பெயரற்றுபோம். அறிவு முதிர்ந்த தேவனானானென்னும் சிறப்புமொழி கெட்டு அறிவுகெட்டு மனிதனானானென்னு முருவகமாகும். மனிதனாம் 6-வது தோற்றத்தினின்று தேவனென்னும் 7-வது தோற்றம் பெறுவதே மிக்க சிறப்பைத்தரும். தேவனென் னும் 7-வது தோற்றத்தினின்று ஆறாவது மனிதனாகத் தோற்றினானென்பது முற்றும் இழிவைத்தரும் மொழியாதலின், கண்காணா விஷ்ணுவென்னும் தேவன் கண்காணும் புத்தராகத் தோன்றினாரென்பது முற்றும் பொய்யேயாம். அவ்வகைத் தோன்றி வேதாந்தங்களை மாறுபடுத்தினாரென்பது அதனினும் பொய்யேயாம்.

காரணமோவென்னில் விஷ்ணுவென்னுமோர் தேவனிருக்கிறா ரென்பதே ஆதாரமற்றக் கதை. அத்தகைய ஆதாரமற்றக் கற்பனா கதா புருஷ தேவனாம் விஷ்ணு பிரத்தியட்சப்பிரமாண அநுபவக்காட்சியாய் சகலமனுக்களுங் காண மனிதனாகப் பிறந்து வளர்ந்து பரிநிருவாணமுற்ற புத்தராகப் பிறந்தாரென்று கூறுங் கூற்று ஞானமற்ற நாவினர் மொழியும், கியானமற்ற சூனியர் வரைவுமென்னப்படும்.

புத்தபிரான் தோன்றிய பின்னரே வேதமென்றும், வேத அந்தமென்றும், மறை என்றும், ஆகமமென்றும், சுருதியென்றும், அவர் போதித்த அருமொழி மூன்றாம் திரிபீட வாக்கியத்தினின்றே தோன்றியுள்ளபடியால் புத்தர்தோன்றி வேதாந்தத்தை மாறுபடுத்தினாரென்று வேறுபட்டப்பொய் வெறும்பொய் யேயாம். ஆதலின் பௌத்த சோதிரர்கள் ஒவ்வொருவருந் தாங்கள் வாசிக்கும் நூற்களில் மனிதனாகத் தோன்றியவன் தனது நீதிநெறி ஒழுக்கத்தாலும் வாய்மெயாலும் தேவனெனத் தோன்றினானென வரைந்திருக்கில் அந்நூலை சிரமேற்றாங்கி அவற்றுள் வரைந்துள்ள நீதிநெறி ஒழுக்கத்தின்படி நடந்து வாய்மெயில் நிலைத்து நிருவாணமுற்று தேவனென்னும் பெயரும் பெற்று மாளா பிறவியின் துக்கமுமற்று நித்தியானந்த பரிநிருவாணமேற்று வாழும்படி வேண்டுகிறோம். அங்ஙனமிராது ஓர் தேவனே மனிதனாக வந்தாரென்றும்,

ஓர் தேவனே மனிதனாக அவதரித்தாரென்றும் வரைந்திருக்கும் அத்தகைய கற்பனைகளைக் கண்ணுற்று பாராமலும், அக்கதைகளை செவியுற்றுக் கேளாமலும் அகற்றும்படி வேண்டுகிறோம். அத்தகையக் கதைகள் யாவும் மதக்கடைபரப்பி மக்களை பயமுறுத்தி பொருள் சம்பாதிக்கும் பொய்க் குருக்களின் வாக்கும் அவ்வாக்கை நம்பி சாமிகளுக்கும் சமய குருக்களுக்கும் இலஞ்சமளித்து தங்கள் பாவத்தைப் போக்கிக்கொள்ள முயல்வோர்களின் போக்குமேயாதலின் உண்மெய்க்கண்டடையவேண்டிய பௌத்தர்கள் அவற்றைப் பாராமலும் கேளாமலுமிருக்க வேண்டுமென்பது ஞானகருத்து.

- 4:38; மார்ச் 1, 1911 -

70. அன்னை சாதத்தை ஊட்டுவாள் விழுங்கவுஞ்செய்வளோ

ஒருக்காலுஞ்செய்யாள். குழவி தானே விழுங்கவேண்டியதுதான். அதுபோல் நமது கருணைதங்கிய பிரிட்டிஷ் ஆட்சியால் விளைந்துவரும் சுகங்கள் சொல்லத்தரமன்று அவர்களரசாட்சியில் இந்தியதேசத்தில் நிகழ்ந்துவரும் வித்தியாவிருத்திகளையும், கல்வி விருத்திகளையும், நாகரீக விருத்திகளையும் நாம் கவனியாது சுயப்பிரயோசன சோம்பேறிகளின் வார்த்தைகளை நம்பி சாமிகொடுப்பார் சாமிகொடுப்பாரென்னுங் கடைச் சோம்பேறிகளாகி விட்டதுமன்றி சாமிகளுக்கு லஞ்சம் பொய்க் குருக்களுக்கு லஞ்சங் கொடுத்து உத்தியோகம் பெற்றுக்கொள்ளவும் பிணிகளைத் தீர்த்துக் கொள்ளவும், ஆபத்தைப் போக்கிக் கொள்ளவும் முயலுகின்றவர் களாதலின் பிரிட்டிஷ் ஆட்சியாரது வித்தை, புத்தி, ஈகை, சன்மார்க்கத்தை விரும்பாது சாதி பொறாமெய், சமயபுரட்டு, நீதிக் குறைவு, நெறியின் தவருதலாகிய அஞ்ஞானத்தினின்று பேராசையால் பிதற்றித் திரிகின்றோம். பிரிட்டிஷ் ஆட்சியாரின் வித்தைகளின் சிறப்பை அறியவேண்டில் இரயில்வே, டிராம்வே, டெல்லகிராப், லெத்தகிராப், போனகிராப் முதலிய வித்தைகளின் விருத்திகளைக் கண்டு தெளியலாம். புத்தியை அறிய வேண்டில் நாளுக்குநாள் அவர்கள் புத்திவிருத்தியால் கட்டிக்கொண்டு வரும் மாடமாளிகை கூடகோபுர முதலியவை களும், நடையுடைபாவனா விருத்திகளும், வண்டி குதிரைகளின் சுகாவிருத்தி களும், பொய்மெயென்னும் பொம்மெகளும், மற்றும் விளையாட்டுக்கருவி களின் விருத்திகளும், உலாவுசுகம், உண்ணல் சுகம், கண்காட்சி சுகம் முதலிய புத்தியாலுண்டாம் விருத்தியின் சுகங்களையுங் கண்டு தெளியலாம். ஈகையை அறிய வேண்டில் வியாதியஸ்தர்கள் படுங்கஷ்டங்களை அறிந்து அவைகளை நிவர்த்திக்க வேண்டி புருஷர்களுக் கென்றும் பெண்களுக்கென்றும் வைத்திய சாலைகளைக் கட்டிவருவதும், தங்களுடையக் குடிகள் தண்ணீருக்குப் படுங் கஷ்டங்களை உணர்ந்து வீதிக்குவீதி தண்ணீர் சுகமளித்துவருங் கருணையும் குடிகள் கல்வியற்று அஞ்ஞானவிருத்தி அடைகின்றார்கள் என்று உணர்ந்து கல்விசாலை விருத்திகளும், மக்கள் நடமாடுதற்குரிய வீதிகளின் சுகவிர்த்தி களையும், தீபங்களின் சுகவிருத்திகளையும் மற்றும் சுகாதார விருத்திகளையும் கருணையாம் ஈகையினால் உண்டாவதென்று உணர்ந்துக்கொள்ளலாம்.

சன்மார்க்கத்தை அறியவேண்டின் தன்னவரன்னியரென்னும் பட்சபாத மற்றும், தன்சாதியார் புறசாதியாரென்னும் பட்சபேதமற்றும், தன்சமயம் புறசமயமென்னுங் குரோதமின்றி துன்மார்க்கத்தோ ரென்னும் இரக்கமற்றவர்களாகக் காணாது நன்மார்க்கத்தோரென்னும் சன்மார்க்கத் திலேயே நின்று சன்மார்க்கமாம் நீதிநெறி ஒழுக்கங்களில் நிலைத்து தங்கள் குடிகள் யாவரையும் சன்மார்க்கத்தில் ஒழுகச்செய்துவரும் செயல்களைக் கொண்டே அறியலாம். இத்தகைய கருணைமிகுத்த ராஜாங்கத்தோர் நமக் கூட்டிவரும் வித்தை, புத்தி, ஈகை, சன்மார்க்கம் இவைகளைக் கிரகிக்காது கடைச்சோம்பேறிகளா உழல்வோமாயின் மேலுமேலுந் துக்கத்தை அநுபவிக்க வேண்டியதுடன் தேசச்சிறப்பு மற்றுப்போ மென்பது திண்ணம். ஆதலின் நமது தேயத்தோர் வித்தையிலும், புத்தியிலும், ஈகையிலும், சன்மார்க்கத்திலும் விருத்திபெருவார்களென்று நம்புகிறோம்.

- 4:43; ஏப்ரல் 5, 1911 -

71. உலகத்தில் தாழ்ந்த வகுப்பார்கள் யார், அறிவீனர்கள் யார், தீண்டாதவர்கள் யார்?

சுகதேகிகளாயிருந்தும் தங்கட் சோம்பலினால் பிச்சையிரந்துண் போர் தாழ்ந்த வகுப்போரா, உயர்ந்த வகுப்போரா, தங்களைத் தாங்களே உயர்த்திக்கொண்டு ஏனையோரைத் தாழ்த்துகின்றவன் அறிவுள்ளவனா அறிவில்லாதவனா. கபடு, வஞ்சினம், சூது, பொய், குடிகெடுப்பு, பொறாமெய், குஷ்டம், வைசூரி முதலிய தோஷம் நிறைந்துள்ளோன் தீண்டப்படாதவனா, அன்றேல் பூமியை உழுது சீர்திருத்தி தானியங்களை விளைவித்து சகலரது ஆயாசத்தையுந் தீர்ப்பவன் தீண்டப்படாதவனா. அந்தோ! அவனவன் குணத்திலும் செயலிலும் தாழ்ந்தவனா உயர்ந்தவனா என்று தன்னை ஆராயாது ஏனையோரைத் தாழ்ந்தவர்களென்று கூறுவது என்னமதியோ. தான் அறிவிற் சிறந்தவனா அறிவிற் குறைந்தவனா என்று தன்னை ஆராயாது ஏனையோர்களை அறிவில்லாதவர்களென்று கூறுவது என்ன விவேகமோ. தங்களுக்குள்ள வைசூரிரோகி, குஷ்டரோகி, வஞ்சகன், குடிகேடன், பொய்யன், கொலைஞன் முதலியோரைத் தீண்டிக்கொள்ளலாம் உழைப்பாளியும், சுத்ததேகி யுமானோனைத் தீண்டலாகாதென்பதென்னமதமோ இவற்றை விவேகிகளே ஆய்ந்தறிய வேண்டியதாகும்.

உலகெங்கும் சாதிபேதமென்னும் பொறாமெயற்று சுகசீவவாழ்க்கை பெற்றிருக்க இத் தென்னிந்தியாவில் மட்டிலும் அவன் தாழ்ந்தசாதி மனிதன், அவன் அறிவில்லாதசாதி மனிதன், அவன் தீண்டப்படாத சாதி மனிதனெனக் கூறி ஓர் பெருந்தொகைக் கூட்டத்தோரை இழிவுபடுத்தி வருவது யாது காரணமென்னில், பொறாமெயும் பூர்வ விரோதமுமேயாம்.

தாழ்த்தப்பட்டுள்ளோர் விவேக செயலை சிறிய தாட்டாந்தத்தால் அறிந்துக்கொள்ளலாம். அதாவது தற்காலமுள்ள விவேக புருஷர்கள் யாவரும் இச்சாதிபேதச்செய்கைக் கொடிது கொடிதெனப் பேசிக் கொண்டே வருவது அநுபவப் பிரத்தியட்சமாகும்.

இந்த சாதி பேதம் வைத்துள்ளவர்களுக்கு எதிரிடையான தாழ்ந்த வகுப்பார் அறிவில்லாதவர்கள், தீண்டப்படாதவர்கள் என்று அழைக்கப் பெற்றார் சாதிபேதமென்னும் பொறாமெய்ச் செயலை தங்கள் கூட்டத் தோருள் அநுசரியாமலும் மனிதர்களை மனிதர்களாகப் பாவித்தும் தேகத்தை வருத்திப் புசித்தும் வரும்படியானவர்கள் விவேகிகளா அன்றேல் சாதிபேத மென்னும் பொய்க்கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக்கொண்டு மனிதருக்குள் மனிதர்களைத் தூஷித்து தாழ்ந்தவர்கள், அறிவில்லாதவர்கள், தீண்டப்படா தவர்களென்றுக் கூறித் திரிபவர்கள் விவேகிகளா என்பதை விவேக மிகுத்தவர்களே தெரிந்துக்கொள்ளல் வேண்டும். ஓர்கால் அறிவிலிகளால் தாழ்த்தப்பட்ட மனுமக்கள் விவேகிகளால் உயர்த்தப்படுவார்கள். தாழ்த்தப்பட்டவன் உயர்த்தப்படுவானென்னும் நீதிவாக்கியமும் உண்டு.

- 4:45; ஏப்ரல் 19, 1911 -

72. நிருவாணம் என்பதென்னை?

பாசபந்தக் கயிற்றினால் சிக்குண்டு பலவகைக் கட்டுண்டு துக்க விருத்தியிலிருக்கும் நிலைக்கு (வாணமென்னும்) பெயராம், பாசபந்தக் கயிற்றினை அறுத்தெரிந்து நினைத்தலும் மறத்தலுமாகிய மனமென்னும் பெயரொழிந்து தூங்கலும் விழித்தலுமாகிய நித்திறையை நீக்கி காம, வெகுளி, மயக்கமென்னும் மனமாசு கழுவி சதா விழிப்பும், சதா ஜாக்கிரமுமாகிய இதயம் சுத்தமடைந்த விடமாம். இரவு பகலற்றவிடந் தங்கி களங்கமற்றக் கண்ணாடிபோல் சகலமும் தன்னுள் விளங்கப் புளியம்பழம்வேறு ஓடுவேறுபோல் ததாகதமுற்று மாறிமாறி பிறந்துழலுந் துக்கங்களற்று தானே தானே தத்துவ சுயம்பிரகாசமாய் நித்தியானந்தத்திலிருப்பதே நிருவாண மென்னப்படும். அதன் பலனோ வென்னில் மறுபடியும் பிறவியால் உண்டாம் துக்கத்தை ஜெயித்துக் கொண்டான். அதே தேகத்திலுண்டாம் பிணியையும் ஜெயித்துக்கொண்டான். அதே தேகத்திலுண்டாம் மூப்பையும் ஜெயித்துக் கொண்டான். அதே தேகத்திலுண்டாம் மரணபஞ்ச அவஸ்தைகளையும் ஜெயித்துக்கொண்டான்.

இத்தகையப் பிறவியிலுண்டாந் துக்கங்களையும், பிணியினால் உண்டாகும் துக்கங்களையும், மூப்பினால் உண்டாகுந் துக்கங்களையும் தனது கண்ணாறக்கண்ட சித்தார்த்தி சக்கிரவர்த்தியார் ஆணுக்குப் பெண்ணும், பசிக்குப் புசிப்பும், தாகத்திற்கு நீரும், கோபத்திற்கு சாந்தமும், சூட்டிற்குக் குளிர்ச்சியும் எதிரடையாயிருப்பதுபோல் பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடென்னும் நான்குவகை துக்கநிரோத வழிகளுக்கும் எதிரடையாய சுகமொன்றிருத்தல் வேண்டும். அத்தகைய சுகவழியைக் கண்டறிவதே துக்கநிவாரணமார்க்கமென்று உணர்ந்து தனது ராஜ போகத்தைத் துறந்து பலப்பற்றுக்களை அறுக்கும் வழியிற் சிறந்து சருவ சீவர்களின் மீது அன்புநிறைந்து அரசமரமென்னுங் கல்லாலமரத்தடியில் அமர்ந்து உலக பார்வையற்று உள்விழி பார்வையுற்று சகலமுந் தன்னுள் ளுணர்ந்து நித்தியானந்த நிருவாணம்பெற்று பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடென்னும் நான்கு துக்கங்களையும் ஜெயித்த வல்லபத்தால் காமதகனன், அகாலனென்னும் அரியபெயரேற்று தானே தானே கண்டடைந்த நித்தியானந்த சுக வழியை எண்ணருஞ் சக்கரவாளமெங்கனுமுள்ள மக்களுக் கூட்டி நித்தியானந்தமடை வதற்காக சங்கங்களை நாட்டி பொன் போலிலகு நெஞ்சம் பூரணநிலை பெறுதற்காய் மஞ்சளாடை அணிந்து அகங்காரமம காரங்களை அடக்கற்கு கரபோலாம் பிச்சாபாத்திர மீய்ந்து இராகத்துவேஷ மோகங்களற்று ஒருவேளை அன்னம்புசித்தொடுக்கச்செய்து தன்னைப்போல் இரவும் பகலும் விழித்திருக்கும் ஜாக்கிரநிலையில் விடுத்து சதாநிட்டையில் காமனையுங் காலனையும் செயிக்கு முத்திரைகளை அளித்து இளந்தை நீங்கி முத்தினான் முத்திபெற்றானென்னும் நிருவாணத்தில் நிலைக்கச்செய்து ஏழாவது தோற்றமாம் தேவகதியடைந்து உலகத்திலுலாவும் வரை உலாவி தாயினது வயிற்றிலிருந்து பிறந்த பிறப்பொன்றும், பிறவியை செயித்து தனது சிரசின்வழியே சோதிருபமாக மாற்றிப் பிறக்கும் பிறப்பொன்றுமாய விருபிறப்பாளனென மாற்றிப் பிறக்கும் பிறப்பென்னும் பரிநிருவாணமுற்று என்றுமழியாது தான் அகண்டத்துலாவி நிற்பதுபோல் சங்கத்தைச்சார்ந்த சகலரும் தங்களில் சித்திபெற்று சதானந்தத்தி லயிக்கும்படி செய்திருக்கின்றார் சகல பற்றுக்களுமற்று தேவகதி அடைந்தவர் களை நிருவாணம் பெற்றவர் களென்றும், புளியம் வோடு வேறாகவும் பழம் வேறாகவும் புழுக்களின் கூடு வேறாகவும், விட்டில் வேறாகவும் பிரிவதுபோல் ரூபகாயத்தைவிட்டு தன்ம காயமாம் ஒளிமயமாக வெளிதோன்றி அகண்டத்துலாவுதலைப் பரிநிருவாணமென்றுங் கூறப்படும். இத்தகையப் பேரானந்த சுகநிலை அடைந்தவர்களையே பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடென்னும் நான்குவகைத் துக்கங்களை ஜெயித்தவர்களென்று கூறப்படும். இதுவே புத்ததன்மத்தின் சத்தியவழியும் முத்திப் பேருமாகும். இவற்றிற்கு மாறுபட்ட மற்ற பேதங்கள் யாவும் அசத்தியமும், அசப்பியமுமேயாம்.

- 5:1 ; ஜுன் 14, 1911 -

73. புத்ததன்ம முக்கியச்செயல் துக்கத்தைப் போக்கிக்கொள்ள வேண்டுமென்பதேயாம்

அத்தகையத் துக்கங்கள் யாதெனில், இம்மெய்யில் செய்துவந்த கன்மத்தை மறுமெயில் அநுபவிக்கும் பிறவியினாலுண்டாந் துக்கம் ஒன்று, பிணியினாலுண்டாந் துக்கம் ஒன்று, மூப்பினால் உண்டாந் துக்கம் ஒன்று, மரணத்தினாலுண்டாந் துக்கம் ஒன்று, இந்நான்கு வகையாலும் உண்டாம் துக்கங்களையே பகவன் நான்குவகை துக்க சத்தியமென்றும், நான்குவாய் மெயென்றுங் கூறியிருக்கின்றார்.

அவர் கூறியவற்றிற்குப் பகரமாக பிணி, மூப்பு, சாக்காடென்னும் துக்கங்களைக் கண்டே துறவுபூண்டு நான்குவகைத் துக்கங்களையும் செயித்து நிருவாணமாம் நித்தியானந்தம் பெற்று தானேதானே மெய்ப்பொருளென்னும் புத்தராகி தானடைந்த சுகத்தை தன்மட்டிலும் அநுபவித்துப்போகாது உலகில் தோன்றியுள்ள சருவ மக்களுக்கும் விளக்கி நித்தியானந்தம் பெறச் செய்வதற்காய் உலகெங்கும் சத்திய சங்கங்களை நாட்டி என்றுமழியா நித்தியநிலையில்

விடுத்திருக்கின்றார். அத்தகைய நித்திய நிலைக்கே நான்கு வகை சத்தியமென்றும், நான்கு வாய்மெயென்றும், நான்கு மெய்வாக்கென்றும் மொழிந்துள்ளார்கள். இத்தகைய நான்குவகைத் துக்கங்களே மக்களை மாளாத்துக்கத்தில் துன்புறச்செய்கிறதும் இந்நான்கு துக்கங்களை ஜெயித் தலையே மக்களின் மாளா சுகத்திலாழ்த்தி இன்புறச்செய்கிறதுமாகிய செயல்கொண்டே சித்தார்த்தி சக்கிரவர்த்தி (ஓர் வரி தெளிவில்லை) ஆதிபகவனென்றும், ஆதிமூல மென்றும், ஆதிகடவுளென்றுங் கொண்டாடியதுடன் நாளதுவரையில் அவருட்கார்ந்து நிருவாணம்பெற்ற அரசமரத்தினது அன்பின் மிகுதியால் எங்கெங்கு தங்கள் கண்களிற் காணும் அரசமரங்கள் யாவையும் அன்புறத் தொழுதுவருகின்றார்கள்.

இத்தகைய நான்குவகைத் துக்கத்தை அறியாதவர்களும், அதனது சாதனங்களிற் பழகாதவர்களுமாகி சோம்பேறிகள், துக்கம், துக்கோற்பவம், துக்கோற்பவமார்க்கம், துக்கநிவாரணமே நான்கு வாய்மெயெனக் கூறு வார்கள். அஃது வாய்மெகளைக் கண்டறிரியுஞ் செயல்களேயன்றி வாய் மெயாகாவாம்.

வாய்மெயாவது பிறப்பென்பது ஒருவாய்மெய் எனப்படும். அதனைக் கண்டறிந்து ஜெயிப்பதே செயலாகும். அதாவது பிறப்பே துக்கம் அப் பிறப்பிற்கு மூலமாம் அவாவே துக்கோற்பவம், அவாவைக் கண்டிக்க முயல்வதே துக்கோற்பவ மார்க்கம். அவாவாம் சகல பற்றுக்களையும் அறுத்தலையே துக்கநிவாரணம் எனப்படும். இதுபோல் பிணியின் துக்கத்தையும், மூப்பின் துக்கத்தையும், மரண துக்கத்தையுங்கண்டு ஜெயம் பெறுதலே புத்ததன்மத்தில் பெருங்கருத்தாகும். அங்ஙனமிராது கூறுங் கருத்துகள் யாவும் அபுத்ததன்மக் கருத்துக்களாதலின் அன்னோர் மொழி களைக் கேளாமலும் அவரது கூட்டங்களை சேராமலும் இருத்தலே விசாரிணைப்புருஷர்களுக்கழகாம்.

- 5:2 ; ஜூன் 21, 1911 -

74. புத்ததன்மத்தின் ஆதி சுருக்கமும் அந்த சுருக்கமும்

சித்தார்த்தி சக்கிரவர்த்தி திருமகன் ஊர்வலம் வருங்கால் பிணியாளன் துக்கத்தையும், மூப்பின் துக்கத்தையும், மரண துக்கத்தையுங் கண்டு சகியாது இல்லந்திரும்பி அத்தகைய துக்கங்களுக்காய நிவர்த்திகள் ஏதேனுமுண்டோ வென விசாரித்தும் தனதரச அங்கத்தோர்களால் விளங்காது அத்துக்க நிவர்த்தியை வெளியிற் சென்றேனுங் கண்டறியலாமென்னும் வைராக்கியத் தினால் தனதரிய சக்கிரவர்த்தி பீடத்தையும், இன்பிற்குரிய மனைவியையும், அன்பிற்குரிய மைந்தனையும் இரு பத்தியோராவது வயதில் விடுத்து பலதேச வன வனாந்திரங்களிற் சென்று விசாரித்தும் அந்த துக்கங்களுக்கு வழி சொல்பவர் ஒருவருங் கிடையாது, திகைத்துத் தன்னிற்றானே உணரு முயற்சி யினின்று தனக்குள்ள மனம் ஈதென்றும், அறிவு ஈதென்றும், இவற்றிற் காதார பஞ்சஸ்கந்தங்கள் ஈதென்றுங் கண்டுணர்ந்து க்ஷணத்திற்கு க்ஷணம் தோன்றி தோன்றி மறக்கும் மனதைப்போலவே உலகத்தின் சகல தோற்றங் களும் மாறிமாறி மறைந்து வருகிறதென்றுணர்ந்து கல்லாலமரத்தடியில் வீற்று தனதாராய்ச்சியில் எண்ணி எண்ணி மறக்கு மனதை மறக்கவிடாமலும், தூங்கி தூங்கி விழிக்குஞ்செயலைத் தூங்கவிடாமலும் உலகபற்றில் தாவிதாவி பற்றுமாசையிற் பற்றவிடாமலும், உள்ளும் புறம்பும் ஓடும் மூச்சை தாயின் வயிற்றுள் கட்டுண்ட குழவிபோல் ஓடவிடாமலும் நின்று இராகத் துவேஷமோக மனமாசகன்றவிடத்து மாரனென்னுங் காமத்தையும், காலனென்னும் மரணத்தையுஞ் செயித்து நிருவாணமென்னும் தேவகதி பெற்று சருவமும் தன்னுள் தோன்றுதலால் சகலமுமுணர்ந்த முனிவனென்றும், யாதாமொரு குருவுமின்றி பேரின்ப உணர்வை தன்னிற்றானே கண்டபடியால் ஓதாமல் உணர்ந்த முனிவனென்றும் தோன்றி கெடும் பொய்யாயப் பொருட்கள் யாவையுங் கழற்றி என்றுங் கெடா மெய்ப்பொருளாகி ததாகதமுற்றபோது புத்தனென்னும் பெயரைப்பெற்று களங்கமற்றக் கண்ணாடியாம் ஆருடத்தி னிலைத்து சீவர்கள் மாறிமாறி பிறப்பதினா லுண்டாந் துக்கத்தையுங் கண்டறிந்து

தான் ஊர்வலத்தில் முன்பு கண்ட பிணியின் துக்கத்திற்கும் மூப்பின் துக்கத்திற்கும், மரணதுக்கத்திற்கும் பிறவியே மூலகாரணமென்றறிந்து அப்பிறவிக்குக் காரணம் அவாவென்றுணர்ந்து அவாவையறுத்தற்காய சத்திய தன்மங்களாம் திரிபேதவாக்கியங்களென்னும் திரிசீல திரிபீடவாக்கியங் களையும், குடும்பிகள் அநுசரிக்கவேண்டிய பஞ்சசீல வாக்கியங்களையும், சங்கத்து சமணர்கள் அனுசரிக்க வேண்டிய அட்டபாக்கிய வாக்கியங்களையும் அருளி தானெவ்வகையாகப் பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடென்னும் நான்கு வாய்மெயை உணர்ந்து மாரனென்னும் காமத்தையும், காலனென்னும் மரணத்தையுஞ் செயித்து என்றுங் கெடாத தெய்வகதி பெற்று நித்திய சுகத்தில் நிற்பதுபோல ஏனைய மக்களுந் தங்களுக்குத் தாங்களே பாபத்திற்காய கூலியாம்மரணத்தைப்பெற்று பிறவிக்காளாகாது புண்ணியபலனாம் நித்திய சீவனைப்பெற்ற பிறவியை ஜெயிக்கும்வழியில் விடுத்திருக்கின்றார். இது வே புத்தரது தன்ம சுருக்கமாகும்.

அந்த சுருக்கமோவென்னில் பிறவியாலுண்டாம் சதா துக்கங்களை ஒழித்து சதா வானந்தத்திலிருப்பதே அந்த சுருக்கமாகும். மற்றப்படி ஆடு, மாடு, குதிரை, கழுதைகளைப்போல் உண்டுழைத்து சாவதுபோல் மக்களும் சாகவேண்டுமென்பது புத்ததன்மமன்று. அத்தகைய சீவராசிகளைப்போல் அஃறிணையில் வகுக்காது மக்களை உயர்திணையில் வகுத்திருக்கின்றார்கள். ஒவ்வோர் மக்களும் பொய்யை ஒழித்து மெய்யரானபோது மெய்கண்ட தேவர்களென்றும் புத்தர்களென்றும் அழைக்கப்படுவார்கள். சித்தார்த்தியவர்கள் செத்து செத்து பிறக்கும் சாவின் துயரத்தை தானே ஜெயித்து புத்தரென்னும் பெயர் பெற்றதுமன்றி உலகெங்குஞ் சங்கங்களை நாட்டி சாகுந் துக்கத்தை நீக்கும் வழிகளை ஊட்டியுள்ளபடியால் அவரை விவேக மிகுத்தப் பெரியோர்கள் பிரபல பஞ்சகாவியங்களில் ஒன்றாம்,

மணிமேகலையில் 'சாதுயர் நீக்கிய தலைவன் தவமுநி' எனக் கொண் டாடியிருக்கின்றார்கள். பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடென்னும் நான்கு வகைத் துக்கங்களைக் கண்டுணர்வதே புத்தன்மத்தின் ஆதியாகும். நான்குவகை துக்கங்களை ஜெயிப்பதே புத்தன்மவந்தமாகும்.

இத்தகைய சத்தியதன்மத்தில் நடக்கும் பாதை நெருப்பின் ஆறும், மயிர் பாலமும் போலுள்ளபடியால் அம்மத்திய பாதையில் நடப்பதற்கு இயலாத சோம்பேறிகளாகிய நாம் நடந்துசென்றவர்கள் போலபிநயித்து சத்தியதன்மத்தைக்கெடுப்பதழகன்றாம். மேற்கருவி சோதனைகளுக்கு உட்கருவி சோதனை பேதமுண்டாகையின் கருவியால் கருத்தினது நிலைகண்டறிவது கஷ்டமாகும். கருத்தினது நிலையில் ஆரூடமென்பது சகலருள்ளத்தில் எண்ணும் எண்ணங்களையும், புறதேசமக்கள் சங்கதிகளையும் தங்கள் ஞானக்கண்ணினால் கண்டு கூறுவதாகும். அதன் சுருக்கங் கண்டுதெளிதற்கு தற்காலத்திய (இப் னாட்டிசமென்னும்) செயலே சான்றாம். கருத்திலுயர்ந்த ஞானிகளின் விழிபட சகலரோகங்களு மகலுமென்பதற்கு தற்காலம் நிறைவேறிவரும் (மெஸ்மரிசமென்னும்) செயலே சாட்சியாகும். இத்தகையத் தற்கால செயல்களையும் பூர்வ ஞானங்களையும் அதன்த னுற்பவங்களையும் கண்டறியாது நாங்களும் புத்ததன்மங் கூறவந்தோமென்று வெளிவராது அஷ்டாங்க மார்க்கத்தில் நடந்து சாதனத்தில் லயித்து னிலைத்தபின்னர் சத்தியதன்மத்தைக் கூறும்படி வேண்டுகிறோம்.

- 5:3 ; சூன் 28, 1911 -

75. சத்து நீங்கியபின் மனிதன்

வினா : மனிதன் சத்துநீங்கியப்பின் அப்பிணத்திற்குச் செய்யவேண்டிய தென்ன, இரண்டாவது நாள் பால் தெளிக்க வேண்டியதென்ன. பிணமெடுத்து செல்லுங்கால் அரிச்சந்திரன் கல்லை சுற்றவேண்டியதென்ன. பதினாறாவது நாள் கருமாதி செய்யவேண்டு மென்பதென்ன. இவைகள் பூர்வத்திலிருந்து நிறைவேறிவருகின்றதா இல்லையா இவைகளை தெளிவிக்க வேண்டியது.

பா. முனிசாமி, தா. சண்முகம், து. கனகசபை, புதுப்பேட்டை..

விடை : புதுப்பேட்டை அன்பர்களே, தாங்கள் வினவிய சங்கைகள் யாவும் பூர்வச் செயல்களேயாம். மனிதன் பிணமாயப்பின் செய்யுஞ் செய்கைகள் யாவும் பயனில்லை யென்பது புத்ததன்மத் துணிபு.

"நார்த்தொடு தீர்க்கிலென் நன்றாய் தடக்கிலென் / பார்த்துழி பெய்யுலென் பல்லோர் பழிக்கிலென் தோர்ப்பையினின்று தொழுதுர செய்தூட்டுங் / கூத்தன் புரப்பட்டக்கால்"

பிணமாயப்பின் நாரினாற் பிரிகட்டி தெருவிலிழுத்தாலென்ன, பாடை கட்டி புட்பஞ் சோடித்து அலங்கிருதஞ் செய்தாலென்ன, பலர் புகழ்ந்து கொண்டாடினாலென்ன, பல ரிகழ்ந்து தூற்றினாலென்ன வென்று கூறுவது பௌத்த சங்கத்தோர்களின் தெளிவாயினும்;

மனிதன் இறப்பது இழிவு சகலபற்றுக்களுமற்று பரிநிருவாணமடைவது மகிழ்வென்பதை விளக்கி உச்சாக முண்டாக்குமாறு விவேகமிகுத்த உபாசகர்கள் சிலக்கிரியைகளை வகுத்து வைத்திருக்கின்றார்கள். அதாவது மனிதன் ஆன்மனென்னும் புருஷனென உலாவித் திரியுமளவும் மனமென்னுந் தீபம் சிரசி லொளிர்ந்துக்கொண்டிருப்பதியல்பாம்.

ஞானக்கும்மி

உச்சிக்குநேரே உண்ணாவுக்குமேல் நிதம் / வைச்சவிளக்கு யெரியுதடி
அச்சுள்ள விளக்கே வாலையடி / அவியாம லெரியுது ஞானப்பெண்ணே.

அத்தகைய உள்ளொளி மறைந்து சத்துப்போனான் இறந்தானெனும் இருளடைந்துப்போனான் சகலத்தையு மறந்தானென்னும் மரணமடைந்தா னென்றவுடன் உச்சியிலிருந்தசோதிக்கு பதிலாக பிணத்தின் சிரசண்டை தீபத்தை ஏற்றி வைக்கும்படிச்செய்தும் பாசபந்தக் கட்டுக்கள் விடாது மரணமடைந்த படியால் பெருவிரல்களை சேர்த்துக் கட்டும்படிச் செய்து வருவதும் வழக்கமாகும். இதை அநுசரித்தே தாயுமானவரும் தனதுபாடலில் பரி நிருவாணமடைதற்கு "நிகளபந்தக் கட்டவிழ்ப் பாரே"யென்றும் பாடியிருக்கின்றார்.

பிரேதத்தை எடுத்துச்சென்று தகனஞ்செய்வதே பூர்வ வழக்க மாயிருந்தது. ஆயினும் அக்காலத்தில் இன்னயிடந்தான் சுடலைக்குரிய பூமியென்று குறிப்பிடாமல் எங்கெங்கு வெளியாய பூ மிகளுண்டோ அங்கங்கு பிரேதத்தைக் கொண்டுபோய் தகனஞ்செய்வது வழக்கம். செல்லுமிடங்களில் தற்கால மாச்சிசுமிறாது நெருப்புங் கிடையாததால் வீட்டிலேயே நெருப்பைக் கனயவைத்து ஓர் சட்டியிலிட்டு கயிறுகட்டி எடுத்துப்போய் கட்டை வரட்டி அடுக்கி இறந்தோன் மைந்தனையேனும் உரிய பந்துக்களையேனும் விட்டு தீ மூட்டுமுன்பு பிறவியை ஜெயிக்காது மரணத்திற்குள்ளாயபடியால் அரிசியும் நீரும் உன்னைவிட்டகலவில்லை என்னும் இழிமொழிகூறி அரிசியிட்டு தணல் மூட்டிவிட்டு இல்லஞ்சேர்ந்த மறுநாள் தகனஞ்செய்த தேகத்தை தண்ணீர்விட்டணைக்காது பாலால் அவிக்கவேண்டுமென்னும் அன்பு கொண்டு பாலினாலும் இளநீரினாலும் தகனகுண்டத்தை அவித்து அஸ்தி களைப்பொருக்கி சமுத்திராதிலேனும் பிரேதக் கட்டிடமேனுங் கட்டிவிடுவது வழக்கம்.

மற்றும் சங்கத்தைச்சேர்ந்த சமண முநிவர்களுள் அரசர் களாயிருப்பினும், விவேகமிகுத்தக் குடி களாயிருப்பினும் (சம ஆதி) சமாதி யென்னும் ஆதியாம் புத்தபிரானுக்கு சமாதையாய் உச்சியின் வழியே சோதி மயமாய் மாற்றிப்பிறக்குப் பரிநிருவாணமடைவதற்காய் வீட்டிற்குங் காட்டிற் கும் மத்தியிலுள்ளத் தங்களது பூமியில் கல்லறையொன்று கட்டி கற்பூரமிட்டு சங்கத்தவர்களும் ஊரிலுள்ள பெரியோர்களும், சம ஆதி அடையப் போகின்றவர்களும் இவ்விடஞ்சென்று கல்லறைக்குள் இரங்கியவுடன் மற்றோர் சதுரக்கல்லினால் மேலே மூடி மணலால் மறைத்துவிட்டு அவரவர் களில்லஞ்சேர்ந்து பதினைந்தாம் நாள் சங்கத்தோரும் உபாசகர்களும் யாதொரு வாகனமின்றி மேறை மரியாதையுடன் அவ்விடம் நடந்து செல்லுவதை நடப்பென்றும், அன்றிரவு முழுவதும் அவ்விடம் விழித்திருந்து ஞான விசாரிணைப்புரிவதை சமாதிபோகமென்றும், விடியகாலத்திலெழுந்து

கல்லறையருகிற் சென்று மேல்மூடியுள்ள சதுரக்கல்லை பேர்த்தெடுப்பதை கல்லெடுப்பென்றும் வழங்கி அதை எடுத்துப் பார்த்தவுடன் சிரசில் துவாரங் காணுமாயின் மரணத்தை ஜெயித்து நிருவாணமுற்றார் ஆதிக்குச் சமமானாரென்று ஆனந்தக்கூத்தாடி அவர் சமாதியாய ஆதி தன்மகன்மம் அதாவது கன்ம ஆதியெனக் கூறி ஏழைகளுக்கு அன்னதானம் வஸ்திரதானஞ் செய்து அவ்விடத்திலேயே ஓர் அறப்பள்ளியாம் வியாரங் கட்டி சாது சங்கத்தைச் சேர்த்து ஞானசாதன சமண நிலையில் இருப்பதியல்பாம்.

கல்லை எடுத்துப்பார்த்தவுடன் சிரசில் துவாரந் தோன்றாது சாய்ந்துக் கிடக்குமாயின் வந்தவர்கள் யாவருந் துக்கித்து சமாதியடைந்தாரென்னும் புகழ்ச்சிக்கு வராது செத்தானென்னும் இகழ்ச்சிக்கு வந்தபடியால் இழிவுக்கு போனோமென்பதை மாற்றி இழவுக்குப் போனோமெனக் கூறி அரசபுத்திர னாயின் தனது தந்தை நிருவாணம் பெற்று ஆண்பிள்ளையாகாமல் மரண மடைந்து பிறவிக்கேகும் வீண்பிள்ளையாய் இழிவடைந்தபடியால் தனது முடியைக் கழட்டி எறிந்துவிட்டு மீசையை சிரைத்து இழிவுக்குப் போனோமென சிரசில் நீர்விட்டுக்கொள்ளுவது வழக்கம். உடனே தனது பந்துமித்திரர்கள் கூடி அதே பதினாறாவது நாள் மாலையில் புத்திரனை அழைத்து உனது தந்தை வீண்பிள்ளையாகி மரணமடைந்துவிட்டபோதினும் தாங்கள் முடியைத் தரித்துக்கொண்டு சங்கத்தைச் சாரும் முப்பதாமாண்டு நெருங்கியவுடன் சமணமுநிவராகி சாத்துயர் நீக்கிக்கொள்ளவேண்டு மென்னும் ஆசிகூறி கழட்டியெறிந்த முடியை மைந்தன் சிரசில் மறுபடியும் சூட்டிவிடுவது இயல்பாம். இத்தகைய செயல்கள் யாவும் மக்களுக்கு உச்சாகத்தை உண்டுசெய்து ஞானயீடேற்றமடைவதற்கேயாம்.

இஃது பூர்வ பௌத்த தன்மச் செயல்களாயினும் தொன்றுதொட்டு வழங்கிவந்தவற்றை மறவாது நாளதுவரையில் இத்தேசக் குடிகள் ஆதிகன்மமென்றும், கன்ம ஆதியென்றும் வழங்கி வருகின்றார்கள். வழங்குஞ் செயல்கள் யாவும் ஞானவீரச் செயலாதலின் புத்தசங்கஞ்சாராதவர்கள் இவற்றைச் செய்வதால் யாதொரு பயனுமில்லை.

அரிச்சந்திரனென்னும் ஓர் கற்பனா கதையை உண்டுசெய்து வீரவா கென்னுமோர் பறையன் சுடுகாடு கார்த்திருந்தானென்று பௌத்த சக்கிர வர்த்தியை இழிவுகூறிவைப்பதுடன் பறையனென்னும் பெயரை நிலைக்கச் செய்து காலமெல்லாம் அவனைத் தலையெடுக்கவிடாமல் உயிரோடுள்ள வரையிலுங் கெடுத்துவருவதன்றி செத்தப் பின்பும் அவ்விழிவு அவனை மாறவிடாதிருப்பதற்காக சத்துருக்களால் அவ்வரிச்சந்திரனென்னுங் கல்லை நட்டு பொய்க் கதையை மெய்க்கதையென நம்பி நாளெல்லாம் இழிவடைந்து போகத்தக்க வழியில் விடுத்திருக்கின்றார்கள்.

அவர்களது மித்திரபேதமும் வஞ்சகச் செயலுமறியா பேதை மக்கள் அவற்றை மெய்யென நம்பி மோசம்போய்விட்டார்கள். பூர்வ பௌத்ததன்ம காலத்தில் அரிச்சந்திரனென்னுங் கதையுங் கிடையாது அக்கல்லுங் கிடையாது.

வேஷப்பிராமணர்களும் பொய்மதஸ்தர்களும் தோன்றியபின்னரே பௌத்தர்களைக் கெடுத்து தங்கள் மதக்கடைகளைப்பரப்பி சோம்பேறி சீவனஞ் செய்வதற்காக வனந்தம் பொய்க்கதைகளை உண்டுசெய்து பௌத்தர்களை தாழ்ச்சியடைய வைத்திருக்கின்றார்கள். பூர்வபௌத்த கால பேதங்களையும், தற்கால பேதங்களையும் இந்திரதேச சரித்திரத்தில் தெளிவாகத் தெரிந்துக்கொள்ளலாம்.

- 5:4 ; ஜூலை 5, 1911 -

76. கீழ்ச்சாதி மேற்சாதி என்போர் வியாஜியம்

நமது பத்திரிகையில் இவ்வியாஜியத்தைப் பற்றி எழுதியிருந்தோம். அதன் சுருக்கமாவது, சித்தூர் ஜில்லா வாலாஜாப் பேட்டை காவேரி பாக்கத்தை அடுத்த வேகாமங்கலமென்னுங் கிராமத்தில் அம்மன் கோவிலில் பொங்கலிடும் விஷயமாக மேற்சாதி என்போர்கள் கீழ்ச்சாதி என்போர்களை பலவகைத் துன்பங்களைச்செய்து அவர்களுடைய பொங்கற்பானைகளையும் உடைத்து வீடுகளையும் நாசஞ்செய்துவிட்டதின்பேரில் ஏழைக்குடிகள் யாவருங்கூடி,

அரக்கோணத்திலுள்ள செக்கண்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஏப்பிரல் மாதம் 27ம் நாள் பிரையாதை டாக்கல்செய்து ஜூன் மாதம் 28ம் நாள் வரையில் நடந்துவந்த வியாஜியத்தில் மாஜிஸ்டிரேட்டையே ஏழைக்குடிகள் தங்கள் கிராமத்திற்கு அழைத்துச்சென்று பொங்கல் வைத்த இடங்களையும் பானைகள், உடைந்துகிடப்பதையும் நேரில் பார்த்துவிட்டு வந்தும் வியாஜியத்தை தள்ளிவிட்டிருக்கின்றார்.

அந்த ஏழைக்குடிகள் வாசஞ்செய்யும் இடத்திற்கும், அரக்கோண மாஜிஸ்டிரேட் கோர்ட்டிற்கும் 28 மைல் தூரமிருக்கின்றது. இவ்வளவு தொலைவிலிருந்து ஏழைக்குடிகள் இரண்டு மாதமாக நடந்தும் அவர்களது வியாஜியம் தள்ளுபடியானது மிக்கப் பரிதாபமேயாம். மேற்சாதி என்பவர் களாலடிப்பட்டும் தங்கள் வீடுகளை இழந்தும் கூலிகளை இழந்தும் இரண்டுமாதகாலம் நடந்தும் நியாயம் கிடையாதுபோனபடியால் மேலதிகாரி களிடம் போயிருக்கின்றார்கள். விவரம் பின்னால் வெளியிடுவோம்.

- 5:4 ; சூலை 5, 1911 -

77. தாழ்ந்தசாதியோரை வுயர்த்தப்போகின்றோமென்னும் பெரியசாதியோர் பவுஷைப் பாருங்கள்.

அரக்கோணத்தைச்சார்ந்த வளர்புரம் எனுங் கிராமத்தில் வாழும் ஏழைக்குடிகள் தங்கள் சுகத்திற்குத்தக்கவாறு வீடுகளின் முன்புறம் சிறியத் திண்ணைகள் கட்டி ஒழிந்தநேரத்தில் உழ்க்கார்ந்திருப்பது வழக்கம். அந்த சிறியத்திண்ணைகளின் மீது உழ்க்கார்ந்திருப்பதற்கு மனஞ்சகியாத பெரியசாதிகளென்போர் இப்போது சர்வே எடுக்கும் உத்தியோகஸ்தர்களைக் கொண்டு அத்திண்ணைகளை எடுத்துவிடும்படியான ஏதுக்களைச் செய்து வருகின்றார்களாம். பெரியசாதிகளென்போர் வாசஞ்செய்யும் பெரியசாதித் திண்ணைகளை நோக்கிவரா சர்வே சிறியசாதியார் திண்ணைகளை மட்டிலும் எவ்வகையால் உராய்ந்துவருகின்றதோ அவற்றைக் கண்டு வெளியிடுவோம். திண்ணையின் மீது உழ்க்கார மனஞ் சகியாதோர் தூக்கிவிடப்போகின்றார் களாமே.

- 5:4 ; சூலை 5, 1911 -

78. மெய்ப் பொருள்

வினா : தங்களரிய தமிழன் பத்திரிகையில் மெய்ப்பொருள் மெய் பொருளென எழுதிவருவதைக் காண்கின்றேன். அஃது மெய்ப்பேசுத லென்னும் ஒலிவடிமொழியா அன்றேல் குறிப்புரை பொருள் நிலைமொழியா குறிப்புரை பொருளாயின் தோற்றும் பொருளா, தோற்றாப் பொருளா இவைகளை தெளிய விளங்கும்படி வேண்டுகிறேன்.

வீ. தங்கவேலு பாம்பே.

விடை : மெய்ம்மொழி என்பது வொலிபற்றியதும், மெய்ப்பொரு ளென்பது குறிப்புரையுமே யாகும். இவற்றுள் சமண முனிவர்களின் கருத்தோ வென்னில் க்ஷணத்திற்கு க்ஷணந் தோன்றிகெடும் பொருட்களை பொய்ப் பொருளென்றும், அவனவனுக்குள் தோன்றி கெடாத பொருளை மெய்ப்பொருளென்றும் வகுத்துள்ளார்கள். பற்றற்ற நிலையாம் நிருவாணத் தில் தோன்றி கெடா உள்ளொளியாம் மெய்ப்பொருளை தன்மகாயமென்றும், உண்மெயென்றும், அந்தர் அங்கமென்றும், அத்துவிதமென்றும், அருள்வடிவென்றும், அசரீரியென்றும் வரைந்துள்ளார்கள்.

அறமென்னும் மெய்யறத்தையும், பொருளென்னும் மெய்ப்பொரு ளையும், இன்பமென்னும் மெய்யின்பத்தையுடைய வீடுபேறாம் நிருவாண முற்றோனை மெய்யனென்றும், மெய்கண்ட தேவனென்றும் மறுபிறவிக்கேகா நெறியில் நின்றவனென்றுங் கூறப்படும்.

திரிக்குறள்

கற்றீண்டுமெய்பொருள் கண்டார் தலைப்படுவர் / மற்றீண்டு வாரா நெறி.

தனக்குள் அநுபவமுங் காட்சியுமாயதே மெய்ப்பொருளாகும். மற்றவை

யாவும் பொய்ப் பொருளேயாம். தன்னிற்றானே கண்டதைக் கூறுதல் மெய் மொழியாகும். காணாது கூறுதல் பொய்மொழியேயாகும்.

- 5:5 ; சூலை 12, 1911 -

79. வைத்திய நூல்

வினா : புத்தபிரான் வைத்திய நூல் என வெளியாயிருக்கின் அந்நூலின் பெயர்,விலை, கிடைக்குமிடம் முதலியவைகளை தயைபாலித்தறிவிக்க வேண்டும்.

சி. முத்துக்குமாரசாமிப்பிள்ளை, P.S.I. நாதமுநி, J. தீர்த்தகிரி உபாத்தியாயர்

விடை : சாக்கைய முநிவர் தோன்றி வடமொழியின் வரிவடிவை பாணினியாருக்கும், தென்மொழியின் வரிவடிவை அகஸ்தியருக்குமளித்துப் பரவச்செய்து ஞான சுருக்கத்தையும், நீதிசுருக்கத்தையும், கணித சுருக்கத்தையும் வைத்தியமாம் ஓடதி சுருக்கத்தையுந் தனதடியார்களுக்கு விளக்கியுள்ளது வடமொழியிலுள்ள சரகநூற்களால் விளங்கும்.

ஈதன்றி பரத்துவாசரென்னுங் குன்மநோயாளருக்கு ஓடதி சுருக்கங்களை போதித்து ஓர் மலையில் வைத்தியசாலை கட்டி சகல முநிவர்களும் பழகியது கொண்டு நாளதுவரையில் அம்மலையை வைத்திய மலையென்றே வழங்கி வருகின்றார்கள்.

நாம் தற்காலம் அச்சிட்டுவரும் பூர்வத்தமிழொளியாம் புத்தரது ஆதிவேதத்தில் பரத்துவாசருக்குப் போதித்துள்ள வைத்திய சுருக்கத்தை எளிதில் அறிந்துக்கொள்ளலாம்.

- 5:5 ; சூலை 12, 1911 -

80. பஞ்சபாதகங்களுக்கெதிரடை பஞ்சசீலங்களேயாம்

பஞ்சபாதகங்கள் என்பவை யாதெனில் பொய்சொல்லுதற்பாவம். சீவயிம்சை செய்யுதற்பாவம், அன்னியர்பொருளை அபகரித்தல் பாவம், பிறர் மனையாளை இச்சித்தல் பாவம், மதியை மயக்கும் மதுவருந்துதல் பாவம்.

இத்தகைய பஞ்சபாதகங்களை அகற்றுவதையே பஞ்சசீலமென்னப் படும். இப்பஞ்சசீலத்தையே மந்திரமாகக் கொண்டு சிந்திப்பதும், அச்சிந்தனை மேறை நடப்பதுமே பௌத்தவுபாசகர்களின் செயலாகும். இதற்கு மேல் சத்தியசங்கத்தைச் சார்ந்து மனமாசகற்றும் அஷ்டாங்க மார்க்கத்தில் நடப்பது சமணமுநிவர்களின் செயலாகும்.

அஷ்டாங்க மார்க்கத்தில் நடந்து இராகத்துவேஷ மோகங்களாம் காமவெகுளி மயக்கங்களை அறுத்து பிறவிக்காளாக்கும் நித்திறையை நீக்கி இரவுபகலற்றவிடமாம் நிருவாணத்தில் லயித்து செல்லல், நிகழல் வருங்கால மூன்றினையும் உணர்ந்து பிறப்பினால் உண்டாந் துக்கம், பிணியினாலுண்டாந் துக்கம், மூப்பினாலுண்டாந் துக்கம் மரணத்தாலுண்டாந் துக்கங்களாகிய நான்கையும் ஜெயித்து அறஹத்துக்களென உலாவி சகல சங்கத்து சமணமுநி வர்களுக்கும் பொய்ப்பொரு ளீதென்றும், மெய்ப்பொரு ளீதென்றும் விளங்கச் செய்து பொய்யாய வநித்தியத்தை ஒழித்து மெய்யாய நித்தியத்தி னிலைத்து புத்தராவார்கள். இவர்களையே திராவிட பாஷையில் மெய்யரென்றும், மெய்கண்ட தேவரென்றும், மகடபாஷையில் புத்தரென்றுங் கூறப்படும்.

இவர்கள் என்றுமழியாது சுயம்பிரகாசமாய் அகண்டத்துலாவும் ஆனந்த நிலைக்கே புத்தேளுலகமென்றுங் கூறப்படும். நட்சேத்திரவாசிகளும் இவர்களே. இவர்கள் வாசஞ்செய்யும் அழியா நிலைகளையே நட்சேத்திரங் களென்றுங் கூறப்படும்.

இச்செயல்களையே பௌத்தர்களின் நீதிநெறி ஒழுக்கங்களென்றும், பஞ்சசீலங்களென்றும், அஷ்டாங்கமார்க்கங்களென்றும் அழியா அட்டயோக பாக்கியங்களென்றுங் கூறப்படும். இவற்றிற்கு எதிரிடையாயச் செயலுடைய தன்மங்கள் யாவும் அதர்ம்மங்களென்றே கூறப்படும்.

அதாவது பஞ்சசீலம் பெற்று பௌத்தனானபோதினும் கெடுதலை யாயப் பொய்யை சொல்லலாகாது. சாதாரணமானப் பொய் பேசுவதினால் என்னக் கெடுதியென்று கேட்பார்கள். அப்பியாசங் கூசாவித்தை என்பதுபோல் சாதாரணப் பொய்யே கேட்டிற்கும் பொய்யாகத் தோன்றாவோ வென்னில், ஏறுக்கு மாறாகப் பேசுவார்கள்.

கொலைசெய்வதில் மனிதர்களை மட்டிலுங் கொலை செய்யலாகாது. மற்றய சீவராசிகளைக் கொலைச்செய்வதால் யாதுகேடென்பார்கள். சீவர் களைத் துள்ளத் துடிக்கக் கொலைசெய்துவரும் அப்பியாசத்தால் மநுக்களைக் கொலைச்செய்வது எளிதாகுமல்லவோ வென்னில் சீவகாருண்யத்தை மறந்து கொலையை இருவகையாகப் பாவித்துப் பேசுவார்கள்.

களவு செய்யாதிருங்கோளென்பதில் ஆபத்து நேர்ந்தபோது அன்னியன் பொருளை அபகரிக்கலாமென்பார்கள். அன்னியனுக்கோர் ஆபத்து நேரிட்டு உன் பொருளை அவன் அபகரிப்பானாயின் நீவிரவனை மன்னிப்பீரோ வென்றால் மவுனஞ்சாதிப்பார்கள்.

அன்னியன் மனையாளை இச்சிக்கலாகாதென்பதில் அவளே இச்சிப் பாளாயின் யாது கேடுண்டாமென்பார்கள். அதுபோல் உன் மனையா ளொருவனை இச்சிக்க அவன் நெருங்குவானாயின் உன் மனம் சகிக்குமோ வென்னில் மாறு கூறமாட்டார்கள்.

மதிமயக்கும் மதுவை அருந்தலாகாதென்பதில் பிணியுண்டாயபோது ஏன் சாப்பிடலாகாது. சந்தோஷ காலத்தில் ஏன் சாப்பிடலாகா தென்பாரு முண்டு. பிணிகாலத்திற்கு ஒளடதமும், சந்தோஷ காலத்திற்கு ஈகையையே பௌத்ததன்மங் கூறியிருக்க பிணிக்கும் சந்தோஷத்திற்கும் மதுவை அருந்தலா மென்பது மதிமயக்கேயாம்.

பஞ்சசீலங்களை தங்களிஷ்டம்போல் பஞ்சபாதகத்துக் குள்ளாக்கி விடுகின்றவர்கள் யதார்த்த பௌத்தர்களாகமாட்டார்கள். பௌத்தத்துள் மறைந்துள்ள யதார்த்த இந்துக்களேயாவர்.

– 5:6 ; சூலை 19, 1911 –

81. மானிடனென்பவன் யார்

மானமீதென்றும், யீனமீதென்றும் உணர்ந்து சாந்தம், அன்பு, ஈகை இம்மூன்றையும் நிறப்புகிறவனெவனோ அவனே மானிடனாவன். அம் மூன்றும் நிறம்பியவன் தேவனாவன்.

மானமீதென்றும், யீனமீதென்றும் உணராது மிருகத்திற்கொப்பாய துற்செயலை உடையவன் மானிடருள் மிருகமேயாவன். அவன் தன்னைப் பெரியசாதியோனென்று உரைத்தபோதினும் அவன் சாதிக்கும் மானமீனமற்ற செயலால் அவன் கீழ்ச்சாதியோனேயாவன்.

அத்தகையக் கீழ்ச்சாதியாயச் செயலையுடையவன் தன்னை மேற் சாதியென எவ்வகைக் கூறி புலியானது பசுவின்தோலை மூடித்திரிவதுபோல் திரியினும் தனது குணத்தாலும், துற் செயலாலும் விவேகிகள் புலியென்று ணர்ந்துக் கொள்ளுவதுபோல் தங்களை மேற்சாதியென உயர்த்தி திரிந்த போதினும் அவர்களுக்குள்ள துற்குணத்தாலும், துற்செயலாலும் மிலேச்சர்களென்னும் கீழ்ச்சாதிச்செயல் தானே விளங்கிப்போம்.

தங்களுக்குத்தாங்களே பெரியசாதியென உயர்த்திக்கொண்டபோதினும் அவனது துற்செயலைக்கொண்டு மிலேச்சனென்பதும், கீழ்ச்சாதியோ னென்பதும் அவனவன் சாதிக்கும் சாதனங்களால் கீழ்ச்சாதியோனென்றே சொல்லாமல் விளங்கும்.

கொலைபாதகர்கள் யாவரும் பெரியசாதி, குடிகெடுப்போர் யாவரும் பெரியசாதி, கள்ளர் யாவரும் பெரியசாதி, குடியர் யாவரும் பெரியசாதி, விபச்சாரிகள் யாவரும் பெரியசாதி எனச் சொல்லித்திரிந்தபோதினும் தன்மசாஸ்திர விதிப்படி துஷ்டச்செயலை உடையவர்கள் யாவரும் கீழ்ச்சாதி கீழ்ச்சாதிகளேயாம்.

கொலை செய்யாமெய், பொய்சொல்லாமெய், களவுசெய்யாமெய், பிரர் மனையாளை இச்சியா மெய், மதியை மயக்கும் மதுவருந்தாமெய் ஆகிய சுத்ததேகிகளாக வாழ்வோர்கள் யாவரும் மேற்சாதிகளேயாம்.

அங்ஙனமின்றி பிச்சையேற்பவர்கள் யாவரையும் பெரியசாதியோரென் றழைத்தும், பூமியை உழுது பயிர்செய்துண்பவர்களை சிறியசாதி களென்றழைத்தும், நியாய விரோதமாக வழங்கிவருஞ் செயலைக்கொண்டு கொலை, களவு, கட், காம முதலிய துற்செயலற்ற தண்மெயுடையோனை பிராமண னெனச் சொல்லும் பெயர் நீங்கி கொலைப்பாதகனை பிராமணன் பிராமணனென்ன வழங்கிவருகின்றார்கள்.

அதாவது பூர்வத்தில் ஒரு ஸ்திரீயானவள் இலட்சம் பொன்னுக்கு மேற்பட்ட சம்பத்துடையவளாயின் அவளையே இலட்சுமி இலட்சுமியென்று வழங்கிவருவார்கள். தற்காலமோ மலமெடுக்குங் குப்பைக்காரிகளை இலச்சி இலச்சிமியென வழங்கிவருவதுபோல் முன்னிலைச்சுட்டில் பொய்யன், கள்வன், கொலைஞனெனத் தெரிந்தும் அவனை பிராமணனெனக் கூறித் திரிவது கண்டுபடிக்கா குணமேயாம்.

கலைநூல்களைக் கண்டு படித்திருப்பார்களாயின் பிராமணனென்னும் பெயர் யாருக்குரியது, எப்பாஷையிலுள்ளது, அந்தணனென்னும் பெயர் யாருக்குரியது எப்பாஷையிலுள்ளதென ஆராய்ந்து கொலைச்செயல் நிறைந்தவன் பெயர் கொலைபாதகனென்றும், சீவகாருண்யம் நிறைந்தவன் பெயர் பிராமணனென்று உணர்ந்து தாங்கள் தெளிவடைந்து கலைநூல் போதிக்கப்பட்ட குருக்களை விசுவாசித்தும், கள்ளர் பயம், துஷ்டர்பயம், மிருக பயம், முதலியவைகளை அகற்றிக் காப்பாற்றும் அரசரை விசுவாசித்தும் சீர்பெறுவதுடன் தங்களை அடுத்தக் குடிகளையும், குருவிசுவாசம் இராஜ விசுவாசத்தில் நிலைக்கவைத்து சீர்படுத்துவார்கள்.

கலைநூல் கல்லாக் குறைவால் கொலைஞரையும், பிராமணரெனப் புகழ்ந்து அவர்களுடன் தாங்களும் இராஜதுரோகிகளென்று அழைக்கும் வழியில் திகைக்கின்றார்கள். இத்தகையத் திகைப்பிற்றெளிந்து பிராமணனென்னும் பெயர் யாருக்குரியதென்றுணர்ந்து இராஜ விசுவாசத்தில் லயித்து மானிடனென்னும் பெயரில் நிலைக்கும்படி வேண்டுகிறோம்.

- 5:7 ; சூலை 26, 1911 -

82. மார்க்கண்டேயன்

வினா : புதல்வரில்லாதோர்க்கு சுவர்க்க மில்லையென்று பிரம்ம லோகத்திலே வேதவியாச மகாமுனிவரால் சொல்லக்கேட்ட மிருகண்டேயர் மிக்க வாயாசங்கொண்டு தமக்கு மகவுகளில்லாக் குறையை முன்னிட்டு தாமும் தம்பத்தினியுமாக அரியதவஞ்செய்துக்கொண்டு வந்தமெயால் ஈஸ்வரனால் ஓர்மகவை கருப்பத்தில் தாங்கி அம்மைந்தனுக்கு 16 வயது மட்டிலும் தந்து போய்விட்டாராம். பிறகு அரிய ஓர் ஆண்குழந்தை பிறந்து மார்கண்டேய னெனப் பெயரிட்டு சீராட்டி வந்தனர்களாம். இம் மார்கண்டேயனுக்கு மழலைப்பருவங்கடந்து வாலவயதானவுடன் கயிலங்கிரி மலையிலே கபிலாய நாதனாம் ஈஸ்வரனைநோக்கி அருந்தவஞ் செய்துக் கொண்டு வருகையில் ஈசனால் அளித்த வயது கடந்ததும் இயமனால் பாசக்கயிரிட்டுப் பிடிக்க ஈசனம்மார்கண்டேயனுக்கு அளித்த வயதின் கணக்கறியாது இயமன்மீது கோபித்துதைத்துத் தள்ளிவிட்டு மார்கண் டேயனுக்கு என்றும் பதினாறு வயதளித்துவிட்டனராம். தற்போது அம்மார்கண்டேய னெங்கிருக்கின்றானோ விளங்கவில்லை. தவிரவும் அனேக பெரியோர்களும் குமரர் குமரிகளை வாழ்த்துகையில் மார்கண்டாயுசா வெனவாழ்த்துகிறபடியால் ஏதோ ஓ ரந்தரங்கம் மறைவுபட்டிருக்கிறதாக விளங்குகிறது. கிருபைகூர்ந்து தெளிவிக்கும்படி தங்களது திருவாக்கை எதிர்நோக்கும்.

பி.எம். ராஜரத்தினம் பிள்ளை, சாம்பியன் ரீப்ஸ்.

- 5:7 ; சூலை 26, 1911 -

விடை : அன்பரே, தாம் வினாவிய சங்கை காமிகா அர்ச்சனை சிறப்பேயாம். அதாவது புனனாட்டில் ஆவிடையார் கோவிலென்னும் ஓர்

சிலாலயத்தை உண்டு செய்து அதனுள் ஆண்குறி பெண்குறி என்ற சிலைகளை அடித்து வைத்து மவைகளை பூசிக்கும்படி செய்து அவர்கள் மனவேஷ்டையை மாற்றி உற்சாகத்துடன் தொழுவதற்கு மிருகண்ட முநிவனொருவனிருந்தான். அவனுக்கு மார்கண்டனென்னும் ஓர் மகன் தோன்றி இலிங்கமென்னும் ஆண்குறி பெண்குறியைத் தொழுது என்றும் பதினாறு வயதைப்பெற்று சிரஞ்சீவியா இருக்கின்றான். ஆதலால் இலிங் கப்பூசை செய்வதால் சுகமுண்டாமென்னுஞ் சிலக் கற்பனா கதைகளை உண்டுசெய்து காமிகார்ச்சனையைத் திடப் படுத்தியுள்ளார்கள்.

அதற்கு ஒட்டுக்கதை மார்கண்டாயுசாக வாழக்கடவாயென்னும் ஒரு வாழ்த்தலையும் சேர்த்துக்கொண்டார்களன்றி வேறொரு காட்சியுங் கிடையாவாம்.

ஈதன்றி பிரமலோகத்திற்குப் போய் வேத வியாசருடன் சம்பாஷிக்கத்தக்க யோக்கியதையுடைய மிருகண்டருக்குப் பிள்ளையில்லாது தபஞ்செய்தா ரென்றால், அவர் பிரம்மலோகஞ் சென்றாரென்பதே பொய்யாக முடியும். அத்தகைய என்றும் பதினாரென்னும் வயதைப்பெற்றவன் உலக தோற்றத்து ளொருவனாக தோன்றாததுகொண்டு அதுவும் பொய்யேயாம் என்றும் பதினாறென்னும் வயதைப் பொருந்தியது தேகமேயாதலின் அத்தேகம் தோற்றத்திலிருத்தல் வேண்டும். தபோபலத்தால் உதித்தப் பிள்ளைக்கு பதினாறு வயதைக் கொடுத்துவிட்டு அதை மறந்து இயமனை எட்டியுதைத்து என்றும் பதினாறு வயதைக் கொடுக்கக்கூடியவருக்கு தான் முன்பு கொடுத்த வயதை மறந்தது திரிகாலமறியா வஞ்ஞானமென்றே விளங்குகிறபடியால் இதன் சங்கையை வீணில் வளர்ப்பது அவலமென் றெண்ணி இம்மட்டும் நிறுத்துகின்றோம்.

- 5:8 ; ஆகஸ்ட் 2, 1911 -

83. இனிவரும் பிறப்பென்றாலென்னை

எனுங் கடாவில் தன்னிலைச்சுட்டொழிந்தும் முன்னிலைச்சுட்டொழிந் தும் எப்பிறப்பென் றெதிர்வினாத் தோன்றலின் மாற்ற முரைக்க மயக் குற்றதாகும்.

கடாவிய கடாவல் மக்களென்றாயின் கன்மமே மக்களுருவெனத் தோற்றலும் மக்களே கன்மத்தாற் சுழலலு மியல்பாதலின் இனிவரும் பிறப்பும் மக்களேயாம்.

உடலெடுத் துலாவுவதே கன்மமென்னப்படும் கன்மத்தின் ஏதுவாந் தோற்றமே உடலென்னப்படும் உடலுங் கன்மமும் ஒன்றித்துத் தோன்று மளவும் பிறவியுண்டாம். உடலுங் கன்மமும் ஒழிந்தவிடத்துப் பிறப்பற்றுப் போம். பிறப்பிறப்பற்று இரவுபகலற்ற சதா விழிப்பும் சதானந்தமுமான அநித்திய வனாத்தும நிருவாணநிலை பெறுவன்.

புளியம்பழம்போலும், ஓடுபோலும், புழுப்போலும் விட்டில்போலும் இருபிறப்பாளனென மாற்றிப்பிறக்கும் பரிநிருவாணம் பெற்று சோதியுருவாய் அகண்டத்துலாவுவர்.

இதனந்தரார்த்தமுஞ் செயலும் அந்தர்முக சாதனர்க்கு விளங்குமேயன்றி பகிர்முகப் பேச்சுளார்க்கு பற்றற விளக்கினும் விளங்கவே விளங்காவாம்.

காரணமோவென்னில் விதரண விருத்தியில், விட்டவனும், வித்தியா விருத்தியில் விட்டவனும், கலைநூல் கற்றுவிட்டவனும், கைத்தொழில் செய்துவிட்டவனும் இம்மெய்யகன்று மருமெய் தோன்றியவிடத்து விட்ட கன்மத்தையே தொடர்ந்துநிற்ப தியல்பாதலின் ஞானநிலையும், ஞானசாதனமும், ஞானசிறப்பும் அங்கங்கு விட்டவர்க்கே விளங்குமன்றி ஏனையோர்க்கு விளங்காதென்பது திண்ணம்.

கன்மம் உள்ளவரையில் ஜென்மமும், ஜென்மம் உள்ளவரையில் கன்மமும் உள்ளதென்பது கன்மச்சக்கர விதியாதலின் அவனவன் விட்ட குறையே கன்மமெனச் சென்று ஜென்ம தோற்றமடைகின்றது. அத்தகையத்

தோற்றத்தாலும், அதனதன் செயலாலும் இன்ன விட்டகுறையாதெனென்ப தினிது விளங்கும். அதனது விளக்கமும் உள்ளச் செயலறிந்த உத்தமர்க்கு விளங்குமேயன்றி உள்ளச்செயலறியா மத்திமர்க்கும் அதமர்க்கும் விளங்காது.

கன்மத்தால் விட்டகுறையே ஜென்மத்தால் விளங்குகின்றதென்பதை அமெரிக்கா தேசத்திற் பிறந்துள்ள ஓர் சிறுவன் மிக்க வாசித்தப் பிரபசர்கள் கேழ்க்குங் கேழ்விகளுக்கெல்லாந் தக்க விடைகளளிக்கக் கண்டோர் கலங்குகின்றார்களாம்.

இதுவே கல்வியில் விட்டகுறையாகும். இதன் பகரத்தை சென்னை ராஜதானியில் ஒருவன் தனது முப்பது வயதளவும் மெட்டிரிகுலேஷன் பரிட்சைக்கு முயன்றும் முடியாது விட்டுவிடுகின்றான். மற்றொருவன் பதினைந்து வயதுள் மெட்டிரிகுலேஷன் பரிட்சையை முடித்துவிடுகின்றான்.

கைத்தொழிலில் ஒருவன் விருத்தாப்பியமடைந்தும் விதரணையற்றிருக் கின்றான். மற்றொரு சிறுவன் அவ்வித்தைக்குப் போதனாபதியாகின்றான். இவைகளும் அவனவன் கன்மத்தின் விட்டகுறைகள் தொட்டு சிறுவயதிற் பிரகாசிக்கின்றார்கள். அதுபோல் ஞானவுணர்ச்சியும், ஞானசாதனமும், ஞானநிலையிலும் நின்று விட்டு மறுமெய் தோன்றியுள்ளார்க்கு உண்மெயு ணர்வும் மறுமெய்ச் செயலும் மெய்ப்பொருள் விளக்கமும் எளிதில் விளங்கும். ஞானவுணர்ச்சியும் ஞானசாதனமும், ஞானநிலையு மில்லாதார்க்கு உண்மெ யுணர்வும், மறுமெய்ச் செயலும், மெய்ப்பொருள் விளக்கமும் விளங்கா தென்பது துணிபு.

ஓர் மனிதன் கற்றாராய்ந்தவனாயினும் தன்னை ஆய்ந்தடங்கிய ஞானிக்கு அவனோர் துரும்புபோன்றவனாதலின், கண்டுபடிப்பதே படிப்பு மற்றப்படிப்பெல்லாம் தெண்டபடிப்பென்றறிந்து கலைநூல் கற்று கன்மப்பற்றற்று ஜென்மத்தை ஒழித்த சதானந்த சுயம்பிரகாசமாக விளக்கமே ஞானமென்னப்படும். மற்றவை யாவும் அஞ்ஞானம் அஞ்ஞானமேயாம்.

செத்தான் பிறப்பானோ பிறவானோவென்னும் வினா தோன்றில் பற்றற்றானோ மனைமகனோவென்னு மெதிர்வினாத் தோன்றி பற்றற்றா னாயின் பிறவானென்றும், பற்றுள்ளவனாயின் பிறப்பானென்றும் பௌத்த தன்ம மந்திரவாதிகள் கூறுவதியல்பாம். அங்ஙனமின்றி இனிவரும் பிறப் பென்றா லென்னையெனு மறியாவினா வெழுவியும் எப்பிறப்பென்னும் எதிர்வினாவுக்கு மிழுக்கேயாம்.

- 5:10 ; ஆகஸ்ட் 16, 1911 -

84. இந்தியதேச புத்ததன்மம் வேறு இதரதேச புத்ததன்மம் வேறோ

சத்தியதன்மம் சரிவரத் தெரிந்தவர்களுக்கு ஒன்றும் சரிவரத் தெரியாதவர்களுக்கு வேறுமேயாம். அதாவது கூன் குருடு சப்பாணியாகப் பிறந்து சுகயீனமடைவது துக்கம். சுகதேகியாகப் பிறந்து உண்ணச் சோற்றுக்கும், உடுக்கக் கந்தைக்கும் அலைவதுந் துக்கம். இத்தகைய துக்கம் பிறப்பினால் இல்லை யென்று ஒருவனும் மறுக்கலாகாது. பிணியினால் சயிக்கமுடியா வாதைப்படுவதோர் துக்கம் இதையு மில்லையென மறுப்பவன் ஒருவனுங்கிடையாது. மூப்பினால் தள்ளாடி தடியூன்றி தவிப்பதோர் துக்கம், இத்துக்கமுமில்லையென மறுப்பவன் ஒருவனுங் கிடையாது. அவாவினா லுண்டாயப் பற்றுக்கள் விடாது துன்பம் பெருகி கபாதி ரோகங்களால் மரணமடைவதோர் துக்கம், இதையும் மறுப்பவனொருவனுங்கிடையா.

இத்தகைய நான்குவகை துக்கத்தையும் அநுபவக் காட்சியாகக் கண்டு அதற்காய எதிரடை சுகமொன்றிருத்தல் வேண்டுமென வெளிதோன்றியவர் இராஜக்கிரக சித்தார்த்தி சக்கிரவர்த்தியேயாம். அவ்வகை வெளியேறியவர் பிறப்பு, பிணி, மூப்பு சாக்காடென்னும் நான்குவகை வாய்மெகளின் துக்கங் களையும் அத்துக்கோர்ப்பவங்களையும் அத்துக்கநிவாரணங்களையும், துக்கநிவாரண மார்க்கங்களையும் யாதோ ரோதுவானின்றி தன்னிற்றானே கண்டுணர்ந்து சகல பற்றுக்களுமற்று நிருவாணமுற்று பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடென்னும் நான்குவகைத் துக்கங்களையுஞ் செயித்து காமனையுங் காலனையும் வென்று செல்லல் நிகழல் வருங்கால மூன்றினை அறியும் இரவு

பகலற்ற வெளியினின்று என்றுமழியா நித்தியானந்த வாழ்க்கையைப் பெற்று தன்மட்டிலும் சுகிக்காது உலகில் தோன்றியுள்ள சகல மக்களும் மாறாப் பிறவியிற் சுழன்று சதா துக்கத்தில் ஆழ்ந்து கெடாது பிறவியற்று சதா சுகத்தில் லயிக்கவேண்டுமென்னும் அன்பின் மிகுதியால் உலகெங்கும் சுற்றி சங்கங்களை நாட்டிதான் கண்டுதெளிந்த நான்கு வாய்மெகளாம் சத்தியதன்மத்தையூட்டி கடைத்தேறச் செய்து வைத்தார். அதே சத்திய தன்மத்தைதான் உலகிலுள்ள சகல தத்துவஞானிகளும் அனுசரித்து துக்கத்தை ஒழித்து சதா சுகப்பேற்றை அடைந்து வருகின்றார்கள்.

இவ்வகைத் தன்னைத்தானுணர்ந்து தனுகரண புவனபோகப் பற்றுக் களற்று பிறப்புப் பிணி, மூப்பு, சாக்காட்டின் துக்கங்களை ஒழித்து ததாகத நிலைப் பெற்றவர்களையே மகடபாஷையில் புத்தரென்றும், திராவிட பாஷையில் மெய்யரென்றும் கூறப்படும். இத்தகைய சத்தியதன்மத்தை வெளிவந்து போதிப்பவர்கள் கிஞ்சித்தேனுந் தங்கள் தத்துவச்செயலை ஆராய்ந்து போதிப்பதே அழகாம். அங்ஙனந் தங்கள் மனோதத்துவங்களை ஆராய்வதை விடுத்து தோன்றிதோன்றி கெடும் புறத்தத்துவ ஆராய்ச்சி செய்துவிட்டு யாங்களும் புத்தன்மங் கூறப்போகின்றோ மென்பது முற்றும் பிசகேயாம்.

சத்தியத்தைப் போதிக்கவந்தவர்கள் சத்திய பீடத்தினின்று தங்களுக்குத் தெரியும்வரையில் தெரியுமென்றும் தெரியாதவற்றைத் தெரியாதென்றுங் கூறுவதே அழகு.

தெரியாதவற்றைத் தெரிந்ததுபோலும், காணாதவற்றைக் கண்டது போலுங் கூறுவது அசத்தியமும், அபுத்தமுமாதலின் அவ்வகை வெளி தோன்றாதிருக்க வேண்டுகிறோம்.

- 5:11 ; ஆகஸ்ட் 23, 1911 -

85. பேய நிலையும் தெய்வ நிலையும்

ஜோலார்பதி சி. முத்துக்குமாரசாமி பிள்ளை, ப.சு.யோ. நாதமுனி உபாத்தியாயர், டி.ஜே. தீர்த்தகிரி உபாத்தியாயர் மூவருங்கூடி எழுதியுள்ள சங்கைக் கடிதத்தைக்கண்டு ஆனந்தமுற்றாம். ஆயினும் சில மதஸ்தர்கள் அக்கடிதத்தைக் கண்டவுடன் அவர்கள் அஞ்ஞானத்தால் சீரிச் சினந்து வைய ஆரம்பிப்பார்களன்றி அதன் விசாரிணை நிலையை உணர மாட்டார்கள். காரணமோவென்னில் வேதமுமில்லை, விவேகமுமில்லை, விதரணையுமில்லை யென்னும் மிருகத்துக் கொப்பானவர் களாதலின் தூஷிப்பதும் புறங்கூறுவதும் வைவதுமே அவர்கட்செயலாயிருத்தலின் பராயர் மதக்கருத்துகளைச் சுட்டிக்காட்டாது தங்களுக்குள்ள சங்கைகளை மட்டிலும் இவ்விடம் விளக்குகின்றோம்.

அதாவது பௌத்த மந்திரவாதிகளுள் மக்கட்செயலைச் பேயநிலை யென்றும், தெய்வநிலை என்றும் இருவகுப்பாக வகுத்திருக்கின்றார் கள். 1-வது, ஓர் மனிதன் நல்லூக்கம், நற்காட்சி, நற்கடைபிடி, நல்லமதியினின்று பேராசை ஒழித்து மனமாசு கழுவி நிருவாணத்திற்கு வருவானாயின் அவனை தெய்வநிலை அடைந்தோனென்றும்; துன் முயற்சி, துற்காட்சி, துற்கடைபிடியினின்று பேராசையால் பலப்பெயர் பொருட்களை வவ்வி லோபநிலையுற்று மடிவானாயின் அவனைப் பேயநிலையடைந்தோனென்றும் வகுத்துள்ளார்கள். துற்செயல் யாவு மோருருவாகத் திரண்ட நிலைக்குப் பேயநிலையென்றும், நற்செயல் யாவு மோருருவாகத் திரண்டநிலைக்கு தெய்வநிலை என்றும் கூறப்படும்.

இத்தகையப் பேயானது ஆதிகடவுளையும் ஏமாற்றி மற்றுமோர் கடவுளுடன் கூத்தாடியதென்னில், அதை பேயர்கள் கதையையொத்ததேயன்றி நியாயர்கள் கதையோ டொவ்வாத காரணம் நியாயரென்னும் தெய்வநிலைப் பெற்றவர்களுடன் பேயநிலை அணுகியதென்னில் தெய்வநிலை என்னும் பெயர் பொருந்தவே பொருந்தாவாம். பொன்னுடன் தரா கலந்தவுடன் பொன்னென்னும்

பெயர் மாறுதலடைவதுபோல் தெய்வநிலையுடன் பேயநிலை கலந்தபோது தெய்வமென்னும் சிறப்புமற்றுப்போம். மக்களிடமே தெய்வநிலையும் பேயநிலையுந் தோற்றுதலுள்ளபடியால் தனியாயுள்ள ஓர் தெய்வத்தைத் தனியாயுள்ள ஓர் பேய் ஏய்த்ததென்பதும் நடனமிட்ட தென்பதுங் கற்பனா கதைகளேயாம்.

- 5:11 ; ஆகஸ்ட் 23, 1911 -

86. சாக்கைய பௌத்த சோதிரர்களே சற்று கவனியுங்கள்

பஞ்சசீலம் பெற்றவர்களாகிய தாங்கள் பஞ்சபாதகர்களை அணுகாமலும், அவர்களுழ்க்காரு மிடங்களில் உழ்க்காராமலும், அவர்கள் நிற்குமிடங்களில் நிற்காமலும் தங்கடங்கள் பெற்றுள்ள சீலத்தில் நின்று சீர்பெறும்படி வேண்டுகிறோம்.

சில அஞ்ஞானிகள் தங்களுக்குள்ள அசத்தியச்செயலாலும், அசப்பிய மொழியாலும் பௌத்தர்களை தூஷிப்பதுடன் பத்திரிகைகளிலும் வரைந்து தங்கள் மதமே மதம், தங்கள் தெய்வமே தெய்வமெனக்கூறிப் படாடம்பமடித்து கேட்டின் வாசலைப் பெரிதாக்கி நடக்கின்றார்கள். தாங்களோ கொலை செய்யலாகாதென்னும் இடுக்கவாசலிலும், பொய்சொல்லலாகாதென்னும் இடுக்கவாசலிலும், களவுசெய்யலாகாதென்னும் இடுக்கவாசலிலும், விபச்சாரஞ் செய்யலாகாதென்னும் இடுக்கவாசலிலும், மதியை மயக்கும் மதுபான மருந்தலாகாதென்னும் இடுக்க வாசலிலும் நடப்பவர்களாதலால் தாங்களொவ் வொருவரும் கேட்டின் வாசல்வழிச் செல்லும் கொலைப்பாதகர் கூட்டத்திலும், கேட்டின் வாசல்வழிச்செல்லும் பொய்யர்கள் கூட்டத்திலும், கேட்டின் வாசல்வழிச்செல்லும் கள்ளர்கள் கூட்டத்திலும், கேட்டின் வாசல்வழிச் செல்லும் விபச்சாரர்கள் கூட்டத்திலும், கேட்டின் வாசல் வழிச்செல்லும் குடிகேடர் கூட்டத்திலும் அணுகாமலிருப்பதே அழகாம். அவர்கள் பத்திரிகைகளில் வரையும் அசப்பியக் கடிதங்களுக்கு பதிலெழு தாமலிருப்பது அதனினும் அழகேயாம்.

தாங்களோ துன்மார்க்கர்கள் மத்தியில் நன்மார்க்கர்களாகவும், விரோதிகள் மத்தியில் அவிரோதிகளாகவும், அஞ்ஞானிகள் மத்தியில் ஞானி களாகவும், கோபிகள் மத்தியில் சாந்தர்களாகவுமிருக்க வேண்டுகிறோம்.

விரோதத்தை விரோதத்தால் வெல்லுவது மேலுமேலும் விரோதத்தைப் பெருக்கிவிடும். விரோதத்தை சாந்தத்தாலும், அன்பாலும் வெல்லவேண்டும். அதனால் நமக்கு ஆறுதலும் சுகமுமுண்டாம். பௌத்தர்களை கெடுக்க முயல்பவன் தானே கேடடைவான். பௌத்தர்களைத் துன்பஞ்செய்ய முயல்பவன் தானே துன்புறுவான். ஆதலின் பௌத்தசோதிரர்கள் யாவரும் உண்மெயில் அன்பை வளர்த்தும்படி வேண்டுகிறோம். உண்மெயில் சாந்தத்தை நிறப்பும்படிவேண்டுகிறோம். உண்மெயில் ஈகையை நிலைபெறச் செய்யும் படி வேண்டுகிறோம். இதுவே பௌத்தர்களின் செயலும், இதுவே பௌத்தர் களின் கொள்கையும், இதுவே பௌத்தர்களின் கடைபிடியு மென்னப்படும்.

பௌத்தர்களென்னும் சீலம்பெற்று அபுத்தர்களிடம் வாதிடுவதாயின் சீலமற்றுப்போம். அவ்வகை சீலமற்று அசீலர்களாகுவதினும் அமைதியுற்று காலநேர்ந்தபோது அவர்களுக்கு சத்தியதன்மத்தை விளக்குவது அழகாம். அங்ஙனமின்றி பாலூட்டுங் குழவிகளுக்கு சோறூட்டுவது போல் நூதன விவேகிகளுக்கு நுண்ணறிவூட்டுவதொக்கும். ஆதலின் சகோதிர வைக்கிய மற்றவன் நெஞ்சர்களிடம் வாதிடாமலிருக்கவேண்டுகிறோம். வேண்டுகிறோம்.

- 5:11 ; ஆகஸ்ட் 23, 1911 -

87. மறுபிறப்பு

வினா : உலகத்தில் தோன்றும் ஒவ்வொரு தோற்றமும் பூதியங்களின் சத்தால் தோன்றுகின்றனவென்பது பிரத்தியட்சம். அவ்வாறு தோன்றும் சிற்சில தோற்றங்களுள் தத்தமது அவயவங்கள் பின்னப்படுதற்கு சேர்க்கையின் பேதமே காரணமென்று துணிதற்கு தத்துவ சாஸ்திரங்க ளிடந்தரும். ஆதலின்

இஃதை பூர்வீக பாபஜனன மென்பதற்கு எமது சிற்றறி விடந்தரவில்லை. மாந்தர்க்கு ஜனனமுண்டென்பது பௌத்தமத கொள்கையாயினும் பௌத்தமத சார்பினராகிய சிவவாக்கியர் 'கறந்தபால் முலைபுகா' என்னும் பாடலில் "இறந்தவர் பிறப்பதில்லை இல்லையே" என்றும்,

ஞானவெட்டி

இருவினையுந் தனையுரைத்து உலகத்தாசான் இறந்தவுடன் விழுந்தாவிப் பிரிந்தப்பின்பு
வருஜனன மாகிவந் துடலெடுத்து வாழ்புவியில் வருமென் றுருதிச்சொல்வார்
குருவறிந்து புவியில்வந்து வயது நூறு குறிப்பாகப் பிறந்திறந்தால் குழவியாமோ
அருமெயுட னற்பிறவி பிறப்பாரென்று அதீத வெகு பொருளெல்லாம் பரிப்பாரையோ.

இத்தகைய பாடலால் மாந்தர் இறந்தபின் மீண்டும் பிறப்பாரென்பது அநுபவ விரோதமாய் தோற்றுகிறபடியால் கிருபைக்கூர்ந்து எம்மீது குற்றம்பாராது கருடனைக்கண்ட சர்ப்பம்போல் எமக்குற்ற சங்கை நீங்கவேணுமாய் தங்களது திருவாக்கை எதிர்நோக்கும்.

பி.எம். ராஜரத்தினம் பிள்ளை, சாம்பியன் ரீப்ஸ்.

- 5:13 ; செப்டம்பர் 6, 1911 -

விடை : தாம் வினாவிய சங்கை மிக்க விசேஷித்ததேயாயினும் அவரவர்கள் இயற்றியுள்ள செய்யுட்களின் அந்தரார்த்தங்களையுந் தோற்றவேதுக்களையுங் கண்டு தெளிந்துக்கொள்ளும்படி வேண்டுகிறோம். அதாவது பௌத்தர்கள் போதிக்கும் பிறவிக்கும் பொய்க் குருக்கள் போதிக்கும் பிறவிக்கும் அனந்தம் பேதமுண்டு, பௌத்தர்கள் அவாவாம் கன்மமே பிறவிக்கேதுவென்று கூறுவர். பொய்க்குருக்களோ உருவத்தைச்சுட்டி உன்தாய்தந்தையரே மறுபிறவியெடுத்து வருவார்கள், அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய பொருளுதவிகளை எங்களுக்குக் கொடுங்கோளென்று பொருள்பரிப்பர்.

இதை அநுசரித்தே சிவவாக்கியர் இறந்துபோன மானிடரினி பிறப்பதில்லையே என்றும்;

உடலுயி ரெடுத்ததோ உயிருடம்பெடுத்ததோ / உடலுயி ரெடுத்தபோது உருவமேதுசெப்பிடும்

என்றும் பாடியிருக்கின்றார்.

ஞானவெட்டியில் பொய்க்குருக்களின் செயலும் போதனையும் இத் தன்மைத்தென்று கூறியுள்ளபாடலைமட்டிலும் எழுதியுள்ளீரன்றி சாம்பவனார் போதித்துள்ள 373, 384-வது பாடல்களை நோக்காது விட்டது கவலையேயாம்.

ஈதன்றி சுவாசக்குறைவு நிறைவாலும், தத்துவக்குறைவு நிறைவாலும் ஊனப்பிறப்பு ஊனமற்றப் பிறப்புத் தோன்றுவதென தத்துவ நூற்கள் கூறினும் சுவாசங்குறைந்தோடுதற்குங் கன்மமே ஏதுவென்னப்படும். சுவாசம் நிறைந் தோடுதற்குங் கன்மமே ஏதுவென்னப்படும். தத்துவங்குறைந் தமைவதற்கும் கன்மமே ஏதுவென்னப்படும். தத்துவம் நிறைந்தமைவதற்கும் கன்மமே ஏதுவென்னப்படும். கன்மமின்றி ஜென்மமில்லையென்பதும், ஜென்மமின்றி தோற்றமில்லை யென்பதும் பௌத்ததன்ம மந்திரவாதிகளின் துணிபாதலின் ஜெநநதோற்றங்களை அதனத னுருவாலும், உள்ளச்செயலாலும் யூகித் துணர்ந்துக்கொள்ள வேண்டியதேயாம்.

- 5:14 ; செப்டம்பர் 13, 1911 -

88. பௌத்த சிகாமணிகளே!

சற்றுசெவிசாய்ப்பீர்களாக. உலகத்தில் தோன்றியுள்ள சகல மக்களாலும் சிறப்புறக் கொண்டாடப்பெற்றிருந்த இவ்விந்திரர் தேசமானது நாளுக்குநாள் இழிந்த தேசமென்று சீரழியத்தக்கப் பெயரில் வருகின்றது.

காரணமோவென்னில், பொய்வேதங்களும், பொய் வேதாந்திகளும், பொய்ப்புராணங்களும் பொய் புராணிகர்களும், பொய் மதங்களும், பொய் மதாச்சாரிகளும், பொய் சாதிகளும், பொய்ச் சாதியோர்களும், பொய் வித்துவான்களும், பொய்ப் பிரசங்கியார்களும், பொய் தெய்வங்களும், பொய் தெய்வந் தொழுவோர்களுமாகிய அசத்தியர்களும், அசப்பியர்களும் பெருகிக்கொண்டே வருகின்ற படியால் சன்மார்க்கமாகிய புத்ததன்மம் நாளுக்கு நாள் நிலைகுலைந்து பௌத்தர்களும் பலவகையால் தாழ்ச்சியடைந்து

மறைந்துவிட்ட காரணமே இந்திரர்தேசம் இழிந்த தேசமென்னும் பெயருக்கு வருகின்றது.

அத்தகைய வசத்தியர்கள் முன் நமது சத்திய தன்மமாம் மெய்யறத்தைப் போதிப்பது நீதிபோதர் வாக்கியப்படி, பன்றிகளின் முன் முத்துகளைப் போடுவதுபோலும், குரங்குகளுக்குப் பூமாலையைச் சூடுவதுபோலு மிருக்கின்றபடியால் சத்தியதன்மத்தை தங்களது அசத்திய தன்மத்தால் வைதும் புறங்கூறியுந் தூஷித்துந் திரிகின்றார்கள். அந்நோர் சாதிக்கட்டுக்குள் அடங்காதவர்களைத் தங்களுக்குப் பராயர்களென்று கூறி தங்கள் வீதிவழியில் யேகவிடாமலும், குளத்தருகில் வரவிடாமலும், கோவில் வாயற்படி அருகே நெருங்கவிடாமலும் இழிவு படக்கூறி விலகத் துரத்துவோர் கோவிலண்டை தூரனின்று சாமி, சாமி, யாங்கள் சுரணைக் கெட்டாலுங் கெட்டுப் போகிறோம். அடித்து உதைத்தாலும் பட்டுக்கொள்ளுகிறோம் தூரனின் றேனும் தங்கள் தேவதைகளைக் கும்பிட்டுக்கொள்ளுகிறோமென்னும் சுற்றத்தோர்களில் சிலரும் அசத்தியர்களுடன் சேர்ந்துகொண்டு அந்நோர் செய்துவரும் இழிவுகளை உணராது, அசத்தியமே அசத்தியம், அசப்பியமே அசப்பியம், துன்மார்க்கமே துன்மார்க்கமெனத் துடைதட்டித் துள்ளித் துடிக்கின்றார்கள்.

இத்துடிப்பு யெம்மட்டு மிருக்குமென்னில் நந்தனை நெருப்பிலிட்டுச் சுட்டதுபோல் இவர்களையுஞ் சுட்டுத்தள்ளுமளவும் அவர்கள்பாற் சேர்ந்து கொண்டு தங்கள் பூர்வ தன்மத்தை மறந்தே நிற்பார்கள். எங்கள் தெய்வம் உங்களை பாலிக்காது, எங்கள் கோவில் வாயற்படியில் நீங்கள் மறந்துங் காலை வைக்கப்படாதெனக் கூறியிருந்தும் மலைமீது சென்று சுப்பிரமணியச் சாமியைத் தொழுத நாடார்களிற் சிலரை ஆறுமாதம் ஒரு வருடம் தெண்டித்துவிட்டதுபோலிவர்களையுந் தெண்டிக்குங்காலம் வருமாயின் அப்போதுதான் இவர்களுக்குச் சுரணை பிறந்து அப்பப்பா அது எங்கள் சாமியல்லவென்று ஒதுங்கி தங்கள் சாமி ததாகதரைநோக்கி என்றென்றும் சிறப்புக்குன்றா சத்திய தன்மத்தில் நிலைப்பார்கள்.

இதன் மத்தியில் அவர்களுக்குக் கூறும் சத்தியதன்மங்கள் யாவும், "காமாலைக்கண்ணனுக்கு சூரியன் மஞ்சள் நிறமாகக்காட்டுவதுபோல்" அசத்தியத்தைக் கைப்பற்றியுள்ளோர்களுக்கு சத்திய தன்மம் அசத்தியமாகவே விளங்கும். ஆதலால் சுயநலங்கருதாது பொதுநலங்கருதும் பௌத்த சிகாமணிகள் ஒவ்வொருவரும் அன்பினிலையிலும் ஆனந்த சாந்தத்திலும் லயித்து அசத்தியர்கள் தூஷிப்பை பூஷிப்பாகவும், துன்மார்க்கர்கள் வைதலை ஆசீராகவுமேற்று மேலும் மேலும் சத்திய தன்மத்தை விளக்கிக்கொண்டே வருவீர்களாயின், முன்னெடுத்தக் குடி மதிப்புத் தொகையில் சென்னையில் மட்டிலும் எழுபதுஞ் சில்லரை பௌத்தர்களிருந்து இவ்வருஷ குடிமதிப்புத் தொகையில் ஐன்னூற்றி முப்பதுஞ் சில்லரை பௌத்தர்கள் பெருகி விட்டார்கள். மற்றுங் கோலார், திருப்பத்தூர், பெங்களூர், ஐதிராபாத், இரங்கோன் முதலியக் கணக்குகளும் வருமாயின் ஆயிரத்திற்குமேற்பட்ட பௌத்த சிகாமணிகள் தேறுவார்கள்.

இத்தகைய சத்தியதன்ம போதத்தால் பொய் வேதங்களும், பொய் வேதாந்தங்களும், பொய்ப்புராணங்களும், பொய் தேவதைகளும் ஒழிந்து மதக்கடைகளும் அழிந்து வித்தை, புத்தி, ஈகை, சன்மார்க்கம் நான்கும் பெருகுமாயின் பூர்வ இந்திரர் தேசம் இந்திர தேசமாகவே விளங்குவதுமன்றி, சகல குடிகளும் பிரிட்டிஷ் இராஜ விசுவாசத்தில் நிலைத்து சுகச்சீர் பெறுவார்கள்.

- 5:17 ; அக்டோபர் 4, 1911 -

89. பௌத்த குருக்களின் வாசா பௌர்ணமி

பௌத்த சோதிரர்களே நமது ஆதியங்கடவுளாம் புத்தபிரான் இருந்தகாலத்தில் ஒவ்வோர் சங்கத்திலுமுள்ள சமணமுனிவர்களை ஆனி மாதம் பௌர்ணமி முதல் புரட்டாசி மாதம் பௌர்ணமி வரையில் ஒரு மடங்களைவிட்டு மற்றொரு மடங்களுக்கு போகவிடாமல் தங்கடங்கள்

சாதனங்களை சரிவரச்செய்து அறவணநிலையாம் நிருவாணமுற்று பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காட்டை ஜெயித்துப் பரிநிருவாண சோதியுரு பெருநாளாம் திருநாளில் சோதியை வளர்த்திக்கொண்டாடும் உற்சாக நாளானது அக்டோபர் மாதம் 6ம் நாள் சுக்கிரவார முதல் ஆதிவாரம் மூன்று நாள்வரை நிறைவேறப்போகின்றபடியால் அன்பர்கள் ஒவ்வொருவரும் சுக்கிரவார மாலை தீபமேற்றும் மெழுகுவத்திகளும், புத்தகுருக்களுக்கு கனிவர்க்கங்களும் தங்களாலியன்ற உதவி புரிவதுடன் தங்கடங்கள் பெண்டுபிள்ளைகளுடன் சனிவார மாலை 6-மணிக்கு இராயப்பேட்டை பௌத்தாச்சிரம குருபூசை முதலிய வைபவங்களுக்கு வந்திருந்து பஞ்சசீலத்தை நிறைவேற்றி பௌத்தகுரு யு. இந்திர வின்சா சுவாமிகளால் பர்ம்மியர்களுக்கு பர்ம்மா பாஷையிலும், பௌத்தஸ்திரீகளுக்கு கோ. சொற்பனேஸ்வரி அம்மனவர்களால் தமிழ் பாஷையிலும் போதிக்கும் பௌத்த தன்மத்தை செவியாறக்கேட்கும்படி வேண்டுகிறோம்.

- 5:17 ; அக்டோபர் 4, 1911 -

90. முனிசபில் ரோடுகளின் முறைப்பாடு

தற்காலஞ் சென்னை முநிசபில் எல்லைக்குள் தகுந்த மழை இல்லையென்பது அநுபவம். இவ்வகை சரியான மழையில்லாத காலங்களில் பெரிய ரோடுகளிலும் துரைமக்கள் எப்போதும் போக்குவருத்துள்ள பாதைகளிலும் தண்ணீர் திட்டுதிட்டாக தேக்கமுற்று நிற்குமாயின் மற்றுமுள்ள சிறு வீதிகளிலும் ஏழை எளியோர் வாசஞ்செய்யும் சந்துகளிலும் தண்ணீர் எவ்வகையாகத் தேக்கமுற்றிருக்குமென்பதை இவற்றை வாசிப்போரே தெளிந்துக்கொள்ளவேண்டியதுதான் காரணமோவென்னில் எக்காலுந் துரைமக்கள் போக்குவருத்துள்ள இராஜ வீதிகளிலேயே நீர்கள் தங்கி நிற்கவும், மோட்டார் வண்டிகளும், ரிக்ஷா வண்டிகளும், பைசைக்கல் வண்டிகளும் நீருள்ள பள்ளங்களுக்கு ஒதுங்கி நீரில்லாவழிகளில் ஓடவும், நீரில்லா வழிகளில் செல்லும் மக்களும் ஆடுமாடுகளும் தட்டுக்கெட்டுத் திகைத்து நீருள்ளப் பள்ளங்களில் விழவும், ஓரங்களில் ஒண்டித் தவிக்கவும் நேரிடுகின்றது.

இராஜபாட்டையை சற்றேனுங் கவனியாத முநிசபில் டிவிஷன் கமிஷனர்களும், மற்ற உத்தியோகஸ்தர்களும் சிறிய பாதைகளையும், ஏழை எளியோர் வாசஞ்செய்யும் வீதிகளையும் கவனிப்பார்களோ கவனியார்களோ என சந்தேகிக்க வேண்டியதாயிருக்கின்றது. இவற்றுள் அந்தந்த டிவிஷன் கமிஷனர்கள் தங்களை எலக்ஷனில் எடுக்கவேண்டுமென்று கோறி வீடுகடோரும் வண்டிகளைக் கொண்டுவந்து குடிகளை ஏற்றிச் செல்லுவோர் களை அவ்வெலக்ஷன் காலங்களில் காணக்கூடுமெயன்றி மற்றய காலங்களில் அவ்வீதிகளிலேனும் ரோடுகளிலேனுங் காண்பதே கிடையாது.

ஆதலின் இவர்களது கண்ணோக்கம் வீதிகளின் பேரிலில்லையென்றே விளங்குகின்றது. வீதிகளின் பேரில் கண்ணோக்கமும் குடிகளின் பேரில் அன்பு மிருக்குமாயின் பயிரங்கமாய ராஜபாதைகளுள் பள்ளங்கள் தோன்றவும் நீர்கள் நிற்கவும் அதன்வழியே மோட்டார் கார்களையும், சைக்கல் களையும் விடுவதற்கஞ்சி நல்லபாதைகளில் விடவும் நல்லபாதைகளில் நடக்கும் மக்களும் மாடுகளும் நலங்குலைந் தொதுங்கவும் நீர் தங்கியுள்ளப் பள்ளங்களில் வீழவுமாய கஷ்டங்கள் நேரிடமாட்டாது.

இத்தகையக் கஷ்டங்களை அருகிலிருப்பவர்கள் கண்டு துக்கிக்க வேண்டியதாயிருக்கிறதே யன்றி அந்த டிவிஷன் கமிஷனர்களோ தங்களுக் கென்ன கஷ்டமுண்டென்னுந் தனியானந்தத்தி லிருக்கின்றார்கள். அந்தந்த டிவிஷன் கமிஷனர் உத்தியோகங்களை ஐரோப்பிய துரை மக்களே ஏற்றுக் கொண்டிருப்பார்களாயின் அதிகாலையில் எழுந்தவுடன் சைக்கலிலேனும், குதிரைகளிலேனும் ஏறி அவரது டிவிஷனிலுள்ள வீதிகளின் கேடுபாடு களையும், ரோடுகளிலுள்ளக் குறைகளையும் கண்ணாரக் கண்டு அவைகளை சீர்திருத்தத்தக்க முயற்சியினின்று குடிகளுக்கு சுகாதாரமளித்து வருவார்கள். ஐரோப்பிய துரை மக்களுக்கு அத்தகைய வேதுக்கள் உண்டாகுங் காரணமியா

தெனில், அவர்களுக்குள்ள முயற்சியும், வல்லபமும், தன்னரவரன்னிய ரென்னும் பட்சபாதமும், குடிகளுக்கு நேரிட்டுள்ள துக்கங்களைத் தங்களுக்கு நேரிட்டத் துக்கம்போற் கருதி ஆதரிக்குஞ் செயலும், வித்தை, புத்தி, ஈகை, சன்மார்க்கம் நிறைந்த குணமுமுடையவர்களாதலின் தாங்கள் ஏற்றுக் கொண்ட உத்தியோகங் களை சரிவர நடத்தவும் மேலுமேலும் சீர்திருத்தவும் உள்ளவர்களாதலின் அவர்களே இம்முநிசபில் கமிஷனர்களாக ஏற்பார் களாயின் கண்ணோக்க முடையவராகி வீதி முதலியவற்றை சீர்திருத்தச் செய்வதுடன் குடிகளுக்கு நேரிடும் சுகாசுகங்களையும் அப்போதைக்கப் போதே சீர்திருத்தி சுகச்சீரளித்து வருவார்கள்.

- 5:20 ; அக்டோபர் 25, 1911 -

91. மாடதிபதிகளுக்கு குண்டுவேண்டுமாம் குண்டு

இத்தேசத்தின் பண்ணைபூமிகளைப் பண்படுத்தி தானியங்களை விதைத்து பயிறுகளை ஓங்கச்செய்து குடிகளுக்கு உபகாரிகளாக விளங்கும் ஏழைக்குடிகள் எக்கேடுகெடினுங் குண்டுகொடுத்தால் போதுமென சிலர் வெளிதோன்றியிருக் கின்றார்கள்.

பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசை என்னும் மூன்றினையும் வெறுத்து மடஞ் சேர்ந்தோருக்கு இராஜாங்கத்துக்குரிய குண்டு வேண்டு மென்பது மடாதிபரது கருத்தோ அன்றேல் பத்திரிகைகளுக்கெழுதும் கடிதக் காரர்கள் கருத்தோ விளங்கவில்லை.

மடாதிபர் கருத்தாயின் அவர் பசுந்தோலைப் போர்த்துள்ள புலியேயாவர். கடிதக்காரர் கருத்தாயின் உள்ள மடாதிபர் ஒவ்வொருவருக்கும் இருபத்தியோர் குண்டு தீர்க்கவேண்டுமென்னும் உத்திரவைப்பெற்றுக் கொண்டு அவர்கள் தான் இத்தேசத்திய அரசர்கள் அவரைச் சூழ்ந்திருக்கும் யாங்களே படைகளெனத் தோன்றி சுதேசிய சுகந் தேடுவார்போலும்,

அந்தோ பல்லாயிரங் குடிகளைக் கார்த்து அவர்களுக்கு யாதோ ரிடுக்கம் வாராமற் பார்த்து ரட்சித்துவரும் அரயர்களுக்கு இருபத்தி யோர்குண்டும், அரயாது ஆலோசினை சங்கத்தவர்களாயிருந்து இராஜகீய காரியாதிகளுக்கு மந்திரவாதிகளாக விளங்குவோருக்கு பதினேழுகுண்டும் பிரிட்டிஷ் ராஜாங்கத்தோரால் தீர்த்துவருவது அநுபவமாகும்.

இத்தகைய கௌரதாவெடிகுண்டின் செயலை மடாதிபதிகளுக்கும் அளிக்கவேண்டுமென்பது யாது மதியோவிளங்கவில்லை. கத்தோலிக்கு மார்க்கப் போப்புகளை இராஜர்களுமவர்களே குருக்களுமவர்களே எனக் கொண்டாடு வதுபோல் தங்கள் மடாதிபதிகளையும் இராஜரிஷிகளாக்கிக் கொள்ளலா மென்னும் அவாப்போலும். இராஜனாவதற்கும் வல்லபங் கிடையாது. ரிஷியாவதற்கும் ஞானங்கிடையாது. இத்தகைய புருடர் இராஜ கனவு காணு வதினும் ரிஷிகள் கனவு காணுவதினும் யாதுபயன். மடாதிபர் களேனும், கடிதக்காரர்களேனும் தேசத்தையும் தேசமக்களையும் நோக்கி அவர்களுக்குள்ள குறைகளை நீக்கி சீர்திருத்திச் செவ்வைச் செய்வார்களாயின் மடாதிபர்களையும், கடிதக்காரர்களையுங் குடிகள் கொண்டாடுவதுடன் அரசர்களும் நன்கு மதிப்பார் கள். அங்ஙனமின்றி தேச சீர்திருத்தக்காரர் களுக்கும் மதியூகிகளுக்கும் கௌரதா பட்டமளிப்பதுபோல் மடாதிபர்களுக்கு குண்டு கேழ்ப்பது தங்கள் வேதத்திற்கடுக்குமா, புராணங்களுக்கடுக்குமாவெனத் தெரிந்துக் கொள்ள வேண்டியதுதான்.

மடங்களிலுள்ள மடாதிபர்களால் தேசக்குடிகளுக்குக் கல்வி விருத்தி யேனுமுண்டா, வித்யா விருத்தியேனுமுண்டா, செல்வவிருத்தியேனுமுண்டா, சுகவிருத்தியேனுமுண்டா யாதுங் கிடையாவே. மற்றும் அரசர்களுக்கேனும் மதியூகமளிப்பதுண்டோ அதுவுங் கிடையாவே. வெறுமனே வோர் கூடத்திற் சேர்ந்து ஊரார்சொத்தைக் கஷ்டமின்றிப் புசித்து உழ்க்கார்ந்திருப்பவர்களுக்கு இராஜ கௌரவமாம் வெடிகுண்டு வேண்டுமென்பது விந்தையிலும் விந்தையேயாம்.

- 5:25 ; நவம்பர் 29, 1911 -

92. டிப்பிரஸ்கிளாசை டிப்பிரஸ் கிளாசார் சீர்திருத்தல்போமோ

ஒருக்காலு மாகாவாம். அதாவது, டிப்பிரஸ் கிளாசென்பதற்குப் பொருள் தாழ்ந்தவர்கள், நசிந்தவர்கள், ஏழைகளென்னப்படும். இத்தகைய டிப்பிரஸ் கிளாசை சீர்திருத்த முயல்வோர் வித்தையிலும், புத்தியிலும், ஈகையிலும், சன்மார்க்கத்திலும், செல்வத்திலு மிகுத்த மேன்மக்கள் செய்யவேண்டியதே யன்றி மற்றும் வித்தை, புத்தி, ஈகை, சன்மார்க்கமும் செல்வமுமற்ற ஏழைகளாகிய டிப்பிரஸ் கிளாசில் சிலர்கூடி டிப்பிரஸ் கிளாசை சீர்திருத்தப்போகின்றோம் பணவுதவி வேண்டுமென்னும் டிப்பிரஸ் கிளாசால் டிப்பிரஸ் கிளாசை சீர்திருத்தலாகாதென்பது திண்ணம் திண்ணமேயாம்.

- 5:25 ; நவம்பர் 29, 1911 -

93. மகா புராணம்

வினா : ஐயா, இக் கார்வெட்டி நகரிலுள்ள ஓர் பெரியவர் மகாபுராணமென்னும் ஓர் சுவடி வாசித்து வருகின்றார். அதைக் கேட்போர்களில் சிலர் புத்தர் சரித்திரமென்றும், சிலர் ஜைனர் சரித்திரமென்றுங் கூறுகின்றார்கள். அதன் விவரம் அடியேனுக்கு விளங்கவில்லை. ஆதலின் பௌத்தருக்குள் மகாபுராணமென்னும் ஏதேனும் நூலுண்டா அதை விளக்கும்படி வேண்டுகிறேன்.

வீ. பாலசுந்திரம், கார்வெட்டி நகர்.

விடை : அன்பரே! தாம் வினாவிய சங்கை விசேஷித்தன்று. ஜைனரென் பதும், புத்தரென்பதும் சித்தார்த்தியார் பெற்றுள்ள வாயிரநாமங்களைச் சேர்ந்த பெயர்களேயாம்.

பாலிசூத்திரம்

"பஞ்சமாஜீனாத் தீத்திஜீனோ"

ஈதன்றி புத்தரது சரித்திரங்களில் புல்முதற் பிறப்பெல்லாங் கடந்து மானிடனாகப் பிறந்து அருள்மிகுத்து பிறப்புப் பிணி மூப்பு சாக்காடென்னும் நான்கு வாய்மெயையு முணர்ந்து அறத்தை நிலைக்கச் செய்துள்ளாரென்று கூறியவற்றிற்குப் பகரமாக;

மகாபுராணம்

கருமபூமியிற்புன்முதற் பிறப்பெலாங்கடந்து பொருவிமானிடத் தெ ாழிலுடன் பிறந்தருள் பூத்து
மருவுகண்டு யிலிளமெமூப்பொரீ இத்தருமத்தினுரிமெயிற்செய்து மென்றிடெலறம்புரிந்தோங்கும்
போதமேவியகாதைகேட்டிருந்த வம்புரியா, ரேதமேவிய நிரயத்தினழுந்து வரியம
னாதினாட்டொடர்ந் தறமதே நோக்குவனதனாற், பேதையீரறம் புரிந்திடுமென மறைப்பேசும்.

எனக் கூறியுள்ளவற்றால் மகாபுராணம் புத்தர் சரித்திரங்களில் ஒன்றேயாம்.

- 5:30 ; சனவரி 3, 1912 -

94. மொய்

வினா : நம்மவர்களுக்குள் நிறைவேறிவரும் கலியாணத்தில் சேஷையாதி கண் முடிந்தபிறகு மணவரையில் தன்மகர்த்தா என்பவர் உட்கார்ந்து கொண்டு சலவாதியென்னு மேவலாண்மூலமாக மொய், மொய் என்றாக்கியாபித்துப் பகரவும், அச்சமயத்தில் மணமக்கட்குரிய பந்தினர்களீயுங் கட்டணத்தை தன்மகர்த்தா பெற்றுக்கொண்டு மாமிபட்டம், மைத்துனன் பட்டம், மாமன் பட்டமென்றின்னு மனேக பட்டங்களைக் கூறி பொன்னினாற் செய்த மெல்லிய தகடை வதுவையர்களின் நெற்றியில் கட்டிவரும் வழக்கம் நம் பௌத்தமார்க்கத்தின் கோட்பாடா. அன்றேல் அறஹதோ யென்ற மொழியினர்த்தந் தெரியாது பேரிலந்தங் கொட்டைகளை கழுத்திலும், கரத்திலுங் கட்டிக்கொண்டு அரகார அரகாரவென்றரையும் நூதனமதஸ்தர்களின் கற்பனையா.

சு. முனிஸ்வாமியர், இரங்கூன்.

விடை : தாம் வினாவிய சங்கை விசேஷித்ததேயாம். இத்தகைய நமது முன்னோர்கட் செயல்கள் யாவற்றையுந் தேறவிசாரித்துச் செய்தலே அழகாம். இவைகள் யாவும் பௌத்ததன்மச் செயல்களேயன்றி வேறு செயல்களன்றாம்.

அதாவது மணப்பந்தலில் மொய் மொய் என வழங்கு மொழியானது மொய்யுங்கோள், கூடுங்கோள், சேருங்கோளென்னும் ஏவல்மொழியாகும். அஃதை குறுக்கல் விகாரத்தால் மொய் மொய்யென வழங்கி வருகின்றார்கள். அவ்வகை மொய்த்தலுங் கூடுதலும் சேருதலுமாகியக் கூட்டம் யாதுக் கென்னில் மணமகனுக்குரியவர்களும், மணமகளுக்குரியவர்களும் "மொய்யலோர் உதவியென" அதாவது வந்துள்ளக் கூட்டத்தோர் உதவி எனத் தங்களாலியன்ற பத்து பணமோ, இருபது பணமோ மொய்யக் குவிக்கவும், அதை மணமகன் சார்பினரும், மணமகள் சார்பினரும் எழுதி வைத்துக் கொண்டு மேற்கூறியபடி உதவிபுரிந்தோர் வீடுகளில் வதுவை நிறைவேறுங்கால் அவரவர்கள் அளித்துள்ளத் தொகைகளை இவர்கள் மொய்த்து உதவிபுரிவதியல்பாம். இத்தகைய உதவி கலியாணஞ் செய்து கொண்ட மக்கள் கடனில்லாமல் வாழ்கவேண்டுமென்பதற்கேயாம். அத்தகைய மேலாய பழக்கம் டம்பத்தாற்கெட்டு பாழடைந்து போய்விட்டது.

பட்டம் பட்டமெனப் பொன்தகடை நெற்றியிற் கட்டுவது பௌத்த மார்க்க அரசர்கள் பதிநெட்டு விருதுகளின் ஓர் சின்ன மென்னப்படும். வெள்ளை யானை, வெள்ளைக்குதிரை, வெண் குடை, வெண் சாமரை, வெள்ளை யங்கி, வெண் பிறமுடி, வாகுவல்லயம், நெற்றிச்சிட்டியாகிய சின்னங்களுடன் பட்டங்கட்டுவதும் பூர்வ பௌத்தமார்க்கச் சின்னங்களில் ஒன்றென்பதேயாம். இதை அநுசரித்தே ஞானவெட்டியின் ஆக்கியோன் திருவள்ளுவ சாம்பவனர் "சாம்பவ மூர்த்தியர்க்கே பட்டங்கட்டிய சாம்பவனான்காணும்" எனவும் வரைந்துள்ளவற்றா லறியலாம்.

- 5:32 ; சனவரி 17, 191? -

95. பௌத்த பிரசங்கிகளுக்கோர் விண்ணப்பம்

சகோதிரர்களே! புத்தமென்பது மெய்கண்டநிலை, பௌத்தமென்பது மெய்காண முயல்வோர் நிலை. அபுத்தமென்பது பொய்யர்நிலையாதலின் இவற்றை ஒவ்வோர் சத்தியதன்மப் பிரசங்கிகளும் சீர்தூக்கிப் பிரசங்கிக்கும்படி வேண்டுகிறோம். அதாவது அகிம்சை அகன்றவிடத்து காருண்யந் தோன்றும், பொய்யகன்ற விடத்து மெய்தோன்றும், சிற்றின்பம் அகன்றவிடத்து பேரின்பந்தோன்றும், மயக்கம் அகன்றவிடத்துத் தெளிவுதோன்றும், பொருளாசை அற்றவிடத்து சுகநிலை தோன்றும். பஞ்சசீலம் பெற்ற பாக்கியவான்கள் பிரசங்கிகளாகத் தோன்றியபோது அப்பிரசங்கத்தின் சுவையைக் கேட்போர் சுவைத்து நீதிநெறியில் நிலைப்பதே நித்தியானந்த மாதலின் சகல சமயங்களுக்கு ஆதியும் சருவ மதங்களுக்குப் பீடமுமாய சிறந்த சத்திய தன்மத்தைப் பிரசங்கிப்போர் கிஞ்சித்தேனும் சிறந்தநிலையில் நிற்றல் வேண்டும். அங்ஙனமிராது தெய்வப்புலவர் நாயனார் கூறியுள்ளபடி "ஓதியுணர்ந்தும் பிறர்க்குறைத்துந் தானடங்காப்பேதையிற் பேதையாரியல்" எனும் பேதையினும் பேதையர்களாவாராயின் அன்னோர்ப் பிரசங்கமும் பயனைத்தராவாம். மாட்டிறைச்சியையும் பன்றியினிறைச்சியையும் கொழுக் கத்தின்று சாராயத்தைப் பூராயருந்துவோர் தாங்களும் மதுவிலக்கச்சங்கத்து அதிபர்களென வெளிதோன்றுதல்போல் தங்களுக்குள்ள காமியம், பொறா மெய், கோபம், குடிகெடுப்பு, டம்பம் முதலிய துற்குணங்களைப் போக்க வியலாது, ஏனையோர் துற்குணங்களைப்போக்கும் பௌத்தப் பிரசங்கிகளென வெளிதோன்றுவது வீணேயாம். புத்தன்மமானது நீதிமார்க்கவழியும், அதன் போதகர்கள் நீதிமார்க்க வழிகாட்டிகளுமாதலின் நீதியற்றோருக்கு வழி காட்டுவோரே கோபமிகுத்த வழியிலும், காமியமிகுத்த வழியிலும், வஞ்சினமிகுத்த வழியிலும், பொறாமெமிகுத்த வழியிலும், டம்பமிகுத்த வழியிலும் நடப்பதாயின் தாங்கள் போதிக்கும் நீதிமார்க்க வழிகளுங் கெட்டுத் தாங்களுங் கேடடையவேண்டிவரும். ஆதலின் சத்தியதன்மத்தைப்போதிக்கும் அன்பர்கள் சத்திய தன்மத்தில் நடந்து போதிப்பதாயின் தன்மமும் சிறப்பைப் பெறும். தாங்களும் அழியா சிறப்பைப் பெறுவார்கள் என்பது சத்தியம். புத்ததன்மம் பரவற்கு வேணப் பொருளுதவிசெய்யும் பெரியோர்களும் நற்காட்சி

வானந்தமடைவார்கள் அவர்கள் செய்துவரும் பரோபகாரமும் பரிமளிக்கும். ஆதலின் அன்னியமதத்தோரை நீதிநெறியிலயித்துத் தங்க ளன்பின் மயமாக்கிக்கொள்ள வேண்டுகிறோம்.

- 5:44 ; ஏப்ரல் 10, 1912 -

96. மதாச்சாரங்கள்

வினா : நெடியகடல்சூழ் இவ்வுலகினிடத்தே உருவெடுத்துள்ள மானிடப் பிறவிகளுள் சொற்பக் கூட்டத்தோர் மக்களுக்குள் உண்டாம் அன்பு, ஈகை, சாந்தமெனும் முக்குணங்களற்று சாதிவேடம்பூண்டு சாமிசாமி என்று முக்காலும் நீரில் மூழ்கி முகத்தினிடத்தே விபூதியென்னுஞ் சாம்பலைப் பூசி கழுத்தினிடத்தே உருத்திராக்கமெனும் ஓர்வித கொட்டையைக் கட்டி மொட்டைத்தலையில் மூன்று குட்டு குட்டி கோயிலென்னுங் கல்லை சுற்றி சுற்றி முணுமுணென்ற மந்திரத்தை யோதியோதி சிவசிவா சிவசிவா, ஹரஹரா ஹரஹரா, ஹரிஹரி ஹரிஹரி என்னும் மொழிகளை ஓதி, விபூதியினிடத்து இவ்வளவுமகிமெயுண்டு, கொட்டையினிடத்து இன்னுமதிக மகிமெயுண் டென முழுக்க முக்காடிட்டு கூறித்திரியும் கூற்றுகள் குறைக்கூற்றோ. அன்றேல் நிறைக்கூற்றோ அறிகிலேன். அன்றியும் இவர்கள் கூறித்திரியும் மொழிகள் எச்சமயத்தை அநுசரித்ததோ யாவருக்குரியதோ விளங்கவில்லை. நிற்க. இவர்கள் செய்துவரும் இத்தயை செயல்களால் உண்டாகும் நன்மெ தீமெ யாது. இன்னும் உலகத்தாருக் குண்டாம் சுக அசுகங்களென்ன, அல்லது இவர்கள் செய்துவரும் இத்தியாதி விஷயங்களுக்கு ஞானார்த்தம், தத்து வார்த்தம், அந்தரார்த்தம், பகிரயார்த்தம், வாசியார்த்தம் லச்சியார்த்தம் என்னும் ஈறாகவுள்ள அர்த்தபேதங்கள் ஏதேனுமுளதோ. அவ்விதம் அர்த்தபேதங்கள் ஏதேனு முளதாயின் அவைகளைக் கற்பதினால் ஏதேனும் பயனுளதோ. நிற்க. உலகத்தினிடத்தே மக்கள் ஈடேறுவதற்குண்டாம் மார்க்கங் களென்ன. இது களை எல்லாம் எமது கல்விக்களஞ்சியக் கருணாகரராம் பண்டிதப்பெருமான வர்கள் எனது சிற்றறிவிற்கு புகும்வண்ணம் தெளிவுற விளக்கி தமதருமெவாய்ந்திலகும் சத்தியத் தமிழனின் ஓர் கோணத்திற் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

எஸ்.சி. ஆதிகேசவன், புதுப்பேட்டை.

விடை : அன்பரே! தாம் வினாவிய சங்கை விசேஷித்ததேயாயினும் விசாரிணை மிகுத்தோரே அதன் சுருக்கத்தைத் தெளிந்துக்கொள்ளுவார் களன்றி ஏனைய மந்தமதிகளும் சுயநலப்பிரியரும் விசாரிணையை அகற்றி சொந்தமதத்திலேயே இருத்தல் வேண்டும். சோம்பேறித் தொழிலையே பெருக்க வேண்டுமெனத் துடைதட்டுவோ ரதன் சுருக்கத்தை அறிய மாட்டார்கள்.

இவைகள் யாவும் மதக்கடைபரப்பி ஜீவிக்கும் மதாச்சாரிகளின் கட்டு பாடும் சுயப்பிரயோசனக் கட்டுக்கதைகளுமேயாம். அதாவது அண்டை வீட்டுக்காரன் அன்னமே சாமி அன்னமே சாமியென்னப் பக்கத்து வீட்டுக் காரன் பருப்பு நெய்யேசாமி, பருப்பு நெய்யே சாமியென்பானாயின் பலர் பக்கத்து வீட்டுக்காரன் வார்த்தையை நம்பி நடப்பதும், சிலர் அண்டை வீட்டுக்காரன் வார்த்தையை நம்பி நடப்பதே சுவாபமாதலின், விசாரிணை யென்பதே அவர்களுக்குக் கிடையாது. விசாரிணைப் புருஷர்களாயிருப் பார்களாயின் இம்மதக்கடைச் செயல்கள் யாவையும் மதாச்சாரிகளின் சுயப்பிரயோசனக் கட்டுக்கதைகளென்றும் அம்மொழிகளைப் பலுக்குவ தாலும் தட்சணைக்கொடுத்துத் தொழுவதாலும் யாதொரு பயனுமில்லை என்றே தெளிந்துக்கொள்ளுவார்கள். விசாரிணையற்றவர் களாதலின் அண்ணமார்சாமி, கன்னிமார்சாமி, காட்டேறிசாமி, இரிச்சாத்தாள் சாமிகள் தோன்றிவிட்டது போல் பொருளற்ற மொழிகளையும் நிலையற்ற சாமிகளையும் நம்பிக்கொண்டு விண்பணவிரயங்களைச்செய்துக் கொண்டு பாழடைகின்றார்கள். இதிற் சுகம் பெறுவோர், மதக்கடை வியாபாரிகளாம் மதாச்சாரிகளேயாவர்.

இவற்றுள் பூர்வ திரிரத்தினங்களைத் தெரிந்துகொண்ட நீவிர்பஞ்ச பாதகங்களை அகற்றி சருவசீவர்களுக்கும் நன்மெய் புரிவீராக. அன்றேல் சருவசீவர்களுக்கும் அன்பராக விளங்குவீராக.

- 5:50 ; மே 22, 1912 -

97. விவாகக் கிரியை

வினா : நமக்குள் நிகழ்ந்துவரும் விவாகங்களை சகல மாதங்களிலுஞ் செய்யலாம். ஆடி, புரட்டாசி, மார்கழி மாதங்களில் செய்யலாகாதென நீக்கி வருங் காரணமென்னை, இரண்டாவது புத்தமெனத் தோன்றிய மொழிக்கு அபுத்தமென்னு மொழிதோன்றற்கு விதியென்னை.

கோ. முநிநாதன், வேலூர்.

விடை : அன்பரே! தாம் வினவிய சங்கை தற்காலமதஸ்தர் முன் விசேஷமாக விளங்கினும் பௌத்ததன்ம காலத்தில் அநுபவக் காட்சியாக நிகழ்ந்துவந்தவைகளாகும்.

அதாவது விவாகக் கிரியைகளை தாராபலன், சந்திரபலனைக் கொண்டும், புருடன் பிறந்த நட்சத்திரம், பெண் பிறந்த நட்சத்திரத்தைக் கொண்டும், புருடன் பெயர் பெண் பெயரைக்கொண்டும், முகூர்த்தகாலம் கணித்து எம்மாதங்களிலுந் தடையின்றி செய்யலாம். பனிரண்டு மாதங்களிலும் பொது வாய முகூர்த்த காலங்களுண்டு அவற்றுள் ஆடி, புரட்டாசி, மார்கழி மாத மூன்றில் மட்டும் விவாகங்கள் தடைபட்டு வந்தக் காரணங்கள் யாதென்பீரேல் இத்தேசமெங்கும் புத்தன்மம் பரவி இந்திர விழாக்கள் கொண்டாடி வந்த காலத்தில் ஆடி மாதம் அறச் செல்வியாம் அம்பிகா தேவியின் பரிநிருவாணத்தைக் கொண்டாடுங் காலமும் புரட்டாசி மாதம் மாவலி சக்கரவர்த்தியின் பரிநிருவாணத்தைக் கொண்டாடும் காலமும் மார்கழி மாதம் சருவசீவ தயாபரனாம் புத்தபிரானின் பரிநிருவாணத்தைக் கொண்டாடுங் காலமுமாதலான் அவைகளின் உற்சாகத்தை தங்கடங்கள் விவாகங்களினு மேலாகக் கொண்டாடற்கு அம்மூன்று மாதத்திலும் தங்கள் விவாக சந்தோஷங்களைக் கொண்டாடாமல் தேவர்களின் பரிநிருவாண சந்தோஷத்தை விசேஷமாகக் கொண்டாடி நித்திய சுகமாம் நிருவாண நிலையை மறவாது பற்றறுக்குங் கியானசக்தியை வளர்த்து வந்தார்கள்.

உலகத்திற்கே முதற் சீர்திருத்தக்காரர்களும் ஏழாவது தோற்ற தேவர்களில் ஆதியானவர் களுமாதலால் அவர்களது இருபிறப்பாம் பரிநிருவாண காலத்தை விசேஷமாகக் கொண்டாடற்கு ஆடி, புரட்டாசி, மார்கழி மாதங்களில் எவ்விஷய சுகத்திற்கும் பிரவேசியாது ஆதி தேவர்களின் சிறப்பையே கொண்டாடிவந்த அநுபவமானது நாளதுவரையில் நிறைவேறி வருகின்றது.

புத்தம், அபுத்தமென்னு மெதிர்மறைப் பகுபதமொழியானது வடநடை பகுபதமாகும். அதாவது மொழிமுதற்கண் ஒற்றுளவாயின் அவ்வும், உயிருளவாயின் அன்னும் இருவகை மொழிக்கு நிருவும் புணர்ந்து பொருளின் மெயும் பிறிதுமில்லா எதிர்மறையுங்காட்டும் வடநடை பகுபதங்களாம். உதாரணம், சயமிலான், அச்சயன் நீதியற்றவை, அநீதி, மலமற்ற, அமல, சீரணமற்ற, அசீரண, தருமமில்லான், அதருமன், துவிதம், அத்துவிதம் என வருவதுபோல், புத்தம்இன்மெயாயின் அபுத்தமென்னுமொழி தோன்றுவ தியல்பாம்.

- 6:1 ; சூன் 12, 1912 -

98. சுடலைச் சடங்குகள்

வினா : ஐயா சென்றவாரம் நமது பத்திரிகையில் ஓர் பர்மிய பவுத்த குருவின் மரணத்தைத் தெரிந்து மிக்க விசனமுற்றோம். அதிலுண்டாகிய சங்கைகள் சிலதுண்டு. அதாவது பௌத்தகுருவென்றால் பிணி, மூப்பு, மரணத்தை ஜெயித்துக் கொண்டவரா, ஜெயிக்காதவரா, அவரது காலின் பெருவிரல் கட்டியது அவர்கள் தேசவழக்கமா, நமது தேசவழக்கமா. நமது

தேசவழக்கமாயின் அதன் காரணமென்ன, பெட்டியில் வைத்து வண்டியில் கொண்டுபோவது அவர்கள் தேசவழக்கமா, நமது தேசவழக்கமா. சுடலைக்குக் கொண்டுபோய் குருக்களும் பௌத்தர்களுந் தியானித்த மந்திரமென்ன. பிரேதத்தை தகனஞ்செய்யும்போது நெய்யுங் கற்பூரமுஞ் சேர்த்து தகனிப்பது யெற்றிற்கு. அன்று அதிகக்கானலில்லமற் குளிர்ந்திருந்தது குருவின் நற்செயலா, சூழ்ந்துவந்தமக்களின் நற்காலமா. இவற்றை விளக்கி அடியேனை ஆதரிக்கும்படி வேண்டும்

வீ. கோபாலன், தின்னனூர்.

விடை : பௌத்தகுருக்களில், சமணநிலையுள்ளவர்கள் பிணி மூப்பை ஜெயிக்காதவர்கள், அறஹத்து நிலையடைந்தவர்கள் பிணி, மூப்பை ஜெயித்தவர்களாவர். பெருவிரலைக்கட்டுவது நமது தேசத்தோர் வழக்கம் போல் அவர்களுங் கட்டுகின்றார்கள். அவ்வகைக் கட்டுங் காரணமியாதெனில், உலகபாசபந்தக்கட்டு விடவில்லையென்பது குறிப்பு. இதை அநுசரித்தே தாயுமானவரும் "நிகளபந்தக்கட்டவிழ்ப்பாரே" என்றுங் கூறியுள்ளார். அவர்கள் தேசத்தில் ஓர் வகைத்தேர்கட்டி பெட்டியிலடக்கி வைத்து சுடலைக் குக் கொண்டுபோய் தகனஞ் செய்வது வழக்கம். இத் தேசத்துள் அவ்வகைத்தேர் கட்டுவோரில்லாதபடியால் பெட்டியிலடக்கி வண்டியில் வைத்துக் கொண்டுபோகப் பட்டது. சுடலையிற் சென்று அங்குசொல்லும் மந்திரம் யாதெனில், கொலைசெய்யோம், பொய் சொல்லோம், களவு செய்யோம், விபச்சாரஞ் செய்யோம், லகிரியருந்தோ மென்று சீலத்தை சிந்திப்பதன்றி, குருநரகம் ஏகப்படாது மோட்சம் போகவேண்டுமென்னும் மந்திரங் கிடையாது. அன்றய தினம் தகனிக்குங்கால் பெருங்கட்டைகளாதலால் சீக்கிறமெரிதற்கு நெய்விட்டும் கெட்டவாயுக்கள் நீங்குதற்குக் கற்பூரஞ்சேர்த்துந் தகனஞ்செய்யப்பட்டது. இறந்த குருவினது நன்மெய் பயனும் பிரேதத்தைச் சூழ்ந்துவந்த மக்களின் நன்னேரமுமே அக்காலெழுஞ் சூரியவெப்பந் தணிந்து சுகக்காட்சி தந்தது. அவற்றைக் காலத்தின் செயலென்னினும் அக்கால் சூழ்ந்துவந்த மக்களின் நன்னேரமே யாதலின் காலத்தையும் பயனையுங்கொண்டு அவற்றை நற்காட்சி என்றே கூறியுள்ளாம். பௌத்தமென்பது தன்மசம்மந்தமின்றி மதசம்மந்த மாகா. ஆதலின் காலம் நேர்ந்தவழியில் கிரியைகள் நிறைவேறும். "பழையன கழிதலும் புதியனபுகுதலும் வழுவல காலவகையினே"

- 6:2 ; சூன் 19, 1912 -

99. கிறிஸ்துமத கடவுளுக்கும் வேதத்திற்கும் மதுபானம் உடன்பாடல்லவேயல்ல

பூர்வமக்கள் யாவரும் மதுவென்னுந் தேனுக்கொப்பாய வினிய ரசத்தை அருந்தி வந்தார்களன்றி மயக்கத்தை உண்டுசெய்யும் ரசத்தை அருந்தினவர் களில்லை. நாளுக்குநாள் திராட்சரசத்தையும், பனை ரசத்தையும், தென்னை ரசத்தையும், ஈச்சரசத்தையும் மதுவென்னுந் தேனுக்கொப்ப அருந்துவதை நீக்கியும் வெல்லங்கற்கண்டு இவைகள் செய்யும்வகைகளை அகற்றியும்இரசங் களுக்கு லாகிரியேற்றி குடிக்க ஆரம்பித்தும் சுராபானமென்னும் கஞ்ஜாநீரில் சருக்கரை முதலியவற்றைக் கலந்துங் குடிக்க ஆரம்பித்துக் கொண்டார்கள்.

இத்தகைய சுராபானலாகிரி இந்துவேதத்திற்குடன்பாடாயதை அவர்கள் வேதத்திலேயே காணலாம். கிறிஸ்து வேதத்தில் கிறிஸ்துவானவர் ஓர் கலியாண காலத்தில் அன்னம் புசித்தபின்னர் அனைவருக்கும் திராட்ச ரசத்தை அளித்தா ரன்றி மயக்கத்தைக்கொடுக்கும் மதுபானத்தைக் கொடுத் தாரில்லை. தேனென் னும் இனிய பொருளுக்கு மதுவென்னும் பெயரற்று புத்திமயக்கத்தையுங் கேட்டையும் உண்டுசெய்யும் வஸ்துவிற்கே மதுவென்னும் பெயரையளித் துள்ளார்கள். ஆயினும் கிறிஸ்துவானவர் கலியாணத்திலளித்த மதுவானது மயக்கத்தைக்கொடுக்கக்கூடிய வஸ்துவாயிருப்பின் அவரது சிஷியவர்க்கத்தோர் மதுவை அருந்தலாகாதென்று கண்டித்திருக்க மாட்டார்கள்.

கிறிஸ்துவின் காலத்திய கலியாணத்தி லீய்ந்தது மயக்கமற்ற மதுவும் தற்காலம் மாறுபடுத்திக்கொண்டது மயக்கமுற்றமதுவுமாதலின் கிறிஸ்துவின் மாணாக்கர் மதுவை அருந்தலாகாதென வற்புறுத்திக் கண்டித்திருக் கின்றார்கள்.

(வருமாறு) அப்போஸ்தலனாகியப் பவுல் தீத்துவுக்கு எழுதின நிருபம் முதலாமதிகாரம். 7-வசனம், ஏனெனில் கண்காணியானவன் தேவனுடைய உக்கிராணக் காரனுக்கேற்றவிதமாய் குற்றஞ்சாட்டப் படாதவனும், தன்னிஷ்டப்படி செய்யாதவனும், முற்கோபமில்லாதவனும், மதுபானப் பிரியமில்லாதவனும், அடியாதவனும், இழிவான ஆதாயத்தை இச்சியாதவனுமா இருத்தல் வேண்டும் எனக் கூறியுள்ளவற்றுள் மதுபானத்தை அகற்றியிருக்கின்றார் களென்பது தெளிவாக விளங்குகின்றது. ஆதலின் கிறிஸ்துமதக் கடவுளுக்கும் வேதத்திற்கும் மதுபானம் உடன்பாடல்லவேயல்ல என்பது துணிபு.

- 6:11; ஆகஸ்ட் 21, 1912 -

100. தீபவதி நதி ஸ்னானம்

இதையே தற்காலம் தீபாவளிப் பண்டிகையெனக் கொண்டாடி வருகின்றார்கள். பௌத்த தன்மம் இந்திரர்தேசமெங்கும் பரவியிருந்த காலத்தில் மடங்களிலுள்ள சமணமுனிவர்களால் ஏதேது பொருட்களாகும் நூதனவஸ்துக்களைக் கண்டுபிடிக்கின்றார்களோ அதனை அத்தேசத்தை யாளும் அரசர்களுக் கறிவித்து அவர்களால் குடிகளுக்குத் தெரிவிக்கக், குடிகள் யாவரும் அவ்வஸ்துவை சகலருக்கும் உபயோகமாம் பொருட்டு விருத்திசெய்து மற்றும் வஸ்துக்களை மக்களுக்கு உபயோகமாம் பொருட்டு கண்டு பிடிப்பதற்காய் கண்டவஸ்துவின் காலத்தை வருடந்தோருங் கொண்டாடி வருவது வழக்கமாயிருந்தது. அவற்றுளிஃது எள்ளிநெய் கண்டுபிடித்த காலமாக்கும். இந்நெய்யைக்கொண்டு தீபவதி நதியிற் தலைமுழுகி பலவகைப் பலகாரங்களைச் சுட்டுப் பலருக்கு மிட்டுண்ணச் செயலானது நாளது வரையிலும் மாறாது வழங்கிவருகின்றபடியால் தீபவதிநதி ஸ்னான பண்டை ஈகையென்பதை மாற்றி தீபாவளி பண்டிகை என வழங்கி வருகின்றார்கள். இதனை நமது பௌத்த சோதிரர்கள் எள்ளிநெய்க் கண்டுபிடித்தக்காலமெனக் கொண்டாடு·வதுடன் பலகாரஞ்செய்து அன்பர்களுட னுண்பதுடன் ஏழைகளுக்கு மிட்டுண்டு பண்டை ஈகையைக் கொண்டாடும்படி வேண்டுகிறோம்.

- 6:22; நவம்பர் 6, 1912 -

101. புருசீகரின் வேஷம்

வினா : நமது இந்திரர்தேயத்தில் திராவிடர்களாம் தமிழ்பாஷைக் குடிகளே பெருந்தொகையினராக இருந்தவர்களென்றும் அவர்களே தென் பரதகண்டத்தி னதிகாரிகளாகவும் சாஸ்திரவல்லவர்களாகவும் ஞானிகளா கவும் சித்தர்களாகவும் இருந்ததாகத் தாங்கள் வரைந்து வருவதுடன் சரித்திரக் காரர்களாலும் திராவிடர்களே இத்தேசப் பூர்வக்குடிகளென்று கொலம்போ சென்பவர் அமெரிக்காதேசத்தைக் கண்டுபிடிப்பதற்கு முன்பே திராவிட பௌத்தர்கள் அவ்விடஞ் சென்று சாக்கையர் வியாரங்கட்டிக் குடியேறியிருந்த மிக்கத் திடமுடையவர்களென்று வரைந்திருப்பதையுங் காண்கின்றேன்.

இத்தகையப் பெருந்தொகையானவரும் வல்லவர்களும் விவேகிகளு மானோர்களை புருசீக நாட்டனின்று இந்திரர் தேசத்துள்ளக் குமானிடர் தேசத்துள் வந்து குடியேறிய சொற்பக் குடிகளாகிய புருசீக தேசத்தார் பெருந் தொகையோரான திராவிடர்களையும், ஆந்திரர், கன்னட மராஷ்டர் களையும், யுத்தமுதலாய விஷயங்களால் ஜெயிக்காது பௌத்த அறஹத்துக் களாம் அந்தணர்களைப்போல் வேஷமிட்டு தங்களுக்குள் அடக்கிக் கொண்டார் களென்பது சிலரால் சங்கிக்க இடங்கொடுப்பதுமன்றி எமக்குங் கிஞ்சித்து சங்கைக் கிடங்கொடுக்கின்றபடியால் இவற்றை விளக்கியாட் கொள்ளுவீராக.

வீ. முனிசாமியர், புதுவை.

விடை : புருசீகர்களின்னாட்டுள் குடியேறி அதிபயத்துடன் பிச்சையேற்றுண்டவர்கள். அறஹத்துக்களாம் அந்தணர்போல் வேடமிட்டுக் கல்வியற்றக்குடிகளை ஏய்த்து அதிகாரத்துடன் பிச்சையேற்க ஆரம்பித்த போதினும் விவேகமிகுத்த திராவிடர்களால் துரத்தப்பட்டு பெயரு ரில்லாமலே போயிருப்பார்கள். இதன்மத்தியில் இத்தேசக் குடிகளாகும் ஆந்திரர், கன்னடர், மராஷ்டர்களில் சில சோம்பேறிகளும், வஞ்சகர் களுந்தோன்றி புருசீகர்கள் போட்டுள்ள பிராமண வேஷமானது பெண்டுக ளுடன் சுகித்துக்கொண்டே சுகபோசனஞ்செய்தற்கு எளிதாயிருந்தபடியால் தாங்களும் பிராமண வேஷமணிந்து கொண்டு அதிகாரப்பிச்சையேற்றுண்ண ஆரம்பித்துக் கொண்டதுடன் "வள்ளுவர் சாக்கையரெனும் பெயர் மன்னர்க்குள்படு கருமத்தலைவர்க்கொக்கும்" என்னுந் திவாகர விதிப்படி அரசர், வணிகர், வேளாளரென்னும் முத்தொழிலாளருக்குங் கருமத்தலைவர்களா யிருந்து வள்ளுவர்களால் நாடாத்தி வந்த தன்ம கன்மத் தொழில்களையுங் கைப்பற்றிக் கொண்டார்கள்.

விசாரணையில்லா சிற்றரசர்களும் கல்வியில்லாப் பெருந்தொகைக் குடிகளும் வேஷப்பிராமணர்களுக் குட்பட்டுவிட்டார்கள். விவேகமும் விசாரணையும் மிகுத்த திராவிடர்கள் குறைந்தும் எடுத்த முயற்சிகள் கைகூடாதுந் திகைத்த காலத்தில் பழயவேஷப்பிராமணர்களும் புதுவேஷப் பிராமணர்களுந் தங்கள் தங்களைச்சார்ந்தக் கல்வியற்றக் குடிகளால் வேஷப்பிராமணத்தைக் கண்டித்திருந்தோர்களைத் துன்பஞ்செய்யவும் அவர்களைத் தலையெடுக்கவிடாது நசிக்கவும் தேசத்தைவிட்டகற்றவும் ஆரம்பித்துக் கொண்டபடியால் கல்வியும் வல்லபமும் மிகுத்த திராவிடர் களின் வலுவுகுன்றி நீதியும், நெறியும், வாய்மையும், முயற்சியுமற்று அசத்தியமும் அசப்பியமும் பெருகி சகல விருத்திகளுங் குறுகி தேசமும் பாழடைவதற் கேதுவாகிவிட்டது. மற்றப்படி பிராமணவேஷமிட்டப் புருசீகர்கள் மட்டிலும் இருந்திருப் பார்களாயின் விவேகமிகுத்த திராவிடர் களினால் அப்போதே துரத்துண்டு தேசம் இன்னும் சிறப்பைப்பெற்றிருக்கும். அவர்களுடன் இத்தேசத்தியச் சோம்பேறிகளும் பிராமணவேஷம் அணிந்து கொண்டபடியால் தேச உளவை அறிந்து பொய் வேதங்களையும் பொய்புராணங்களையும் அவரவர்கள் மனம்போனவாறு புதிப்பித்துக் கல்வியற்றமக்களைக் கைவசப்படுத்திக்கொண்டதுமல்லாமல் தங்கடங்கட் பொய் வேஷங்களைப் பறைந்துவந்த விவேகமிகுத்த திராவிடர்களையும் மேற்கொண்டார்கள். இதுவே அவர்கள் ஜெயத்திற்குப் பீடமாகும்.

- 6:23; நவம்பர் 13, 1912 -

102. பரிதாபக்கொலை! பரிதாபக்கொலை!! பரிதாபக் கொலை!!!

பறையனென்றழைக்கப்பட்ட ஒருவனை சில ரெட்டிகளென்போர் சேர்ந்து கொலைசெய்து விட்டார்கள் தென் ஆற்காடு டிஸ்டிரிக்ட் திண்டிவனந்தாலுக்கா விடலாபுர கிராமத்தில் ப. இராகவனென்னும் ஓர் குடியானவனிருந்தான். அவனுக்கோ கிஞ்சித்து தமிழ்வாசிக்க எழுதத்தெரியா விடினும் தன்பிள்ளைகளுக்குக் கிஞ்சித்துவாசிப்பை யூட்டி வைத்திருந்தான். அவனுக்குள்ள சிரத்தையால் சொற்பபூமிகளை சம்பாதித்து அவைகளில் உழைத்துவிருத்தி செய்துவரும் விஷயத்தில் மிக்க ஊக்கமுடையவனாய் இருந்ததுமன்றி அவ்வூர் ரெட்டிகளிடம் வேலைசெய்யும் ஏழைக் குடிகளுக்கு நாள் முழுவதும் வேலைவாங்கிக்கொண்டு ஓரணா கூலிகொடுப்பது வழக்கம். இந்த ராகவனென்பவனோ குலாபிமானத்தாலும் கருணைமிகுதியாலும் தன்னிடம் வேலைசெய்யும் ஏழைக் கூலிகளுக்கு நாளொன்றுக்கு இரண்டணா கூலி கொடுத்து வருவது வழக்கம். இதனால் முக்கியமான உழவு காலங்களில் கூலியாள்கள் யாவரும் இராகவனிடம் போய்விடுவதேயன்றி ரெட்டிகளிடம் போவது கிடையாதாம். இதேவிரோதத்தை ஆதாரமாகக் கொண்டு பறையனுக்குக் கொஞ்சம் பூமி விருத்தியாகிவிட்டபடியால் துட்டு கொழுப் பேறி இரண்டணா கூலிகொடுத்து வேலைக்காரரைக் கெடுத்துவிடுகிறா னெனப்

பேசிக்கொண்டு நாளுக்குநாள் அவனைக் கெடுக்க வேண்டிய முயற்சிகளை செய்துவந்தபடியால் அவனுக்குள் பயமுண்டாகி சென்னைக்கு வந்து இராயப் பேட்டையில் நடந்து வந்த "பறையன்" என்னும் பத்திரிகையில் அக்கிராமத்திலுள்ள ரெட்டிகளால் நேரிட்டுவருந் துன்பங்களை வரைந்து வெளியிட்டுவிட்டுப் போய்விட்டான்.

அதற்குப் பின்னிட்டும் அவனது மாடுகளுக்கும் பயிருக்கும் அந்தரங்கமான இடுக்கங்களைப் பலவகையாகச் செய்தும் கீழ்ச்சாதி மேற்சாதி என்னும் தாட்சண்யச் செயல்களினால் அக்கிராமாதிகாரிகளால் உதவியு மில்லாமல் தவித்துக் கொண்டே இருந்தவனை சென்ற டிசம்பர் மாதம் 25ம் நாள் இரவு அந்த ரெட்டிவகையராக்கள் கூட்டமாக வந்து வீடுபுகுந்து அடிக்க ஆரம்பித்தபோது தப்பித்து ஓடி ஒளித்துக்கொண்டானாம். மறுநாட் காலையில் அக்கிராம ரெட்டிவகையராக்கள் தங்கள் மாடுகளைவிட்டு இராகவன் பயிறுகளை மேயவைத்ததின்பேரில் அவன் வயிரெரிந்து பயிருள் இறங்கி மாடுகள் யாவையும் பவுண்டுக்கு வோட்டிக்கொண்டு போகுங்கால் வழியில் யாருமில்லாத இடம் பார்த்து அந்த ரெட்டி கூட்டத்தார் பத்து பனிரண்டுபேர் சேர்ந்து வளைத்துக்கொண்டு அவனைத் தடிகளால் அடித்துக் கொன்றுபோட்டு படுபாவிகள் தங்கள் மாடுகளை ஓட்டிக்கொண்டுபோவதை அறிந்தப் பிள்ளைகளும் பந்துக்களும் ஓடிப் பார்க்குங்கால் இராகவனை அடித்துக் கொன்றுபோட்டு ஓடிவிட்டார்கள். பெண்சாதி பிள்ளைகள் யாவும் கதரக் குடிகள் யாவரும் பதர அதிகாரிகளிடம் அறிக்கையிட்டு அவர்கள் வைத்திய பரிசோதனை செய்ததில் அடித்தவடிகளினாலே பரிதாபமாய்க் கொலையுண்டானென்று கண்டுகொண்டு கனந்தங்கிய போலீஸார் விசாரிணையில் வந்திருக்கின்றதாம். தற்கால மங்கு சாதித்தலைவர்கள் அதிகாரமின்றி தாசில்தாராயுள்ளவரும் மகமதிய கனவான், கேசை விசாரிணைச்செய்யும் இனிஸ்பெக்ட்டரும் இராஜபுட்ஸ் கனவான் விசாரிணைப் புரியும் மாஜிஸ்டிரேட்டும் யூரேஷியப் பிரபுவாதலால் ஏழைமக்கள் மீது பரிதாபம் வைத்து நீதியாகவே விசாரிணைச் செய்துவருகின்றதாகக் கேழ்வியுற்று ஆனந்தடைந்தோம். கூடிய சீக்கிறம் படுபாவிகள் அகப்பட்டுப் போவார்கள் என்பது திண்ணம். மற்ற சாதித் தலைவர்களே அந்த அதிகாரங்களி லிருப்பார்களாயின் அந்தக்கொலை அம்மட்டோடே அடங்கிப்போயிருக்கும். கருணைமிகுத்தவர்களும் நீதிமான்களுமா யிருக்கின்றபடியால் திண்ணமாகக் கொலைபாதகர்கள் அகப்பட்டு தண்டனைக் குள்ளாவார்கள் என்றே நம்புகிறோம்.

பராயசாதியோரால் பறையனென்றழைக்கப்பெற்ற ப. இராகவனது வம்மிஷ வரிசையைச் சார்ந்தப் பெரியவீட்டுக்காரர்களும், பெரியசாதியோரது பெரியபுராணமே எங்களுடைய தென்போர்களும், பெரியசாதிகளின் மதமே எங்களுடையமதமென்போர்களும், பெரிய சாதியோரின் சாமிகளே எங்கள் சாமிகளென்போர்களும் புலியைக்கண்டு பூனையுஞ் சூடிக்கொள்ளுவதுபோல் நெடுக்குப்பூச்சுக் குறுக்குப்பூச்சுகள் பூசி மொட்டைகளடித்து கொட்டைகள் கட்டி தாடிகள் வளர்த்து பேடிகூத்தாடிப் பிழைக்க வழியற்று தாளமத்தள மடித்து பாட்டுகள் பாடி யாங்கள் வெண்பா சிங்கம், விருத்தப்புலி, அகவல் யானை, கலித்துறைக் கரடியெனக் கையேந்தி ஊரானது சைவசமயத்தை உறுதிப்படச்செய்யப்போகிறோம். வேறானது வைணவசமயத்தை வலுபடுத்தப் போகிறோமெனப் பட்டாங்கடித்துத்திரியும் பதங்குலைந்தவர்களே, இனத்தானான இராகவனது பரிதாபக்கொலையை நோக்குங்கள். பறையனும் பெரும்பூமி வைத்து வாழலாமா, பறையனும் சீர்சிறப்படையலாமா என்னும் பொறாமெகொண்டு படுகொலை புரிந்து வதைக்கும் பாவிகளின் செயல்களைக் கண்ணோக்கி அத்தகைய சத்துருக்களின் சாமிகளைச்சாராமலும், சத்துருக்களின் மதங்களைத் தழுவாமலும், சத்துருக்களின் புராணங்களை நோக்காமலும் உங்கள் மித்துருவாய குலகுருவாம் புத்தரது சத்திய சங்கத்தைச்சார்ந்து நீதியும் நெறியுங் கருணையுமமைந்த பிரிட்டிஷ்

ராஜவிசுவாசத்தி லயித்து சத்துருக்களை ஜெயங் கொள்ளுங்கோள். மற்றப்படி சத்துருக்கள் சாமியைக்கும்பிட்டாலும் உங்களைக் கொல்லுவார்கள் மதங்களைச்சார்ந்தாலுங் கொல்லுவார்கள் புராணங்களைப் படித்தாலுங் கொல்லுவார்கள் அவர்கள் வைத்துள்ள சாதிகளையும் மதங்களையும் விட்டகலுங்கள் அகலுங்கள் அன்றே சுகம்பெறுவீர்கள்.

- 6:40; மார்ச் 12, 1913 -

103. சாமி சங்கைத்தெளிவு

ஸாமி - சாமி என்னு மிருமொழிகளுள் ஸாமி, என்பது மகடபாஷை, சாமி என்பது திராவிடபாஷை. இவ்விரண்டு மொழியினுள் ஸாமி, என்னும் மொழியே தற்காலம் வழங்கிவருகின்றது. ஸாமி, என்பதற்குப் பொருள் மேலெழுற்சி, பரிநிருவாணமென்னப்படும். இதையநுசரித்தே சீவக சிந்தாமணியுள் "ஸாமிநாள்சார்ந்ததன்றே" என்று பகவனது பரிநிருவாண நாளைக்கொண்டாடி யிருக்கின்றார்கள். புத்தருக்குரிய ஆயிரநாமங்களில் ஸாமி, என்பதும் ஓர் பெயரென்றே நிகண்டில் "தீர்த்தன்மால் பகவன் ஸாமி" எனவும் வகுத்திருக்கின்றார்கள். சாமி என்பது பொருளற்ற வரிவழக்காம்.

- 6:44; ஏப்ரல் 9, 1913 -

104. திருமணச் சடங்கு

வினா : உலகின்கண் நடந்தேறிவரும் விவாஹக் காலங்களில் மணமகனும், மணமகளும் மணவரையில் வீற்றிருக்கச்சே கடைசியாக குருக்கே திறைச் சிலைக்கட்டி மணமகன் வலதுக்காலை வெளிப்புறமாக நீட்டச்செய்து ஜலங்கொண்டு கால்சுத்தஞ் செய்தானபிறகு பெண்ணுக்குரிய தாயார் மாமி மெட்டுமாமி மெட்டென்று கூறி கால் விரலில் போடுகின்றார்கள். இவ்விதமான விஷயங்கள் நமது பூர்வீக பௌத்த மார்க்கக் கொள்கையா அன்றேல் நமது தேசத்தார் போதிப்பது, புத்ததருமமும் செய்கையெல்லாம் வேஷப்பிராமணர்ச் செய்கையுமாயிருக்கின்றபடியால் இந்த நூதன சாதிகளின் கொள்கையா.

எஸ். முனிஸ்வாமியர், ரங்கூன்.

விடை : அன்பரே! தாம் வினவியுள்ள சங்கை பௌத்ததன்மத்தைச் சார்ந்ததுமன்று இந்து மதத்தைச் சார்ந்ததுமன்று மத்தியில் தோன்றுங் குடும்பத்தோர்களால் தோன்றிய வழக்கமாக்கும். அதாவது மாமியானவள் தன் பெண்ணை ஒருவனுக்குத் தத்தஞ்செய்தவுடன் மணவரைத்திறை மறைவிநின்று மறுமகன் பாதத்தைப்பிடித்து தன்மகளை யாதொரு குறைவுமின்றி காப்பாற்றவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுவதற்கு பாவனை யாக வெள்ளியினால் மெட்டென்னும் மோதிரஞ் செய்து அவன் காலைக் கழுவி விரலிற்போடுவது வழக்கம். அவ்வந்தரார்த்தம் தெரிந்தும் சிலர் செய்வதுண்டு தெரியாமலும் செய்வதுண்டு. மனம்போல மாங்கல்யமென்பது காட்சியாதலின் மறுமகன் காலைப்பிடிப்பதினாலுமோர் பயனில்லை மெட்டியிடுவதினாலும் ஓர் பயனுமில்லை என்பதே துணிபு.

- 6:46; ஏப்ரல் 23, 1913 -

105. ஆன்மாவிற்கு இறப்புமில்லை பிறப்புமில்லை

ஆன்மாவிற்கு இறப்புமில்லை பிறப்புமில்லை எனக் கூறிய அன்பரே! ஆன்மா என்னும் மொழி வடமொழியா தென்மொழியா என்பதுணராது கூறிவிட்டீர்போலும். அஃது வடமொழியிலும் பாலிமொழியேயாம். அதன் பொருள் புருஷனென்னப்படும். அப்புருஷனென்னும் பொருளைக்கொண்டே "அநான்ம" மென்னு மொழி தோன்றியுள்ளதும் அவற்றை வாசுதேவமனன மென்னும் நூலிலும், மணிமேகலை என்னும் நூலிலுங் கூறியுள்ளவற்றை பரக்கக் காணலாம். அதனினும் ஓர் உருவந்தோன்றிய பின்னரே ஆன்மெ மன்னும் மொழியுந்தோன்றுமேயன்றி ஒருருவந் தோன்றாவிடத்து ஆன்ம மென்னு மொழி தோன்றாதென்பதே திண்ணம். ஆதலின் புருஷனென்னும் உரு தோன்றி ஆன்மனென்னும் பெயருண்டாய விடத்து பிறப்புண்டென்பதும்

அப்புருஷவுரு மறைந்தவிடத்து இறப்புண்டென்பதும் அநுபவமாகும். இத்தகைய புருஷன் தன்னைத்தானறிந்து ததாகதமாம் அத்துவிதமாகுங்கால் புருஷனென்னும் ரூபமும், நாமமென்னும் ஆன்மனுமற்று அநித்திய வனாத்தும நிருவாண மடைகின்றான். இவற்றையே நாமரூபமாம் இரண்டற்ற நிலையென்னப்படும். இத்தகைய நிலையை அடைந்த பெரியோர்களே இறப்பும் பிறப்புமற்று காலனையுங் காமனையுஞ் செயித்துக் கொண்டவர்களாதலின் அவர்களது மேலாய சிறப்பைக் கொண்டு அவர்களை பகவனென்றும் ஈசனென்றும் கடவுளென்றும் பல பெயர்களால் கொண்டாடி வருகிறார்களன்றி மற்றுமோர் இறப்பும் பிறப்புமற்ற மக்கள் காணா பொருளுண்டென்பது ஆகாயக்கோட்டை என்றுமிடியாதென்று கூறுவதற் கொக்கும் மொழிகளினுற்பவங்களையும் அதன் பொருட்களையும் நன்குணர்ந்து பேசுவதே அழகாம்.

- 6:46; ஏப்ரல் 23, 1913 -

106. வேதநாயகம் சாஸ்திரியார்

வினா : தஞ்சைமாநகர் சுவிசேடக்கவிராயர் வேதநாயகம் சாஸ்திரியார் அவர்களால் சின்னாட்களின் முன்ன ரியற்றியச் சீட்டுக்கவி ஒன்று சிலரால் கிடைக்கப்பட்டன. அஃதை கண்ணுற்றபோது எம்மனதிற் பதியாத இடங்களிருக்கக்கண்டும்பால் வினவலானேன் அவை பின்வருமாறு:

அகஸ்தியன் சொன்னதோர் ஞானத்தில், ஐம்பத்தாறு குற்றங் கண்டோம்
ஔவை யாத்திச்சூடி கொன்றைவேந்தனில், முப்பதைந்துக் குற்றமறிந்தோம்
அலங்கோலச் சொற்பொருத்தன் பாடலை, ஆகாதெனத் தள்ளினோம்
அருணகிரியான்பாடலை பாதியும் பிழையாக்கி, அப்பா லெறிந்துவிட்டோம்
ஔவையார் பாடலது கிழவிப்பாட்டானதால், அதையும் பொறுத்தருளினோம்
திருவள்ளுவன்குறளை மெச்சினோம் காமப்பால், செய்ததோர் குற்றமவர்மேல்
திருவாசகம் சொன்ன மாணிக்கவாசகனை, திருடனென்றே எண்ணினோம்
தேவடியாள் முத்துதாண்டவன் பாடலைத், தெருவிற் கிழித்தெறிந்தோம்
தாயுமானவர் பாடல் நன்றாயினுமது, மோசமென் றுள்ளத்தி லுணர்ந்தோம்
சைவனுக்கும் விஷ்ணுபத்தனுக்கும் பெரிய, சண்டைக ளெடுத்துவிட்டோம்
தத்துவ ஞான நிடத முதலானதை, சாங்கோபாங்கமாய்க் கிழித்தோம்
முகத்திற்கு முன் தர்க்கமாடிய ஐம்பதுபேரை, முழுவதும் தோற்கடித்தோம்
மேசே புஸ்தகமுதல் அறிவிப்பின் வாய்ந்து, முழுவதும் பாட்டி யற்றினோம்
முதன்மைப்பெருஞ் சுவிசேடக்கவிராயனென், மகிமை, மூவுலகு மறியாததோ.

மேற்கண்ட பாடலிலுள்ள சைவ வைணவமாகியப் புராணக்கதை களையும் ஆரிய மாணிக்கவாசகன் கதையையும் மற்றும் பொய்க் கதைக ளையுஞ் தமிழன் வாயிலாய் விளக்கிக்காட்டியுள்ளீ ரவை யனைத்தும் பூரணமா யறிவேனெனினும் சுவிசேடக் கவிராயர் அகஸ்திய மகாமுனிவர் ஞானத்தில் ஐம்பத்தாறு குற்றங் கண்டாராம், சரஸ்வதி எனக் கொண்டாடும் ஔவை பிராட்டியா ரருளிச்செய்த ஆத்திச்சூடி கொன்றைவேந்தனில் முப்பதைந்து குற்றங்கண்டாராம். திருவள்ளுவர்குறளிற் காமப்பால் செய்ததொரு குற்றமாம் என்கிறார். காமப்பால் என்பதின் பொருளென்னை? காமப்பாலலால் மானிடருக்கு விளையுந் தீங்கென்னை என்பதையும் ஔவையாரைக் கிழவி எனப் புகலுகிறார். ஔவை என்பது கிழவியா அல்லது ஒரு மாதுக்குரிய பெயரா? கவிராயன் மகிமை மூவுலகுந் தெரியுமாம். மூவுல கென்பதென்னை என்பதையும் விளக்கிவிடவேணுமாயக் கோறுகிறேன்.

டாம்பட்ளர், கே.ஜி.எஃப் ஆஸ்பிட்டல், சாம்பியன் ரீப்ஸ்.

விடை : அன்பரே! தாம் வினாவிய சங்கையை முகமன்னின்றி விளக்குவதிற் பயனில்லை. அகஸ்தியர் ஞானமென்பதில் ஞானசௌமிய சாகரமா அன்றேல் தற்கால போலி மதஸ்தர்கள் அங்குஷ்ட பரிமாண அகஸ்தியராலெழுதிய ஞானமென வரைந்துவைத்துள்ளார்கள், அதுவா என்பதும் விளங்கவில்லை. நாயனார் திரிக்குறட் குறையையும், ஔவையார் ஆத்திச்சுவடி, கொன்றை வேந்தனிலுள்ளக் குறைகளையும் எடுத்துக் கடாவுவதாயின் குறைகூறிய ஆளுமில்லை எடுத்துப்பேசுவதாற் பயனுமில்லை.

ஆயினும் வேதநாயக சாஸ்திரியார் விடுத்த செய்யுளுக்கு அக்காலத் திருந்த மா. கதிர்வேலு கவிராயரென்பவர் ஓர் மறுப்பெழுதி இருக்கின்றார்.

அதனையிதனடியில் வரைகின்றோம் கண்டுக்கொள்க.

சென்னை பெத்துநாய்க்கன்பேட்டை மா. கதிர்வேலு கவிராயர் பாடிய சீட்டுக் கவி வேதநாயகன் பாட்டு நாதமற்றவேட்டு

கங்கைசூ மூலகினிற் கனசைவ மததெய்வ / காங்கேயனைத் துதித்தோர்
கண்டுமதை கைவிட்டு கிறீஸ்தவனு மாகியே / கான்மாடு தலைமாடெனந்
கண்டறிய வகையற்று கவிபாடி வெளிவந்த / கட்டுரையை யென்சொல்லுவேன்
கற்றுசொற் சுவையற்ற வழவழக் குழகுழக் /கலிப்பாவை வரையவந்தும்
அங்கை நெல்லிக்கனியை யறியாத மோழைநீ / ரகத்தியர் ஞானமதிலே
அரியகுற்றங் கண்ட ததுவெது அரைகுவீர் / அவ்வையார் நூலதனிலே
ஆண்ட குற்றங்களெது வதனையும் புகலுவீர் / அலங்கோல கவியுளார் நீர்
அருணகிரி யான்பாட லின்சுவையையறியாது / வகற்றிநீர் போலுமறிவேன்
பங்கஜ மமைந்தப் பிராட்டியின் முதுமொழிப் / பேற்றை யறியா குறைவினால்
பருகிழவி யென்றுமே பாரறிய கூறினீர் / பாதகம் ஒன்றுமில்லை
பலபாவில் முதலாய பாகுறட் பாவிலே / பருகாம குறையென்றநீர்
பல்லரும் பிள்ளைகளை பெற்றுமது சுகமதைப் / பேணா துரைத்துவிட்டீர்
மங்காத மாணிக்க வாசகரை மனமாற / வாயாற திருடனென்றீர்
மற்றுமும துத்திருட் டதனாலே வெளிவந்த / வாசகம் அறிகிலீரோ
முத்துதாண்டவர்பாடல் தாயுமான் பாடல்போல் / வாயுரை யுரைக்க வலதோ
மறைமுதற் கதிர்வேலு கவிராய னோதினேன் / வல்லுரேல் வெளிவருகவே.

சுக்கில வருடம் வைகாசி மாதம் 13ம் நாள் எனப் பாடி அச்சிட்டு வெளியிட்டிருந்தார். அதற்கு மறுப்பு வேதநாயக சாஸ்திரியார் கூறியுள்ளதை யாம் கண்டிலோம். தமிழ் வித்துவான்களது வல்லபத்தைக் கன்னட நாட்டார், தெலுகுநாட்டா ரறியாரென்பது அநுபவக்காட்சியாயிருக்க மூவுலகு மறியுமென்பது முற்றும் பிழையேயாம்.

அஃது தன்னைப் புகழத்தகும் புலவோர்க்கே என்னும் அலங்காரமொழி என்னப்படும்.

- 6:47; ஏப்ரல் 30, 1913 -

107. வைணவர் சூடுபோட்டுக் கொள்ளும் சங்கைத் தெளிவு

ஆர்.ஆர். தாஸனென்னும் அன்பரே! பஞ்சமர் பறையரென்பவர்கள் சூடுபோட்டுக்கொண்டு மூன்றுவேளை குளித்து நான்குவேளை நெடுக்குப் பூச்சு பூசி சுஜாதியை அணுகாமலும் சேர்க்காமலும் "சூடுகொண்டப் பூனை அடுப்பங்கட்டை அணுகாதென்னும்" பழமொழிபோல் தூர தூர விலகினிற்கினும் பஞ்சமன் பறையனென்னும் பெயர் அவர்களைப் பதிந்து நிற்குமேயன்றி அகன்றுநிற்காவாம். இதன் விவரம் சாதிபேதமுள்ள வைணவர் கோவில்களுக்கும் அவர்கள் வீடுகளுக்கும் போவார்களாயின் சூடுபோட்டுக் கொண்டவர்களின் சாதிப்பெயர் பரக்க விளங்கிப்போம். அவர்களிடம் இவர்கள் சூடு செல்லாது சிலகாலங்களுக்குமுன் சென்னையிலுள்ளப் பறையர்கள் சூடுபோட்டுக்கொண்டு பட்டை நாமம் பரக்க சாத்தி அவர்கள் வீட்டில் சாப்பிடமாட்டோம் இவர்கள் வீட்டில் சாப்பிடமாட்டோம் எனப் படாடம்பங்காட்டினோரெல்லாம் குலத்தோரில் எவன் வீட்டில் கலியாணசோறு கிடைக்கும் எவன் வீட்டில் கருமாதி சோறு கிடைக்கு மென்னுங் கண்ணோக்கமிட்டலைகின்றார்கள். இவைகள் யாவும் துட்டு கொழுப்பின் ஆசாரங்களேயாம்.

- 6:51; மே 28, 1913 -

108. நடராஜன்

வினா : ஐயா! சைவசமயத்தோரெனத் தற்காலந் தோன்றியுள்ளவர் தங்கள் தெய்வமாகிய சிவனை நடராஜன் நடராஜனென வழங்கிவரு கின்றார்களே அதன்செயலென்ன. அப்பெயர் அவர்கள் தெய்வத்திற்குப் பொருந்தியதா, ஏனவ்வகை வழங்கிவருகின்றார்கள்.

வே.ம. சிங்காரம், பூதூர்.

விடை : அன்பரே! தாம் வினவியுள்ள சங்கையில் சைவரென்போர் கொண்டாடுந் தெய்வத்திற்கு நடராஜனென்னும் பெயரும் பொருந்தாது அந்நார்க் கதன் சரித்திரமுங்கிடையாது.

உலகோர் கொண்டாடுந் தெய்வங்களில் ஆதி கடவுள், ஆதி தெய்வம், ஆதிபகவனென விளங்கிய புத்தபிரானுக்கே அப்பெயருரியதாம். எவ்வகையி லென்பீரேல் இராஜனாகப் பிறந்தவரும் அவரே தன் தந்தையின் அங்கத்தை தகனஞ்செய்யுங்கால் சுடலையில் நடனமாடியவரும் அவரேயாதலின் அவரை நடராஜன் நடராஜன் என அக்காலத்திலேயே கொண்டாடியிருக்கின்றார்கள். செயலுமுண்டு சரித்திரமுமுண்டு.

- 6:52; சூன் 4, 1913 -

109. மறையோர்

வினா : "மறையோர்" என வழங்கும் பெயர் புத்தபிரானுக்குரியதா அன்றேல் பொறாமெயை பூஷணமாய்ப்பூண்டு நூதனமாய்த் தோன்றியுள்ள வேஷப்பிராமணருக்குரியதா.

வி. துரைசாமி, ஷக்லாஸ்பூர்.

விடை : அன்பரே! தாம் வினாவிய சங்கை விசேஷித்ததேயாம். முத நூலென்றும், ஆதிவேதமென்றும், ஆதியாகமமென்றும், ஆதிமறையென்றும் வழங்கும்படியான நீதிபோதம் ஆதிமுநிவன், ஆதியங்கடவுள், ஆதி சிவன், ஆதி பகவன் என வழங்கப்பெற்ற புத்தபிரானால் ஓதியவைகளேயாம்.

சூளாமணி

ஆதியங்கடவுளை யருமறை பயந்தனை / போதியங்கடவுளை பூமிசை யொதிங்கினை
போதியங்கடவுளை பூமிசை யொதிங்கிய / சேதியென்சொல்லனின் றிருவடி வணங்கினம்.

சீவகசிந்தாமணி

ஆதிவேதம் பயந்தோய்நீ யலர்மும்மாரி பொழிந்தோய்நீ

என்னும் சார்பு நூற்களினாதாரங் கொண்டு புத்தசங்கங்களில் நிறைந்திருந்த சமணமுநிவர்கள் யாவரும் ஆதிமறையென்று வழங்கு வாக்கியங் களை விளங்கப் போதித்தலால் அவர்கள் மறையோரென்றும், ஆதிவேத மென்னும் அவற்றையே விளக்குதலால் வேதியரென்றும், காலந்தவறாது வேதத்தைப் பார்ப்போரும் தன்னைப்பார்ப்போருமாதலின் பார்ப்பா ரென்றும், சமணநிலை முதிர்ந்து சாந்தம் நிறைந்து சருவ உயிர்களையுந் தன்னுயிர்போல் காப்போரை அந்தணரென்றும் வழங்கிவந்தார்களென்பது சரித்திரங்களிலும் சாஸ்திரங்களிலும் பரக்க விளங்குதலால் அறஹத்துக் களுக்கே மறையோ ரென்னும் பெயர் பொருந்துமேயன்றி ஏனைய வேஷப்பிராமணர்களுக்கு அப்பெயர் பொருந்தவே பொருந்தாவாம். ஈதன்றி களங்கமற சகலமக்களுக்கும் மறையை விளக்குவோருக்கு மறையோரென்னும் பெயர்த்தகும். மறைமொழி வினவும் அவனுக்கு மறையை விளக்கலாம் இவனுக்கு மறையை விளக்கலாகாதென்பது மறை யாகாவாம். அவற்றை விளக்குவோரும் மறையோ ராகாரென்பது திண்ணம் திண்ணமேயாம்.

- 7:3; சூன் 25, 1913 -

110. நிருவாணமும் பரிநிருவாணமும்

வினா : ஐயா, யான் மதுரை வடக்குவீதி தெப்பக்குளத்தினருகே உலாவிவரும்போது அங்குள்ளக் கன்மேடையின் மீதில் ஓர் எம்.ஏ. பிரபசரும், பி.ஏ.எல்.டி யும் உழ்க்கார்ந்து புட்டீசம் பேசும்போது நிருவாணமென்பதற்குப் பதிவான மறுபொருள் என்னையென்று கேட்டார். அதற்கு எம்.ஏ. அவர்கள் கருவிகரண அமைதியே என்றார். அவ்வகை அமைதியுற்றோர் தற்காலம் எவரேனுமுளரோ வென்றார். காணேனென்றார். புத்தர் நிருவாணம்பெற்று நெடுங்காலங்களுக்குப்பின்னர் பரிநிருவாணம் பெற்றாரென்றும், தேகத்தை தகனஞ்செய்து விட்டார்களென்றுங் கூறுகின்றார்களே அதன் பொருளென் னை என்றார். அதற்கு எம்.ஏ. அவர்கள் சற்று நிதானித்து அந்த பொருள்தான் சரிவர விளங்கவில்லை, (ஸைன்ஸ்) படிக்கு விசாரிப்பதில் ஒன்றுமில்லா மற்போகின்றது; அதனை ஒன்றுமில்லையென்று கூறுவதற்கும் ஆதாரங் காணோம். அவ்வகை ஒன்றுமில்லையென்பதாயின் முதலாவது நிருவாண

முற்றபோது எங்குந் தன்மத்தைப் போதித்துவந்தாரென்றும், பரிநிருவாண முற்றபோது தேகத்தை தகனஞ் செய்தார்களென்றுங் கூறியுள்ளபடியால் அஃதேதோ பெரும் ரகசியம் இருக்கின்றாப்போற் காணுகின்றது அதை பௌத்த குருக்களில் நன்கு தேர்ந்தவர்களையும் தற்கால (ஸைன்சில்) மிக்க ஆராய்ச்சியுள்ளவர்களையும் வைத்துக்கொண்டு விசாரிணைப் புரியவேண்டு மேயன்றி மற்றப்படி யதின் ரகசியம் விளங்காதென்று சொல்லி நிறுத்திவிட்டு வேறு விவகாரங்களைப் பேசிக்கொண்டார்கள். மனதில் வேதாந்த விசாரிணையிற் பதிந்திருந்த பாடங்களெல்லாம் பரந்து நிருவாணமென்பதும், பரிநிருவாண மென்பதுமாய மொழிகளின்மீதிலேயே சங்கை தோன்றி தவித்துநிற்கின்றேன். தாங்களோ பௌத்ததன்மக் கொடியை எங்கும் நாட்டி சத்திய தன்மத்தை விளக்கிவருவதாகக் கேள்விப் பட்டுள்ளபடியால் தமக்கே எழுதி இச்சங்கையை விளங்கிக்கொள்ள வேண்டுமென்னு மாசையாலிக் கடிதத்தை வரையலானேன். அடியேன்மீதாயாசங் கொள்ளாது அவ்விரு மொழிகளின் தோற்றத்தையும் அதன் பொருளையும் விளக்கி அடிமையைப் புனிதனாக்கும்படி வேண்டும்.

வி. பாலசுந்திரம், மதுரை.

விடை : அன்பரே! தாம் வினாவிய சங்கை மிக்க விசேஷித்ததேயாம். இச்சங்கையே மநுமக்களனைடயும் பதுமநிதி, தன்மநிதி, சங்கநிதியின் பயனாகும்.

அதாவது பதுமநிதியாம் செங்கமல பீடத்தமர்ந்த சற்குருவாம் புத்தபிரானையும், தன்மநிதி அவரது சத்தியதன்மத்தைப் பின்பற்றியும், சங்கநிதி அவரது சங்கத்திற் சேர்ந்தும் அந்நிதியின் பயனால் ஞானசாதனம் புரிவோர் மட்டிலும் நிருவாணத்தின் அந்தரார்த்தத்தையும், பரிநிருவாணத்தின் அந்தரார்த்தத்தையும் அறிவார்களன்றி வாயாற்பந்தலிடும் ஏனையோர்கள் அறியமாட்டார்கள்.

அந்நிலையறிந்தே எம்.ஏ. அவர்களும் பௌத்த குருக்களைக் கொண்டே தெரிந்துகொள்ளவேண்டுமென முடித்துவிட்டார்.

ஆங்கில பாஷையில் எம்.ஏ. பரிட்சையில் தேறினவர்களாயினும் அதற்கு மேலாய பரிட்சையிற் தேறிய (ஸைன்ஸ்) பிரபசர்களாயினும் புறக்கருவி சேட்டைகளை அறிவார்களன்றி அகக்கருவியின் சேட்டைகளை அறியவேயறியார்கள். அதனையறிந்தே விவேகமிகுத்த மேதாவிகள் "முகத்திற் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள் அகத்திற் கண்கொண்டு பார்ப்பதே யானந்த" மென வற்புறுத்திக் கூறியுள்ளார்கள்.

நமது தேசத்தில் பி.ஏ., எம்.ஏ செய்த (ஸைன்ஸ்) பிரபசர்களிருந்த போதினும் ஆங்கிலேயர்களால் புறக் கருவிகளைக்கொண்டாராய்ச்சி செய்து எழுதி வைத்துள்ளவைகளை சொல்லவும் செய்யவு முடையவர்களேயன்றி தாங்களே ஓரறிய வித்தையைக் கண்டுபிடித்து உலகோருக் குபகாரமாக விளக்கியது கிடையாது. தாம் கூறிய எம்.ஏ. அவர்கள் நிருவாணமென்பது கருவிகரண வமைதியென்றாரன்றி அவ்வமைதி நிலையையும் அறியாரென் பதே திண்ணம்.

தன்னிற்றானே உண்டாம் பசியாக்கினி, காமாக்கினி, கோபாக்கினியால் வெதும்பியும், மண், பெண் பொன்னென்னும் மூவாசாபாசக் கயிற்றால் கட்டுண்டும் உள்ள நிலைக்கு பாலிபாஷையில் (வாண)மென்றும், மண் பொன் பெண்ணென்னும் மூவாசாபாசக் கயிறுகளை அறுத்தெரிந்து காமாக்கினி, கோபாக்கினி, பசியாக்கினியாகிய மூன்றையு மவித்து தண்மெயாம் சாந்த சொரூபமுற்ற நிலைக்கு பாலி பாஷையில் (நிருவாண)மென்றும் கூறியுள்ளார்கள். ஆதியில் சித்தார்த்தி சக்கிரவர்த்தியார் இத்தகைய நிருவாணமுற்ற பின்னரே அவரை காலகாலனென்றுங் காமதகன னென்றுங் கொண்டாடியவற்றை நாளதுவரையும் அநுசரித்துவருகின்றார்கள். சித்தார்த்தியார் பிறப்பின் துக்கம், பிணியின் துக்கம், மூப்பின் துக்கம், மரண துக்கம் நான்கையும் போக்கவேண்டுமென்று தனது சக்கிரவர்த்திப் பீடத்தைத் துறந்து வெளிதோன்றி ஓதுவாரின்றி தன்னிற்றானே உண்மெ யுணர்ந்து நான்குவகைத் துக்கங்களொழிந்த சுகவாருதி நிலையையே நிருவாண நிலையென்றார்கள். மூடியுள்ள வோடும் புளியம்பழமும்போலும், மூடியுள்ள

யிலைக்கூடும் விட்டில் போலும், சத்து சித்து ஆனந்தமென்னும் உள்ளொளி திரண்டு உண்மெய்யென்றும், புறமெய்யென்றும், அந்தர் அங்கமென்றும், பகிர் அங்கமென்றும் பிரிந்துலாவும்படியேறி மக்கள் கதியொழிந்து தேவகதிப்பெற்று நான்குவகைத் துக்கங்களொழிந்து நித்தியானந்தமுற்ற புத்தபிரான் தானடைந்த சுகானந்தகாட்சியை தான் மட்டிலு மடைந்து போகாது உலகமனுக்கள் யாவருக்குமூட்டி நான்குவகைத் துக்கங்களைப் போக்கிக் கொள்ள செய்விக்க வேண்டுமென்னுங் கருணை மிகுதியால் இல்லறந் துறவறமென்னும் இருவகுப்பாக்கி இல்லறத்தோர் சுகசீவ வாழ்க்கையில் பற்றறுக்கப் பஞ்ச சீலத்தையும் துறவறமுற்று சங்கஞ்சேர்ந்து சகலபற்றுக்களையு மொழித்து பிறவியை அறுக்க அஷ்டசீலத்தையுமருளி உலகமெங்கும் சங்கங்களைநாட்டி தனது தந்தைக்கும் மைந்தனுக்கும் தன் மனைவிக்கும் அவ்வரியதன்மத்தை ஓதி துக்கநிவர்த்தியடையச் செய்து வைத்ததுமன்றி அங்கங்கு நாட்டியுள்ள சங்கங்களுக்கு அடுத்தடுத்துச்சென்று மேலுமேலுந் தன்மத்தை ஊட்டிக் கடைத்தேறச்செய்து உலக சீவர்களின் மேன்நோக்கத்தையும் மக்களின் தெய்வகதிப்பேற்றையும் சருவவஸ்துக்களும் பூமியில் தோன்றிதோன்றி மறையுங்கூற்றையும் விளக்கிவிட்டு ஐன்பத்தைந்து வருடம் உலக சீர்திருத்தத்திற்கே உழைத்து ஜகத்குரு சங்க அற ஆச்சாரி என்னும் பெயர்பெற்று தனதெண்பத்தி ஐந்தாவது வயதில் பரிநிருவாண முற்றார் அவர் நிருவாணமுற்றதுமுதல் பரிநிருவாணமடையும் வரையில் அவரது தேகம் மூப்படையாது குமரபருவமுற்றே இருந்தபடியால் அவரை குமாரதேவ னென்றும் நித்திறையை நீக்கியிருந்தபடியால் இரவு பகலற் றோனென்றும், மரணத்தை ஜெயித்துக்கொண்டபடியால் காலகால்னென்றும், காம இச்சையை அவித்துவிட்டபடியால் காமதகனனென்றும், நிருவாணத் தால் அந்தரங்க முற்றபடியால் சத்தனென்றும் சிம்மம் புலி முதல் விஷப்பாம்புகள் யாவும் அவருக் கேவல்புரிந்துக் கூடிக்குலாவியதால் சித்தனென்றும், எக்காலும் ஆனந்தமும் தேஜசுடனிருந்தபடியால் ஆனந்தனென்றுங் கொண்டாடினார்கள்.

பரிநிருவாணமென்பது புளியம் ஓட்டைவிட்டு பழத்தைப் பிறிப்பது போலும் இலைக்கூட்டினின்று விட்டில் வெளியேறுவதுபோலும் புறமெய் யினின்று உண்மெய்யும், பகிரங்கத்தினின்று அந்தரங்கமும் மாற்றிப்பிரிப் பதேயாம். இதையே புத்தபிரான் சகலதேசத்தோருமறிய உச்சியின் வழியாக வொளிமயமாகத்தோன்றி மறைந்தாரென சீவியசரித்திரங் கூறுவதுமன்றி சங்கத்து அறஹத்துநிலை பெற்றோர்களும் அவ்வகை ஒளிமயமாற்றிப் பிறந்ததாகவே அநுபவமும் காட்சியுமென்னப்படும். இவர்களையே இரு பிறப்பாளரென்று ஞான சரித்திரங்கள் முறையிடும். அதாவது தாயின் வயிற்றினின்று பிறந்த பிறப்பொன்றும் தானே தானே ஒளிமயமாக மாற்றிப் பிறந்த பிறப்பொன்றுமேயாம். உண்மெய்யின் விளக்கத்தையே அவ்வையார் “வெள்ளிபொன் மேனியதொக்கும் உள்ளுடம்பினாய வொளி” என்றுங் கூறியுள்ளாள். நிருவாணமென்பது உண்மெயொளி திரண்டு உடலோடு லாவலும் பரிநிருவாண மென்பது உண்மெயொளி யுரு வுடலைவிட்டகன்று ஆனந்தமாக வகண்டத் துலாவுவதேயாம். அவ்வொளிநிலையும் உண்மெய்ப் பொருளும் அந்தரங்கசாதகர்க்கு விளங்குமேயன்றி பகிரங்கசாதகர்க்கு விளங்கவே விளங்காவாம்.

- 7:6; சூலை 16, 1913 -

111. அஞ்ஞான வந்தகாரச் சுட்டுக்கடிதங்கள்

நமது கோலாரிலுள்ள அன்பர்களிடமிருந்து “விசிட்டாத்வைத தோரணி பௌத்தம் பொது” வென்று 4-ம் நெம்பர் டிராக்ட் ஒன்றும், “புத்தசமயம் இந்துக்களுக்கு ஒத்த சமயமா” வென்று 5-ம் நெம்பர் டிராக்ட் ஒன்றும் ஆக இரண்டு சுட்டுக்கடிதங்கள் நம்பால்வரப்பெற்றோம். அவ்விரண்டினுள் ஒன்றில் என்.சி.கே. என கைச்சாத்திட்டும் மற்றொன்றில் அதுவுமின்றி பயந்து வெளியிட்டிருக்கின்றார்கள். புத்ததன்மத்தைக் கண்டித்து அன்னோர் அபுத்தமதத்தை நிலைநாட்ட வெளிதோன்றிய வல்லுனர் சென்னையில்

அச்சிட்டச் சுட்டுக்கடிதங்களை சென்னையிலுள்ள பௌத்தர்களுக்கு விடுக்காது கோலாருக்குக்கொண்டுபோய் கொடுத்தது விந்தையிலும் விந்தையே. உள்ளூரில் ஓணான் பிடிக்கயேலாது அயலூரிற் கோனான்பிடிக்கச்சென்றதுபோலாம். அந்தோ இச்சுட்டுக்கடிதங்களை எழுதி அச்சிட்டவர் சரித்திர ஆராய்ச்சியும், சாஸ்திர ஆராய்ச்சியும், சாமியா ராய்ச்சியும் சரிவர செய்திருப்பரேல் ஆதாரமற்ற ஆபாசக் கட்டுக்கதைகளை சுட்டுக்கடிதங்களில் அச்சிட்டு வெளியிட்டிருக்க மாட்டார். சரித்திர ஆராய்ச்சியற்றக் குறைவே அவரை வெளிதோன்ற வைத்ததுபோலும். இந்துமதமென்றும் ஆரியமதமென்றும் வழங்குங் கூட்டந்தோன்றியகாலம் 1,500 வருடங்களுக்குட்பட்டதேயென ("The World's History") உலகசரித்திர மென்னும் புத்தகத்தில் வரையறுத்துக் கூறுகின்றது. அச்சரித்திரமோ பிரிட்டிஷ் துரைமக்களில் விவேகமிகுத்தோர் சகலதேசங்களிலு முள்ள சிலாசாசன ஆதாரங்களையும் செப்பேட்டினாதாரங் களையும் அந்தந்த பாஷைகளிலுள்ளக் காலவரைகளையும், இந்திய தேயத்தில் நூதனமாகக் குடியேறியவர்கள் இன்னா ரென்னாரென்றும் புராதனக்குடிகள் இன்னா ரென்னாரென்றுந் தேற ஆராய்ந்து அச்சரித்திர புத்தகத்தை வெளியிட்டிருக் கின்றார்கள். அதனை இவர் கண்டிருப்பரேல் எம்மதம் முன்மதமென வரைந்திருக்கமாட்டார். சரித்திர ஆராய்ச்சி அற்றவரென விளங்கினும் சாஸ்திர ஆராய்ச்சியேனும் உண்டோவென்னில் அன்னோர் சுட்டுக்கடிதத்தின் முகப்பிற் கூறியுள்ள இராமஜெயத்தால் விஷ்ணுமதத்தோரெனக் காண்கின்றது. அதனால் அவ்விஷ்ணு என்பவர் யார் அவரெங்கு பிறந்தவர் எத்தேசத்தார் எப்பாஷைக்குரியவரென்னும் சாஸ்திரமே கிடையாது. அவ்விஷ்ணுவென்னும் மதந் தோன்றியகாலமோ இராமானுஜர் காலமாகும். அவையோ இற்றைக்கு இருநூற்றிச்சில்லரை வருடமென்பர். அம்மத மூலமோ புத்தரது கமலபாதத் தையே நெற்றியிலணைவதும் சிந்திப்பதுமாகும். அவரது சங்கத்தை சங்கென்றும், அவரது தன்மசக்கிரத்தையே கன்மச்சக்கிரமென்றும் வகுத்துத் தங்கள் நூதனமதத்தை உண்டுசெய்துள்ளார்கள். இச்சுட்டுக்கடிதக்காரருக்கு கமலபாதந்தோன்றிய சாஸ்திரமும், சங்குசக்கிரந் தோன்றிய சாஸ்திரமுந் தெரியவேதெரியாவாம். அங்ஙனந் தெரிந்திருப்பரேல் எம்மதம் முன்மதமென சுட்டுக்கடிதம் வெளியிட்டிரார்.

சாஸ்திர ஆராய்ச்சியற்றவராயினும் சாமியாராய்ச்சியேனு முளரோ வென்னில் ஸ்ரீ ரங்கத்தில் பள்ளிகொண்டிருக்கும் தொள்ளைகாதுசாமி புத்தசாமியா அன்றேல் தோன்றிய ஊரும் பெயருமற்ற விஷ்ணுசாமியா, திருவள்ளூரில் பள்ளிகொண்டிருக்கும் தொள்ளைகாதுசாமி புத்தசாமியா அன்றேல் தோன்றிய ஊரும்பெயருமற்ற விஷ்ணுசாமியா, சிதம்பரத்தில் பள்ளிகொண்டிருக்கும் தொள்ளைகாதுசாமி புத்தசாமியா அன்றேல் தோன்றிய ஊரும் பெயருமற்ற விஷ்ணுசாமியா, திருப்பதிக்குச்சென்று மொட்டையடித்து மஞ்சளாடை அணைவது பௌத்ததன்மச் செயலா அன்றேல் வைணவமதச் செயலாவென்னும் சாமி ஆராய்ச்சியும் அவருக்குத் தெரியாது. சாமிகளாராய்ச்சியேனு முளரேல் எம்மதம் முன்மதமென்னும் சுட்டுக்கடிதம் வெளியிட்டிருக்கமாட்டார்.

சரித்திர ஆராய்ச்சி, சாஸ்திர ஆராய்ச்சி, சாமி ஆராய்ச்சியற்றவராயினும் இந்தியதேச மூலபாஷைகளின் உற்பவ ஆராய்ச்சியேனும் அதனதன் மொழி முதல் விளக்கப்பொருளாராய்ச்சியேனு முளரோ வென்றாராயுங்கால் அதுவுமிலரென்பதே அன்னோர் சுட்டுக்கடிதத்தால் விளங்குகின்றது. எங்ஙனமென்னில் புத்தரென்னும் பெரியோன் மகதநாட்டரசபுத்திரனென்றும் நம்மெயொத்த மனிதரென்றும் அவர் பிறந்து இற்றைக்கு மூவாயிரத்திச் சில்லரை வருடங்களா யுள்ளதென்றும் மக்களுக்குண்டாம் பிறப்பின் துக்கம், பிணியின் துக்கம், மூப்பின் துக்கம், மரண துக்கம் ஆகிய நான்குவகைத் துக்கங்களின் நிவர்த்தியைக் கண்டுபிடிக்கத் துறவேறி ஓதாம லுணர்ந்து தன்னிற்றானே அத்துக்க நிவர்த்தியடைந்து மகட பாஷையாம் பாலிபாஷை வரிவடிவின்றி ஒலிவடிவிலிருந்தது கொண்டு சகட பாஷையாம் வடமொழியையும்,

திராவிடபாஷையாம் தென்மொழியையும், வரிவடிவிலி யற்றி பாணினியார் வசமும், அகஸ்தியர் வசமுமளித்து தேசமெங்கும் வரிவடிவ பாஷைகளைப் பரவச்செய்ததுடன் சத்தியதன்மத்தையும் அதுகொண்டே உறுதிபெறச்செய்து உலக சீர்திருத்த மக்களுள் ஆதியாக விளங்கி சர்வசீவர்களுக்குஞ் சுகப் பேற்றையே விளக்கிவந்த செயல்களுக்குத் தக்கவாறு அவரை ஆதிகடவு ளென்றும், ஆதி தேவனென்றும், ஆதிசிவனென்றும், ஆதிபகவனென்றும், ஆதி ஈசனென்றும் ஆயிரத்தியெட்டு நாமங்களால் கொண்டாடி வந்தவைகளை வடதேசமுதல் தென்தேசம் வரையில் நாட்டியுள்ள சிலாசாசனங்களாலும் செப்பேடுகளாலும் வரைந்துள்ளவற்றை நன்காராயாமலும் பௌத்தர்களால் இயற்றியுள்ள அமரம்பாணிநீயம், முன்கலை திவாகரம், பின்கலை நிகண்டு மற்றுமுள்ள இலக்கண இலக்கிய நூற்களை உணராமலும் கிள்ளுக்கீரை குப்பைக்கீரைபோல் முன்னாநாள் முளைத்த விஷ்ணுமதத்தையும் நேற்று முளைத்த விசிஷ்டாத்வைதத்தையும் பெரிதென்று பிலிக்கி படாடம்பங்காட்டி வரைந்துள்ள சுட்டுக்கடிதத்தால் பாஷைகளின் தோற்ற ஆராய்ச்சியும் மொழி முதலின் பொருளாராய்ச்சியு மில்லாரென்றே துணிந்து கூறுவாம். உளராயின் கடவுளென்னும் மொழி யாவர்பாற்றோன்றி என்னூற்களில் முதலாக வளர்ந்துள்ளனவென்றும் அதன் பொருளறிந்திருப்பார். அம்மொழியினுற் பவமும் அதன் பொருளும் அறியாதவராதலின் தனது சுட்டுக்கடிதத்தில் மனம்போன வினாக்களைப் பிலுக்கிவிட்டார். அவ்வினாக்களைப் பொருளறிந்து வரைவரேல் போந்த விடை கிடைக்கும். அங்ஙனமின்றி மதுரைக்கு மனிதனுண்டா குதிரைக்குக் கொம்புண்டாவென்னும் வினா எழுமேல் விடைகள் தடையுறுமென்னுந் தருக்கசாஸ்திரமு மிவரறியாரென்பது திண்ணம்.

சரித்திர ஆராய்சியின்றியும், சாஸ்திர ஆராய்ச்சியின்றியும் சாமிகளா ராய்ச்சி இன்றியும், பாஷைகள் தோற்ற ஆராய்ச்சியின்றியும், மொழிமுதற் பொருட்களா ராய்ச்சியின்றியும், வினாவிடுக்குந் தருக்க சாஸ்திர உணர்ச்சி யின்றியும் விடுத்துள்ள அஞ்ஞான சுட்டுக்கடிதத்துள் வடமொழி தென்மொழி கலந்த அந்தகார வாக்கியங்களைப் பிலுக்குப்படாடம்பங்காட்டி வரைந் துள்ளப் பதர்மொழிகளை இவரையொத்த தாசிரிகளுக்கு வாசித்துக் காட்டுவரேல் காசு கிடைக்கும். பௌத்தர்களிடங்காட்டுவதால் ஏசுகிடைக்கு மென்பதை எளிதில் அறிந்துக்கொள்ளுவாராக. இப்போதும் அவர் விடுத்துள்ள சுட்டுக்கடிதத்தில் தன் பெயருடன் வெளிவந்திருப்பரேல் சீர்சீராகக் களைந்து செப்பும் ஏசுகள் யாவையும் ஒப்ப வொப்ப வரைந்திருப் போம். அங்ஙனமிராது தண்டுவிடுத்துள்ளோமாக. இன்னும்வருமேல் பின்னும் வருவது சரித்திராதாரக் கோடையிடிகளே யாகும்.

- 7:7; சூலை 23, 1913 -

112. சித்திரைச் செல்வம்

வினா : இத்தமிழ்நாட்டின் மக்கள் "ஆடி" மாதத்தில் புது கலியாணப்பெண்களை மாமியார் வீட்டில் வைக்காமல் தாயார் வீட்டிற்கு அழைத்து வந்து மாதம் முடிவானபிறகு மறுபடியும் அனுப்பிவிடுகிறார்களே அது என்னத்தைப்பற்றி அந்தமாதத்தில் என்ன தோஷமிருக்கிறது. இதன் அந்தரங்கத்தை வெளியாக்குவீரென்று தங்களை மிகவும் கேட்டுக்கொள்ளும்.

பி. ராமசாமி, பெங்களூர்.

விடை : அன்பர்' வினவிய சங்கை ஓர் சாஸ்திரத்தை அநுசரித்தன்று. அநுபவத்தில் அநுசரித்து வருவதே யாகும்.

அஃது யாதநுபவமென்னில் விவாகஞ்செய்தப் பெண்ணானவள் மாமியார் வீட்டுள்ளிருப்பா ளாயின் புருட சம்மந்தத்தால் கருதரித்து பத்தாவது மாதமாம் சித்திரை மாதத்தில் முதல் புத்திரன் தோன்றுவானாயின் அக்குடிக்கே அனர்த்தமுண்டாமென்றும் தந்தை சுகம்பெறானென்றும் வழங்கி வருவதுடன் சித்திரை மாதம் செல்வம் பிறந்தால் ஆனக்குடிக்கே அனர்த்த மென்றும் ஓர் பழமொழியும் வழங்கிவருகின்றது. அவ்வகை சித்திரை மாதம் புத்திரர் பிறக்கும் இல்லங்கள் சிலது சீரழிவதையும், சிலது சுகமடை வதையுங் கண்டுள்ளோம்.

யாவற்றிக்கும் மனமே காரணமாயுள்ளதால் அக்கவலை இல்லா தார்க்கும் அக்கவலையுள்ளார்க்கும் பேதமுள்ளதாகு கின்றது. ஆதலின் அவற்றை ஆராய்ந்தே அறிந்துக் கொள்ளல் வேண்டும்.

- 7:8; சூலை 30, 1913 -

113. ஒளிமயமான தேகம்

வினா : தேகத்தினின்று ஒளிமயமாகத் தோன்றி வெளியுலாவுந் தேகமொன்றுண்டா அவை எத்தகையது என்னூலிலெழுதியுளது அவற்றை அடியேனுக்கு விளக்கி புனிதனாக்க வேண்டும் உமதடியாரிலொருவன்.

வீ. பாலசுந்திரம்.

விடை : நிருவாணமுற்றோர் அடையாள மியாதெனில் அன்றுமுதல் அவர்கள் தேகத்திற் பிணியணுகாது, மூப்படையார்கள், மரணவத்தைக்குள்ளா கார்கள், நித்திறை கொள்ளார்கள், அவர்களை தரிசித்தவர்களும் அவர்களஸ் தம்பட்டப் பிணியாளர்களும் சுகமடைவார்கள், செல்காலம் நிகழ்காலம் வருங்காலமென்னு முக்கால சங்கதிகளையும் அறிந்து சொல்லுவார்கள், பாம்பும் புலியுமவர்களைக் கூடியுலாவும், நீரிலிடினும் மூழ்கார்கள், நெருப்பிலிடினும் வெதும்பார்கள், பன்னிரு சூரியர் கூடி அனலிடினும் அஞ்சார்கள். இதுவே இதய சுத்தமுண்டாகி குணங்குடிக்கொண்டோர் நிலையாம். புத்தரது ஆதிவேத வாக்கிய மூன்றினுள் பாபத்தை முற்றுமறுத் தோருக்கும் இப்பயனுண்டு, நன்மெயே முற்றுங் கடைபிடித்தோருக்கும் இப்பயனுண்டு. இதய சுத்தமுற்றோருக்கும் இப்பயனுண்டு.

இதுகொண்டே தாயுமானவர் சந்ததமும் வேதமொழியாது ஒன்றை பற்றினதுதான் வந்து முற்றுமெனலால், ஜகமீதிருந்தாலு மரணமுண்டென்பது சதா நிஷ்டர் நினைவதில்லை, என வற்புறுத்திக் கூறியுள்ளார்.

அவ்வையார் ஞானக்குறள்

நெற்றிக்கு நேரே நிறைந்த வொளிகாணில் / முற்றுமழியா துடம்பு.
செல்லல் நிகழல் வருங்கால மூன்றினையுஞ் / சொல்லுமௌனத்தொழில்.

வாசிட்டம்

பெருகத்திரண்ட முகில்களெல்லாம் பெருங்காற்றாலே பொதுங்குதல்போல்
வருகற் பந்த நாசத்தால் மனம் போயிறக்கு மனமிறந்தால்
பொருகற் பாந்தமாறுதமும் பொங்குகடலும் புவியனைத்து
முருகச் சுடுபன்னிருக திருமொருகால் வரினுமிடருண்டோ.

என்னுந் தேகத்தினின்றும் சுகநிலை பெற்றோரே நிருவாண முற்றோரெனப்படுவார். பரிநிருவாண முற்றோரடையாளமோ வென்னில் புளியம் ஓடும் பழமும் வேறாவதுபோலும், இலைக் கூடும் விட்டிலும் வேறாவதுபோலும், பயிரங்கத்தின்று அந்தரங்கமும், புறமெய்யினின்று உண்மெய்யும் சோதிமயமாக மாற்றிப் பிறத்தலேயாம். இவர்களையே இருபிறப்பாளரென்று கூறப்படும் இவர்களே நட்சேத்திரம் பெற்று அகண்டத்துலாவுகின்றவர்களாகும்.

மச்சமுனியார் ஞானம்

கேட்டறிந்துக் கொள்வீடென்ன காடென்ன / கெட்டிப்பட்ட மவுனத்தினின்று
மாட்டறிந்துக் கொள்வத்துவையுண்டு நீ / மனதைத் தாண்டியறிவுக்குள்ளே செல்லப்
பூட்டறிந்துக்கொள் போன்போல தேகமாம் / புத்தியோடு மகண்டத்துலாவலாம்
ஆட்டறிந்துக்கொள்கற்பூர தேகமாம் / அகண்ட சோதியும் சித்தியுமாச்சுதே.

அவ்வையார்

வெள்ளிபொன் மேனியதொக்கும் / உள்ளுடம்பினாய வொளி.

இவர்களையே பௌத்தர்கள் தேவர்களென்று கொண்டாடி அவர்கள் லட்சணங்களையுங் கூறுகின்றார்கள்.

சீவக சிந்தாமணி

திருவிற்பொற்குலாய தேர்ந்த தேவர் தந்தன்மெய்செப்பிற்
கருவத்துச் சென்று தோன்றார் கானிலந் தோய்தல் செல்லா

ருருவமே லெழுதலாகா வொளியு மிழ்ந்திலகு மேனி
பரிதியினியன்ற தொக்கும் பன்மலர் கண்ணிவாடா

நாலடி நானூறு

வானிடு வில்லின் வரவறியாவாய் மெயாற் / கானிலந் தோயாக்கடவுளை-யாநிலஞ்
சென்னியுற வணங்கிச் சேர்து மெம்முள்ளத்து / முன்னியவை முடிகவென்று.

கானிலந்தோயா வொளிவுருவிற்கே பரிநிருவாணமென்னும் பெயரை அளித்துள்ளார்கள் வானராட்சியமாம் நட்சேத்திரத்தில் ஒளிகொண்டுலாவு வோரு மவர்களேயாம்.

நெஞ்சறி விளக்கம்

மின்மினி பூச்சுதன்னுண் மெய்யொளிக்கண்டாற்போல / உன்மன தொடங்கி
யுன்னுண்ணொளிவெளிக் கண்டாற் பின்னை / சென்மமு மில்லை மற்றுஞ் சுயவொளி
வுருவமாவாய் / நன்மன திருத்திநாகை நாதரை வணங்கு நெஞ்சே.

மச்சமுனியார்

பண்ணினால் சடம்போகா தெத்தனை நாளாய் / பலவாக மௌனத்தை
விரித்துச்சொல்வேன்
ஒண்ணினால் மௌனத்தில் ரவியைப்பாரு / வுறிகியல் லோவகண்டத்தின்
ஒளியைக்காட்டும்
கண்ணினால் சடங்காணும் பிடிக்கப்பொய்யாம் / கற்பூரதீபம்போல் வொளியாய் நிற்கும்
தண்ணினால் சாய்கையில்லை அகண்டமாவாய் / சச்சிதானந்த மென்ற தேகமாமே.

இந்நிருவாண அந்தர்யாமிய நிலையும் பரிநிருவாண பகிர்வுரு நிலையும் பௌத்தன்ம மந்திரவாதிகளுக்கே விளங்குமன்றி ஏனய மதத்தோருக்கு இன்னும் விளங்கா, பின்னும் விளங்காதென்பது திண்ணம்.

இதற்குப் பகரமாகத்தாம் வரைந்துள்ள வினாவில் ஓர் கிறிஸ்தவ பி.ஏ. எமது விடையைக் கண்டு உடலில் சோதியுருவமும் ஒன்றுண்டோ எனப் பரிகசித்ததாக வரைந்து முள்ளீர் எமது விடையைப் பரிகசித்தக் கிறிஸ்தவர் பி.எ. பட்டம் பெற்றக் கல்வி அவர் பெண்டு பிள்ளைகளை காப்பாற்றுங் கல்வியே யன்றி, விசேஷித்தக் கல்வியாகாவாம். அவர் கிறிஸ்தவரென்னும் பெயரைக் கொண்டு காப்பி ஆப்பத்துக்கோர் ஜெபமும் சாப்பாட்டிற்கோர் ஜெபமும், தூங்குவதற்கோர் ஜெபமுஞ் செய்யக் கற்றுக் கொண்டவரன்றி கிறிஸ்துவின் பேரானந்தச் செயலையும் அவரது ஞான போதத்தையும் கண்டுமிரார் கேட்டுமிராரென்பதே விளங்குகின்றது. அவ்வகைக் கண்டுங் கேட்டுமிருப்பரேல் எமது விடையைக்கண்டு பரிகசியார். கிறிஸ்துவின் போதனையில் மனிதன் மறுபடியும் பிறவாமற் போனால் பரலோகராட்சியம் சேரமாட்டானென்று கூறியுள்ள ஞானவாக்கியத்திற்குப் பகரமாய் ஓர் காலத்தில் கிறிஸ்து சீனபருவதமேறி ஒளிமயமான மாறுரூபமானாரென்றும், ஆயிரத்திச் சில்லரை வருடங்களுக்குமுன் பள்ளத்தாக்கிலடக்கஞ் செய்தமோசேயும் நானூறு வருடங்களுக்கு முன் பகன்ற எலியாவும் வந்து ஒளியுருவாக கிறிஸ்துவிடம் பேசினார்களென்றும் அவ்வொளி உருவைக் காணக் கண்கூச்சமிட்டு சீஷர்கள் கவிழ்ந்து கொண்டார்களென்றும் வரைந்துள்ளவற்றைக் கண்டறியாவஞ் ஞானமே அவரைக் கூடாகிவிட்டது நீருமவரைப் போல ஞ்ஞானியாகாது சத்தியமாம் புத்தன்மத்தை ஆராய்வீராக.

- 7:9; ஆகஸ்ட் 6, 1913 -

114. செயின்ட் ஜேவியர் சங்கைத் தெளிவு

டி.சி.என். உ.கோ-அன்பரே தாம் வினாவிய சங்கை விசேஷித்ததே யாம். சென்ட்ஜேவியர் என்னும் மகான் ஞானசாதனம் கற்பசாதனம் இரண்டிலுமுள்ளவரென்றே சொல்லல் வேண்டும். அதற்குப்பீடம் யாதெனில் பௌத்தர்கள் புருஷர்களுக்குள் வேறுமடமும் இஸ்திரிகளுக்குள் வேறு மடமும் ஏற்படுத்தி ஞானசாதனத்தில் விடுத்திருந்த செயல்களை அநுசரித்தே கிறிஸ்துவின் மாணாக்கர்களும் மடங்களை ஏற்படுத்தி அதேசாதனங்களைக் கையாடி வந்தவர்களில் கோவைகுருக்கள் மட்டிலும் கற்பசாதனங்களையும் ஞானசாதனங்களையுஞ் செய்துவந்ததாக விளங்குகின்றது.

அவற்றுள் கற்பசாதனத்தோர் சிலவோடதிகளைப்புசித்து வஜ்ஜிரகாயப் படுத்துகிறதும் சிலர் சாம்பரின்மீது ரெட்டுகளைவிரித்து ஞானசாதனஞ் செய்துவந்தார்களென்பதும் சரித்திரங் கூறுகின்றது.

தேகத்தை எத்தகைய கற்பஜெயஞ் செய்னுஞ் சிலகாலிருந்து மறைந்து போமேயன்றி நீடித்திருக்க மாட்டாது. அவ்வகை நீடித்தேயிருக்கின்ற தென்பதாயின் சிற்சிலமாறுதல் செய்யவுங்கூடும்.

பௌத்தர்களது கற்பசாதனத்தில்

ஞானவெட்டி

"யோகத்தின் விதிதா னென்னவுடலுயிர் பிலக்கத்தானும்
ஆகமப்படியே ஞானவாயிரத்தைஞ்ஞூறு சொச்சம்
பாகமாயாய்ந்து பரனம் பழக்கமோராண்டு உண்டால்
சாகத்தான் போமோயில்லை சாக்காடு தவரிப்போமே"

என்று கற்பசாதனத்தோர் சாதித்துவந்த போதினும் ஞான சாதனத்தோர் அவற்றைக் கண்டித்தே வரைந்திருக்கின்றார்கள். அதாவது

நெஞ்சறி விளக்கம்

ஆண்டொருநூறு கற்பம் அவுஷத மூலியுண்டு
நீண்டதோர் காய சித்தி நெடு நாளைக்கிருந்த பேரும்
மாண்டுதான் போவாரல்லால் வையகத்திருப்பாருண்டோ
தீண்டொணா நாகைநாதர் சீர்பதம்போற்று நெஞ்சே,

என, நாகர் குலத்தை ரட்சித்து அவர்களிடுக்கங்களை நீக்கியருளிய நாகைநாதராம் புத்தரை சிந்தித்து அவரது தன்மத்தில் நிலைத்து பரிநிருவாணம் பெறவேண்டியதே அழகென்று குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

ஆதலின் உலகத்தில் தோன்றும் பொருட்கள் யாவும் க்ஷணத்திற்கு க்ஷணமழிந்து கொண்டே போவதியல்புகொண்டு எலும்புகள் கல்லாக மாறுதலும் கல்லுகள் கரியாக மாறுங்கால் ஊனும் உதரமுந் தோய்ந்த வுடல் என்றும் அழியாதிருக்குமென்பதை ஆராய்ந்தறியவேண்டியதேயாம். கடவுளே மனிதனாக வந்து மரித்தோனுக்கு உயிர் கொடுத்து உலாவப் பெற்றவன் உலகத்தில் மறைந்துபோகுங்கால் ஏனையோர் மறையாமலிரா ரென்பது திண்ணம். மரித்துள்ள தேகத்தை நம்புவதால் சில ஆட்சரியங்களும் நடைபெறுகின்ற தென்பதில் கல்லை நம்பினவனுக்கும் மோட்சம் கடவுளை நம்பினவனுக்கும் மோட்சமென்னும் பழமொழிபடி மனமே காரணமாயுள்ள தால் சில ஆட்சரிய முண்டாயது அதுவோர் பெரிதாகாவாம்.

- 7:10; ஆகஸ்ட் 23, 1913 -

115. அம்மையென்னும் வைசூரி

வினா : இம்மாநிலந்தன்னில் வாசஞ்செய்யுங் குடும்பிகளில் யாவருக் காகிலும் அம்மையென்னும் வைசூரி கண்டு வருத்தப்படுவார்களாயின், அச்சமயத்தில் மாரி அம்மனைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறதாவதென்ன? இப்பிள்ளையானவன் பெரியோனாகி விவாகஞ் செய்யுஞ் சமயத்தில், பெண்வேடமும், கழுத்தில் மஞ்சள், பூநூல் தரித்தும் உடுக்கை, பம்பை, சிலம்பு முதலிய வாத்தியகோஷ்டத்துடன் ஏழு எல்லைவலம் வந்து பிறகு அம்மன் சன்னிதானஞ் சென்று, ஆடுவெட்டி, பொங்கலிட்டு, இப்பிள்ளைக்கு விவாகஞ் செய்வதாக பிரார்த்தித்துக் கொள்ளுகின்றார்களே? இத்தியாதி சடங்குகள் யாவும் பௌத்ததன்மத்தை சார்ந்ததா அன்றேல் ஆரியரின் வந்நெஞ்சக் கட்டுக்கதைகளில் இதுவுமொன்றோ?

வீ. பார்த்தசாரதி, புதுப்பேட்டை..

விடை : அன்பரே! தாம் வினவிய சங்கை பௌத்தருக்குரியதேயன்றி வேறு மதஸ்தர்களுக்குரியதன்றாம். தென்னிந்தியாவில் அம்பிகாதேவி என்றும் அம்மை, அவ்வை, என்றும் வழங்கிவந்த அறச்செல்வியின் உற்சாகமேயாம். இவற்றை "அம்பிகாதேவியின்" சரித்திரத்தால் தெள்ளறத் தெளிந்து கொள்ள லாம். அச்சரித்திரத்தை அநுசரித்து பூர்வபௌத்தர்களுக்குள் ஆண் குழந்தை களுக்கு வைசூரிகண்டு மிக்க அபாயத்திலிருக்குமாயின் பகவதியை சிந்தித்து

நீதிநெறி தவிரோம் இப்பிள்ளை சுகமுறுமாயின் மஞ்சளாடை உடுத்தி ஆண் பிள்ளைகள் சங்கத்திற் சேர்த்து விடுவோமென்று சிந்தித்துக் கொள்ளு கிறதும் பெண்பிள்ளை வைசூரியுண்டாகி மிக்க உபத்திரவப்படுமாயின் பகவதியை சிந்தித்து அப்பெண் சிறுமி சுகமுற்றவுடன் மஞ்சளாடையும் மஞ்சள் நூலுங் கழுத்திலணிந்து பெண்கள் சங்கத்தில் சேர்த்துவிடுவதும் வழக்கமாயிருந்தது.

பிற்காலத்தில் அவ்வழக்கத்தை சில கிராமவாசிகள் வேறு வகையாக மாற்றி தங்கட் பிள்ளைகள் வைசூரியினின்று சுகம்பெறுமாயின் அம்மனைப் போல் பொன்னாடைபூட்டி .... (ஓர் வரி தெளிவில்லை) வேம்பு மரத்தடியில் பெரும்பொங்கலிட்டு அப்பொங்கல் சாதத்துடன் வாழைக்கனியைப் பிசைந்து ஏழைகளுக்களித்து பசியாறச்செய்து வீடுவந்து தங்கடங்கள் விவாகங்களை நடத்திக்கொள்ளுவார்கள், அத்தகைய வொடுக்கமும் சீலமுங்கெட்டு கோழிகளையும் ஆடுகளையுங் கொன்று வதைக்கக்கூடிய கொடுஞ்செயல் களை ஆரம்பித்துக்கொண்டு குடிகெடுவதுடன், கோழிக்கரி, ஆட்டுக்கரிக்கு பசரனையாக கள்ளு சாராயத்தையுங் குடித்து வெறித்து கிராமங்களையும் பாழ்படுத்தி வருகின்றார்கள். அதனால் பூர்வ ஒழுக்கங்களும் சீலங்களும் கெட்டு நாளுக்குநாள் சீரழிந்தே போகின்றார்கள்.

இனி சீர்பெற்று முன்னேற வேண்டுமாயின் அரசமரத்தடியில் அமர்ந் திருந்த அறவாழியான் தன்மத்தையும் வேம்புமரத்தடியில் வீற்றிருந்த அறச் செல்வியின் ஞானத்தையும் ஆராய்ந்து சத்தியத்தன்மத்தின்படி நடப்பதாயின் சகல சுகமுங் கைகூடுமென்பது சத்தியம் சத்தியமேயாம்.

- 7:13; செப்டம்பர் 3, 1913 -

116. ஐந்து வினாக்கள்

வினா : 1. உலகாரம்பத்தினின்று தொன்று தொட்டு விளங்கிவரும் மார்க்கம் யாது?

2. பிரதமத்தினின்று தமிழ்ப்பாஷை உணர்ந்தாராதியோர் அனுசரித்து வந்த ஞானங்கள் எவை?

3. புத்தன், கிறிஸ்டியன், மகமதியன், ஆகிய மற்றேனையோர்களுக்கும் விளங்கியது யாது?

4. தற்கால அஞ்ஞானத்தைக் களைபவன் எத்தன்மை உடையவனாக இருத்தல் வேண்டும்?

5. பிறரிலக்கணங்கற்றார் யாவர்!

ஆகிய இவ்வைந்து வினாக்களின் உண்மைகளை நுமதரிய தமிழனில் பிரசுரித்து ஆன்மாக்களை அறவழிக்கெய்த ஆவல்கொள்வீரென அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றனன்.

மு. துரைசாமி முதலியார், இரங்கூன்.

விடை : ஐயா, தமது முதலாவது சங்கை எதிர் வினாவுக்கிடமுற்றுளதால் உலகாரம்பக்காலவரை விளங்கல் வேண்டும். அஃதை விளக்குவீரேல் அக்காலத்துள்ள மார்க்கத்தை சுருங்க விளக்குவாம்.

இரண்டாவது வினாவிற்குத் தமிழ் பாஷையை ஆண்டுவந்தவர்களே சகல கலைக்கியானங்களையும் வரைந்து வைத்துள்ளார்கள். அவற்றை ஆராயாதோர் எழுதி வைத்துள்ள ஞானங்கள் யாதுங் கிடையாவாம்.

மூன்றாவது வினாவிற்கு புத்தரென்னும் ஆதிபகவனுக்குள்ள ஆயிரநாமங்களில் ஓதாமலுணர்ந்த முநிவனென்னுமோர் பெயருமுள்ளது கொண்டு புத்தர் தன்னிற்றானே ததாகத முற்றவரும் கிறிஸ்து, மகமது முதலிய மகான்கள் முதநூல் வழிநூல் சார்புநூல் கண்டோர்பால் விளங்கியவர் களாவர்.

நான்காவது வினாவிற்கு அஞ்ஞானமென்னு மொழிக்குத் தற்காலமென்றும் முற்காலமென்றும் வரை கிடையாவாம். ஆதலின் எக்காலத்தும் விவேகமிகுத்தோனே அஞ்ஞானத்தைக் களைவான்.

ஐந்தாவது வினாவிற்கு, தன்னிலக்கணங்கல்லாதோர் பிறரிலக் கணமறியார். தன்னிலக்கணங் கற்றோரே பிறரிலக்கணம் அறிவார்களென்பது திண்ணம்.

- 7:16; செப்டம்பர் 24, 1913 -

117. சங்கைத் தெளிவோடு ஜைநரின் சித்தாந்தங்களிற் கண்டதை தமிழருக்கறைவாம்.

வினா : பத்ராதிபரே: *1913*ம் வருடம் ஜூலை மாதம் *30*ம் நாள் வெளியிட்ட சங்கைத் தெளிவின்கண் ஜைந, பௌத்த, யதார்த்தவேற்றுமையின் தோற்றம் யாதென்றற்கு பௌத்தத்தினின்றும் நெருங்கத் தோன்றி யது ஜைநம் என்றீர். திரிக்குறளை ஆராய்ந்தவர்கட்கு ஜைநசமய விசாரணைக் குறைவாதலின் ஜைநம் வேறு பௌத்தம் வேறென நினைத்து ஜைநருடையதல்ல வென்றாரென்றீர். இஃதால் ஜைநமும் பௌத்தமும் ஒன்றென்றே தமதபிப்பிராயம் நன்கு விளங்குகின்றதாயினும் *1913*ம் வருடம் ஆகஸ்டு மாதம் *27*ம் நாள் வெளிவந்த சஞ்சிகையின்கண் ஜைநசமய ஸித்தாந்தத்திற்குத் தலைப்பில் வரைந்துள தமதபிப்பிராயத்தை நோக்குழி அன்பர்காள் ஜைந சமய சித்தாந்தத்தை யான் வெளியிடுவதாயின் ஜைநவன்பர்கட்கு மனத்தாங்கலுண்டாமென்றெண்ணி இதுவரை வெளியிடாதிருந்தோம். சரித்திரவாராய்ச்சியுள்ளோர் கண்டு தெளிவீர்களாக என்றதால் ஜைநர்கள் மனத்தாங்கலடையும் படியான விடயங்கள் தங்களிடம் எவ்வித ஒவ்வாநெறி நிறைந்த போலி நூலிருக்கின்றதோ அதை யுணர்ந்திவ்வாறெழுதினீரோ அறிகிலேன். குற்றமிருக்கின் சுட்டிக்காட்டு தலுத்தமர்க்கழகாதலின் எடுத்துறைத்தல் வேண்டும். மனத்தாங்கல் கொள்ளற் சினந்தவிர்த்தோர் கழகன்றே சினந்தவிர்த்தோர் யாவர். ஜிநமுனிவர்களன்றோ. இஜ்ஜிந முனிவர்களடியார் ஜைநர்களன்றோ ஆதலின் மனத்தாங்கல் திணைத்துணையுங் கொள்ளார் கொள்ளார் கொள்ளார்.

ஆதிசக்ரவர்த்தி உபாத்தியாயர் திருமலை.

விடை : அன்பரே! ஆகஸ்டு மாதம் *27*ம் நாள் நமது பத்திரிகையில் வெளியிட்டுள்ளக் கு றிப்பு யாதோவென்னில் பத்திரிகை நடாத்து மாரம்பத்தில் சரித்திரவாராய்ச்சியுள்ள சில பெரியோர்கள் ஜைநசித்தாந்தத் தைப்பற்றிக் கேட்டுக்கொண்டதின்பேரில் நாம் பாகுபலி நாயனார் மறுகர் தேவரத்ன நாயனாருக்கெழுதிகேட்க அவரும் தாங்களெழுதியுள்ளக் கருத்திற்கிசைய சுருக்கமாக சிலதெழுதியிருந்தார். அவற்றை பத்திரிகையில் வெளியிட உத்தேசித்திருக்குங்கால் சென்னையிலுள்ள சில ஜைனவன்பர்கள் கூடி வெங்கிட்டரமண வையரென்பவரைக் கொண்டு அசோதர காவிய மென்னுமோர் ஜைநசித்தாந்தம் வெளியிட்டு ஐயரவர்களால் நம்பால் ஒரு புத்தகம் வரப்பெற்றவற்றை நோக்குங்கால் புத்தரைப்போலவே ஒருவர் பிறந்தார் புத்தரைப்போலவே ஞானம் போதித்தாரென்னுங் கற்பனைகள் மிகுந்திருந்துகண்டு தேவரத்ன நாயனார் அனுப்பியுள்ளதைப் பத்திரிகையில் வெளியிடின் சென்னையிலுள்ள சில ஜைநவர்களுக்கு மனத்தாங்கலுண்டா மென்றும் சென்னையிலுள்ளோர் வெளியிட்டுள்ளதைப் பத்திரிகையில் பிரசுருக்கில் வெளிதேச ஜைநர்களுக்கு மனத்தாங்கலுண்டாமென்றும் விடுத்து தற்காலம் ஜைநருள் ஒருவராகிய தாமே வெளிதோன்றி எழுதியுள்ளபடியால் சரித்திரக்காரர் தெரிந்துக்கொள்ளுமாறு குறிப்பிட்டு வெளியிட்டுள்ளோம்.

- 7:16; செப்டம்பர் 24, 1913 -

118. ஓம் என்னும் மொழி

வினா : "ஓம்" என்னு மீரட்சரம் ஒரு மொழியா? மொழியாயின் அதன் பொருளென்ன அதனை ஒருவன் உச்சரிப்பதால் பயனென்ன.

நா. பஞ்சநாதன், வேலூர்.

விடை : அன்பரே! தாம் வினாவிய சங்கை மிக்க விசேஷித்ததன்றாம். "ஓம்" என்னுமீரட்சரம் ஓர் மொழியுமாகாவாம். அதற்கோர்பொருளுங் கிடையாவாம் அதனை உச்சரிக்கும் மக்களுக்கோர் பயனுந்தாராவாம். அரோகரா அரோகரா என்னும் பொருளற்ற வெறுமொழிபோல் இதுவுமோர் குறைச்சொற்கிளவி முதல்மொழியற்றத் தொடரட் சரங்களென்னப்படும்.

அதாவது அறிவோம், தெரிவோம், முடிப்போம், எடுப்போம், நடப்போம், வருவோமென்னு மீருகெடாது துடர்ந்தொலிக்கும் இருவடி வேயாம்.

இஃது சிரமற்றவுடல்போன்ற வீரட்சரமாதலின் அஃதோர் மொழி முதலற்று குணமும் பொருளற்றது கொண்டு பயனுமில்லை என்பதே துணிபு.

இலக்கணவிதி தொல்காப்பியம்

உயிரும் புள்ளியு மிறுதியாகிக் / குறிப்பினும் பண்பினுமிசையினுந் தோன்றி / நெறிப்பட வாராக்குறைச்சொற் கிளவியுமுயர்திணை யஃறிணை யாயிரு மருங்கி / னைம்பாலறியும் பண்பு தொகுமொழியுஞ் / செய்யுஞ்செய்த வென்னுங் கிளவியின் மெய்யொருங்கியலுந் தொழிறொகு மொழியுந் / தம்மியல் கிளப்பிற் றம்முள்ளம் வரூஉ மெண்ணின் றொகுதியுளப் படப்பிறவு மன்னவையெல்லா மருவின் பாத்திய / புணரியனிலையிடை யுணரத்தோன்றா.

- 7:17; அக்டோபர் 1, 1913 -

119. கிரகணங்கள்

வினா : அண்ணலே; 14 ஞாயிற்றுக்கிழமை காலை பிராமணனும் வள்ளுவர்களும் தெற்ப புல்லுகளை கொண்டுவந்து எல்லோருக்குங் கொடுத்து இதை சமயற் பாத்திரங்களிலும் அடுக்கல் பானைகளிலும் அரிசி முதலானதிலும் போட்டு வையுங்களென்றார். இதை போடாவிட்டாலென்ன குற்றம், போட்டதினாலென்ன குணமென்றேன். போடாவிட்டால் தோஷம் தங்குமென்றார். என்ன விஷயத்திற்கு இப்புல்லென்றேன். சந்திரகிரஹண மென்றார் சந்திரகிரஹணமென்றாலென்ன என்றேன். மேல்சொன்ன பிராமணனுக்குக் கோபம்பிறந்து, இராகு, கேது என்னும் சற்பம் நாளை திங்கட்கிழமை இரவு 7½மணிக்கு விழுங்கி, 8½மணிக்கு கக்குமென்றார். அன்றைய இரவு 7-மணியிலிருந்து 8½மணி வரையிலும் பார்த்தேன், அப்பாம்பினுடைய தலையும், வாலையும், விழுங்க, திறந்த வாயையும் வானத்தை சுற்றி சுற்றிப்பார்த்து கழுத்துநோய் எடுத்துக்கொண்டதேயொழிய அப்பாம்பை பார்க்கவேயில்லை எமதருமெஞானத்தந்தையே; இதின் சரித்திரம் தெரிந்துக்கொள்ள அநேக ஜனங்களுக்குப் பிரீதியாயிருக்கிறபடியால் அதின் வரலாறை முழுதும் விவரமாய் பத்திரிகையினோர் கோணத்திற் பிரசுரிப்பீரென்று மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளும்.

என். பரசுராமன் சாப்பர். பெங்களூர்.

விடை : அன்பரே! தாம் வினவியுள்ள சங்கை விசேஷித் ததேயாம். அதாவது கிரகங்களில் வலவோட்டுக் கிரகங்களென்றும், இடவோட்டுக் கிரகங்களென்றும் இருவகையுண்டு இவற்றுள் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன் சனியென்னும் ஏழு கிரகங்களும் பூமியின் வலதுபக்கமாக சுற்றிவரும். இராகு, கேது, இருகிரகங்களும் பூமியின் இடது பக்கமாக சுற்றி வரும், இவ்விருவகையாக சுற்றிவரும் இருகிரகங்களில் இராகுவென்னுங் கிரகம், சூரியனுக்கு நேரி லேனும் சந்திரனுக்கு நேரிலேனும் வருங்கால் அவை மங்கலடைந்து மறைவு நீங்கியவுடன் அதிவொளி வாகப் பிரகாசிப்பதியல்பாம். இராகென்னுங் கிரகத்தால் சந்திரன் மறைவுபடுவதை சந்திரகிரகண மென்றும் சூரியன் மறைவுபடுங்கால் சூரியகிராணமென்றுங் கூறுவர். காலக் குறிப்பிட்டுயிவற்றைக் கூறுவதைக்கொண்டே பஞ்சாங்க கணிதம் சிறப்புற்று விளங்குகின்றது. அக்கிரகங்கள் கிரகத்தால் மறைவு படுதலால் மக்களுக்கோர் கேடுமில்லை சுகமுமில்லை என்பதே துணிபு.

அந்நாளை சொல்லிக்கொண்டும் தெற்பை என்னும் புல்லைக்கொடுத்துக் கொண்டும் வருவது ஓர் தந்திரசீவனமென்னப்படும். நமது தேசத்து ஏனவாயரைக்கண்டு இளித்தவாயரேமாற்றி துட்டு பரிப்பதியல்பாம். ஆங்கிலவான சாஸ்திரிகளோ சூரியனும் சந்திரனும் பூமியினால் மறைவு படுகிறதென்று கூறுகின்றார்கள். ஆயினும் அவ்வகைக்காலத்தை முன்னிட்டுக் கூறுங்குறிப்பு எவ்விடத்துங் காண்பதரிதாம். இராகுவென்னுங் கிரகம் இந்த மாதம் இந்த நாள் இந்த திதியில், சூரியனை மறைக்கும் சந்திரனை மறைக்குமென்னுங் காலக் குறிப்பை முன்பே வகுத்து விளக்கும் வழிவகை கண்டு வரைந்து வருகின்றார்கள் அம்முற்காலக் கணிதம் மாறாது சூரிய கிரகணமோ சந்திரகிரணமோ தோன்றுவதைக் காண்கின்றோம். இக்

காலக்குறிப்பைத் தவறென்றேனும் இராகுவென்னுங் கிரகம் இல்லையென கூறுவதற்காகாவாம். விஷத்தால் அறிவு மயங்குதல்போல், இராகுவென்னுங் கிரகத்தால் பேரொளிகள் மறைகின்றபடியால் இராகுவென்னும் பாம்பு சூரியர் சந்திரர்களை விழுங்கிவிடுகிற தென்னுமோர் வழக்கச்சொல் பரவிவிட்டதன்றி வேறொன்றுங் கிடையாவாம்.

- 7:18; அக்டோபர் 8, 1913 -

120. மனிதனைக் கும்பிடுவோரும் சுவாமியைக் கும்பிடுவோரும்

வினா : மனிதனைக் கும்பிடுவோர் பௌத்தரும் சுவாமியைக் கும்பிடுவோர் யாங்களுமென்று கூறியதோர் மொழி என்னை சந்தேகத்திலாழ்த்தி யிருக்கின்றது. அவற்றை விளக்கி இவ்வடியேனைப் புனிதனாக்க வேண்டும்.

வீ. பாலசுந்திரம்., மதுரை.

விடை : அன்பரே! தாம் வினாவிய சங்கைவீணரிடம் வாதிட்ட விழலாய சங்கையேயாம். அதாவது பன்றிகள் முன்னிலையில் முத்துகளைப் போடாதீர் களென்னும் மகாஞானிகளின் நீதிமொழிகளை சற்று கவனித்தல் வேண்டும். குடியர்களும் வியபச்சாரிகளுமானோர் முன்னிலையில் குடிக்கலாகாது, விபச்சாரஞ் செய்யலாகாது என்னும் முக்கிய போதனை யாம் சத்திய தன்மத்தைப் போதிப்பதாயின் அவர்கள் செவியில் நுழையுமா, இதயத்தில் பதியுமா, ஒருக்காலும் பதியாவாம். ஏனென்பீரேல்சுவாமி சுவாமி என்னும் மொழியைச் சொல்லிக்கொண்டு பொய் சொல்லும்போது சுவாமி நம்மெப்பார்ப்பார், களவு செய்யும்போது சுவாமி நம்மெப்பார்ப்பார், விபச்சாரஞ் செய்யும்போது சுவாமி நம்மெப்பார்ப்பார், கள்ளுக்கடைக்குள் நுழையும்போது சுவாமி நம்மெப்பார்ப்பாரென்னும் உறுதியும் பயமுமின்றி வெறுமனே பொய்யைச் சொல்லித்திரியும் நம்பிக்கையற்ற மதங்களைச் சேர்ந்தவர்களாதலால் பொய்யைச் சொல்லி மெய்யைப் பிரழவைப்பது அவர்கள் சுவாபமாகும். மனிதனைத் தொழுவதும் சுவாமியைத் தொழுவது மாய வித்தியாசத்தை சற்று வினவுவீராயின் அவர்களது வீராப்பு தன்னிற்றானே அடங்கிப்போம். அதாவது இரிஷி பத்தினிகளைக் கற்பழித்து கோசமற்ற சுவாமியைக் கும்பிடுவதினும் விபச்சாரஞ் செய்யாதீர்களென்று போதித்த மனிதனைக் கும்பிடுவது மேலன்றோ, கோபிகாஸ்திரிகளின் கற்புகளை அழித்துவிட்டு யாமொன்றுமறியேனென்று பொய்யைச் சொன்ன சுவாமியைக் கும்பிடுவதினும் பொய்யை சொல்லாதீர்களென்று கூறியுள்ள மனிதனைக் கும்பிடுவது மேலன்றோ, கோடி கோடியாக மக்களைக் கூட்டி கொல்லவைத்து தானுங் கொன்று தன் தம்பியைக் கொல்லுகின்றான் அவன் கையை வாங்கி கொல்லுமென்று கூறிய கொலைபாதக சுவாமியைக் கும்பிடுவதினும் சீவயிம்சை செய்யாதீர்கள். கொலைபாதமேற்கா தீர்களென்று கூறியுள்ள மனிதனைக் கும்பிடுவது மேலன்றோ அன்னமிட ஆரம்பித்த வன்னியன் மனைவியை பெண்டாள வாரம்பித்த சுவாமியைக் கும்பிடுவதினும் அன்னியன் தாரத்தை இச்சியாதீர்கள், அன்னியன் தாரத்தையேறெடுத்தும் பாராதீர்களென்று கூறியுள்ள மனிதனைக் கும்பிடுவது மேலன்றோ. வீடுவீடாய்த் திருடித்தின்னும் சுவாமிகளைக் கும்பிடுவதினும் திருட வேண்டாம், அன்னியர் பொருளை அபகரிக்கவேண்டாமென்று கூறியுள்ள மனிதனைக் கும்பிடுவது மேலன்றோ. இத்தகையப் பொய்யுங் களவும் விபச்சாரமும் நிறைந்த சுவாமிகளுக்கென்று கூறி மாடுகளையுங் குதிரை களையும் மனிதர்களையும் கருணையின்றி நெருப்பிலிட்டுச் சுட்டுத்தின்ற படுபாவக் கூட்டத்தோர் மதத்திற் சேருவதுடன் சீவகாருண்யப் பெருக்கத்தையும் அன்பின் வளர்த்தியுள்ள புத்த சங்கத்திற் சேருவது மேலன்றோ. சுவாமிக்கென்று சுராபானங் கள்ளு சாராய முதலியவைகளை அருந்தி மாமிஷங்களை மயங்க மயங்கத் தின்னுங் கூட்டத்தோருடன் சேருவதினும் சுத்த நீர் சுத்த புசிப்பைப் புசித்து நீதியின்பேரில் பசிதாக முற்றுள்ள சாதுசங்கத்திற் சேருவது மேலன்றோ, வென்று விடையளிப்பீராயின் அவர்களது சுவாமி பக்த்தி பரக்க விளங்கிப்போம்.

இத்தகைய மதங்களைச் சார்ந்து முற்கூறிய சுவாமிகளே சமயாச்சாரிகளாக வந்து பஞ்சசீலமுற்றுள்ள பௌத்தர்களை வசியிலுங் கழுவிலுங் கொன்று தங்கள் மதத்தை நிலைநிறுத்தியவர்கள் இக்காலத்தில் அவதாரமெடுத்து வருவார்களாயின் பௌத்தர்களேதோ சிவகாருண்யமுற்றிருப்பினும் மகமதியர்களும் கிறிஸ்தவர்களும் ஒன்றுகூடி பால்கனுக்கும் துருக்கிக்கும் மத்தியில் கொண்டுபோய் விட்டு வசியைத் திருப்பிவிடுவார்களென்று கூறுவீராக.

- 7:19; அக்டோபர் 15, 1913 -

121. கும்பகோணம் யதார்த்தவசனி பத்திராதிபரைக் கடாவல்

ஐயா 'யதார்த்தவசனி' பத்திராதிபரே! தாங்கள் செப்டம்பர் மாதம் 20ம் நாள் வெளியிட்டுள்ளப் பத்திரிகை இரண்டாம் பக்கம் பதின்மூன்றாவது வரியில் ஆரியமதமே சிறந்ததென்று கூறியுள்ளீர் அவ்வாரியனென்பவன் யார் எத்தேசத்தான் எங்கு பிறந்தவன் எப்பாஷையினன் அவன் காலவரை என்னை, ஆரியமென்னு மொழி வடமொழியா தென்மொழியா அம்மொழியின் பொருளென்னை இவற்றை சரித்திரதாரத்துடனும் நூலாதாரத்துடனும் விளக்குவீராக.

பௌத்த மதத்திற்கு மூலபுருஷன் சித்தார்த்தி என்னும் மனுமகனுண்டு, கிறிஸ்து மதத்திற் இயேசென்னு மனுமகனுண்டு, இஸ்லாம் மதத்திற்கு மகமதென்னு மனுமகனுண்டு அவர்கள் பிறந்து வளர்ந்ததேசமுமுண்டு. அவரவர்கள் பாஷைகளு முண்டு. காலவரைகளும் உண்டு அவைபோல் சிறக்கக்கூறியுள்ள ஆரியனென்பன் யாவனென்பதேயாம்.

- 7:19; அக்டோபர் 15, 1913 -

122. மோட்சமும் நரகமும்

கடந்த வாரத்தில் யான் வீட்டிலிருக்கும் பொழுது ஒரு மகம்மதியரொருவர் என்னிடம் வந்து உட்கார்ந்து சில ஆத்ம விசாரணையைப்பற்றி வார்த்தையாடிக்கொண்டிருக்கும் பொழுது அவர் சொன்னதாவது நாம் செய்யும்படியான புண்ணிய, பாப கர்மங்களெல்லாம் கடவுளானவர் கடைசியில் எழுப்பி அவரவர்கள் செய்த புண்ணிய பாபத்தை தீர விசாரித்து புண்ணியஞ் செய்தவர்களுக்கு மோஷத்தையும், பாபம் செய்தவர்களுக்கு நரகத்தையும் ஈவார் என்று சொன்னார் அதை இவ்வடிமை கேட்டு சொன்னதாவது ஐயா கடவுளானவர் இறந்துபோன ஜீவர்களையெல்லாம் கடைசி காலத்தில் சரீரத்தோடு எழுப்பி விசாரிக்கின்றாரா என்று வினாவி யதற்கு அவர் சொன்னதாவது எங்களுடைய குரானிலும், கிறிஸ்தவர்களுடைய பைபிலிலும் அப்படியே எழுதியிருக்கின்றது. நீங்கள்தான் மறுஜென்மம் உண்டென்றும், மிகவும் பாபம் செய்தவர்கள், கழுதையாகவும், பன்றியாகவும், இன்னும் இழிவான பிறவிகளாகவும் பிறக்கின்றார்களென்றும், விசாரித்துப் பாராமல் பேசிவிடுகின்றீர்கள், அது சுத்தப் பொய், யான் அதை ஒருகாலம் நம்பமாட்டேன் மேலும் எவறுக்காவது ஒரு பெருத்த ஆபத்து வந்தால் சட்டென்று அவன் பூர்வீகத்தில் செய்த கர்மமானது இந்த ஜென்மத்தில் வந்து வாய்த்தது என்று சொல்லிவிடுகிறீர்கள், யான் ஒருகாலும் நம்ப மாட்டேன் என்று மறுபடியும் சொன்னார், யான் மறுபடியும் கேட்டதாவது; நல்லது ஐயா ஒரு வாலிபன் யௌவனஸ்திரீயைக் கலியாணம் செய்துக் கொண்டு சிலநாள் சென்ற பிற்பாடு அவர்கட்கு ஜனிக்கும்படியான பிள்ளைகள் குஷ்டரோகியாகவும், முடவனாகவும், குருடனாகவும் ஏன் பிறக்கின்றது. அது யாது காரணத்தினால் இம்மாதிரியாக ஜென்மம் எடுக்கவேண்டியதென்று கடாவினால் அவர் சொல்லுகிறார். அம்மாதிரி யாகப் பிறப்பது தாய்தந்தையருடைய சேர்க்கையினாலும், அல்லது அவர் களுடைய தாய் தகப்பனாருக்கு யாருக்காவது இவ்விதமாக இருந்தால் குமாரன் குமாரத்திகளுக்கும் பிறக்கும்படியான பிள்ளைகளுக்கும் வாய்க்கிற தென்று சமாதானம் சொன்னார். அதை யான் யோசிக்கும்போது முற்றிலும் நம்பக்கூடியதாயில்லை. ஏனென்றால் "எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றும் திரிக்குறள் வாக்கின்படி யதார்த்தம் அறியவேண்டுமென்று

யோசித்து இதற்கு தக்க சமாதானம் கொடுப்பவர். ஸ்ரீலஸ்ரீ க. அயோத்திதாஸ கவிராஜ பண்டித சிகாமணி அவர்களால் தான் முடியும் என்று முற்றிலும் நம்பிவிட்டேன். ஆகையினால் இச்சங்கையைப்பற்றி இவ்வடிமைக்கு தமிழன் பத்திரிகை வாயிலாக சமாதானம் அளிப்பீரென்று முழு நம்பிக்கையோடு இதை சமர்ப்பிக்கலானேன்.

ஐ. முனிசாமி, பெங்களூர்.

விடை : அன்பரே, தாம் வினாவிய சங்கை விசேஷித்ததே ஆயினுந் தாங்கள் தெரிந்துகொள்ளவேண்டிய தொன்றுண்டு. அவை யாதென்னிலோ பௌத்ததன்மம் உன்பூட்டன் எழுதி வைத்திருப்பினும் உன் பாட்டன் எழுதி வைத்திருப்பினும் அவற்றை யுன் விசாரிணையிலும் அனுபவத்திலும் உசாவிப்பார். அவை மெய்யாயதேயென்று தெளிந்து உமக்கும் உமது சந்ததியோருக்கும் உன் கிராமவாசிகளுக்கும் உன் தேசத்தோருக்கும் சுகமளிக்கக் கூடியதாயின் அவற்றை நம்பு. உன் விசாரிணைக்கும் உன் அநுபவத் திற்கும் பயனற்றதாயின் விட்டுவிடுமென்று கூறுவதாகும். அது கண்டே அவற்றிற்கு புத்ததன்மமென்றும் மெய்யறமென்றும் வகுத்துள்ளார்கள்.

மற்றய மதத்தோர் அவர்களுக்குள் எழுதி வைத்திருப்பதையும் சொல்லுவதையும் நம்பி நடப்பதே இயல்பும் மதப்பிடிவாதமே செயலுமாக நிற்பர். ஆதலின் உமக்கஃது எதிரடையாகவே விளங்கும்.

உமது பௌத்ததன்மக் கொள்கையோ நற்கருமத்தைச் செய்யில் நல்ல பலனுந் துற்கருமத்தைச் செய்யின் தீயபயனுமுண்டு. அவற்றை அனுபவத்திலுங் காட்சியிலும் அறிந்துக்கொள்ளற்கு தோற்றும் பிறவிகளே போதுஞ் சான்றென்று கூறி நற்கருமத்தையே பெருக்கி துற்கருமம் யாவும் அகலுமாயின் பிறவியற்று நித்தியானந்த மோட்சநிலை பெறுவதாகும். தாம் கூறியுள்ள இரு மதத்தவர்களது கொள்கையோவென்னில் தாங்களேது தீங்கானச் செயல்களைச் செய்யினுந் தங்கள் தேவனை வேண்டிக்கொண்டால் போது மென்னும் பரிகாரமும், தங்கள் தங்கள் தீவினைக்குத்தக்கத் துன்பம் நேரிட்டு விடுமாயின் பியூனுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் இலஞ்சமென்னும் பரிதானங் கொடுப்பதுபோல அவர்கள் தேவதைகளுக்கு காணிக்கை என்னும் இலஞ்சப் பரிகாரமே போதுமென்னுந் திருப்தியிலிருக்கின்றார்களன்றி அந்தந்த மதப்போதர்களின் பொருட்களை முற்றுமாறாய்வாரில்லை அவை யாதென்னிலோ ஒருவரது சுவிசேஷத்தில் மோட்சத்திற்குப்போகும் வழி ஊசியின்காதில் ஒட்டகம் நுழைவதுபோலென்றும் மற்றொருவர் (மகிருபத்தில் அனலக்) என்றும் கூறியுள்ளவைகளேயாம்.

இதனந்தரார்த்தங்களை அறியாதோர் தங்கடங்கள் மதவைராக்கியங் களிலிருந்து கொண்டு தங்கள் முடிவைத் தெரிந்துகொள்ளாது, உலக முடிவை சொல்லிக்கொண்டே அவர்கள் மடிவதியல்பாம். விசாரிணையற்று சொன்னதைச் சொல்லித்திரியும் கிள்ளைபோன்றோர்பால் தாம் வாதிடுவது உமி குத்திகை சலிப்பதுபோலாம். தாம் வாசஞ்செய்யும் பெங்களூர் தண்டென்னுங் கண்டோன்மென்டில் இறந்துள்ளவர்களை மட்டிலும் எழுப்புவதாயின் பெங்களூர் முழுவதும் இடந்தருமாவென்று யூகித்து உலக முழுவதிலும் இறந்தோர் தொகை என்னவாகும். எவ்விடங் கொள்ளு மென்பதை எளிதிலறிந்துக்கொள்ளலாம். இத்தகைய பெருந்தொகை மக்களை மீளா அதோகதியாய நரகத்திலும் அதோகதியாய மோட்சத்திலுஞ் சேர்க்கும்படியான தேவனை நீதியுள்ள தேவனென்பரோ அன்றேல் அநீதியுள்ள தேவனென்பரோ அஃது அவர்களுக்கே உரிய தாம். தாம் மலைவு கொள்ளற்க.

- 7:23; நவம்பர் 12, 1913 -

123. மோட்சமென்னும் மொழிமுதற் பொருளும் மோட்சத்திற்குப் போகும் வழியும்

நிப்பானமென்பது மகட பாஷையும், மோட்சமென்பது சகடபாஷை யும், முத்தியென்பது திராவிட பாஷையுமேயாம். இவற்றுள் நிப்பான

மென்பதையே நிருவாணமென்னப்படும். மனிதனுக்குள் சகல ப்ாசபந்த பற்றுக்களுள்ளவரையில் வாணமென்றும், பற்றுக்களற்றவிடத்து நிருவாண மென்றுங் கூறப்படும். மனிதனுக்குள் சகல துக்கங்களும் நிறைந்திருக்கும் வரையில் நிரயம், நரகமென்றும் துக்கங்கள் யாவும் அகன்ற விடத்து மோட்சமென்றுங் கூறப்படும், மனிதன் மிருகச்செயல் கொண்டு சுயக்கியானமற்று கிள்ளைபோல் அஞ்ஞான முற்றிருக்கும் வரையில் மழலை என்றும் மனிதச் செயலுற்று சுயக்கியானமுற்று ஞானமுதிற்சி பெற்றபோது முத்தியென்றுங் கூறப்படும்.

நிப்பானம், மோட்சம், முத்தியென வழங்கும் மொழிகளுடன் கைலாயம், வைகுந்தமென்னுங் கற்பனா மொழிகள் கலந்திருப்பினும் மோட்ச மென்னுமொழியையே பெரும்பாலும் வழங்கி வருகின்றார்கள். அம்மோட்ச மென்பது ஓர் பொருளுமன்று கட்டிடமுமின்றாம். அகண்டத்தை தெய்வ உலகமென்றும் வானவர்களென்றும் வானராட்சியமென்றும் புத்தர் களென்றும் புத்தேளுலகமென்றுங் கூறப்படும். இத்தகைய மோட்சத்திற்கு செல்ல வேண்டிய வழியோவென்றால் இராகத்துவேஷ மோகங்களென்னுங் காம வெகுளி மயக்கமாம் கோபமென்னு மக்கினியும் காமமென்னு மக்கினியும் எரிந்துகொண்டேயிருப்பதும் பொறாமெய் லோபமென்னும் அக்கினியா றோடிக்கொண்டேயிருப்பதும் பேராசை பேருண்டி என்னுங் குப்பைகள் வளர்ந்துக்கொண்டே யிருப்பதும், குடி, களவு, கொலை, வியபசாரம், பொய் முதலிய முட்காடுகளடர்ந்து இருப்பதேயாம். இத்தகையாய தடைகளை சாந்தம், அன்பு, ஈகை என்னும் ஆயுதங்களால் தணித்தும் அகற்றியும் வழியுண்டாக்கி நித்தியானந்தம் நித்திய சுகம், நித்திய வாழ்க்கைப் பெருவதேயாம். இப்பேரானந்த நிலைக்கே நிப்பானமென்றும் மோட்சமென்றும் முத்தியென்றும் பெயர். அந்நிலை பெற்றோர்களே கடவுளர்களென்றும் ஈசர்களென்றும் ஞானிகளென்றும் அழைக்கப் பெற்றார்கள். நான்குவகை யோனி எழுவகை தோற்றங்களில் இவர்களே சிறந்தவர்களென்னப்படும். இப்பேரானந்த சிறப்பு எவற்றால் பெற்றார் களென்னில் பலவகை துக்கங்களாலும் பிணிகளாலும் வாதையுற்று மரண மடைந்தானென்னும் பாபத்தின் சம்பளத்தைப் பெறாமலும் மாளாபிறவியிற் சுழன்று தீரா துக்கமென்னும் நிரயத்தில் வீழாமலும், புண்ணியத்தின் சம்பளம் பெற்று சதா சுக நித்திய சீவிகளானது கொண்டாம்.

தோற்றும் உருக்களில் தேவரெனத் தோற்றிய ஏழாவது தோற்றத்தோர் புளியம் பழமும், ஓடுபோலும், புழுவும் விட்டில்போலும், சுயஞ் சோதியாக மாற்றிப் பிறந்துப் பரிநிருவாணமுற்று அகண்டத்துலாவுகின்றார்கள். இதுவே சத்தியம் சத்தியமேயாம். இத்தகையாய துக்கச் செயலை ஆதியில் ஆய்ந்து கண்டவரும் அத்துக்கநிவர்த்தி அடைந்தவரும் உலகெங்கும் அப்பேரானந்த ஞானவிளக்கை ஏற்றியவரும் ஜகத்திற்கே குருவாக விளங்கியவரும் ஆதிதேவன், ஆதியங்கடவுள், ஆதிபகவன், ஆதிசிவன், ஆதியீசன் ஆதிபரமனெனக் கொண்டாடப் பெற்றவருமாகிய சித்தார்த்தி சக்கிரவர்த்தியாக தோன்றிய புத்தபிரானே ஆதலின் நமது மனமொழி மெய்களால் புத்தரையும் அவரது தன்மத்தையும் அவரது சங்கத்தையும் இடைவிடாது சிந்தித்து ஈடேறுவோமாக.

- 7:31; சனவரி 7, 1914 -

124. சர்வவியாபியில் தோன்றிய எம்.பி. மாஸ்கிரேனியஸ்

என்னுமன்பரே தேம்பாவணியையுந் தொன்னூலையுந் தாங்கள் சிறப்பித்தெழுதியுள்ளதுகண்டு தாம் கலைநூற்களோடு பல நூற்களு மாய்ந்துள்ளீரென்னு மவாவின் மிகுதியாலச் சங்கைகளை விடுத்தோமன்றி தடியெடுத்து தலையிலடிப்போர் சங்கத்தைச் சார்ந்தவரென்றறிந்திருப்போ மேலச் சங்கையை நமது பத்திரிகையில் வரைந்திருக்கமாட்டோம். ஆயினும் கூடிய சீக்கிரம் "பண்டை நூற் சேகர சங்கத்"தோரால், தேவபாணியும், தொன்னூலும் அச்சிட்டு வெளிவரும். அப்போது அவைகள் யாருடைய

சரித்திரமென்றும் யாவரால் எழுதப்பட்டனவென்றுந் தாங்களே கண்டு தெளிந்துக்கொள்ளலாம்.

- 7:33; சனவரி 21, 1914 -

125. கடிதநேயர்களுக்கறிக்கை

அன்பர்காள்! நமது பத்திரிகைக்கெழுதுங் கடிதங்கள் யாவும் பலருக்குபகாரமாகவும் அவ்வவர் சந்தேகந் தெளிந்து நன்மார்க்கத்தைப் பின்பற்றுவதாகவும் அறிவின் விருத்தி பெற்று உலகத்தில் சகசீவிகளாக உலாவுவனவாகவும் விவசாய விருத்திபெற்று சருவ சீவர்களையும் ஆதரிப் பனவாகவும், வித்தியாவிருத்திப் பெற்று தேசத்தை சிறப்பிப்பனவாகவு மிருக்குமேல் சகல மக்கள் முன்னேற்றத்திற்கும் சுதானந்தத்திற்கும் நிலையுண்டாம்.

அங்ஙனமின்றி ஓயாக்குடியர்கள் கடிதங்களுக்கும், தீராக்கோபிகள் கடிதங்களுக்கும், மாறா வஞ்ஞானிகள் கடிதங்களுக்கும், மதகர்வமே மாலையாகப் பூண்டுள்ள மந்தமதியோர் கடிதங்களுக்கும் மாறுத்திர மெழுதுவதாயின் வீணாய கலகத்திற்கும் மனத்தாங்கலுக்குமே துண்டாமன்றி ஏனையோருக்கு யாதொரு பயனுந்தராவாம். ஆதலின் அறிவிலிகளின் கடிதங்களுக்கு பிறிதொரு மாறுத்திரமும் வரையாதிருக்க வேண்டுகிறோம்.

- 7:33; சனவரி 21, 1914 -

126. சுகுணமும் அசுகுணமும்

வினா : நமது தேசத்தோர் யாதோர் காரியத்திற்கேனும் புறப்படுங்கால் பாப்பான் எதிரில் வந்தான் கைம்பெண் எதிரில் வந்தாள் அதனால் சகுனங்கெட்ட சகுனம். அக்காரியத்திற்குப் போகலாகாதென நின்று விடுகின்றார்களே அதன் விவரமென்ன.

கோ. பார்த்தசாரதி, வேலூர்.

விடை : அன்பரே! சுகுணத்தோடு செல்லுவோருக்கு சகுனம் வேண்டுவதில்லை. அசுகுணத்தோருக்கே சகுனம் வேண்டும். பாப்பா னென்னும் வேஷத்தையும் கைம்பெண்ணென்னும் வேஷத்தையும் நமது தேசத்தோரே உண்டுசெய்து வைத்துக்கொண்டார்கள். அவை யாதென்னிலோ ஓர் மனிதன் காடாவேஷ்டியைக் கீழ்ப்பாச்சாகத் தொங்க விட்டுக் கட்டிக்கொண்டு மார்பில் முப்பிரி நூலணைந்து குடிமி வைத்து குறுக்குப்பூச்சு நெடுக்கப்பூச்சு ஏதேனும் ஒன்றைப் பூசி தருப்பைப் புல்லை யேனும் பஞ்சாங்கத்தையேனும் ஓர் சொம்பையேனுங் கையிலேந்தி வெளி வருவானாயின் அவன் பெயரைப் பாப்பானென்றும் ஓர் பெண்ணிற்கு நகை முதலிய வாபரணங்களை அணையவிடாமலும் மஞ்சள் குங்குமம் பூசவிடா மலும் வெள்ளை வஸ்திரங் கட்டவைத்து தலைமயிரை சீவ விடாதேனும் மொட்டையடித்தேனும் விட்டுவிடுவார்கள். அவள் வீதியில் வருவாளாயின் அவளுக்குப் பெயர் கைம்பெண், இவ்வகையாக நமது தேசத்தோரே இவன் பாப்பான் இவள் கைம்பெண்ணென்னும் வேஷத்தை வகுத்துவிட்டு பாப்பான் வந்தால் கெட்ட சகுனம் கைம்பெண் வந்தால் கெட்ட சகுனமென்பதாயின் அவை யாருடைய சுகுணமென்று தாமே தெரிந்துக்கொள்ளலாம், ஐரோப்பிய புருஷர்களேனும் மகமதிய புருஷர்களேனும் சீன புருஷர்களேனும் பர்மிய புருஷர்களேனும் எதிரில் வருவார்களாயின் பாப்பானென்னும் ஏதொரு சகுனமுங் கூறுவரோ ஐரோப்பியப் பெண்களேனும் மகமதியப் பெண்களேனும் சீனபெண்களேனும் பர்மிய பெண்களேனும் எதிரில் வருவார்களாயின் கைம்பெண்ணென்னும் ஏதொரு சகுனமுங் கூறுவரோ கூறவே மாட்டார்கள். காரணம் அவர்களுக்குள் பாப்பான் வேஷமுங் கிடையாது கைம்பெண் வேஷமுங் கிடையாது. ஆதலின் நமது தேசத்தோர் செயல்களில் அனந்தங் கேடுகளை உண்டுசெய்துக் கொண்டிருக்கின்றார்கள். அவைகள் யாவையும் ஆய்ந்து சுகுணத்தை ஏற்று அசுகுணத்தை அகற்றவேண்டியதே அழகாம்.

- 7:37; பிப்ரவரி 18, 1914 -

127. இந்துக்களென்போர் சாதி மத சங்கை

வீ. முனிசாமியென்னுமன்பரே தாம் எழுதியுள்ள கடிதம் மிக்க விரிவாயும் வீணாய் சங்கையாயும் யாதொரு பலனுமற்றதாயுமுள்ளதுகண்டு வெளியிடாது நிறுத்தி விட்டோம். இந்து மதத்திற்கு மூலபுருஷன் யாரென்றால் ஆரிய மதமென்பார்கள், ஆரியமதத்திற்கு மூல புருஷன் யாரென்றால் அது அனாதியாயுள்ள தென்பார்கள். ஆதியாக வொன்று தோன்றியபின்னர் அனாதியென்னு மொழி தோன்றுமா, அனாதியினின்றே ஆதி தோன்றுமா வென்னில் பொய்யிற்குப் பொய் முட்டுக்கொடுப்பார்கள் பூமி அண்டவடி வாயுள்ளதால் பௌத்த சாஸ்திரங்களில் பூவண்டமென வரைந்திருக்கிறார்கள். தங்களிந்து சாஸ்திரத்திலோ ஒரு அசுரன் பூமியைப் பாயாக சுருட்டிக் கொண்டுபோய்விட்டானென்று வரைந்திருக்கின்றீர்களே அது பொருந்தும் பொய்யா, பொருந்தாப் பொய்யாவெனவுசாவில் திகைத்து நிற்பார்கள். அந்த வேஷத்தை மெய்யென நம்பியிருப்போரே கள்ளுக்கடையில் சாதியைக் காணோம், சாராயக் கடையில் சாதியைக்காணோம், கசாப்புக் கடையில் சாதியைக்காணோம், கவுச்சிக்கடையில் சாதியைக்காணோம், தாசி விடுகளில் சாதியைக்காணோம், பெரும்பாலும் இருளடைந்துவிட்டால் சாதியைக் காணோம். விடிந்து சூரியன் வெளிவந்தபின் சாதிவேஷப்பிலுக்கு மேலு மேலும் பரவுவதும் தம்மெ யொத்த மக்களைத தாழ்த்தி பேசவுமொக்கு மோவென்னில் மறுமொழி கூற வகையற்று திகைப்பார்கள். அத்தகையோர் பால் சங்கை புரிவது உமிகுத்தி கை சலிப்பதுபோலாம்.

- 7:38; பிப்ரவரி 25, 1914 -

128. விலாவெடித்துப் பிறத்தல்

வினா : ஐயனே, யான் நேற்று மாலை குஜிலுக்குச் சென்று ஓர் ஜவுளிக்கடையில் உட்கார்ந்தேன், அதன்பின் ஓர் பிரோட்டிஸ்டென்ட் பாதிரியாரும் வந்து உட்கார்ந்தார். அவர் சற்று நேரம் என்னை உற்றுப் பார்த்து நீரென்ன கிறீஸ்த்தவரோ வென்று நகைத்தார், அதற்கு நான் கிறீஸ்த்தவனல்ல பௌத்தனென்றேன் அப்போது அவர் முகம் வேறுபட்டு நீரென்ன முழு அஞ்ஞான பாலியனாயிருக்கின்றாய் புத்தனென்பவனோ ஓர் மனிதன், அவன் பெண்சாதி பிள்ளைகளுடனிருந்ததுடன் வைப்பாட்டி களுடனு மிருந்திருக்கின்றான் அவன் தாயிடம் பிறக்கும்போதே விலா வெடித்துப் பிறந்து தாயைக் கொன்றவன். கடைசியாக பன்றியினிறைச்சியைத் தின்று பேதிக் கண்டு இறந்து போனான். இந்த சங்கதிகள் யாவையும் ஒரு காசு பத்திரிகையில் பிளந்து எழுதியிருக்கின்றதே அதை நீர் காணவில்லையோ, உங்கள் தமிழன் பத்திராதிபனும் அதைப் பார்க்கவில்லையோ வென்றார். ஐயா தாங்கள் பிளந்து எழுதியுள்ளதை தமிழன் பத்திராதிபர் கண்டிருப் பாராயின் பிளந்ததெல்லாஞ் சேர்த்து கொளித்தியிருப்பார், அவர் பார்க்கவில்லைபோலும் என்றேன். இன்னும் அவருக்கு முகச்சுளிப்பு உண்டாகி ஓர் கேவலமான மனிதனை தெய்வமாகத் தொழுவோருக்கு அறிவுங்கிடையாது மோட்சமுங் கிடையாதென்று கூறியதுடன் புத்தரை தூஷித்தே பேசினார். அப்போது என்மனஞ்சகியாது தாங்களோர் பாதிரியாராயிருந்துங் கோபகுறியோடு பேசுவதால் நான் யாதேனும் பேச வஞ்சுகிறேனென்றேன் இல்லை நீர் பயமில்லாது பேசலாமென்றார். ஐயா, ஓர் தருமத்தைப் பற்றியாவது மதத்தைப் பற்றியாவது பேசவேண்டுமானால் முதலாவது அவர்களது கருத்துகளை தெரிந்து கொண்டு பேசவேண்டியது. தெரியாது பேசுவது நியாயமல்லவென்றேன். அது என்ன கருத்தென்றார். எங்கள் புத்தாகமக்கருத் தோவென்றால் மனிதனானவன் தன் அறிவை வளர்க்கும் நூல்களையேனும் போதனைகளையேனும் கேட்டு மனமாசகன்று அதாவது இதய சுத்தமுண்டாகி விடுவானாயின் அவனையே தேவனென்று கொண்டாடுவது வழக்கம் அக்கருத்தறியாமலே தாங்கள் பேசிவிட்டது நியாயமல்லவே என்றேன். ஆனால் உலகத்தை உண்டு செய்த வொரு தேவனுண்டோ யில்லையோ வென்றார்.

அவர் யாரே எனக்குத் தெரியாதென்றேன். ஆ! ஈதென்ன, பானைகளை உண்டுசெய்த ஓர் மனிதன் இருப்பானா யில்லையா வென்றார். பானைகளைச் செய்வதற்கு மண்ணானது மூலகாரண மாயிருந்தது. அது போல உலகத்தை உண்டு செய்வதற்கு எது மூலகாரணமென்றேன். அவ்வாறு தேவனைக் காணக்கூடாதென்றுதான் தேவனே கிறீஸ்துவாகப் பிறந்து மனிதர்கள் பாபத்திற்கு தன் உதிரஞ் சிந்த தன்னுயிரைக் கொடுத்து மன்னுயிர் காத்து பரலோகஞ் சென்றிருக்கின்றார். ஆதலால் அவரை நம்பினவர்களுக்குத்தான் மோட்சமுண்டு, மனிதனை நம்பினோருக்கு மோட்சமில்லைஎன்றார். கிறீஸ்துவை நம்பிய கிறீஸ்தவர்கள் பாவமெல்லாம் போய்விட்டதா என்றேன். ஆம் கிறீஸ்துவை நம்பியபோதே பாவம் போய்விட்டதாகுமென்றார். அதற்குப் பார்வைக்குறிப்பும் அநுபவமும் என்னவென்றேன். அது உலக முடிவில் தெரியுமே யல்லது இப்போது தெரியாதென்றார் அதை வற்புறுத்திச் சொல்லுவதற்குத் தாங்களெப்படி தெரிந்து கொண்டீரென்றேன் அது எங்கள் நம்பிக்கை என்றார். அவ்வகையான வீணான நம்பிக்கையை பௌத்தர்கள் நம்பமாட்டார்கள். கிறீஸ்துவானவர் பாடுபட்டாரென்பதை வொருவாறு நம்பியபோதிலும் மனிதர்கள் பாபமெல்லாம் நீங்கிப்போயிற்றென்பதை அநுபவக் காட்சியால் நம்பவேமாட்டார்கள். ஆனால் அவர் பிறந்த காலத்தில் அநுபவக் காட்சியாயுள்ளதை மட்டும் ஒன்றை சொல்லுவேன் அதாவது கிறிஸ்துவானவர் தன்னுயிரைக் கொடுத்து மன்னுயிரை ரட்சித்தாரென்று கூறினீர் தங்கள் வாக்குக்கு நேர் விரோதமாகத் தங்கள் வேத புத்தகத்திலிருக்கின்றது. அவை என்னவென்றால் கிறீஸ்துவானவர் பிறந்த போது சில சாஸ்திரிகள் அத்தேசத்தரசனிடஞ் சென்று பற்பல கற்பனைகளைக் கூற அவனதை மெய்யென்று நம்பி இக் குழந்தையைக் கொல்லுவதற்காக அத்தேசத்திலுள்ள மனுக்களின் இரண்டு வருடத்திற்குட்பட்டு அப்போது பிறந்துள்ளக் குழந்தைகள் யாவையுங் கொல்லும்படி உத்திரவளித்துவிட்டான். அப்போது கிறீஸ்துவென்னுங் குழந்தையைமட்டிலும் வேறு தேசங்கொண்டு போய் மறைத்துவிட்டார்கள் அத்தேசத்தின் வீடுகடோருந் தவிழ்ந்து விளையாடுங் குழந்தைகள் யாவற்றையுந் துடிக்கத் துடிக்கக் கொல்லுங்கால் பெற்றோரும் பிறந்தோரும் மற்றோரும் எவ்வகையாக வுடல் பதரவும் நாக்கதரவுந் துக்கங்கொண்டாடியிருப்பார்கள். வீட்டுக்கோர் பெரிய மனிதனைக் கொல்லும்படி உத்திரவு கொடுத்திருந்தால் அவ்வாறு துக்கமிருக்காதே. பாலுண்ணுங் குழந்தைகளையெல்லாம் பதைக்க பதைக்க வதைக்குங்கால் அத்தேசத்தோர் யாவரும் எவ்வகையான பரிதாப நிலையிலிருந்திருப்பார்கள் என்பதைத் தாங்களே தெரிந்துக் கொள்ளல் வேண்டும். இதனால் தங்கள் வேதத்தில் எழுதுயுள்ளபடி தன்னுயிரை ரட்சித்துக் கொண்டு மன்னுயிர்களை சிட்சித்ததே அநுபவமுங் காட்சியு மென்னப்படும். இவ்வகையன்றி தன்னுயிரைக் கொடுத்து மன்னுயிரை ரட்சித்தாரென்பதற்கு தகுந்த வனுபவமுங் காட்சியுங் கொடுப்பீராயின் யான் தங்களைப் பின்பற்றுவதற்கு ஆட்சேபனையில்லை என்றேன். உடனே அவர் சீறி நீங்கள் பொய் பல்லை வைத்துக் கும்பிடுகிறவர்கள் உங்களுக்கு வொன்றுந் தெரியாதென்று கூறி கடையில் கால் பீசு லாங்கிளாத் வாங்கிக் கொண்டு போய்விட்டார். அவரிவ்வகை அவமரியாதையான வார்த்தைகள் பேசியவை யாவும் தன் பொறாமெயாலும் பற்கடிப்பாலும் பேசினாரென்று யான் தெரிந்துகொண்ட போதிலும் புத்தர் விலாவெடித்துப் பிறந்தாரென்று வோர் பாட்டு சொன்னார். அவ்வகையான நமது பௌத்த தர்மத்திலேயே தேனுங் கூறப்பட்டிருக்கின்றதா ஏதோ ஒரு காசு பத்திரிகையில் பௌத்தர்களைக் கண்டித்து விட்டதாகவுங் கூறினார். அப்பத்திரிகைத் தங்களுக்குக் கிடைத்திருக்கின்றதா. அது கிடைத்திருக்குமாயின் அதை நமது பத்திரிகையில் வெளியிட்டு அச்சங்கையைத் தெளிவித்து விடுவதுடன் விலாவெடித்துப் பிறந்த சங்கையையும் விளக்கி யாட்கொள்ளும்படி வேண்டுகின்றேன்.

வே. தனபால், இராயபுரம்.

விடை : அன்பரே, தாம் வினாவிய சங்கை வீணதாயினும் அப்போதகர் தனது விசாரிணைக்குறைவாலும் அவிவேக நிறைவாலும் உலகெங்கும் நிறைந்துள்ள மனுமக்களின் அரையே அரைக்கால் பாக மக்கள் ஆனந்தமாகக் கொண்டாடி வரும் அருகக்கடவுளாம். புத்தபிரானை அவமறியாதையாயவர் கூறிய போதினும் தாமப்பேதை மொழிகளை மன்னித்து அன்னோர் தெய்வப்பெயரை மறியாதையுடன் கூறி ஆய சங்கையை வினாவியது மிக்க வானந்தமும் பௌத்தர்களது வறி குறியுமிதுவேயாம்.

அவை யாதென்னிலோ தற்கால மிவ்விந்திய தேசத்துள் தோன்றியுள்ள மதங்களும் ஓர் மனிதன் தலையின் மயிரை வெட்டிக்கொண்டு குல்லாமாட்டி நெற்றியிலேதொன்றும் பூசாதிருப்பானாயின் அவனைக் கிறீஸ்து மதத்தோனென்றும், நெற்றியில் சாம்பலைப் பூசியிருப்பானாயின் சைவ மதத்தோனென்றும் நெற்றியில் சிவப்பும் வெள்ளையுங் கலந்த வருணத்தைப் பூசிக்கொள்ளுவானாயின் வைணவ மதத்தோனென்று மோரறிகுறிக் கண்டுக் கொள்ளுவது இயல்பாம்.

பௌத்தர்களுக்கோ மதமென்னும் பெயருங் கிடையாது அறிகுறியாக வோர் சின்னமுங் கிடையாது புத்தரது தன்மத்தைப் பின்பற்றியவர்களாதலின் பௌத்தர்களென்னும் பொதுப் பெயரும் சாந்தம், அமைதி, நிதானம், நியாயவாதம் பயனுள்ள வார்த்தை பேசல், சகலருக்கும் பயன்படுஞ் செயலை யேற்றல் பயன்படாச் செயலை யகற்றலாய வறிகுறிகளே பௌத்தர்களது அடையாளமாகும். அதை அனுசரித்தே தாமும் வாதிட்டுளது தருக்க சாங்கிரமமாகும்.

புத்தர் விலாவெடித்துப் பிறந்தாரென்னுங் கூற்று போலிமதத்தர் பிரளியேயாகும் அதாவது புத்தமென்பது மகட பாஷா மொழி, சத்தியமென்பது சகட பாஷாமொழி, இதனையே மகட பாஷையில் புத்ததம்மாவென்றும், சகட பாஷையில் சத்தியதருமமென்றும், திராவிட பாஷையில் மெய்யறமென்றுங் கூறப்படும் இம் மெய்யறத்தைப் பற்றினோன், எத்தேச வெப்பாஷைக் காரணாயினும் அவன் புறம்பாய பொய்கள் யாவையு மகற்றி உண்மெயைக் கண்டடைவானாயின் அவனையே புத்தனென்று கூறப்படும் இதுவே புத்ததன்ம கருத்தாம்.

போலி மதத்தோர் கருத்தோ வென்னில், புத்தரென்றால் ஓரவதாரமாகப் பிறப்பவர்கள் என்றும், தாயின் விலாவெடித்துப் பிறப்பதில் வாழையானது காயை ஈன்றவுடன் மடிவதுபோலும், தேளானது குஞ்சு பொரித்தவுடன் மடிவது போலும், புத்தர்கள் பிறந்தவுடன் தாய் இறந்துபோவதியல்பென்று சில கற்பனா கதைகளை ஏற்படுத்தி போலிக்கவிகளையும் பாடி வைத்திருக்கின்றார்கள். அக்கதை புத்தரை சிறப்புப்படுத்துவதுபோல் கூறி தாழ்ச்சி செய்வதற்கேயாம். அதாவது புத்த பிரானால் அஹிம்ஸாதன்மத்தையே வற்புறுத்திக் கூறி அன்பைப் பரவச் செய்தவராதலின் அத்தன்மத்தை பௌத்தர்கள் சிறக்கக் கூறி பசுமாடுகளை நெருப்பிலிட்டுச் சுட்டுத் தின்னும் மதத்தோரைக் கண்டிப்பார்களாயின் உங்கள் புத்தர் பிறக்கும்போதே தாயின் விலாவெடித்துக் கொன்றவர்தானே என்று தாழ்ச்சி செய்தற்கு அக்கற்பனா கதையை உண்டு செய்து வைத்திருக்கின்றார்களன்றி சித்தார்த்தி சக்கிரவர்த்தி யாருற்பவகாதையிலஃது கிடையவே கிடையாவாம்.

ஒரு காசு பத்திரிகையில் புத்தரைக் கண்டித்துள்ளவற்றை யாம் கண்டோமில்லை கிடைக்கு மேலச்சங்கைகளை விளக்குவோமாக.

- 7:40; மார்ச் 11, 1914 -

129. அவதாரம்

வினா : வைஷ்ணவர்களென்னுமோர் கூட்டத்தார் விஷ்ணு வென்னுந்தேவன் வீரபோக வசந்தராயராக அவதாரமெடுத்துவிட்டா ரென்றும், எடுக்கப்போகிறார் என்றும், 10வது கலிக்காவதாரம் எடுப்பா ரென்றும் வாய்க் கூச்சலிட்டு திரிகின்றனர். கிறீஸ்தவர்களென்னுங் கூட்டத்தார் மேசியா வருவார், மேசியா வருவார் என பிரசங்கித்து வருகின்றனர். மஹமதியர் என்போரும்

இத்தகையக் கொள்ளையை மேற்கொண்டுளர். இக்கொள்கையுடையோ ரெல்லாம் இலவு காக்கும் கிள்ளைகளென்றே கூறலாம். ஆனால் பௌத்தர் களோ விசாரித்துத் தெளிய வேண்டியவர்களாதலின் 'புத்தர்' பரிநிப்பாணமுற்ற 3000 ஆண்டுகட்குப்பிறகு மைத்திரேய புத்தராக அவதரிக்கப்போகிறார் என கேள்விப்பட்டேன். ஏழாம் தோற்றமாகும் தேவகதியுற்றோர் மீண்டு மவனியிற் பிறவாறென, பௌத்த நூலாகிய சீவகசிந்தாமணி யுட்போதரும்,

"திருவிற் பொற்குலாவு தேர்ந்தார் தேவர் தன் தண்மெய் செப்பிற்
கருவத்து சென்று தோன்றார் காநிலந் தோய்தல் செல்லார்
உருவமே லெழுதலாகா வொளியுமிழ்ந் திலங்குமேனி
பருதியினி யன்றதொக்கும் பன்மலர் கண்ணிவாடா."

என்னும் பாடலால் பரிஷ்காரமாய் விளங்குகிறதாயினும் தங்களைக் கொண்டே தெளிந்துக் கொள்ள வேண்டுமென்பதென் அவாவாகலின் கிருபை பாலித்து விளக்குவீராக.

பி.எம். ராஜரத்தினம், சாம்பியன் ரீப்ஸ்

விடை : அன்பரே தாமு சாவியுள்ள சங்கை அஞ்ஞானிகளுக் குரியதேயன்றி ஞானிகளுக்குரியதன்றாம். ஓர் மனிதன் இராகத்து வேஷமோக மென்னுங் காம வெகுளி மயக்கமற்று தேவனிலையாம் நிருவாணம் பெறுவதே மிக்க கஷ்டமாம். அத்தகைய தேவநிலையாம் ஏழாவது தோற்றத்தினின்று புழுவாகத் தோன்றி விட்டிலாகப் பரந்துவிடுவது போல் தேகத்தினின்று ஒளிமய வுருவாய் மாற்றிப் பிறப்பது அதனினுங்கஷ்டமாம். அநித்தியத் தினின்று நித்தியம் பெற்றவர்களும் துக்கத்தை நீக்கி சுகத்திலிருப்பவர்களும் மரணத்தை வென்று பிறப்பற்றவர்களுமானோர் மறுபடியும் பிறப்பதற்கேனும் தோற்றுவதற் கேனும் ஏது கிடையாவாம். தோற்றத்திலுண்டாய கஷ்டம் அவரவர்களுக்கே விளங்கியுள்ளதால் மீண்டுமுலகத்தில் தோற்றி மிக்கதுக்கத் திற்காளாக மாட்டார்கள் என்பது துணிபு.

ஞானிகளோ மனமாசகன்று கருணாகர நிலையுற்று கடந்த ஞானிகளைக் கண்டு களித்தே நிற்பர். அஞ்ஞானிகளோ தங்கள் தேவன் வருவார் வருவாரென்று சொல்லிக்கொண்டே மாள்வர். இதுவே யநுபவமுங் காட்சியுமாதலின் அத்தகையோர் படாடம்பமொழிகளை செவிகளில் நுழையவிடாது தங்களுள் அவதரிக்கும் பேராசை, கோபங், காமம், டம்பம், வஞ்சின முதலியவைகளை அவதரிக்கவிடாமல் நசித்து சாந்தம் அன்பு யீகையாம் உண்மெய்யில் அவதரிப்பீரேல் உம்மெயும் ஓர் புத்தர் தோன்றினாரென்றே கொண்டாடுவார்கள். இதுவே தோன்றும் புத்தர்கள் நிலையாம்.

- 7:43; ஏப்ரல் 1, 1914 -

130. பாஷாணங்களின் முறிவு

தேவரீர் தமிழன் பத்திராதிபராகிய பண்டித பெருமானே, யான் சென்னையிலிருக்குங்கால் தங்களால் நீலகிரியிலிருந்து உவாந்திபேதியின் உற்பவமும் அதன் சிகிட்சையும் கண்டு வெளியிட்டிருந்த நோட்டிசு எனக்குக் கிடைத்து. அதை சின்னையா பண்டிதரிடமும் முத்திருளு பண்டிதரிடமும் காண்பித்துப் பேசிக்கொண்டிருந்தபோது அவர்கள் தங்களைப் பற்றிக் கூறியதாவது: தங்கள் தலைமுறை தலைமுயையாக வயித்தியத்தை நாடாத்திவருகின்றவர்களென்றும் பழைய சாஸ்திரங்கள் பலதும் அவர் களிடம் உண்டென்றும் தங்கள் தகப்பனார் உத்தியோகஞ் செய்துகொண்டே பச்சைக் கற்பூரம் பூநீலம் சோபு முதலியதும் மயிலாப்பூரில் தங்கி செய்து வந்ததாகவும் சிறப்பித்துப் பேசினார்கள். ஆயினும் யான் தங்களை தரிசித்தது கிடையாது. இத்திருவனந்தபுரம் வள்ளுவநாட்டில் வந்து சேர்ந்து முப்பது வருஷகாலமாக வைத்திய சீவனத்தினாலேயே சீவித்து வருறேன். ஆயினும் இந்தியதேச வைத்திய சிறப்பைப்பற்றி தமிழன் பத்திரிகையிலெழுதியுள்ளதை சென்னையினின்று வந்தவன்பர் ஒருவர் காண்பித்தத்தைக் கண்டு மிக்க வானந்தமடைந்ததுடன் எனக்கு நெடுநாள் தெரியாதிருக்கும் பாஷாணங்களின் முறிவைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்னு மாசை வெகுவாகத் தோன்றியது.

நானித்தேசத்தில் பெரும்பாலும் மூலிகை வர்க்கங்களை கையாடி வருகின்றேனன்றி இரச பாஷாணங்களைக் கையாடுவது கிடையாது. ஆயினும் வைத்தியர்களுக்கு அவைகள் தெரிந்திருக்க வேண்டியது முக்கிய மாதலால் தங்களாலவைகளைத் தெரிவிக்கக் கூடுமென்னுந் திட சித்தத்தால் இக் கடிதமெழுதலானேன். அவற்றைப் பயிரங்கமாக பத்திரிகையிலெழுத மனமிராவிடினும் கடிதத்திலேனு மெழுதி என்பரிகாரச் செயலை விருத்தி செய்யவேண்டும்.

வீ.முனியாண்டி பரிகாரி, திருவனந்தபுரம்.

விடை : வைத்தியனாக வெளிவந்தபோது அதற்காய மூலிகை குணா குணங்களையும் உபரச குணாகுணங்களையும் பாஷாண குணா குணங்களையும் ஆய்ந்து செய்யவேண்டியதேயழகாம். வைத்திய நூற்கள் யாவும் ஆதியில் பௌத்தர்களாலேயே வரைந்து வைத்துள்ளவைகளாகும். அவ்வகைக் கருணைகொண்டு அவர்களெழுதியவையாவும் சகல மனுக்களுக்கும் உபயோகமாகும் பொருட்டு எழுதிவைத்துள்ளாரன்றி மூடுமந்திர மொன்றுங் கிடையாவாம்.

அத்தகைய உபகாரமாய சங்கையைப் பலருக்கும் உபகாரமாகப் பத்திரிகையில் வரைவதே பெரும்பயனாதலின் இவ்விடம் வரையலானோம். தாம் மூலிகை வர்க்கங்களையே பெரும்பாலும் கையாடுகிறேன், பாஷாண வர்க்கங் கிடையாதென வரைந்துள்ளவை மிக்க வியப்பாகவிருக்கின்றது. ஏனென்பீரேல் மூலிகைகளினிடத்தும் விஷமுண்டு அவைகளையுமாய்ந்து செய்ய வேண்டியதே வைத்தியர்கள் செயலாம்.

அதாவது எள்ளு, முருங்கைவேர், இஞ்சி, சுக்கு, முன்னைவேர், வில்வவேர், பாதிரிவேர், இவைகளின் மேல் தோல்விஷம், உள்ளுருவை மருந்திற்கு உபயோகிக்கலாம், சித்திர மூலத்தின் உள்வேர் விஷம் மேல்பட்டையை மருந்துகளுக்கு உபயோகிக்கலாம், அலரியின் வேர், மேற்றோல் உள்ளும் புறமும் விஷமாம், தான்றிக்காய் மேல்தோல் மருந்துக்கு உபயோகிக்கலாம் அதனுட்கொட்டை விஷமாம்.

முறிவுகளை விளக்குவாம். பாஷாணங்களில் கௌரி, தொட்டி, வெள்ளை தீமிரிக்கு முதலியவை தனி விஷங்களாகும். வீரம், பூரம், இலிங்க முதலியவை இரசபாஷாண சம்பந்த முடையதாகும். இவற்றுள் கௌரி, தொட்டி, வெள்ளை, தீமுரிக்கு முதலிய பாஷாணங்களுக்கு பச்சைக் கடலை அல்லது அவுரி வேர், மிளகு, இவைகளிலொன்றைக் கியாழமிட்டுக் கொடுத்து வர முறிந்துபோகும். கோழி முட்டையின் வெள்ளைக் கருவை மட்டிலுமோர் பாத்திரத்திலிட்டு சிறு குச்சிகள் கொண்டு நன்றாய் சிலுப்பி பசும்பாலில் கலந்து குடுத்துவர முறியும். வீரம், பூரம், இலிங்க முதலியரச பாஷாணங்களுக்கு, நெல்லிகந்தகத்தை வெண்ணெயிலிழைத்துக் கொடுப்பதே முக்கிய முறிவாயினும் இளநீர் வழுக்கையை வுள்ளுக்குக் கொடுத்து வருவது மிக்கசுகமாம்.

அலரிக்கு - கடுக்காய் கியாழமுறிவு, எருக்கஞ்செடி, அதன்பால், வேருக்கு எள்ளுஞ் சருக்கரையு முறிவு, எட்டிக்கு, நாவல் பட்டை அதாவது நாகப்பட்டைரச முறிவு, கள்ளிக்கு ஆவாரம்பட்டைக் கியாழமுறிவு, வெண் நாபிக்கு தான்றிக்காய் கியாழமுறிவு, ஊமத்தைக்கு தாமரைக்கிழங்கு முறிவு, சுண்ணாம்பிற்கு மாங்கொட்டைப் பருப்பு அல்லது மஞ்சள் முறிவு, குன்றிவேருக்கு வெண்கார முறிவு, நேர்வாளம் அல்லது நேபாளவித்து, னந்திவிதை யென வழங்கும் பேதிவிதைக்கு வசம்பு முறிவு, நல்லெண்ணெய்க்கு முற்றின தேங்காய்ப் பால் முறிவு, சருக்கரைக்கு விலாமிச்சவேர் முறிவு, வாழைப்பழத்திற்கு சுக்குக் கியாழ முறிவு, பலாபழத்திற்கு நெய்யும் இள வெந்நீரும் முறிவு, மாங்காயிற்குத் தேங்காய்பால் முறிவு, இவைகள் யாவையும் சற்றாய்ந்து மனுக்களது தேகபலம் மருந்து பலமறிந்து செய்வதே வைத்தியர்க்கழகாம். ஏனென்பீரேல் வியாதியஸ்த்தன் தனக்குண்டாய பிணியின் உபத்திரவத்தைச் சகிக்கவியலாது வைத்தியனையோர் தெய்வம் போலெண்ணி தேகத்தை வொப்பிவிக்கின்றான் அவனுக்குள்ள வியாதிக்குத் தகுதியாக மருந்தைக்

கொடுத்து சுகஞ் செய்யாவிட்டாலும் பெரிதல்ல. அவனுக்கின்னும் வியாதியதிகரித்து துன்பப்படும்படியான மருந்துகளைக் கொடுத்து விடுவதாயின் அத்தீவினை வைத்தியனையே சார்ந்து கெடுப்பதுடன் அவனது தன்மச் செயலுக்கு மாறு பெயருண்டாகிப்போம் ஆதலின் கன்ம காண்டமாய்ந்து கருத்துடன் வைத்தியஞ் செய்யவேண்டியதேயாம். பணத்தாசையால் பலமருந்துகளைக் கொடுத்துக் கெடுப்பதால் தனக்குத் தீவினைதோன்றி கெடுவதுடன் பூர்வவைத்திய சிறப்புங் குன்றிப்போம் தெரிந்து செய்க.

- 7:45; ஏப்ரல் 15, 1914 -

131. மனுதன்ம சாஸ்திரம்

அதாவது மனுதன்ம சாஸ்திரமென்னும் ஒரு புத்தகமிருக்க அதை யான் வாசித்ததில், யாதொருமொரு சூத்திரன் மோட்சம் பெறவேண்டு மானாலும் அல்லது நன்னிலைமைக்கு வரவேண்டுமானாலும், தற்காலம் பிராமணரென்று பெயர் வழங்கி வருகின்றவர்களையே சரணமாகக் கொண்டால், மேற்படி பலன்களை அனுபவிப்பானென்று வரைந்திருக்கிறது.

ஒரு மனிதன் மற்றொரு நல்லொழுக்கம், நற்போதனையுடையவரை அடுத்து, அவருடைய நற்போதனைகளைக் கற்று அதன்படி நடப்பானேயாகில் அதனாலுண்டாகும் நல்ல பலன்களையும், அப்படி நடவாவிடில் தீய பலன்களையும் அனுபவிக்கிறது உலக அனுபவமாயிருக்க; நூதன பிராமண ஜாதிகள் இரந்துண்டே ஜீவனஞ் செய்யவேண்டியதென்று மேற்படி சாஸ்திரவிதமிருக்க, அப்பேர்க்கொற்றவர்களைச் சாருகிறவன், தானும் இரந்துண்ணுந் தொழிலுக்கு வருவதுலகவனுபவ மாயிருக்க, மேற்கூறிய மோட்சமும், நன்னிலையுமொருவன் அவாளால் அடைவதெப்படி?

இப்படி நீதியில்லாததும், நியாயத்திற்கு ஒத்தில்லாததும், உலக அனுபவத்திற்கு முறண்பாடாயுள்ள போதனைகளைப் புகட்டக்கூடியது சாஸ்திரமாகுமா? இப்பேர்பட்ட நூலுக்கு மனுதன்ம சாஸ்திரமென்று பெயரிடவாகுமா? அல்லது அப்பெயரை நாவினாலு முச்சரிக்கலாகுமா?

சு.நா.சுந்தர முதலியார். இரங்கூன்.

விடை : தமது சங்கையிலுள்ள மநுதன்ம சாஸ்திரமானது ஒரு கூட்டத்தோர் தங்கள் சுயப்பிரயோசனத்திற்கென்று நூதனமாக ஏற்படுத்திக் கொண்ட நூலேயன்றி பொது நலங் கருதிய முந்நூலன்றாம். அவற்றிற் கூறியுள்ள சாதிகளெவரேனுந் தற்காலமுளரா. அவற்றிற் கூறியுள்ள விதியின்படி நடப்போருமுளரா இல்லை. அதுகண்டு பிராமணனொருவன் இருக் கின்றானென் றெண்ணுவதில் யாது பயன். தீண்டப்படாத பறையனென் றழைக்கப் படுவோனிடம் பிராமணனெ உயர்த்திக் கொண்டோன் ஊழியஞ் செய்கின்றான். அதனால் பிராமணனே ஒருவனை உயர்த்திக் கொண்டு சூத்திரனென ஒருவனைத் தாழ்த்திக்கொண்டு சங்கிப்பதிற் பயனில்லை. பிராமணன் சூத்திரனென்னும் பெயரையே பற்றற மறந்து மனிதர்களையே மனிதர்களாக பாவித்து ஒழுக்கத்திலும் சீலத்திலும் நிலைத்து தாங்கள் முன்னேறுவதுடன் தங்கள் சந்ததியோர்களையும் முன்னேற்றுவிக்கும் முயற்சியில் முனைவீராக.

- 7:45; ஏப்ரல் 15, 1914 -

132. இந்து என்னும் மொழி

வினா : இந்துவென்னு மொழி எக்காலத்தில் யாவரால் தோன்றி யது, சிவமதம் விஷ்ணுமதம் வேதாந்தமதமென்பது எக்காலத்தில் தோன்றியது அவைகளை யாக்கியோன்களாம் மூல புருஷர்கள் யார். சிவனென்னு மொழியும் சைவனென்னு மொழியும் பூர்வ பௌத்தர்களால் தோன்றியதா அன்றேல் மூல புருஷனற்ற நூதன இந்துக்களால் தோன்றியதா, விஷ்ணுவென்னு மொழி பூர்வ பௌத்தர்களால் தோன்றியதா அன்றேல் இந்துக்களால் தோன்றியதா, வேதாந்தம், பிரமம், ஆன்மமென்னு மொழிகள் பூர்வ பௌத்தர்களால் தோன்றியதா, அன்றேல் இந்துக்களால் தோன்றியதா, கடவுளென்னு மொழியும்

சாமியென்னு மொழியும் பூர்வ பௌத்தர்களால் தோன்றியதா, அன்றேல் இந்துக்களால் தோன்றியதா, என்பதை நூலாதாரத்துடன் பொருந்திய பொருளுடனும் அமைந்தவனுபவத்துடனும் தருக்கசங்கிரமத்துடன் தெளிந்துக் கொள்ளவேண்டும் என்பதே எமதாவல்.

மா.பாலசுந்திரன், சேலம்.

விடை : தாம் வினாவியுள்ள சங்கைகளிலனந்த வற்றிற்கு நமது பத்திரிகையில் விளக்கங் கூறியுள்ளோம், ஆயினுந் தாம் தருக்க சங்கிரமத்துடன் வினாவியுள்ளதால் தருக்கம் மூவகையாக நிகழும். கொட்டை முந்தியதோ பனை முந்தியதோ வென்னும் வினாவிற்கு எக்கொட்டைக் கொப்பனை யென்னும் எதிர்வினாத்தோன்றும், செத்தோன் பிறப்பானோ பிறவானோ வென்னும் வினாவிற்கு வனமகனோ இனமகனோ வென்று மெதிர்வினாத் தோன்றும், ஆகாயப்பூ பழயதோ புதியதோவென்னும் வினாவிற்கு எதிர் வினாவுமின்றி விடையுமன்றி மௌனமே நிலையாகும் இத்தகைய தருக்க நீதியில் தமது இந்துவென்னு மொழிக்கு அவற்றின் மொழி முதல் தோற்றமெவை யென்னு மெதிர்வினாத் தோன்றும். அத்தகைய எதிர்வினாத் தோற்றவிடாது இந்துவென்னு மொழிமுதற் பொருளையுமவை யாவரால் தோற்றிய வென்பதையும் இவ்விடம் விளக்குவாம். மிலேச்சர், மிலைச்சரென்னு மொழி ஆரியரென மாறியதுபோல இன், இனா, இன்டி யென்னு மொழி இந்து வெனமாறி வழங்கலாயிற்று அம்மொழியும் அக் கூட்டத்தோர் செயல்களுக்குத் தக்கவாறு பௌத்தர்களாலளித்த பெயர்களேயாம்,

சிவமதமென்பதும் விஷ்ணுமதமென்பதும் வேதாந்தமதமென்பதும் பொருள் கெட்டு ஐந்நூறு வருடங்களுக்குப் பின்னரே தோன்றிதாகும். இ வற்றுள் சிவமத ஆக்கியோன் மத்துவாச்சாரி நீலகண்ட சிவாச்சாரி இவ் விருவரேயாவர் விஷ்ணுமத ஆக்கியோன் இராமானுஜச்சாரியரேயாவர் வேதாந்தமத ஆக்கியோன் சங்கராச்சாரியே யென்பர்.

பாலிபாஷையில் சிவமென்னு மொழிக்கு அன்பென்னும் பொருளும், சைவமென்னு மொழிக்கு தன்னை யறிதலென்னும் பொருளுமமைந்துள்ளதை பாலி நிகண்டிற் காண்க.

அவற்றையே தமிழில் திருமூலர் கூறியுள்ளதாவது :-

அன்பும் சிவமு மிரண்டென்ப றவிலார்; அன்பே சிவமாவ தியாருமறிகிலார்.

அகப்பேசித்தர்

"சைவமாருக்கடி யகப்பே தன்னை யறிந்தவர்க்கே / சைவமானவிட மகப்பே தானாக நின்றதடி"

சிவமென்னு மொழியே சிவன் என்னும் ஆண்பால் விகுதியாகத் தோன்றியவற்றிற்கு காரணம் யாதென்னிலோ புத்தபிரான் அன்பே ஓர் உரு கொண்டு தனது சங்கங்கள் யாவற்றிற்கும் அன்பை வளர்க்கும் வழிவகைகளைப் போதித்துவந்த போதனையைக் கொண்டு அவருக்குள்ள அளவுபடா அன்பினைக் கண்டும் அவருக்குச் சிவனென்னும் பெயரை அளித்ததுடன் சிவகதி நாயகனென்றும் வழங்கி வந்தார்கள் இச்சிவமென்னு மொழியும் சைவமென்னு மொழியும் பௌத்தர்களால் தோன்றியவைகளேயாம்.

அறநெறிச்சாரம்

"அவன் கொலிவன் கொலென்றையப்படாதே / சிவன்கண்ணே செய்மின் கண்சிந்தை - சிவன் றானும், நின்று கால்சீக்கு நிகரிகழும் பிண்டிக்கீழ் / வென்றிச்சீர் முக்குடையான் வேந்து."

சிலப்பதிகாரம்

சினவறற்றேவன் சிவகதி நாயகன்

விஷ்ணுவென்னு மொழி கல்லையே சிலாரூபமாகக் கொண்டு கல்லையே பீடமாகக் கொண்டுள்ளவற்றிற்கு விட்டோ விட்டோ போவென்னு மொழியையே விட்டுணு விஷ்ணுவென வழங்கலாயினர். ஜலக்கிரீடினன் கிரிட்டின னென்னு மொழியே கிருட்டன் கிருஷ்ணனென வழங்குவதுபோலாம். இவை தற்கால இந்துக்களென்போரால் தோற்றிய மொழியே யாம்.

வேதாந்தமென்பது வேதமொழிகளின் உட்பொருள் நுட்பங்களை விளக்கும் வேத முடிபுரையாம் வேத அந்தம், உபநிட்சயார்த்தம். உபநிடத

மென்றும் வழங்கும் மொழி முதல் முடிவுக்கே வேதாந்தமென்றுங் கூறப்படும். இவ்வேதாந்தங்களே முப்பத்திரண்டென வழங்குவர்.

உபநிடதவுரை

"இருளகற்றுநால் வேதத்துபநிடத மெண்ணான்கி னெங்கோன் சொன்ன / பொருளதனை நெஞ்சகத்தே சௌபாக்ய குருவென்னும் பொருளினோடு / மருளகற்றும் படியமுத்தித் தமிழ்போலு மதனையொரு வழியெண்ணான்கா / யருளகத்தி லிருந்துரைத்த வதியசமே வதிசயமற்றறிகிலேனே."

வேத அந்தமே வேதாந்தமென விரிந்துள்ளவற்றை புத்தரது ஆதி வேதத்திற்காண்க.

பிரமமென்பது மண்ணிற்குமோர் பெயராம் மண்ணானதை பலவாறு கொத்தி பழுக வழுகக் கலக்கி பாழ்படுத்தினும் நன்செயலாம் தானிய விருத்தியின் பயனையே அளித்து சீவர்களை ரட்சிப்பதுபோல ஓர் மனிதனைப் பலவகையாயத் துன்பங்களைச் செய்தபோதிலும் தானே தான் தீண்மெயுற்ற சாந்தநிறைவால் சகலருக்கும் நன்மெபுரிந்து நல்வாய்மெ யூட்டுவானாயின் அவனையோர் பிரமமென்றழைப்பர். இத்தகைய பிரமமென்னும் பெயரை ஆதியிலளிக்கப் பெற்றவர் புத்தரேயாவர்.

பின்கலை நிகண்டு

"பிரமன் மேதினி சிறந்தோன் பிதாமகன் பிதாவிதாதா."

மணிமேகலை

பிரமதரு மன்றா மெனக்குருளிய.

ஆன்மன் ஆத்துமமென்னு மொழியோவென்னில் வேற்றுமெ நயத்தால் உடலுயிரென வழங்கினும் ஒற்றுமெ நயத்தால் மகட பாஷையில் ஆன்மன் ஆத்துமனென்றும், சகட பாஷையில் புருஷன் புருடனென்றும், திராவிட பாஷையில் மநுடன், மனிதனென்றும் வழங்கப்படும். இம்மநுடனே மனமாசகன்று நிருவாண மடைவானாயின் அநான்மனென்றும் அத்துவிதி யென்றுங் கூறப்படும்.

மணிமேகலை

அநித்தந்துக்க மநான்மா வசுசியெனத் / தனித்துப்பார்த்துப் பற்றறுத்திடுதன்.

இவ்வேதாந்தம், பிரமம், ஆன்மமென்னு மும்மொழிகளும் பௌத்தர் களால் வரைந்துள்ள மொழிகளேயோம்.

கடவுளென்னு மொழியின் பொருளோ நன்மெ சொருபியென்னப்படும் ஆதியினின்று தோன்றிவரும் மனித கூட்டங்களில் புத்தரொருவரே சகல நன்மெ சொரூபியாக விளங்கியபடியால் அவரை ஆதியங் கடவுளென்று சிந்தித்து வந்தார்கள்.

சாமியென்பது சகல பற்றுக்களுமற்று சுயம்பிரகாசமாய் ஒளிதரும் பரிநிருவாணத்தின் பெயராம், இப்பெயரும் புத்தபிரானுக்குரிய ஆயிரநாமங்களில் பரிபூரண வானந்த நிலையின் பரிபக்குவ காலக்குறிப்பென்னப்படும்.

பின்கலை நிகண்டு

"ஆத்தன் குற்ங்களில்லான் சோகமர் கடவுளாதன் / சாத்தன் வேதாந்தநாதன் சமியனாமயன் சயம்பு நீத்தவன் பிதாவிதாதா நிரம்பரன னந்தஞானி / தீர்த்தன் மால்பகவன் சாமி சீபதி சீமான் செய்யோன்."

மணிமேகலை

கடவுள் பீடிகைகண்டு கைதொழுது,

சூளாமணி

ஆதியங் கடவுளை யருமறை பயந்தனை / போதியங் கிழவனை பூமிசை யொதிங்கினை
போதியங் கிழவனை பூமிசை யொதிங்கிய / சேதியென் செல்வநின் திருவடி வணங்கினம்.

சீவகசிந்தாமணி

"பான்மிடை யமுர்தம் போன்று பருகலாம் பயத்தவாகி / வானிடை முழக்கிற்கூறி வாலறவதமுதமூட்டி தேனுடை மலர்கட்சிந்தி திசை தொழ சென்றபின்னாட் / டானுடை யுலகங்கொள்ள சாமி நாள் சார்ந்ததன்றே"

இக்கடவுளென்னும் பெயரும் சாமியென்னும் பெயரும் பௌத்தர்களால் வரைந்துள்ளப் பெயர்களேயாம். இப்பெயர்களைக் கொண்டே நூதன சமயாச்சாரிகள் மதக்கடைப் பரப்பி பட்டிப்புத்தகங்களாம் பொய்ப் புராணங்களை வரைந்து பொருள் பரித்து சீவிக்கின்றார்கள். அவைகள் யாவையுந் தெளிவு பெற விசாரிக்கில் விளங்கிப்போம்.

- 7:45; ஏப்ரல் 15, 1914 -

133. காட்டுமிராண்டிகளுக்குக் கூட்டு மிராண்டியாகத் தோன்றிய வேதத்தையே வாசிக்க வுத்திரவில்லா சூத்திரமிராண்டியின் அறிவிப்புப் பத்திரங்கண்டோம்.

பௌத்த சோதிரர்காள் நமது ஆதிவேதமானது சென்னை தத்துவ விசார சங்கத்தோரால் நன்குமதிக்கலுற்று நற்சாட்சிபத்திரம் பெற்றிருப் பதுடன் இலண்டனிலுள்ள வாசித்த நிபுணர்களும் சென்னையிலுள்ளக் கல்வி களஞ்சியங்களுமாகிய பெரியோர்களாலும் ஆமோதிக்கப் பெற்றுலாவு கின்றது. அவற்றைப் பெரும்பாலும் வாங்கி வாசிப்போரெல்லாம் கலைவல்லோரும் இலக்கண வித்துவான்களுமேயாவர் அத்தகைய சிறப்பும் மேம்பாடுற்றுலாவும் புத்தகத்தின்மீது உள்ளூரில் ஓணான் பிடிக்க வலியற்று அயலூரிற்கோனான் பிடிக்கச்சென்றுள்ள சூத்திரமிராண்டிகளால் வேதத்தையே கண்ணினாற் காண விதியற்றவர்களும் அவர்களால் தங்கட் கோவில்களுக்குள் சேர்க்க விடாது துரத்தியடிக்கப்படுங் காட்டுமிராண்டி களுங் கூடிக்குறைகூற முயல்வது கருடனை சுட்டுக்குருவி மறைப்பது போலாம். பௌத்தர்களது இலக் கணோற்பவம் போப்பையருக்குந் தெரியாது. இப் போலிப் புலவர்களுக்கும் விளங்காது. ஆகலின் பர்மா தேசத்தினின்று கூட்டங்கூடி படாடம்பம் ஆடுவோரை சென்னையில் வந்தாடும்படி கூறிவிட்டு நமது சத்தியதன்ம போதத்தை சாந்தத்தோடு பரவச்செய்யும்படி வேண்டுகிறோம். இராஜாங்கத்தார் குடிமதிப்புப் புத்தகத்தில் காட்டுமிராண்டிக ளென்று யாரைக் குறிப்பிட்டெழுதியுள்ளார்கள் என்று வாசித்துணர்வோர் எம்மீது சினங் கொள்ளார் விசாரித்து விலகுவர்.

- 7:45; ஏப்ரல் 15, 1914 -

134. கிறீஸ்துவின் சத்திய மொழி

வினா : ஐயா இப்புதவாரப்பத்திரிகையில் B.M. இராஜரத்தினமென்பவர் புத்தர், மேசேயா, கலிக்கி முதலானோர் மறுபடியும் பூமியில் அவதரிப்பார்களாவென்னு மோர் சங்கையைக் கேட்டிருக்கின்றார் அதற்கு சங்கைத்தெளிவு கூறியுள்ள தாங்கள் அவைகள் யாவும் அஞ்ஞானிகள் கூற்றெனக் கூறிவிட்டீர். இவ்வகைக் கூறியுள்ளத் தாங்கள் மோசேயென்னும் மகாஞானியார் சரித்திரத்தையும் கிறீஸ்துவின் சிறப்பையும் வெகுவாக வரைந்திருக்கின்றீர் அவ்வகை வரைந்துள்ள தாங்களே உலக முடிவில் கிறீஸ்த்து வருவேனென்பதையும் அக்கால மின்னலொளி வீசும் எக்காளந் தொனிக்கும் அனந்தவாசல்களுண்டென்றுங் கூறியவற்றை தாங்கள் நம்பாது நம்புவோரை அஞ்ஞானிகளென்று கூறியுள்ளது ஆட்சரியமாயிருக்கின்றது. ஆதலின் கிறீஸ்த்துவால் கூறிய மொழிகளை நம்புவதா நம்பலாகாதா என்பதை விவரமாக விளக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

B. ஜோசப், பெங்களூர்.

விடை : அன்பரே கிறீஸ்துவின் மொழிகள் யாவும் சத்தியம் சத்தியமேயாம் அவற்றை மறுப்போரொருவருமிராரென்பதே திண்ணம். ஆயினுமம்மொழி களினந்த ரார்த்தமறிந்து பேசுவதே ஞானிகட் செயல். அறியாது பேசுதல் அஞ்ஞானிகட் செயலென்னப்படும். மோசேயென்னும் மகா ஞானியின் சரித்திரமெழுதும்போதே உலக முடிவின் விஷயங்களையும் சிலது வரைந்திருக்கிறோம். அவற்றை தாம் உய்த்துணரவில்லைபோலும் கிறீஸ்த்துவினது சத்திய போத சாராம்ஸத்தை உணரவேண்டில் புத்த தன்மத்தை நன்காராய்ந்த விடத்தே அஃது விளங்குமன்றி ஆராயாவிடத்து விளங்காவாம்.

அதாவது புத்ததன்மத்தில் உலக முடிவு யாதெனில் உலக பாசபந்த சகல பற்றுக்களுமற்ற விடமேயாம். உலகத்தில் மாறி மாறி பிறந்துழலும் வரையில் பலவகைத் துக்கங்களிலவதி யுற்று உழலுகின்றான். இராகத்துவேஷ மோகமற்றபோது சன்மனசென்னும் மனமாசகன்று உலக முடிந்ததென்பது கருத்தாம்.

உலகத்தில் தோற்றும் பொருட்கள் யாவுமழியுமென்னுந் திடநிலை கொண்டு மனமாசகன்று ஐம்புலனொடுங்குமிடத்து ஞானசாதனனுக்கு தன்னிற்றானே வோர் ஒளி தோன்றுவதும் தசநாதங்களாய சப்தங்கள் கேட்பதுவும் அனந்தம் எல்லைகட் புலப்படுவதும் தங்கடங்கள் ஞானக் கண்ணிற்கு தேவர்களும் சித்தர்களுந் தோற்றுவதியல்பாம். இஃது உலக பாசபந்தமற்று உலக முடித்தோருக்கன்றி உலக பாசபந்தமுற்ற உலகத்தோருக்கன்றாம்.

மௌனதெரிசனம்

"அருமெயென்ற மௌனத்தை மூட்டு மூட்டு / வடங்காத பொறிகளைந்து மடங்கிப் போகும் விருமெயென்ற விந்திரிய மாண்டுப் போகும் / இருள்மலம் போம் தி ரோதையில்லை மயக்கம்நீங்கும் வெருவுபலகோடி கன்மங்கணத்தில் நீங்கும் / வெளியினுள்ளே வொளிதோன்றும் நாதங்கேட்கும் உரிமெயுடன் மௌன சித்தியாகவாக வுருமுனக்கானந்தவுருவமாமே."

கடவுளந்தாதி

"அன்பருக்கன்புறரும் பரஞ்சோதியை யைம்புலத்தோ / டென்புருகக் கலந்துள்ளே யுருகியிரவுபகல் தம்புருவீணை சுரமண்டலத் தொனி தாளதித்தி / மின்பெருகுங் கொலுச்சிங்காரங் கண்டிருமெய் மகிழ்ந்தே"

"சிலம்பொலியப்புறமிப்பாற் சிலம்பொலி தேவர் சபை / பலம்பொலி யோசையது வெகுநாதமதற்குமப்பால்

வலம்புரி சுற்றியவாசலு முச்சி வழி திரந்தால் / புலம்பொலி யாடலும் பாடலுமாகிய பூரணமே"

மச்சமுனியார்

"விழித்து மிக பார்த்திடவே பொரிதான் வீசும் / முச்சந்தி வீதியிலே தீபந்தோன்றும் சுழித்தியிலே போகாம லொருமனதாய் நின்றால் / சுத்தமென்ற நாதவொலிக் காதில் கேட்கும்."

என ஞானசாதனனின் மனமாசகன்ற நிலையே ஒளியாகவும், தசநாடிகளடங்கு நிலையே தசநாதங்களாகவும், சிறு வாசல் திரப்பே பீடங்களாகவும் ஆனந்தமாக அவனவன் காணுங் காட்சிகளையே கிறீஸ்துவும் உலக துக்கங்களை விவரித்து ஞானசாதனன் முடிவில் மின் னலொளி போன்ற தோற்றமும், எக்காள தொனியாம் சப்தமும் உன் வீட்டினானந்தமும், அவர்களுக்கவர் தோன்றும் நிலையையே அவர் விளக்கியுள்ளாரன்றி உலக முடிவின் கருத்தன்றாம். பாபத்தின் சம்பளம் மரணம் பெற்று உலக துக்க முடியாதவர்களும், புண்ணியத்தின் சம்பளம் நித்திய சீவனைப்பெற்று உலக துக்க முடிந்தவர்களும் இரு வகையோராவர். இதுவே கிறீஸ்துவின் சத்தியமொழி யென்னப்படும்.

- 7:45; ஏப்ரல் 15, 1914 -

135. பௌத்த சோதிரர்களுக்கு அறிவிப்பு

முர்க்கரோடிணங்குவதினும் முநிவது கொடிது.

அன்பார்ந்த சோதிரர்களே, சற்று கவனியுங்கள். நமது சத்தியபோதமாய புத்ததன்மம் நாளுக்கு நாள் பரவியும் சிறப்புற்றும் வருவது சத்துருக்களுக்கும் அவர்களால் தூண்டப்பெற்றோருக்கும் மிக்கப் பொறாமெயும் பற்கடிப்புந் தோன்றி பல வகையாய இடுக்கண்களை உண்டுசெய்து வந்த போதினும் சத்தியதன்மம் மேலு மேலும் ஒளிவிட்டுப் பிரகாசிப்பதைக் கண்டே சிலர் தங்கடங்கள் மனம்போனவாறு தமிழ் லட்சணமற்று தூஷண மொழிகளுற்ற சுட்டுக் கடிதங்களை வெளியிட்டு வருகின்றார்கள்.

அவர்களால் வெளியிட்டுவரும் சுட்டுக் கடிதங்களில் எழுத்திலக்கண மின்னது, அவற்றிற்கு மாறாயதின்னது, சொல்லிலக்கணமின்னது, அவற்றிற்கு மாறாயதின்னது, பொருள் இலக்கணமின்னது, அவற்றிற்கு மாறாயதின்னதென

சூத்திர விதியோடு விளக்குவரேல் அதற்கு மாறுற்ற சூத்திரவிதிகளை விளக்கித் தாங்களும் சுட்டுக்கடிதம் வெளியிடலாம்.

இந்து மதத்திலிருந்தே புத்ததன்மந் தோன்றியதென்பதை உலக சரித்திரம் இன்னபக்கத்தைப் பாருங்களென்றேனும் பூர்வமாய இன்ன சாஸ்திரம் இன்ன பக்கத்தைப் பாருங்களென்றேனும் அனுபவத்திற்குங் காட்சிக்கும் பொருந்தியவைகளீதென்றேனும் விளக்குவரேல் பௌத்தர்களாலேயே இந்துவென்னுமொழி தோன்றியுள்ளதை சரித்திர சாஸ்திர அனுபவவாதாரத்துடன் வரைந்து தாங்களும் சுட்டுக்கடிதம் வெளியிடலாம். மற்றும் அரி ஓம் என்பதை அறிவோமென்றும் சங்கரனென்பதை சங்கறனென்றும் நாற்பதென்பதை நார்ப்பதென்றும் உத்தரக்கிரியை என்பதை உத்தறக்கிரியை என்றும் ஐம்பது என்பதற்கு ஐன்பதென்றும் கிராம மென்பதற்கு கிறாமமென்றும் குலநிலானென்பதற்குக் குலமிலானென்றும் வரைவது இன்ன காரண பெயருக்கும் பொருந்தாது காரியப் பெயருக்கும் பொருந்தாதென்றேனும் இன்னவெழுத்திலக்கணத்திற்குப் பொருந்தாது இன்ன சொல்லி லட்சணத்திற்குப் பொருந்தாதென்றேனும் சூத்திரவிதிப்படி பொருள்விளங்க வரைவரேல், தாங்களுமுநிந்து காரணப்பெயர் தோற்றங்களையும் காரிய பெயர் தோற்றங் களையும் மொழி முதற் காரணங்களையும் அதனதன் பொருள்களையுஞ் சூத்திரவிதிப்படி விளங்க விளக்கி சுட்டுக்கடிதம் வெளியிடலாம். அங்ஙனமிராது எழுத்தைப்பார்த்து எழுத்தெழுது வோரும் சொல்லைப்பார்த்து சொல்லெழுதுவோரும் பொருளைப்பார்த்துப் பொருளெழுதுவோரும் தன் பெயரை மறைத்து வேறு பெயரெழுதுவோரும் தொடரும் வியவகாரம் விட்டு தூஷண மொழிகளைக் கக்குவோருமாய துன்மார்க்கக்கடிதங்களுக்குத் தாங்களும் மாறு கடிதமெழுதுவதாயின் தங்கள் சன்மார்க்க புத்ததன்ம நெறி தவறிப்போம். துன்மார்க்கர் மத்தியில் சன்மார்க்கர்களாகவும் பொய்யர்கள் மத்தியில் மெய்யர்களாகவும் துட்டர்கள் மத்தியில் இட்டர்களாகவுமிருக்க வேண்டுகிறோம். எம்மெ தூஷித்தும் வைதுமுள்ளார்களே என்றாயாசங் கொள்ளற்க. காரியமே கண்ணாமெமக்கு தூஷிப்பும் பூஷிப்பு மொன்றேயாம்.

- 7:46; ஏப்ரல் 22, 1914 -

— — —

அகர வரிசை

I

பழமொழிகளும் சொற்றொடர்களும்

அ

அளந்ததே அளக்கப்படும் **II:** 136.
அரைக்கல்லி முழுமொட்டை **III:** 16.
அவனவனன்றி யோரணுவு மசையாது **II:** 438.
அவலை நினைந்து உரலையிடிப்பதுபோல் **I:** 55.
அவசரக்கோலம் அள்ளித்தெளிப்பது போல் **I:** 33, 37.
அவரவர்கள் செய்த தீவினைகளை அவரவர்களே அநுபவிப்பார்கள் **I:** 353.
அரசையெதிர்த்தக் குடியும் ஆதரவற்றக் கொடியும் அடியழிந்து கெடும் **I:** 33.
அன்னியர் பிள்ளையை யூட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் **I:** 288.
அன்னியனுக்குப் பெற்ற பிள்ளையைத் தன்பிள்ளையென்று தாராட்டிப் பலருக்கும் பகட்டுவது போல் **II:** 437.
அப்பியாசங் கூசாவித்தை **I:** 197. **III:** 61.
அண்டை வீட்டுக்கார அப்பாசாமி **I:** 178.
அன்னமிடுவோர் வீட்டில் கன்னமிடுவதுபோல் **I:** 377, 516.
அதிக முடிக்கியக் கயிறு அறுந்து திரும்புவதுபோல் **I:** 45, 266.
அழுத பிள்ளைதான் பால்குடிக்கும் **I:** 402.
அரசர் எவ்வழியோ குடிகளும் அவ்வழி **I:** 716.

ஆ

ஆசை வெட்கமறியாது **I:** 9.
ஆட்டுக்கடாக்கள் பிந்துவதும் புலிகள் பதுங்குவதும் தங்கள் பாச்சலுக் கென்பதுபோல் **I:** 480.
ஆடு நனையுதென்று ஓனாய் குந்தியழுவதுபோல் **I:** 51.
ஆடுகிடந்தவிடத்தில் ஒரு மயிரேனுங் கிடையா **I:** 388, 427.
ஆடுகள் நனைகிறதென்று புலிகள் புரண்டழுவது போல் **I:** 228, 239, 27 9, 397, 400, 405, 471.
ஆடு கசாயிக்காரனை நம்பி அடியோடழிவது போல் **I:** 229, 262, 286, 338, 377, 398, **II:** 438, 439. **III:** 48.
ஆட்டு மந்தைகள் புலிகளை அடைக்கலம் புகுந்தது போல **I:** 252.

ஆப்பை பிடுங்கி விட்ட குரங்கு I: 299.
ஆகாயக் கோட்டையும் அந்தரப்புட்பமும் I: 380.
ஆரியக் கூத்தாடினாலுங் காரியத்தின் பேரில் கண் I: 126.
ஆய்ந்தோய்ந்து பாராதவன் தான்சாகக்கடவன் I: 55, 248, 446.
ஆய்ந்தோய்ந்து பேசாவினையின் பயனே பயன் III: 3.
ஆரடாவிட்டது மானியமென்றால் நான்தான் விட்டுக்கொண்டேன் என்பது போல I: 189, 242, 676. II: 463.

இ

இரண்டாட்டுக்கு ஒரு குட்டி III: 40.
இரும்பைத் துரும்பு அரிப்பது போல II: 643.
இரவு முழுவதும் சிவபுராணம் கேட்டு விடிந்தவுடன் சிவன் கோயில்களை இடிப்பது I: 214.
இரவு முழுவதும் இராமாயணங் கேட்டு விடிந்தபின் இராமருக்குச் சீதை என்ன முறை என்றால் போல் II: 425.
இமயமலையைவெட்டி வழிவுண்டாக்குவதுபோல் I: 98.
இலிங்கத்தைக் கண்டால் பண்டாரம் என்றும் நாமத்தைக் கண்டால் தசரியென்றுங் கூறுவது போல் I: 51.
இஞ்சித்தின்னக் குரங்கைப்போல் I: 52, 283, 460, 492.
இரும்பைக்கொண்டே இரும்பை கடைத்திரட்டல் போல் I: 57.
இரந்துண்போனுக்கு தனம்பெருகில் ஏசாதெல்லாமேசுவான் பேசாதெல்லாம் பேசுவான் I: 706.
இராஜாங்க மெவ்வழியோ குடிகளு மவ்வழியே I: 430.
இராமன் ஆண்டாலென்ன, இராவணனாண்டாலென்ன I: 374.
இருப்பு வலையிற் சிக்குண்ட புலியை நீக்கி விடுவது போலும் I: 364, 424.
இரும்பை அடிக்கும் அடி துரும்புக்கும் படுவதுபோல I: 159, 225, 300, 375.
இறைக்கும் கிணறு சுரக்கும் II: 686.
இலவு காத்த கிள்ளைகள் போல III: 101.

ஈ

ஈட்டி எட்டியவரையிற் பாயும் பணம் பாதாளம் வரையிலும் பாயும் II: 742.
ஈட்டியின் முனையை உதைத்ததுபோல் I: 30, 95, 211, 282,497.

உ

உட்சுவரிடிந்துவிழ புறச்சுவர் பூசுவதைப்போல் I: 484, 473, 501.
உப்பிருந்த பாண்டமும் உளவிருந்த நெஞ்சமுந் தட்டிவுடையாமல் தானே வுடையும் I: 445, 499.
உப்பிருந்த பாண்டம் தன்னிற்றானே உடைவதுபோல III: 35.

உப்பு மிஞ்சினால் தண்ணீர், தண்ணீர் மிஞ்சினால் உப்பு **I:** 207, 260.
உண்டிகொடுப்போர் உயிர்கொடுப்போரே **II:** 105, 681.
உண்ட வீட்டை இரண்டகஞ் செய்பவர் **I:** 328, 515.
உமிகுத்தி மணிதேடுவது போல் **I:** 100.
உமியைக்குத்தி கைசலித்தவாறு போல் **II:** 245, 446. **III:** 95.
உழைப்பாளிகள் உறம் பெற்றுழைக்கின் பெருக்காளிகள் பெரும்பேர் பெறுவர் **I:** 426.
உடைந்த மூங்கிலுக்கு முருங்கைக் கொம்பை முட்டுக்கொடுப்பது போல் **I:** 380, 707.
உருசிகண்ட பூனை உரியை உரியை தாவுதல் போல் **I:** 477
உள்ளங்கை நெல்லிக்கனிபோல் **I:** 47, 97, 142, 174, 176, 189, 273, 274, 305, 357, 461, 506, 517, 519, 594. **II:** 398. **III:** 41.
உள்ளங்கையில் லக்கிரியிட்டவர்களை உள்ள காலவரை நினையுங்கோள் **I:** 229.
உள்ளூரில் ஓணான் பிடிக்கயேலது அயலூரில் கோணான் பிடிக்கச் சென்றது போல் **II:** 85, 106.

எ

எடுத்தக் கைப்பிள்ளை எல்லோருக்கும் பிள்ளை என்பது போல் **I:** 237.
எழியவன் பெண்சாதி எசமானனுக்கெல்லாம் பெண்டென்பது போல் **I:** 237.
எல்லவரும் பல்லக்கேற எத்தனித்துக் கொண்டால் எடுப்பவர்கள் யார் **I:** 408.
எட்டிப்பழுத்தாலென்ன ஈயாதவன் வாழ்ந்தாலென்ன **II:** 678.
எட்டினால் குடிமி எட்டாவிடில் பாதம் **I:** 67, 168, 412. **III:** 45.
எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம் **I:** 27, 37, 214. **II:** 677.
எண்ணெய் வாணியன் கதைபோல் **I:** 72.
எண்ணமெல்லாம் பழகாமெயாலே **III:** 34.

ஏ

ஏந்துங் கைகளுக்குப் பிள்ளை **I:** 290
ஏனப்பா பந்தயத்தில் தோற்றுப் போனீரே என்றால் இன்னும் போடும் பந்தயம் என்பதுபோல் **I:** 51.
ஏழைகளழுதக் கண்ணீர் கூரிய வாளுக்கொக்கும் **I:** 266, 362, 369, 388, 389, 495.

ஐ

ஐயர் வார்த்தையை ஐயம் பெருமாள் வார்த்தை போல் எண்ணிக் கொள்ளும் **II:** 88.

ஒ

ஒருக்கண்ணிற் சுண்ணாம்பும் ஒருகண்ணில் வெண்ணெயையும் தடவுவதுபோல் **I:** 21.

ஓ

ஓட்டின் வினை வீட்டைச்சுடும் **III:** 42.

க

கற்றோரை கற்றோரே காமுறுவர் III: 42.
கண்டுபடித்தலே கல்வி காணாது படித்தல் தெண்டக் கல்வி II: 470, 570, 740.
கணக்கன் காலால் போட்ட முடியை கலைக்ட்டர் கையால் அவிழ்க்க முடியாது I:39.
கனத்தின்பேரில் வளைவென்பது போல் I: 264, 369, 413.
கடவுளைத் தொழுவதினுங் கலகம், சாமியைத் தொழுவதிலுஞ் சண்டை I: 293.
கல்லை நம்பினவனுக்கும் மோட்சம், கடவுளை நம்பினவனுக்கும் மோட்சம் III: 89.
கன்றுகள் கூடி களம்பரிப்பதுபோல் I: 28.
கட்டுப்பட்டால் கவரிமான் மயிரால் கட்டுப்படல் வேண்டும் குட்டுப்பட்டால் மோதிரக்கையால் குட்டுப்பட வேண்டும். II: 463. III: 41.
கட்டுசாதமும், ஒருவர் கற்பனாசெயலும் நெடுநாளிருக்கமாட்டாது I: 71.
கண்டறியாதவன் பெண்டுபடைத்தால் காடுமேடெல்லாம் இழுத்தடிப்பான் I: 466.
கண்டுபடிப்பதே படிப்பு மற்றப்படிப்பெல்லாம் தெண்டப்படிப் பென்றறி I: 209. II: 153, 470, 494, 570. III: 64.
கற்றோர்க்கு சென்றவிடமெல்லாம் சிறப்பு II: 501.
காக்கையானது ஆந்தையை பகல் காலத்தில் வெல்லும் ஆந்தையோ காக்கையை இராக் காலத்தில் வெல்லும் I: 16.
காக்கையானது பனைமரத்தில் உழ்க்காரவும் பனம்பழம் வீழவும் ஆயது போல் II: 438.
காய்ந்துபோம் பயிறுக்குத் திதி மழை பெய்து காத்தது போல் I: 681.
காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும் I: 402.
காரியத்தின் பேரில் கண்ணோக்கம் இராது வீரியத்திற்கு விருது கட்டுகிறவர் I: 38.
காகதாளிச்செயலுக்கும் காகதாளி நியாயத்துக்கும் பொருந்தும் போல் I: 280.
காமாலைக் கண்ணனுக்கு சூரியன் மஞ்சள் நிறமாகத் தோற்றுவது போல் I: 355. III: 68.
கிள்ளுக்கீரைபோல I: 9. III: 86.
கீற்றில் வேண்டாம் சாற்றில் வாருங்கோ I: 688. III: 39.
கீரியையும் பாம்பையுங் கீரைத்தோட்டத்திற்குக் காவல் வைத்தது போல் I: 515.
குடித்தனக்காரன் அம்மிக்கல்லை அதிகாரி வீட்டுக் கோழி முட்டை உடைக்கும் I: 275.
குடிமி தட்ட வேண்டியது தான் I: 60.
குதிக்கமாட்டாதவன் கூத்தைப் பழித்தான் பாடமாட்டாதவன் பாட்டைப் பழித்தான் I: 51.
குதிரையானது கொள்ளென்றால் வாயைத்திறப்பதுங் கடிவாளம் என்றால் வாயை மூடிக்கொள்ளுவதுபோல் I: 9.
குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொண்டு உலாவுவோனைப் போல I: 195. II: 654
குழந்தையின் துடையைக் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவதுபோல் I: 411,445
குடிப்பவன் விடுப்பது குதிரைக் கொம்பை பார்ப்பதற் கொப்பனை I: 210.

குய்யோ முறையோ **I:** 401, 425.
குரங்குகளுக்குப் பூமாலை சூடுவது போல **III:** 68.
குரங்கைச் சீர்திருத்த கோலும் பிள்ளைகளைச் சீர்திருத்த பிரம்பும் **III:** 33.
குரங்குக் கையில் வாளைக் கொடுத்து காவல் வைத்தக் கதை போல் **I:** 21.
குருடனுக்குக் குருடன் வழிகாட்டுவது போல **II:** 481.
குலத் தளவே யாகுமாங்குணம் **I:** 330. **II:** 146. **III:** 48.
குணம் போல் வெளுப்பது குங்கல்யநிறம் **I:** 416.
கெடுவான் கேடு நினைப்பான் **III:** 19.
கொட்டினால் தேள் கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சி **I:** 158, 295, 365. **II:** 768.
கொள்ளியை யிழுத்துவிட்டால் கொதிப்பது அடங்கிப்போம் **I:** 365.
கோழிக்குஞ்சுகளுக்கு நுரையில்லையென்று பருந்து பரிதவிப்பது போல் **I:** 228.
கோழித் திருடியுங் கூடவே குலாவுவது போல் **I:** 445.
கைம்முதலில்லா வியாபாரிக்கு ஆதாயமில்லாததுபோல் **I:** 10.
கைப்பணமிருந்தும் பட்டினி, கலியாணம் செய்தும் சன்னியாசி **I:** 29.

ய

யதார்த்தவாதி வெகுஜனவிரோதி **I:** 385, 487, 690.
யார் வீட்டுச் சொத்துக்கு யார் அத்து நியமிப்பது **I:** 270.

ச

சாண் தண்ணீரில் மல்லாந்து விடுவது போல் **I:** 205.
சித்திரை மாதம் செல்வம் பிறந்தால் ஆனகுடிக்கே அனர்த்தம் **III:** 86.
சிம்மத்தின் மீது செம்மறியாடுகள் முனிவதுபோல் **I:**234.
சிறுகக் கட்டி பெருக வாழவேண்டும் **II:** 473.
சிறுமீன்களெல்லாம் பெருமீன்களுக்கு இரை **I:** 431.
சுட்டுக்குருவி பருந்தை எதிர்ப்பது போல **I:** 51.
சுட்டுக்குருவி கருடன் மீது போர் தொடுப்பதுபோல் **I:** 58, 234. **III:** 106.
சுடர் விளக்காயினும் நன்றாய் விளங்கிடத் தூண்டுகோல் ஒன்று வேண்டும் **II:** 757.
சுவற்றை வைத்துக் கொண்டு சித்திரம் எழுத வேண்டும் **I:** 68.
சூதன் கொல்லையில் மாடுமேய்வதை சுற்றிப் பார்த்திருப்பதுபோல் **I:** 31. **II:** 520.
சூடுகண்ட பூனை அடுப்பங்கடை நாடா **I:** 343. **III:** 81.
சூரியனைக்கண்ட பனிபோல் **II:** 432.
செம்பதுகளிம்பதற்றால் செம்பொன்னாம் **II:** 138.
செம்மறி ஒன்றன்பின் ஒன்று மடிவதுபோல் **I:** 4.
சொன்னதைச் சொல்லுங் கிளிபோல் **II:** 30, 68, 152, 168, 209. **III:** 5, 95.

ஞ

ஞானமும் கல்வியும் நாழி அரிசியில் **I:** 81.

ப

பசியில்லா வரங்கொடுப்போம் பழையதிருந்தால் போடும் I: 173.
பசுவின் தோலை போர்த்துலாவும் புலிபோல் I: 216.
பருப்பில் நெய்யை விட்டது போலும் பாலில் பழம் விழுந்தது போலும் I: 138, 141.
பனங்காட்டுநரி சலசலப்புக் கஞ்சாது போல் I: 446.
பன்றிகளின் முன் முத்துகளைப் போடுவது போல் III: 68, 93.
பழயன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகால வகையினானே I: 293, 439. III: 75.
பழைய குருடி கதவைத் திறவடி II: 136.
பல்லிகளையும் பட்சிகளையும் பாதுகாக்கவேண்டியது, பாம்பையுந் தேளையும் தலைநசுங்கக் கொல்லவேண்டியது போல் I: 364.
பலப்பட்டரைசாதிக்கு பவுஷியமில்லை, குலங்கெட்ட சாதிக்குக் கோத்தரமில்லை I: 25.
பார்ப்பான் வீட்டு பல்லி முட்டை, பறையன் வீட்டு அம்மிக்கல்லை உடைக்கும் I: 208.
பாப்பானுக்கு மூப்பான் பறையன் கேழ்ப்பாரில்லாமற் கீழ்ச்சாதியானான் I:333,388.II:67.
பாலுக்குங் காவல் பூனைக்குந் தோழனைப்போல் I: 159, 162, 178, 498.
பாலூட்டுங்கிழவிகளுக்கு சோறூட்டுவது போல III: 66.
பிஞ்சியில் பழுக்கப்பார்ப்பது நஞ்சை உண்பதொக்கும் I: 83.
பிள்ளையார் முதுகைக் கிள்ளிவிட்டு நெய்வேத்தியங் கொடுப்பது போல் I: 51.
பிள்ளையையுங்கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவது போல் I: 30, 47, 50, 295, 391.
புலியானது பசுவின் தோலைப் போர்த்து பகிரங்கத்தில் உலாவுவதுபோல் I: 320. III: 70.
புலியைக்கண்டு பூனைச் சூடிக்கொள்ளுவதுபோல் I: 339, 471.
பெண்களுக்குப் பேயுமிதங்கும் I: 696.
பெற்றவட்கே தெரியுமந்தவருத்தம் பிள்ளை பெறா பேதையறிவாளோ பேரானந்தம்II: 548.
பொல்லார்க்குக் கல்விவரில் கர்வமுண்டாம், வீணருக்கு வித்தைவரில் சொத்தையுண்டாம் I: 49, 159, 395.

ம

மனையுள் விருட்சமும் மக்கள் கல்வியும் மாறா சுகந்தரும் I: 680.
மலடியென்றுகூறி அவளுக்கு மைந்தனுண்டென்னலாமோ I: 599.
மயிலைக்கண்ட வான்கோழி நடமிடுவதுபோல் I: 339.
மனம்போல வாழ்க்கைப் பெறுவது மாங்கல்ய சுகம் I: 416.
மாட்டிறைச்சியைப் பறிகொடுத்த பாப்பாத்தி போல் II: 87.
மாலுமியில்லா மரக்கலமேறலாகாது என்பது போல II:524.
மானங் காய்ந்தால் போடி மழை பெய்தால் வாடி III: 5.
மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் I: 214.
மீனுக்கு வாலும் பாம்புக்குத் தலையுங் காட்டுவது போல் I: 240, 445. III: 4.
மீனுக்குங் காவல் பூனைக்குந் தோழனுமாயிருப்பது போல் I: 445.
மீனை மீன் பிடித்துண்பது போல் I: 65.

முகத்திற்கண்கொண்டு பார்க்கிற மூடர்காள் அகத்திற்கண் கொண்டு பார்ப்பதே ஆனந்தம் **III:** 83.
முன்வினை பின்னே சுட்டு முதுகு பிளப்புண்பது **I:** 74.
முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார் **I:** 29.
முயற்சி திருவினையாக்கும் **I:** 402. **III:** 20.
முழு பூசணிக்காயைப் பிடி சோற்றுள் மறைப்பது போல் **I:** 305. **II:** 428, 543, 547.

த

தன்னாலே தான் கெட்டால் அண்ணாவி என்னசெய்வான் **I:** 255.
தன்வினைத் தன்னை சுடும் **I:** 74.
தன்கண்ணில் சுன்னத்தைத் தடவிக்கொண்டு அன்னியன் கண்ணில் வெண்ணெயைத் தடவுவதுபோல் **I:** 501.
தன்முயற்சியில்லாத் தலைமகனுக்கும் தலைகணையில்லா நித்திரைக்கும் சுகமுண்டோ **I:** 689, 690.
தட்டிக்கேட்க ஆளில்லாது தம்பி சண்டப்பிரசண்டகாலம் **I:** 49. **III:** 45.
தவிக்கு முயலை அடிப்பதுபோல் **I:** 311.
தலைநோய்க் கண்டவன் தலையணை உறையை மாற்றிப்போட்டுக் கொள்ளுவது போல் **I:** 260.
தன் கண்ணிலிருக்கும் துரும்பை எடாது அந்நியன் கண்ணிலிருக்கும் சிறாவை நோக்குவது போல **III:** 22.
தானு வெந்து ஊரையும் வேகடித்த குரங்கு **I:** 248.
தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் **I:** 208.
தீட்டிய மரத்திலேயே கூர் பார்ப்பதுபோல் **I:** 69, 234, 297, 328, 377, 515, 716.
துரும்புங் கலத்தண்ணீரைத் தேக்கும் **I:** 29, 214. **II:** 629.
தூர்ந்த மண்ணை வெட்டிக் கிளப்புவது போல் **I:** 249.
தெய்வம் நின்று கொல்லுமாயின் அரசன் அன்றே கொல்லும் **I:** 445.
தெண்ட சோற்று இராமர்களைப் போல **I:** 49.
தொன்னைக்கு நெய்யாதரவா நெய்க்கு தொன்னையாதரவா **I:** 598.
தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும் விடாது **I:** 255, 336, 477. **III:** 26.

ந

நல்லாரொருவருளரேல் அவர்பொருட்டெல்லோர்க்கும் பெய்யுமழை **I:** 718.
நரியினிடம் ஏமார்ந்த காக்கை கதைபோல் **I:** 111.
நாட்டுக்கு நல்லரசன் வந்தாலும் தோட்டிக்குப் புல்சுமைப் போகாது **I:** 3.
நாளுக்குநாள் நகுந்ததடி யம்மானே **I:** 62.
நெல்லஞ் சோற்றுக்கு கடித்துக்கொள்ள பதார்த்தம் வேண்டுமோ **I:** 30.
நெருப்பில் விழுந்த தேளை அப்புறப்படுத்துவது போலும் **I:** 364, 424, **II:** 768.

வ

வலையில் சிக்குண்ட பாம்பை எடுத்துவிட கடிப்பதுபோலும் II: 768.
வரப்புயர நீருயரும், நீருயர பயிருயரும், பயிருயர குடிவுயரும், குடியுயர கோனுயரும் I: 111, 287, 423.
வானம் சுருங்கில் தானம் சுருங்கும் I: 3.
வாழும் பெண்ணை தாயார் கெடுத்தாள் I: 234.
வாழைப்பழத்தில் ஊசியை நுழைப்பதுபோல் I: 311.
வாழையடி வாழைபோல் II: 491.
வாய்க் கொழுப்பு சீலையால் ஒழுகின்றது I: 233.
விஷப்பாம்புகளுக்குப் பால் வார்த்து வளர்ப்பது போலும் I: 364.
விஷமென்றறிந்தும் விழுங்குவதுபோல I: 271.
விழலுக்கிரைத்த நீர்போல் I: 60, 392.
வெள்ளிடை மலைபோல் I: 149.
வெகுமானமாகிலும் அவமானமாகிலும் மேன்மெயோர் செய்யிலழகாம் III: 41.
வெல்லமென்னும் வாயை நக்குவது போல் I: 205, 271.
வேலி பயிரைத் தின்பதுபோல் I: 256.

II

சிறப்பு பெயர் வரிசை (ஆங்கிலம்)

America II: 182.
Annie Besant II: 181, 184, 185.
Asoka II: 184.
Bangalore II: 184.
Benares II: 181.
Buddhist Review II: 164.
Buddhist Yound Men Association II: 26.
Budhgaya II: 181.
Burma II: 181, 184.
C. Iyothee Doss II: 26, 182, 184, 185.
C. Lingiah II: 181.
C.Guruswami, Upasaka II: 184.
C.K.Nagula Pillai II: 184.
Calcutta II: 181.
Ceylon II: 180, 181, 184.
China II: 181.
Col. HS. Olcott II: 180, 181, 184.
Colombo II: 180.
Dhammananda II: 181.
Durban II: II: 184.
Europe II: 182.
Gunalankara II: 181.
Holland II: 181.
Hyderabad II: 184.
Japan II: 181.
Kapila II: 183.
Kolar II: 181.
M.Ragavar II: 181.
Madras II: 26, 180, 184.
Malikaganda Vihara II: 180.
Manimegalai II: 183.
Marikuppam II: 181, 184.
Mayadevi II: 183.
Mysore II: 181, 184.
Nandarama II: 181.
Natal Advertiser II: 181.
North Arcot II: 184.
Oiler, Mr. I: 113.
Pali II: 182, 183.

Paul Carus II: 180.
R.V.Sabapathy II: 184.
Rangoon II: 181, 184.
Royapettah II: 180, 184.
S.Annamalai II: 184.
Sakya Buddhist Asrama II: 180.
Sakya Buddhist Society II: 180, 181, 184.
Sakya Muni II: 182.
Secunderabad II: 181, 184.
Siam II: 181.
Singapore II: 181.
South Africa II: 181, 184.
Sri Sumangala II: 180.
Tamilian II: 181.
Thirupatur II: 181.
Tirupatoor II: 184.
U.Tezzavansa II: 181.
U.Wilasa II: 181.
Uthaduthaya II: 181.
V.Jivarathnam II: 184.
V.Veeran II: 184.
Vidodaya College II: 180, 181.
Visuddha Sami II: 181.
Winayalankara II: 181.

— — —

III

சிறப்பு பெயர் அகராதி (தமிழ்)

அ

அறிச்சுவடி **I:** 146, **II:** 17, 561.
அசித்த சாக்கையர் **I:** 662. **II:** 195, 200.
அரிச்சந்திரன் **I:** 19, 54, 504, 678. **II:** 93, 95, 160, 444. **III:** 58.
அரிச்சந்திரவிலாசம் **I:** 130.
அரிச்சந்திரபுராணம் **I:** 54. **II:** 96, 459. **III:** 47,
அரித்துவாரம் **I:** 651.
அநாதிமுத்தன் **I:** 270.
அதர்வண வேதம் **II:** 85, 90.
அதிருபநாதன், எஸ்.சி. **III:** 50.
அந்தோணி, வீ. **II:** 433.
அமெரிக்கா, அமேரிக்கர் **I:** 6, 28, 38, 67, 62, 68, 86, 214, 255, 308, 317, 322, 328, 341, 342, 382, 389, 416, 479, 517, 529, 570, 573, 681, 682, 691, 700, 706, 707, 709. **II:** 11, 25, 99, 154, 158, 427, 501. **III:** 18, 23, 42, 64, 76.
அரேபிய தேசத்தோர் **I:** 570, 722.
அமீர்தோட்டம் **I:** 256.
அறவணவடிகள் **II:** 764.
அஜாத சத்துரு **I:** 148. **II:** 382, 384, 385.
அறி **II:** 17.
அறியறன் **II:** 442.
அவ்வை **II:** 24, 33, 34, 40, 53, 60, 128, 133, 171, 462, 557, 584. **III:** 84. (காண்க. ஔவையார்)
அப்பர் **I:** 54. **II:** 423, 424. **III:** 12.
அம்பிகா தேவி **I:** 576. **II:** 22, 30, 31, 32, 33, 38, 39, 40, 47, 60, 128, 161, 162, 536, 545, 552, 557. **III:** 89.
அம்பிகாசரன் **I:** 204.
அத்வைத பக்த சமாஜம் **I:** 723.
அத்தன் **II:** 514.
அங்கயாதன் **I:** 607.
அங்கபாஷை **I:** 606.
அங்கபாரமுனிவர் **I:** 608.
அண்டர் கோன் **II:** 18, 21.
அர்னால்ட் ஒயிட் **I:** 571.
அர்மேனியா **I:** 56.
அஸ்திநாதபுரம் **I:** 651, 663. **II:** 413.
அஸ்டிரேலியா **I:** 416, 479, 517, 529.
அஸ்வகோஷர் **I:** 609, 610, 611, 625, 631, 638, 639, 643. **II:** 20, 21.
அற்புதத்திரட்டு **II:** 41.
அமிர்தபஜார் (பத்திரிக்கை) **I:** 37.
அயர்லாண்ட் **I:** 519, 520.

அழகர் மலை **III:** 18.
அக்பர் **III:** 34.
அபிதம்மத சங்கம் **II:** 186.
அரியநாதன் **II:** 429.
அரியான் தெடல் **I:** 333.
அனந்தநாராயண ஐயர் **I:** 55.
அனுராஜபுரம் **I:** 243.
அநாதபிந்தகன் **II:** 389, 391.
அநுமார் **I:** 590. **II:** 425, 543. **III:** 47.
அவிரோத உந்தியார் **I:** 130. **II:** 20.
அகப்பேய்ச்சித்தர் **I:** 555. **II:** 60, 426, 514. **III:** 104.
அகஸ்தியர் **I:** 122, 146, 532, 546, 553, 556, 578, 591, 628, 629, 721, 722, 723. **II:** 189, 193, 227, 302, 418, 450, 461. 462, 492, 545, 548, 551, 552, 553, 558, 560, 564, 567, 578. **III:** 47, 60, 80, 86.
அகஸ்தீன் **I:** 570.
அழகர் **II:** 62.
அடையாறு தியோசபி சங்கம் **I:** 135, 192, 212. **II:** 180.
அமுதசாகரர் **II:** 571.
அமலன் **II:** 384.
அயோத்தியாபுரி **II:** 194, 318, 345.
அயோத்திதாச கவிராஜ பண்டிதரவர்கள் வீ. **I:** 146, 723. **II:** 131, 556.
அயோத்திதாசர், க. **I:** 78, 81, 102, 185, 191, 192, 193, 213. **II:** 26, 162, 163, 192, 783. **III:** 95.
அசோகச் சக்கிரவர்த்தி **I:** 119, 122, 144, 352, 570, 571, 576, 605. **II:** 107, 539.
அசோதரை நெஞ்சுவிடுதூது **II:** 216, 218, 220, 222, 382, 383, 385, 387, 389.
அசோதரை காவியம் **II:** 457, 458. **III:** 91.
அசோதரை **II:** 13, 14, 22, 199, 200, 201, 202, 203, 205, 212, 214, 303, 304, 305, 306, 307, 308, 354, 355, 382, 384, 415.
அல்லாசாமி **II:** 434, 437.
அச்சுதானந்தம், பி.எஸ். **III:** 36, 40, 42, 44, 45.
அவலோகிதர் **I:** 576, 578, 591. **II:** 141, 217, 218, 219, 228, 279, 284, 303, 317, 318, 323, 347, 353, 355, 367, 384, 388 , 391, 394, 396, 403, 419, 456, 462, 472, 551, 553, 608.
அரக்கோணம் **I:** 362, 363. **II:** 112. **III:** 59.
அரம்பை **II:** 13, 202, 308. **III:** 29.
அருங்கலை நாயகன் **II:** 544.
அருங்கலைச்செப்பு **I:** 120, 125, 561, 574, 578, 579, 582, 583, 584, 586, 601, 608. **II:** 62, 63, 81, 82, 83, 111, 117, 143, 164, 186, 188, 190, 205, 206, 207, 208, 209, 212, 216, 223, 229, 231, 233, 234, 272, 273, 2 78, 284, 301, 308, 312, 313, 318, 382, 383, 386, 387, 389, 394, 396, 400, 409, 418, 464, 467, 471, 477, 484, 509, 519, 521, 523, 585, 596, 597, 599, 601, 602, 608, 617, 619, 672, 676.
அரங்கசாமி கவிராயர் **I:** 590.
அரங்கசாமி ஐயங்கார், ஏ. **I:** 78.
அரங்கையா நாயுடு, பி. **I:** 80, 133, 185.
அரங்கையாதாஸ் **I:** 146.
அருண்மங்கை **II:** 462.

அருகன் I: 330, 574, 584. II: 106, 271, 276, 279, 280, 308, 310, 316, 347, 355, 382, 387, 389, 399, 402, 403, 410, 442, 478, 552.
அருண பாஷை I: 606.
அருணாச்சல கவிராயர் I: 136, 590.
அறன் II: 17, 464.
அறச்செல்வி II: 34, 161, 447, 552, 557.
அறத்துப்பால் II: 442, 457.
அறப்பளீசுரசதகம் II: 17, 139, 465, 474, 476, 478, 480, 499, 500.
அறநெறிச்சாரம் I: 562. II: 116, 186, 190, 223, 224, 309, 436, 469, 470, 471, 472, 476, 505, 506, 507, 508, 509, 511, 512, 566, 571, 572, 574, 575, 584, 585, 586, 587, 588, 589, 590, 591, 592, 595, 596, 598, 599, 600, 618, 619, 620, 621, 623, 624, 625, 627, 628, 630, 631, 632, 634, 636, 640, 641, 642, 643, 652, 655, 656, 657, 658, 660, 662, 665, 670, 672, 677, 680, 681, 683, 687, 691, 700, 717, 725. III: 21, 104.
அறநெறித்தீபம் I: 146. II: 63, 190, 466, 470, 474, 479, 482, 508, 513, 590, 593, 595, 599, 600, 609, 612, 613, 619, 621, 625.
அறவாழி II: 11, 139, 288, 395, 396, 400, 402, 409, 411, 412, 413, 414, 552. III: 32.
அலக்சாண்டர் II: 159.
அலர்மேலு மங்கைபுரம் I: 134.
அலர்மேலுமங்கை II: 41.

ஆ

ஆன்கின் இ.எச். I: 596, 597.
ஆன்று, சி.எப். I: 311.
ஆழ்வார் சுவாமி I: 17, 31.
ஆலமர்க்க கடவுள் II: 228.
ஆத்திச்சுவடி I: 146, 147. II: 561. III: 80.
ஆதிகேசவன், எஸ்.சி. III: 73.
ஆண்டாள் ஸ்ரீசூரணம் II: 63.
ஆப்பிரிக்கா I: 479, 530.
ஆப்கானிஸ்தான் I: 570, 571.
ஆர்காட் I: 222.
ஆர்பத்நாட் I: 28, 31.
ஆர்தர் லாலி, ஸர் I: 222, 267, 268, 309.
ஆர்டிஞ்சு, லார்ட் I: 295, 296.
ஆதி ஈசன் II: 192, 228.
ஆதி பிரம்மம் I: 618.
ஆதி சிவன் II: 122, 192, 228.
ஆதி கடவுள் I: 580, 618. II: 57, 122, 168, 192, 228, 235, 271. III: 65, 68, 82, 86, 96.
ஆதி பகவன் I: 580, 618. II: 122, 137, 192, 193, 228, 271, 276.
ஆதி II: 461.
ஆதி முனிவன் I: 618. II: 122.
ஆதி தேவன் I: 580, 618. II: 122, 192, 442, 464.
ஆதிமூலம் II: 228.
ஆந்திர பாஷை I: 456, 531, 647, 693. III: 1, 7.
ஆந்திர வேஷப் பிராமணர் I: 650.
ஆந்திரசாதி/ஆந்திரர் I: 616, 617, 621. II: 149, 554. III: 2, 76, 77.

ஆதிநாதன் **II:** 139, 192, 228, 231, 235.
ஆதிகடவுள் **I:** 618. **II:** 57, 168, 228, 235, 271.
ஆதிகுரு **II:** 228.
ஆரோக்கியசாமி, எல்.பி.சி. **III:** 32.
ஆதிசேஷன் **I:** 251, 622.
ஆதிவேதம் **I:** 547, 567. **II:** 192, 193, 229, 232, 418, 422, 583.
ஆனிபீசன்ட் அம்மை **I:** 193, 212, 213, 385, 386. **II:** 428.
ஆதிசக்கிரவர்த்தி உபாத்தியாயர் **II:** 441. **III:** 91.
ஆபிரகாம் **I:** 586.
ஆமெக்துரை **I:** 310, 401.
ஆரிங்டன் **I:** 138, 139, 146.
ஆனந்தன் **II:** 120, 121, 308, 391, 394, 396, 397, 398, 399, 400, 401I: 456, 402, 403, 409, 410, 415.
ஆனந்தநகர் **II:** 412.
ஆசாம் **II:** 18, 19, 175.
ஆல்காட் துரை **I:** 147, 191, 192, 193, 212, 213.
ஆசாரக்கோவை **II:** 469, 613.
ஆறுமுகப் பிள்ளை, **I:** 623.
ஆஷ்ஷி, ஆர். டபல்யூ. டி.இ **I:** 361, 363.
ஆவிடையார் கோவில் **II:** 150. **III:** 63.

